# இலக்கியத்தில் ஊர்ப் பெயர்கள்

—ஆர். ஆளவந்தார்

யாதும் ஊரே யாவரும் கேளிர்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

# இலக்கியத்தில் ஊர்ப்பெயர்கள்

## (தொகுதி ஒன்று)

ஆசிரியர்
ஆர். ஆளவந்தார்

உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம்
டி.டி.டி.ஐ. தரமணி, சென்னை-600 113.

## BIBLIOGRAPHICAL DATA


| | |
|---|---|
| Title of the book | Ilakkiyathil Ūrpeyargal |
| Author | R. ALAVANDAR<br>International Institute of Tamil Studies, Madras-600 113 |
| Publisher | International Institute of Tamil Studies, Madras-600 113 |
| Publication number | 90 |
| Language | Tamil |
| Edition | First |
| Date of Publication | April, 1984 |
| Paper used | 14.2 kg. D/Demy White printing |
| Size of the Book | 21×18cms |
| Printing types used | 10point |
| Number of copies printed | 2200 |
| Number of pages | 224+viii=232 |
| Price | Rs. 12/- (Rupees Twelve only) |
| Printer | SRI GOMATHY ACHAGAM,<br>7, Chinnappa Rowther Street,<br>Triplicane, Madras-600 005 |
| Binding | Paper back |
| Artist | Amudhone |
| Subject | Place names in Tamil Literature Vol. 1. |

இயக்குநர்
டாக்டர். ச. வே. சுப்பிரமணியன்
உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம்
தரமணி, சென்னை-600113

# முன்னுரை

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் ஊர்ப்பெயர்கள் பற்றி 20 நூல்களுக்குமேல் வெளியிட எண்ணியுள்ளது. அதாவது தற்போதுள்ள தமிழ் நாட்டின் 16 மாவட்டங்களுக்கும் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு நூலாக 16 நூல்களையும் தமிழ் இலக்கியத்தில் ஊர்ப் பெயர்கள் என்ற நிலையில் 3 நூல் களையும் தமிழ் கல்வெட்டுக்களில் ஊர்ப்பெயர்கள் என்ற நிலை யில் ஒரு நூலும் ஆக 20 நூல்களை வெளியிட எண்ணியுள்ளோம். அதில் ஏற்கனவே கல்வெட்டில் ஊர்ப்பெயர்கள் என்ற நூல் மே - 83-இல் வெளிவந்துள்ளது. தஞ்சை மாவட்ட ஊர்ப் பெயர்கள் என்ற நூல் நவம்பர் 83-இல் வெளி வந்துள்ளது.

இப்போது 'தமிழ் இலக்கியத்தில் ஊர்ப்பெயர்கள்' என்ற நிலையில் முதல் தொகுதியாக சங்க இலக்கியத்தில் உள்ள ஊர்ப் பெயர்கள் அனைத்தையும் தொகுத்து தன்னால் இயன்ற அளவில் சிறப்பாக எழுதித் தந்துள்ளார் ஆய்வாளர் திரு. ஆர். ஆளவந்தார் அவர்கள்; அவருடைய முயற்சியைப் பாராட்டு கிறேன். போற்றுகிறேன். 'இலக்கியத்தில் ஊர்ப்பெயர்கள்' என்ற நிலையில் மூன்று தொகுதிகள் வெளிவருதல் வேண்டும். இதில் முதல் தொகுதியாக இந்த நூல் அமைகிறது. இதைப் படிக்கின்றவர்கள் அனைவரும் இதில் உள்ள குறைகளையெல் லாம் எடுத்துச் சொன்னால் அவைகளையெல்லாம் நிறைவு படுத்தி, வருகின்ற ஊர்ப்பெயர்த் தொகுதிகளைச் சிறப்பாக வெளியிட முடியும்

நூல் வெளிவருவதற்கு துணை புரிந்த ஆய்வாளர் அனை வர்க்கும் என்னுடைய வாழ்த்துக்கள்.

நிறுவனப்பணிகள் அனைத்திற்கும் ஆக்கமும், ஊக்கமும் தருகின்ற மாண்புமிகு கல்வி அமைச்சர் செ. அரங்கநாயகம் அவர்களுக்கு எங்கள் நன்றியும் வணக்கமும் உரித்தாகுக.

சென்னை-113 அன்புள்ள,
16—4—1984 ச. வே. சுப்பிரமணியன்

# என்னுரை

எங்கே வரலாறு மௌனம் சாதிக்கத் தொடங்குகிறதோ, அங்கே இடப்பெயர்களும் ஊர்ப் பெயர்களும் தம் வாய் திறந்து பேசத் தொடங்கும். சங்க காலத் தமிழக வரலாறு மௌனம் சாதிப்பதைச் சங்க பாடல்கள் சுட்டும் இடப் பெயர்களும் ஊர்ப் பெயர்களும் தம் வாய் திறந்து பேச ஊர்ப் பெயராய்வு நல்ல வழி வகுக்கிறது. இச் சீரிய பணிக்குத் தன்னை ஆளாக்கிக் கொண்ட உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் முதன் முதலில் கல்வெட்டில் ஊர்ப் பெயர்கள் என்னும் நூலை வெளியிட்டு இத்துறையை ஊக்குவித்தது. அதன் தொடர்பாக 'தஞ்சை மாவட்ட ஊர்ப் பெயர்கள்' என்ற நூலும் வெளி வந்தது. தற்பொழுது 'தமிழ் இலக்கியத்தில் ஊர்ப் பெயர்கள்' தொகுதி ஒன்று' என்னும் நூல் மூன்றாவதாக வெளி வருகிறது. பழம் பெரும் சங்க இலக்கியங் களாகக் கருதப்படும் நாற்பது நூல்கள் வாயிலாக அறியப்படும் எல்லா ஊர்ப் பெயர்கள் பற்றிய ஆய்வும் இந்நூலில் இடம் பெற்றுள்ளது.

'என்னை நன்றாக இறைவன் படைத்தனன், தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே' எனத் தம் வாழ்வைத் தமிழுக்கே' அர்ப்பணம் செய்து நற்றொண்டாற்றி வரும் நிறுவன இயக்குநர் டாக்டர் ச. வே. சுப்பிரமணியன் அவர்கள் அவ்வப்பொழுது ஆக்கமும் ஊக்கமும் தந்து இந்நூலை உருவாக்கி வெளியிடும் வாய்ப்பை எனக்குத் தந்தமைக்கு என் மனமொழி மெய்களால் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூல் உருவாக அவ்வப்பொழுது உதவிய நண்பர்கள் அனைவருக்கும் நன்றி.

ஆர். ஆளவந்தார்

## சுருக்க விளக்கம்

| | |
|---|---|
| தொல். | — தொல்காப்பியம் |
| தொல். எழுத். | — தொல்காப்பியம் - எழுத்ததிகாரம் |
| தொல். சொல். | — தொல்காப்பியம் - சொல்லதிகாரம் |
| தொல். பொருள். | — தொல்காப்பியம் - பொருளதிகாரம் |
| பத்துப். திருமுருகு | — பத்துப்பாட்டு-திருமுருகாற்றுப்படை |
| பத்துப். பொருந. | — ,, பொருநராற்றுப்படை |
| பத்துப். சிறுபாண். | — ,, சிறுபாணாற்றுப்படை |
| பத்துப். பெரும்பாண். | — ,, பெரும்பாணாற்றுப் படை |
| பத்துப். முல்லை. | — ,, முல்லைப் பாட்டு |
| பத்துப். மதுரைக் | — ,, மதுரைக் காஞ்சி |
| பத்துப். நெடுநல். | — ,, நெடுநல் வாடை |
| பத்துப். குறிஞ்சி. | — ,, குறிஞ்சிப்பாட்டு |
| பத்துப். பட்டினப். | — ,, பட்டினப்பாலை |
| பத்துப். மலைபடு. | — ,, மலைபடுகடாம் |
| நற். | — நற்றிணை |
| குறுந். | — குறுந்தொகை |
| ஐங்குறு. | — ஐங்குறு நூறு |
| பதிற். | — பதிற்றுப்பத்து |
| பரி. | — பரிபாடல் |
| கலித். | — கலித்தொகை |
| அகம். | — அகநானூறு |
| புறம். | — புறநானூறு |
| சிலப். | — சிலப்பதிகாரம் |
| மணிமே. | — மணிமேகலை |

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| | முன்னுரை— டாக்டர். ச. வே. சுப்பிரமணியன் | |
| | என்னுரை— ஆர். ஆளவந்தார். | |
| | சுருக்க விளக்கம் | |
| 1. | இலக்கிய அறிமுகம் | 1—6 |
| 2. | கொள்கைகளும் கோட்பாடுகளும் | 7—20 |
| 3. | சங்க இலக்கியம் சுட்டும் ஊர்ப்பெயர்கள் | 21—50 |
| 4. | ஊர்ப் பெயர்களின் அமைப்புமுறை | 51—59 |
| 5. | ஊர்ப்பெயர்கள்—விளக்கம் | 60—210 |
| | பின்னிணைப்பு | 211—219 |
| | முடிப்புரை | 216 |
| | துணை நூற்பட்டியல் | 217—219 |
| | சிறப்புப் பெயர் அகராதி | 220—224 |

# இலக்கியத்தில் ஊர்ப்பெயர்கள்

# 1. இலக்கிய அறிமுகம்

"மனித இனம் ஓரிடத்தில் நிலைத்து வாழத்தொடங்கிய காலத்திலேயே இடப்பெயர்களும் தோற்றுவிக்கப் பெற்றிருத்தல் வேண்டும்"[1] இத்தகு இடப்பெயர்களை ஆய்ந்து அதன் வாயிலாகப் பல்வகைப் பயனுள்ள செய்திகளை எடுத்துக் கூறும் நிலை இன்றைய இலக்கியத் துறையில் காணக்கூடிய ஒரு புதுமை யாகும். "இடப்பெயராய்வு மொழியியலையும், வரலாறு பண்பாட்டியலையும் ஊன்று கோலாகக் கொண்டு அறிவியலின் திட்பத்துடன் வளர்ந்து வரும் ஒரு துறை. இத்துறையில் தமிழில் நிகழ்ந்துள்ள ஆய்வுகள் ஒரு சிலவே."[2] இக்குறையைப் போக்க இந்தத் தமிழ் இலக்கியத்தில் ஊர்ப் பெயர்களை மூன்று தொகுதி களாகக் கொணரும் உலகத்தமிழாராய்ச்சி நிறுவனத்தின் திட்டம் பெரிதும் உதவும் என்பதில் ஐயமில்லை.

"ஊர்ப்பெயரமைப்பு முறைகள் அவ்வம் மக்களின் வாழிடம், வாழ்க்கைமுறை போன்ற பண்பாட்டுக் கூறுகளைப் பொறுத்து அமையும்"[3] "இடங்கள் ஆட்கள் போன்றவற்றின் பெயர்கள் பொது நிலையில் பெயர்ச் சொற்களாக இருப்பினும் அவைகள் மொழியின் மற்ற சொற்களிலிருந்து பல நிலைகளில் மாறுபட்டுச் சிறப்புப் பெயர்கள் என்ற நிலையில் சில சிறப்பியல்புகளோடு விளங்குகின்றன.[4] நம் பழந்தமிழ் இலக்கியங்களில் இடம்பெற்ற இடப்பெயர்களை ஒப்பு நோக்கும்பொழுது இத்தகு சிறப்பியல்பு களைப் பெற்றிருப்பதைக் காணலாம். இவ்வாறு அமைகின்ற இடங்களை நம் முன்னோர் ஊர் என்றும் சிற்றூர் என்றும்,

---

1. கல்வெட்டில் ஊர்ப்பெயர்கள் - ஆர் ஆளவந்தார். பக். 1.
2. தமிழ் இடப் பெராய்வு-டாக்டர் கி. நாச்சிமுத்து. பக். XII
3. ஷை ஷை பக். 113.
4. ஷை ஷை பக். 1.

பேரூர் என்றும், நகரம் என்றும் அவற்றின் அமைப்பு, தன்மை ஆகியவற்றிற்கேற்பப்பெயரிட்டு அழைத்து வந்திருப்பதைக் காண முடிகிறது. "மனித வாழ்வுக்குத் தேவையான வசதிகளைத் தரக் கூடிய பொருளாதார வளமுள்ள இடங்களில் நிறைய ஊர்கள் தோன்றுகின்றன. எனவேதான் பழைய காலத்தில் நீர்ப் பாசன வசதியுள்ள ஆற்றுப் பகுதிகளில் நிறைய ஊர்கள் தோன்றின."[5] அந்த ஊர்கள் பெற்ற பெயர்களைக் காதால் கேட்கும்பொழுது ஏற்படுகின்ற இன்பம், நல்லுணர்வு, எழுச்சி போலவே அவற்றின் பொருள்களை அறியும் பொழுதும் ஏற்படுகின்றது. "ஒரு நாட்டின் பழங்கால வரலாற்றையோ, பண்பாட்டையோ அறிந்து கொள்ள இலக்கியங்கள், சாசனங்கள், பழங்காசுகள், பிற நினைவுச் சின்னங்கள் எந்த அளவு துணை புரிகின்றனவோ அந்த அளவு துணைபுரியும் தன்மையும் பெருமையும் ஊர்ப் பெயர்களுக்கும் உண்டு."[6]

நம் பழந்தமிழ் இலக்கியங்களில் இடம் பெற்ற ஊரின் பெயர்களை முறையாக ஆய்ந்து அவற்றால் அறியப்படுகின்ற செய்திகளை வெளிக் கொணரும் பொழுது இதுவரை நாம் கேட்டறியாத பல செய்திகள் புலப்படுவதைக் காணலாம். அத்தகு பழந்தமிழ் இலக்கியங்களையே சங்க இலக்கியம் என்று அழைக்கிறோம். அச்சங்க இலக்கியங்களுக்கு இலக்கண நூலாகத் திகழும் தொல்காப்பியம் இரண்டாம் சங்க காலத்திலேயே தோன்றி, இலக்கியங்களுக்குப் புது நெறி போற்றும் பெற்றியைத் தந்துதவியது. ஒல்காப் புகழ் தொல்காப்பியனார் யாத்தத் தொல்காப்பியம் எழுத்து, சொல், பொருள் என முப்பெரும் பிரிவுகளைப் பெற்று, ஐம்பெரும் இலக்கணங்களை நன்கு ஆய்ந்துள்ளது. அந்நூலும் நம் ஊர்ப்பெயராய்வுக்குப் பல்லாற்றானும் பேருதவி புரிவதை அடுத்துக் காணப் போகிறோம். தொல்காப்பிய நெறிகளைப் போற்றியும், புதிய நெறிகளை உருவாக்கியும் தோன்றிய சங்க இலக்கியங்கள் எண்ணிலடங்கா. "சங்க இலக்கியங்கள் தமிழருடைய பழங்கால வாழ்க்கையைப் பற்றி அறிய இன்று இருக்கின்ற அரிய மூலங்களில் ஒன்றாகும். அந்த இலக்கியங்களிலிருந்து அக்கால அரசு, சமூகம், பொருளாதாரம், பண்பாடு போன்ற பல வகையான துறைகளைப் பற்றிய செய்திகளைச் சேகரிக்க முடிகிறது. அதே போல அந்தக் காலத் தமிழகத்தின் பூகோள நிலை, ஊரமைப்புநிலை போன்றவற்றைப் பற்றியும்

---

5. ஷை ஷை பக். 165.
6. கல்வெட்டில் ஊர்ப்பெயர்கள்-ஆர்.ஆளவந்தார். பக்.2.

பல செய்திகளைக் காணமுடியும்"[7] இச்சங்க நூல்களைப் பத்துப் பாட்டு என்றும், எட்டுத் தொகை என்றும் பகுத்தும் வகுத்தும் 18 நூல்களாக நமக்கு அறிமுகப்படுத்தியுள்ளனர். இவை பொரு ளின் அடிப்படையில் அகம், புறம் எனப் பகுத்துக் கூறப்பட்டுள் ளன. கற்பனை வளமும், கருத்துச் செறிவும், உணர்வூட்டும் திறமும், அறிவூட்டும் ஆற்றலும், சுவைபடச் சொல்லும் நயமும் உடையனவாய் பழந்தமிழரின் நாகரிகத்தை விளக்கிக் காட்டும் ஒளி விளக்காய் நமது பத்துப்பாட்டு நூல்கள் திகழ்கின்றன. இதன் சிறப்பை உணர்ந்தே

''பத்துப் பாட்டு ஆதி மனம் பற்றினால் பற்றுவரோ
எத்துணையும் பொருட் கிசையும் இலக்கணம் இல்
கற்பனையே"

என்று பேராசிரியர் சுந்தரம் பிள்ளை பாடியுள்ளார். ஆழ்ந்து கற்பார்க்கு ஆரா இன்பம் நல்கும் இப்பாடல்களின் வாயிலாக நூற்றுக்கணக்கான ஊர்ப் பெயர்களை நாம் கண்டறிய முடிகிறது. அப் பெயர்களின் அமைப்பு, பொருட்சிறப்பு முதலியவை இன்றைய திறனாய்வாளருக்கு நல்லதொரு விருந்தாக அமைந் திருப்பதைக் காணலாம். இதில் இடம் பெற்ற ஆற்றுப்படை நூல்கள் எடுத்துக் கூறும் ஊர்ப் பெயர்கள் வள்ளல்களின் மாண்பை எடுத்துக் கூறுவதோடு நின்று விடாமல், அவ்வூர்களின் இயற்கைச் செழிப்பையும், சான்றோர் செந்நெறி போற்றும் திறனையும் சுவைபட எடுத்துக் கூறுவதைக் காணலாம்.

எட்டுத் தொகை நூல்கள் தமிழகத்தின் நாகரிகத்தினைத் தரணி முழுமைக்கும் எடுத்துக் காட்டும் இணையற்ற சொல் லோவியங்கள். நம் முன்னோரின் காதல் வாழ்வையும், வீர வாழ்வையும், அழகுற படம் பிடித்துக் காட்டுகின்றன. மூன்றடி முதல் பல அடிகளைப் பெற்ற பாக்களைத் தன்னகத்தே பெற்று விளங்கும் இத்தொகை நூல்கள் சுட்டிக்காட்டும் ஊர்களின் பெயர்களைக் கேட்பின் உளம் பூரிக்கும். அப்பெயர்கள் தரும் விளக்கமோ வியப்புக் கடலில் ஆழ்த்தும் தகைமை சான்றது.

சங்க கால நூல்களுக்குப்பின் தோன்றிய நூல்களைச் சங்கம் மருவிய காலநூல் எனக்குறிப்பிடுவர். இந்நூல்களைப் பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் என்பர். இவைகள் அறநூல்கள் எனப் பாராட்டப் படுகின்றன. ஆயினும் இவற்றிலும் அகம், புறம்

---

7. தமிழ் இடப்பெயராய்வு-டாக்டர் இ. நாச்சிமுத்து. பக். 117.

பற்றிய செய்திகளைக் கூறும் நூல்களும் உள்ளன. இந்நூல்கள் ஊர்தொடர்பான செய்திகளைப் பலவாறு எடுத்துக் கூறுவதைக் காண முடிகிறது. ஊர்ப்பெயர் ஆய்வுக்கு இவையும் உதவி செய்வதைக் காணலாம்.

இக்காலத்தை ஒட்டிய நிலையில் இருபெருங்காப்பியங்கள் எழுந்தன. அக்காலத்தைக் காப்பியக் காலம் என்பர். இரட்டைக் காப்பியம் எனப்படும் சிலப்பதிகாரமும், மணிமேகலையும் பழந் தமிழகத்தை விரிவாக எடுத்துக்காட்டுகின்ற சீரிய காப்பியங்களாகும். குடிமக்கள் காப்பியம் எனப் பாராட்டப்படும் சிலப்பதிகாரம் சேர, சோழ, பாண்டிய நாட்டின் மாண்புகளை அழகுற எடுத்துக் கூறுவதைக் காணலாம். இளங்கோவடிகள் தமிழகத்தை உலாவந்து கண்டறிந்த சிற்றூர், பேரூர், நகரம் முதலியவற்றின் பெயர்களையும்,குறிஞ்சி,பாடி முதலானவற்றின் பெயர்களையும் பட்டியலிட்டுக் காட்டியிருப்பதைக்காணலாம் சீத்தலைச்சாத்தனார் தாமியற்றிய மணிமேகலைக் காப்பியத்தில் தமிழகத்தின் ஊர்களைக் குறிப்பிட்டுக் கூறியிருப்பது போலவே, பல் வகை மதத்தைச் சார்ந்தோர் வாழ்ந்த பிறதேயத்தின் ஊர்கள் சில வற்றையும் குறிப்பதைக் காணலாம். பல்வேறு ஊர்களையும் அவற்றின் பெருமைகளையும் கண்டறிய முடிவதோடு, ஊர்ப் பெயர்கள் உதவியால் பல வரலாற்றுச் செய்திகளைத் தொகுத்துக் கூறவும் இயலும் என்பதை ஆழ்ந்து கற்பார் நன்கு அறிவர்.

மேலே குறிப்பிட்ட நூல்களோடு காலத்தின் அடிப்படையில் இணைத்துக் காண்கின்ற நூலாகக் கருதப்படுவது பெருங்கதை. இந்நூல் குணாட்டியர் என்பவர் பைசாச மொழியில் இயற்றிய 'பிருகத்கதா' என்ற நூலின் தழுவலாகும். உதயணன், அவன் மகன் நரவாணதத்தன் ஆகியோர் வரலாற்றை விரிவாகக் கூறுவது. சமண சமயக் கருத்துக்களைக் கொண்டது.இதனை இயற்றியவர் கொங்குவேளிர் ஆவர். இந்நூல் தமிழகத்து ஊர்ப் பெயர்களை விட பிற நாட்டு ஊர்ப்பெயர்களையே விரிவாக விளக்குகிறது. அதனால் நம் தமிழகம் பிற நாட்டோடு கொண்டிருந்த பழமையான உறவும் புலனாகிறது. ஆயினும் நம் தமிழக ஊர்ப் பெயர்களை நுணுகி ஆய்வது போல இப்பெருங்கதை கூறும் ஊர்களின் பெயர்களை ஆய்ந்து கூற இயலவில்லை என்பதை ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும்.

இவ்வாறு நம் ஆய்வுக்குட்பட்ட மேலே குறிப்பிட்ட பழந் தமிழ் இலக்கியங்களை ஆழ்ந்து கற்று, ஊர்ப்பெயர்களைத் தேடிச் சேகரித்து அவற்றின் அமைப்பு, பொருள், சிறப்பு முதலியவற்றை ஆராயும்பொழுது பல்வகைப் புத்தம் புதிய கருத்துகள்

வெளிப்படுகின்றன. அவை இன்றைய ஆய்வாளர்களுக்குப் பெரும் விருந்தாக அமைவதோடு, மேலும் தொடர்ந்து ஆய்வதற்குப் படிக்கட்டாக அமைவதைக் காணலாம். ''தமிழாராய்ச்சி ஆழமாகவும் அகலமாகவும் வளர்ச்சியடைய வேண்டும் என்ற கருத்து இன்று பரவலாக ஏற்றுக் கொள்ளப்படுகிறது.''[8] அவற்றிற்கு இத்தகு ஊர்ப் பெயராய்வு பெரிதும் உதவும் என நம்பலாம். தமிழாராய்ச்சி உலகில் பண்டைக் காலம் தொட்டு வழங்கி வருகின்ற இடப்பெயர்களைக் குறித்து நுண்ணிய ஆய்வு செய்வார் ஒரு சிலரே. எனவே, இதன் தொடர்பான கருத்துக்களைக் கண்டறிய போதிய நூல்கள் எழவில்லை. அக்குறையை இந்நூல் பெரிதும் போக்கி உதவும் முயற்சியில் அமைகிறது.

''சங்கப் பாடல்களிலே ஊர்ப் பெயர்களின் பொருள் விளங்குமாறு நேர் முகமாகவும், மறை முகமாகவும் புலவர்கள் பாடியிருக்கிறார்கள்''.[9] ''பிற்காலத்தைப் போலப் புராணக் கதைகளைக் கூறி ஊர்களின் பெயர்க்கு விளக்கம் கூறும் மரபு சங்க காலத்தில் இருந்ததாகத் தெரியவில்லை''.[10] 'சங்க காலப் பகுதியில் தமிழகப் பகுதியில் இருந்த மொத்த ஊர்களின் எண்ணிக்கைபற்றி தற்கால ஆராய்ச்சி முடிவுகளிலிருந்து மதிப்பீடு செய்ய இயலவில்லை''.[11] இலக்கியங்களில் புலவர்களால் நேர் முகமாகவும், மறை முகமாகவும் சுட்டப்பட்டப் பெயர்கள் மட்டுமே நம் ஆய்வுக்கு உதவுகின்றன. இவற்றைப் போன்ற பல்லாயிரக்கணக்கான ஊர்கள் இருந்திருக்க வேண்டும். தேவையற்ற நிலையைக் கருதி அவை இலக்கியத்தில் இடம்பெறவில்லை என்று தான் கருத முடிகிறது. இடம் பெற்ற ஊர்ப்பெயர்கள் இலக்கிய வரலாற்றிற்கும், நாட்டு வரலாற்றிற்கும், மொழி வரலாற்றிற்கும் பெரிதும் உதவுகின்றன. இது போன்ற இடப் பெயராய்வின் மூலம் நாம் அறியும் செய்திகள் நமது வரலாற்று, பண்பாட்டு, மொழியியல் துறைகளைப் பற்றிய ஆய்வுக்குப் பெரிதும் துணை செய்வதோடு, இடப்பெயராய்வு இல்லையானால் வரலாறு, பண்பாடு, மொழியியல் பற்றிய ஆய்வுகள் முழுமையடைந்தனவாகக் கருத முடியாத நிலையில் இடப்

---

8. தமிழ் இடப்பெயராய்வு — டாக்டர் இ. நாச்சிமுத்து — அறிமுக உரை - டாக்டர் இலா. குளோறியா சுந்தரமதி பக். XII.
9. தமிழ் இடப்பெயராய்வு — டாக்டர் இ. நாச்சிமுத்து பக். 12 .
10. ஷை ஷை பக். 124.
11. ஷை ஷை பக். 126.

பெயராய்வு அமைகின்றது என்ற கருத்தையும் மனதிற்கொண்டு ஆய்ந்தால் பல பயனுள்ள முடிவுகளை எதிர்கால ஆய்வாளர்களுக்கு எடுத்துக் கூறி வழிகாட்ட இயலும் என்பது உறுதி. அந் நோக்கத்தோடு சீரிய முறையில் எழுந்த ஊர்ப்பெயர் ஆய்வாக இந் நூல் படைக்கப்படுகிறது. இதன் ஆய்வின் முடிவில் பழந் தமிழக வரலாற்றைப் படைக்கப் பழந்தமிழ் இலக்கியங்கள் சுட்டும் ஊர்ப்பெயர்கள் பெரிதும் உதவும் என்ற உண்மை நிலைப் புலனாகும் என்று துணிந்து கூறலாம்.

# 2. கொள்கைகளும் கோட்பாடுகளும்

மனிதன் கூடி வாழவேண்டும் என்ற விருப்பம் உடையவன். எனவேதான் மனிதனை ஒரு சமூக விலங்கு என்றழைக்கின்றனர். தன்னைச் சார்ந்தாரோடு கூடி வாழ்ந்து இன்பம் துய்க்கப் பாடு படும் மனிதன், அதற்குப் பகையாய் உள்ள அனைத்தையும் விட்டு விலகிச்சென்று, அதற்குத் துணையாக உள்ளவற்றைத் தன் முயற்சியாலேயே அமைத்துக்கொள்ள விழைகிறான். இதன் காரணமாக அவன் வாழ்வதற்கேற்ற இடத்தையும், தொழில் புரிவதற்கேற்ற இடத்தையும் தக்க சூழ்நிலையமைப்பைக் கொண்டுத் தேர்ந்தெடுத்துக் கொள்ளுகிறான் இவ்வாறு அவன் தேர்ந்தெடுக்கும் இடங்கள் பெரும்பாலும் ஆற்றங்கரையோர மாக அமைவதைக்காணலாம். தாம் தேர்ந்தெடுத்தப் பகுதியைப் பிறர் கண்டறிந்து வரவும், தம் இருப்பிடத்தைப் பிறர்க்குக் குறித்துச் சுட்டவும் ஏதேனும் ஓர் அமைப்பில் ஒரு பெயரிட்டு அழைக்க ஆசைப்படுகிறான். அதனால் எழுகின்ற பெயரே ஊர்ப் பெயராகும். இப்பெயர் மனிதன் விருப்பத்திற்கு ஏற்ப அமைய நேரிட்டாலும்,சூழலுக்கு ஏற்ப அது அமைவதை காணமுடிகிறது. இப்பெயர் காரணப் பெயராகவே அமைந்துவிடுகிறது. இடுகுறிப் பெயர்கள் மிகமிகக் குறைவாகவே காணப்படுகின்றன. சிலர் ஊர்ப் பெயர்களில் இடுகுறிக்கு இடம் இல்லவே இல்லை என்றே குறிப்பிடுவர். தான் வாழ்கின்ற ஊர்க்கும், ஆற்றங்கரைக்கும் தொடர்பு படுத்தித் தன் ஊர்ப்பெயரை வைப்பதில் பெரு மகிழ்ச்சியடையும் மனிதன், அந்த ஆற்றின் பெயரையும் தன் ஊர்ப் பெயரோடு பொருத்த விரும்புகிறான். சில இடங்களில் சிலர் வேறு பெயரைத் தேடி வைக்காமல் ஆற்றின் பெயரையே தம் ஊர்ப் பெயராக வைத்து விடுவதையும் காண முடிகிறது. தஞ்சை மாவட்டத்தில் கொள்ளிடம் ஆற்றங் கரையில் அமைந்த ஊருக்கு "கொள்ளிடம்" என்ற பெயரே அமைந்

திருப்பதை இன்றும் காணலாம். இந்தவிதி உலகத்திற்கே பொது வானது என்பதை Kenneth cameron அழகாக எடுத்துக் கூறுவர்.[1] இதனாலன்றோ "ஆறில்லா ஊருக்கு அழகு பாழ்" என்ற பழமொழியும் தோன்றியது. திருவையாறு, சேயாறு, அடையாறு, கயத்தாறு, காரியாறு, ஆற்றூர் முதலிய ஊர்கள் இந்த அடிப் படையில் பெயர் பெற்றவை என்பதை யாவரும் அறிவர்.

சிலர் தம் பாதுகாப்பை முன்னிட்டும், தொழிலை முன்னிட் டும், வாழ்வின் வசதியை முன்னிட்டும் கடற்கரை ஓரங்களிலும், காடுகளிலும், மலைகளிலும் வாழத் தலைப்பட்டு ஊர்களை அமைத்துக் கொண்டனர். அச்சூழலுக்கேற்ப அவற்றிற்குப் பெய ரிட்டு அழைக்கத் தலைப்பட்டனர். இவ்வாறு மானுடன் தன் இனத்தைப் பெருக்கப் பெருக்க வாழ்வதையும் பெருக்கிக் கொண்டே வந்தபொழுது நாட்டின் எல்லாப் பகுதியிலும் ஊர்களை அமைத்துக் கொண்டு வாழ வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டு விட்டது. ஊர்கள் தோன்றுவதற்கான சூழ்நிலைகளை இவற்றின் அடிப்படையில் கண்டறிய விழைவார்க்கு அவ்வூர்ப் பெயர்களின் அமைப்பையும், பொருளையும், சிறப்பையும் கண்டறிவது எளிதாகும். மனிதன் தன் ஊர்க்குத் தன் விருப்பப் படி பெயர் வைக்க முற்படும்பொழுது கூட தன் வாழிடத்தை நன்கு உற்று நோக்கி, அதன் இயற்கை வளம், சிறப்பு, தனித் தன்மை போன்றவற்றை மனதிற் கொண்டே பெயரிட்டு வந்திருக் கின்றான் என்பதைப் பழைய ஊர்ப் பெயர்கள் எடுத்துக்காட்டிக் கொண்டிருக்கின்றன.

குன்றம் சூழ்ந்த பகுதியில் வைக்கப்பட்ட பெயர்கள் நெற் குன்றம், நெடுங்குன்றம், பூங்குன்றம் எனப் பெயர் பெற்றிருப் பதைக் காணலாம். பாறைகள் அங்கொன்றும் இங்கொன்றுமாய் உள்ள பகுதியில் அமைந்த ஊர்கள் பூம்பாறை, சிப்பிப்பாறை, தட்டைப்பாறை, குட்டைப்பாறை எனப்பெயர் பெற்றிருப் பதைக் காணலாம் சோலைகள் சூழ்ந்த ஊர்கள் திருமால் இருஞ் சோலை, தலைச்சோலை, திருவளர் சோலை என அழைக்கப்படு

1. When men made their homes near some distinctive feature of the landscape they often adopted the existing name for the new settlement. Sherborne was originally a river name meaning "clear stream" but when people came to live near the stream they adopted the name for their settlement

—English Place Names—Kenneth Cameron p. 27.

கின்றன. காட்டுப் பகுதியில் அமைந்த ஊர்கள் பாடி என்றே பெயர் பெறும். வேலப்பாடி, காட்டுப்பாடி, குறிஞ்சிப்பாடி போன்றவை இதனை நிலைநாட்டும். ஏரியைச் சூழ்ந்தமைந்த ஊர்கள் பல்லவனேரி, மாறனேரி, திரையனேரி, ஆறுமுகனேரி, நாங்குனேரி, பதுமனேரி எனப் பெயரிட்டு அழைக்கப்பட்டு வருவதைக் காணலாம்,

இவ்வாறு பழந்தமிழகம் பல காரணங்களின் அடிப்படையில் ஊர்ப்பெயர்களைப் பெற்றிருந்தாலும், அவை இன்று வழங்கப் பட்டு வரும் முறையை உற்று நோக்கின் பல குழப்பங்களை விளைவிக்கின்றன. அவற்றுள் சொல்லமைப்பும், பொருளமைப்பும் முன்னுக்குப்பின் முரணாக அமைந்து, நம் முன்னோர் போற்றிய உயர்நிலைச் சிறப்பைச் சிதைத்துக் கொண்டிருப்பதைக் காண முடிகிறது. மாவடி மங்கலம் என்ற ஊர் நம் முன்னோர்களால் மான்விழி மங்கலம் என அழகாக அழைக்கப்பட்டு வந்தது. இன்றுள்ள 'மாவடிமங்கலம்' என்ற சொல்லமைப்பைக் கொண்டு ஆராயின் இத்தகுநல்லின்பம் ஊர்ப்பெயர்களில் தோன்றாதாகிவிடும். தமிழன் இயற்கையோடு இயைந்த வாழ்வை மேற்கொண்டதால் எங்கும் எதிலும் நல்லின்பம் தோன்றும் அழகுணர்ச்சியை வெளிப்படுத்தவே ஆசைப்பட்டான். குறிஞ்சி நிலக் கடவுளுக்கு இதன் காரணமாகத் தான் முருகன் எனப் பெயரிட்டான் என்பதை யாவரும் அறிவர். அதுபோலவே தன் வாழிடத்தின் சீரிய அழகையும், தன்மையையும், பிறவற்றையும் உற்று நோக்கிப் பெயரிட்டு அழைத்து வந்தான் என்பது பழந்தமிழக ஊர்ப்பெயர்களை ஆராயும்பொழுது வெளிப்படுவதைக் காணலாம். எனவேதான், இடப்பெயராய்வின் நோக்கம், இடப்பெயர்கள் தோன்றிய தன் காரணத்தையும் அதன் உண்மைப் பொருளையும் விரிப்பது தான்[2] என்று கூறுவர். ''ஊர்ப்பெயராய்வு என்பது சிற்றூர், பேரூர், மலை, குன்று, தெரு, வீடு, வெளி, பொதுவிடம், வயல், மேய்ச்சல் நிலம் முதலிய பலவற்றில் சிற்றூர், பேரூர் முதலிய குடியிருப்புகளின் பெயர்களைப் பற்றிய ஆய்வை மட்டும் குறிக்கிறது[3]'' என்று விளக்குவது நம் சிந்தனைக்கு நல்ல விருந்தாக அமைந்திருப்பதைக் காணலாம்.

ஊர்ப்பெயராய்வினைக் குறிப்பிட்ட ஒருசில கொள்கைகளின் அடிப்படையில் ஆராய்வதே பயன்தரத்தக்கதாக அமையும். இதன் கொள்கைகளை இருவகையாக அமைக்கலாம்.

---

2. தமிழக இடப்பெயராய்வு டாக்டர் சி. நாச்சிமுத்து பக். 2
3. ஷை ஷை பக். 3,

1. பொது நிலைக் கொள்கை 2. சிறப்பு நிலைக் கொள்கை

பொது நிலைக்கொள்கை உலகத்தின் அடிப்படையில் அமைய வேண்டியவொன்றாகும். சிறப்பு நிலைக் கொள்கைத் தமிழகத்திற்கு மட்டும் அமைய வேண்டியவொன்றாகும். உலக நோக்கில் பொது நிலைக் கொள்கைகளை உருவாக்குவதனால் பற்பல பயன்கள் தோன்றும். அவை தனிப்பட்ட நாட்டின் ஊர்ப்பெயர்களை ஆராய்வதற்கு வகுத்துக் கொள்ளும் சிறப்பு நிலைக் கொள்கைக்குப் பெரிதும் உதவக் கூடிய நிலையில் அமைந்திருக்கும். "எங்கே வரலாறு மௌனம் சாதிக்கத் தொடங்குகிறதோ அங்கே இடப்பெயர்களும் ஊர்ப்பெயர்களும் தம் வாய் திறந்து பேசத் தொடங்கும்"[4] என்பதில் ஐயமில்லை. எனவே உலகப் பொது வரலாற்றின் அடிப்படையில் பொது நிலைக் கொள்கைகளை உருவாக்குவதே பயன் தரத்தக்கதாகும். "வெவ்வேறு வகையான உருவங்களைக் கொண்ட ஊர்ப்பெயர்களில் மனித இனத்தின் அனுபவம் பொதிந்துள்ளது. எனவே இப்பெயர்கள் எல்லா மனிதனின் மொழி மரபையும், பண்பாட்டையும் வளர்க்கின்றன. இதனடிப்படையில் ஊர்களை இனங்காணுவது மனித இனத்தின் முக்கிய நடத்தையை உருவாக்குகிறது. ஆகவே உலக மொழிகள் எல்லாவற்றிலும் பெயராய்வு வளர்ச்சியடைகிறது"[5] என்று கூறுவது பொது

---

4. Where history is silent place names might speak. Ramasamy Aiyar, L. V., Dravidic Place names inthe plateaux of persia QJMS, Vol. xx, 1929-30 Quoted in The Problem of Dravidian origins-A Linguistic Anthropological and Archaeoligical Approach- T. Balakrishnan Nayar p. 35

5. The human experience of the world in socialised and accumulated in the names that indicate varieties of forms and actions. These names, therefore, develop a rich heritage of linguistic culture of any people, and explain to them different existing forms. In this process of experience and collection of knowledge, the identification of places forms an important aspect of human behaviour and hence toponyms are generated in all the languages of the world.

   Place Names and understanding the past—R.N. Mehtha p.1.

   Studies in Indian place Names-Volume Three

நிலைக் கொள்கைக்கு அடி கோலுகிறது. ஊர்ப்பெயராய்வுக்கு இத்தகு பொது நிலைக் கொள்கைகளைக் கீழ்க்கண்டவாறு பகுத்துக் கூறலாம்.

1. இடப்பெயர்களும், ஊர்ப்பெயர்களும் காரணமின்றி தோன்றியிருக்க முடியாது.

2. இவை தமக்கென மிகப் பழைய மரபைப் பெற்றிருக்கின்றன.

3. புதிது புதிதாகக் தோன்றும் பெயர்களும், காரணம், மரபு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டே தோன்றும்.

4. பேச்சு வழக்கில் இப்பெயர்கள் தம் வடிவில் சிதைவு பெற்றும் தோன்றும்.

5. காலப்போக்கில் இவை மரூஉ மொழியாகி வழங்கப்பட்டு வரவும் கூடும்.

6. பிறமொழியாளர்களால் முழுவடிவமும் மாறுபட்டுக் கூறப்பட்டும் வரக்கூடும்.

7. வரலாற்றில் இடம்பெறும் பெயர்கள் பல மாறுபட்டும் காணக்கூடும்.

8. இலக்கியப் பெயர்க்கும் வரலாற்றுப் பெயர்க்கும் வேறுபாடு இருக்கக் கூடும்.

9. கல்வெட்டுகளில் திரிந்தும் சிதைந்தும் காணக் கூடிய நிலையைப் பெற்றிருக்கக் கூடும்.

10. அரசியல் காரணமாகக் குறிப்பிட்ட மாறுதலைப் பெற்றிருக்கக்கூடும்.

11. கலை, கலாச்சாரம், வாணிபம் காரணமாகச் சிறப்பிடம் பெற்றிருக்கக் கூடும்.

12. பிற நாட்டு வரலாற்றுக் குறிப்பிலும், பயணக் குறிப்பிலும் இடம் பெற்றிருக்கக் கூடும்.

13. யாதேனும் ஒரு காரணம் பற்றி வெவ்வேறு நாடுகளின் பெயர்கள் உறவு உடையனவாகவும், தொடர்பு உடையனவாகவும் காணக் கூடும்.

14. காலப் போக்கில் பல பெயர்கள் மறைந்து ஏட்டில் மட்டும் இருக்கக் கூடும். அத்தகைய பெயர்கள் வழங்க வேண்டிய இடத்தில் புதியவை தோன்றியிருக்கக் கூடும்.

15. படையெடுப்பின் காரணமாக, புதியஊர்கள் அமைப்பின் காரணமாகப் பழைய ஊர்களின் பெயர்களை அப்புதிய ஊர்கள் பெற்றிருக்கக் கூடும்,

16. குறிப்பிட்ட ஒரு சில பெயர்கள் பல ஊர்களுக்குப் பெயராக அமையக் கூடும்.

17. பெயர்களின் முன்னொட்டும், பின்னொட்டும் ஒன்று போல அமைந்திருக்கக் கூடும்.

18. சில பெயர்கள் அவற்றின் பழைய முழு வடிவைக் காண இயலாத அளவிற்கு முழுமையாகத் திரிந்திருக்கக் கூடும்.

19. சில புராணச் செய்திகளோடு தொடர்புடையனவாக அமைந்திருக்கக் கூடும்.

20. சில பெயர்கள் வேறு மொழியின் மொழிபெயர்ப்பாக அமைந்திருக்கக் கூடும்.

21. சில பெயர்கள் இருவகைப்பட்ட பெயர்களை உடையன வாக அமைந்திருக்கக் கூடும்.

22. சில அரசு கணக்கேட்டில் ஒரு பெயரையும் ஊர்மக்களின் வழக்கில் ஒரு பெயரையும் பெற்றிருக்கக் கூடும்.

23. சில பெயர்கள் உலக வரைபடங்களில் குறிப்பிடாமல் விடப்பட்டிருக்கக் கூடியனவாக விருக்கும்.

24. எவ்வித காரணமும் கூற முடியாத நிலையில் இடுகுறி யாகவே காணுகின்ற நிலையைச் சில பெயர்கள் பெற்றிருக்கும்.

இப் பொதுநிலைக் கொள்கைகளை உலக இடப்பெயர் களோடும் ஒப்பிட்டுப் பார்த்து, பெயராய்வுகளை அமைத்துக் கொள்ள வேண்டிய வழிமுறைகளை உருவாக்குவது ஆய்வாளர் கடமையாகும்.

சிறப்பு நிலைக் கொள்கைகளை வகுத்துக் கொள்ள இந்தப் பொது நிலைக் கொள்கைப் பெரிதும் உதவினாலும் நாட்டிற் கேற்ற வகையில் அமைக்க முற்படுவதால் இச் சிறப்பு நிலைக் கொள்கை நாட்டிற்கு நாடு மாறுபட்டே அமைய வேண்டி யிருக்கிறது. வடநாட்டில் இடம் பெற்ற பெயர்கள் பெரும்பாலும் இதிகாசங்களோடும், புராணங்களோடும் தொடர்புடையன வாகவே இருத்தல் வேண்டுமென அந்நாட்டு மக்கள் விரும்பும் நிலையில் நம் தமிழகம் அக் கொள்கையை ஏற்க மறுத்து, பழந் தமிழகத்தின் தனித் தன்மையைக் கொண்டு அதன் உண்மை நிலையைக் கண்டறிய அவா கொள்கிறது. எனவே, நாம் தமிழகத்திற்கென சில சிறப்புக் கொள்கைகளை உருவாக்கிக் கொள்ள வேண்டியுள்ளது. அக் கொள்கைகளைக் கீழ்க்கண்ட வாறு பகுத்துக் கொள்ளலாம்,

1. தமிழகம் தனக்கென எல்லாவற்றிலும் தனித்தன்மை பெற்றிருப்பதைப் போலவே, ஊர்ப் பெயர்களிலும் தனித் தன்மைகளைப் பெற்றிருக்கிறது.

2. எப்பெயராயினும் இடுகுறியாக அமையாது, காரணப் பொதுப் பெயராகவும், காரணச் சிறப்புப் பெயராகவும் அமைந் திருக்கிறது.

3. சேர, சோழ, பாண்டியர் ஆட்சிக்குட்பட்ட நாட்டின் எல்லைக்குள் உள்ள ஊர்கள் அனைத்தும் தமிழ்ப் பெயர்களே. பிறமொழிப் பெயர்கள் பிற்காலத்தில் வேண்டுமென்றே உருவாக்கப்பட்டவையே.

4. தமிழக ஊர்ப் பெயர்கள் பெரும்பாலும் இயற்கைச் சூழலுக்கேற்பவும், நிலத்தின் தன்மைக்கு ஏற்பவும் அமைந் திருக்கும்.

5. தமிழ் இலக்கியங்கள் வரலாற்று நோக்கில் எழுதப்படா மையினால், தமிழகத்திலுள்ள எல்லாப் பெயர்களும் இலக்கியங் களில் இடம்பெறவில்லை. பல பெயர்களைக் கண்டறிய முடியாத அளவிற்கு அவ்வூர்கள் ஏதோ ஒரு காரணத்தால் அழிந்து விட்டன.

6. நானிலப் பகுப்பு முறைக்கும் ஊர்ப்பெயர்களுக்கும் பெரிதும் தொடர்பிருக்கிறது,

7. சாதியின் அடிப்படையில் அமைந்த ஊர்ப்பெயர்களை மிகப் பழமையாகக் கருதுவதற்கு இடமில்லை.

8. பல திராவிட மொழிப் பெயர்கள் தமிழக ஊர்ப்பெயர் களாக விளங்கி வந்திருக்கின்றன,

9. கல்வெட்டுப் பெயர்கள் ஏதோ காரணத்தால் திரித்து வெட்டப்பட்டிருக்கின்றன.

10. தமிழக ஊர்ப்பெயர்களைக் கண்டறிய பழைய இலக்கி யங்களே உதவுகின்றன. பிற சான்றுகள் அவ்வளவு சரியாக அமையவில்லை.

இத்தகு சிறப்பு நிலைக் கொள்கைகளை மனதிற் கொண்டு பொதுநிலைக் கொள்கையின் துணையோடு தமிழக ஊர்ப்பெயர் கள் ஆராயப் பட்டால்தான் அவற்றின் உண்மைப் பெயர்கள் பழைய வடிவில் நமக்குக் கிடைக்கக்கூடும். காய்தல் உவத்தல் அகற்றி இவ் ஆய்வினைச் செய்ய இவ் இருநிலைக் கொள்கை களும் பயன்படும். இவற்றைப் பயன்படுத்தியே உலகம் இன்று வரை ஊர்ப் பெயராய்வு செய்து வந்திருக்கிறது. அவ்வாறு

செய்யப்பட்ட இந்த ஆய்வின் வரலாற்றை உலகம் தழுவிய நிலையிலும், இந்திய நிலையிலும் காண நமக்கு நிறைய குறிப்புகள் கிடைத்துள்ளன.

## உலக இடப்பெயராய்வு வரலாறு

அறிவியல் வளர்ச்சியால் தோன்றிய நூற்றுக்கணக்கான புதிய துறைகளில் இடப்பெயராய்வும் ஒன்று. இது தனித்துறையாக 18-ஆம் நூற்றாண்டில் தோன்றியது எனலாம். இரண்டு முக்கியத்துவத்தை எடுத்துரைத்து இத்துறையைத் தோற்றுவித்த பெருமை கோட் பிரைடுவில் ஹெல்ம் லெய்ப்னிஷ் என்பவரைச் சாரும். இவருக்குப்பின் இத்துறையின் வளர்ச்சியை 19ஆம் நூற்றாண்டில் தான் காணமுடிகிறது. ஐரோப்பிய நாட்டறிஞர் 1840-இல் தம் முயற்சிகளை மேற் கொண்டனர் எனத் தெரிய வருகிறது. எனவே 1841இல் தான் இடப்பெயராய்வு அறிவியல் அடிப்படையில் முறையாகத் தொடங்கியது எனத் துணிந்து கூறலாம். இதற்கு வழி வகுத்தது மொழிநூல் வளர்ச்சியேயாகும். இவ்வாய்வு 1871 முதல் 1885 முடிய மிக நல்ல முறையில் புதியதொரு உத்வேகத்துடன் நடைபெற்றது எனலாம். J. J Egli என்பவரே ஊர்ப்பெயராய்வாளரில் முதலிடமும் சிறப்பிடமும் பெறுகிறார். இவருக்கு முன் பிறர் செய்த இதன் தொடர்பான பணிகள் அடிப்படைப் பணிகளேயாகும். இவரே இதனை முழுமைப்படுத்தி உலகம்ஏற்கும் முறையில் நூல்வடிவில் வெளிக் கொணர்ந்தார் எனலாம். அதற்குமுன் பல நூல்வடிவில் காண நேரிட்டாலும் முழுமையான ஆய்வுத் தன்மைகளை அவை பெறவில்லை எனலாம். இவரைத் தொடர்ந்து பலநாட்டறிஞர் இத்துறையில் பங்கேற்றுப் பெரிதும் பாடுபட்டுத் தொண்டாற்றி இவ் ஆய்வு வளரப் பாடுபட்டனர். அவர்களுள் கீழே குறிப்பிட்டவர்களைச் சிறந்தோராகக் கருதுவர்.

1. அடால்ப்பாக் (German)
2. Dauzat (French)
3. A. H. Smith (England)
4. Sri F. Stenton Allen Macüler (England)
5. Eilert Ekwal (England)
6. G. R. Stewark (U. S. A.)
7. E. Pulgram (U. S. A)
8. Gardiner (U, S. A.)
9. F. L. Utley (U. S. A)
10. Draye (Belgium)

1923-ஆம் ஆண்டு பெல்ஜியம் நாட்டில் உள்ள லூவெய்ன் நகரில் கத்தோலிக்கப்பல்கலைக்கழகத்தில்பணிபுரிந்தபேராசிரியர் Von de weyar என்பவர் இதற்கெனத் தனித்து ஒரு நிறுவனத்தையே உருவாக்கினார். இதற்குப் பிறகு பிரிட்டனில் ஆங்கில இடப்பெயராய்வுக் கழகம் தோற்றுவிக்கப் பட்டது. அதுவே இன்றைய ஆய்வுக் கழகங்களின் முன்னோடியாகக் கருதப்படுகிறது. இக்கழகம் இன்று நாட்டிங்காம் பல்கலைக் கழக ஆங்கில மொழித்துறையோடு இணைக்கப்பட்டுச் செயலாற்றி வருகிறது. இக்கழகம் பல்வகைக் கருத்தரங்கங்களை நடத்தி50க்கு மேற்பட்ட நூல்களை வெளியிட்டுள்ளது. 1949இல் ஐரோப்பிய அறிஞர்களின் முயற்சியால் யுனெஸ்கோ சார்பில் அனைத்துலகப் பெயர் ஆய்வுக்குழு ஒன்று உருவாக்கப்பட்டது. இதன் மையம் லூவெய்ன் நகரில் உள்ளது. 50க்கு மேற்பட்ட நாடுகள் இதில் பங்கு கொண்டு இத்துறையை நன்கு வளர்க்கப் பாடுபட்டு வருகின்றன.

இதற்கென இதழ் வெளியிட்ட பெருமை அமெரிக்கர்களுக்குக் கிடைத்தது. 1950இல் 'ஒனோமா' என்ற இதழ் அமெரிக்கப் பல்கலைக் கழகத்தினரால் தொடங்கப்பெற்றது. அமெரிக்கப் பெயராய்வுக் கழகம் நேம்ஸ் (Nomes) என்ற மற்றொரு இதழைத் தொடங்கி நடத்தியது. ஜெர்மன், ருசியா, ஆஸ்ட்டிரியா, ஸ்காட்லாந்த் முதலான பல நாட்டைச் சார்ந்த ஆர்வம்மிக்க ஆராய்ச்சியாளர்கள் கழகங்களைத் தோற்றுவித்து இப்பணியில் ஈடுபட்டு பயனுள்ள பல அரிய கருத்துகளை நூல்களின் வாயிலாகவும், இதழ்களின் வாயிலாகவும் வெளியிட்டு வந்தனர். இன்று பல்வகைக் கழகங்கள் பல்கலைக் கழகங்களின் உதவியோடும், அரசாங்க உதவியோடும் இவ் ஆய்வை நன்கு நடத்தி வருகின்றன.

## இந்திய இடப்பெயராய்வு வரலாறு

நம் நாடு சுதந்தரம் அடைந்தபிறகே இத்துறையில் நன்கு கவனம் செலுத்த அறிஞர்களுக்கு வாய்ப்பு ஏற்பட்டது. அதற்கு முன்பு இதன் தொடர்பாக ஒரு சில பணிகள் ஆங்கில அரசுச் சார்பாக நடைபெற்றிருந்தாலும் பயனுள்ள முறையில் அவை அமையவில்லை. சில புள்ளி விவரங்களைத் தருகின்ற அரசாங்கக் குறிப்புகளாகவே அவை அமைந்திருந்தன என்று கூறலாம். B. C. Lane, காசிநாத் லட்சுமணன், மாதூர் மதுர் மோகினி, மிதிலா சரண் பாண்டேய, சுமதி, சங்காரியா, சேஷாத்திரி

சுப்பராயலு. சுரேஷ், வாசுதேவ், S. அகர்வாலா, ஸ்ரீபிரகாஷ், விஸ்வநாதரெட்டி, புளொக்மன், பிரான்பில். ஃபிளீட், ஹயவதன ராவ், சி. எம். இராமச்சந்திரன் செட்டியார், அச்சுதமேனோன், ரா. பி. சேதுப்பிள்ளை, தியாகராஜு முதலானோர் இத்துறையில் பாடுபட்டு நல்ல ஆய்வுக் கட்டுரைகளை வெளியிட்டு இத்துறையை நன்கு வளர்த்து வந்தனர். 1972இல் திருப்பதியில் அனைத்திந்தியத் திராவிட மொழியியல் கழகம் தன்னுடைய இரண்டாவது மாநாட்டை நடத்திய பொழுது திராவிட இடப்பெயராய்வுக் கழகத்தைத் தோற்றுவித்தது. 1976இல் வால்டேர் நகரில் திராவிட மொழியியல் கழகம் நடத்திய கிடுகு இராமமூர்த்தி நினைவு இடப்பெயராய்வுச் சொற்பொழிவு பயனுள்ள பல கருத்துகளை ஆய்வாளர்க்கு வழங்கிற்று. 1979இல் இந்திய இடப்பெயராய்வுக் கழகம் தொடங்கப்பெற்றது. அது பல கருத்தரங்கங்களை நடத்தியது. 'Studies in Indian Place Names' என்ற பெயரில் ஆய்விதழை நடத்தி வருகிறது. இதன் தொடர்பாக இதுவரை வெளிவந்த இதழ்கள் பல. அவற்றுள் சிறப்புடையன:—

1. Journals of Asiatic Society of Bengal.
2 Mythics society of India.
3. Indian Antiquary.
4. Journal of Geographical society of Madras.
5. Annals of oriental Research.
6. Journal of Madras Geographical Association.

தமிழகத்தைப் பொறுத்த வரையில் பேராசிரியர் ரா. பி. சேதுப்பிள்ளை அவர்களையே இத்துறையின் தந்தை எனக் கூறிப் போற்றுவர். அவர் எழுதிய 'தமிழகம் ஊரும் பேரும்" என்னும் நூல்தான் ஊர்ப்பெயராய்வின் அடிப்படையில் எழுந்த முதல் சிறந்த ஆய்வு நூல் என்று கூறலாம். சி.எம். இராமச்சந்திரன் என்பவர் பல கட்டுரைகள் எழுதி இருந்தாலும் இந்த நூல் வழங்கிய ஆக்கமும் ஊக்கமும் போல அவை வழங்கவில்லை என்றே கூறலாம். தமிழ்நாட்டில் இதற்குமுன்பு வள்ளலார் இராமலிங்க அடிகள் இத்துறையில் ஓரளவு பாடுபட்டுள்ளார் எனத் தெரிகிறது. திரிசிரபுரம் மகாவித்வான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை மிகுதியாக எழுதி வெளியிட்ட ஸ்தலபுராணங்கள் பல இடப் பெயர்களின் ஆய்வுக்கும், ஊர்ப்பெயர்களின் ஆய்வுக்கும் உதவுகின்றன எனலாம். மிகச் சமீபத்தில் கேரளப்

பல்கலைக்கழக இணைப் பேராசியர் டாக்டர் கி. நாச்சிமுத்து நன்கு உழைத்து நல்லதொரு நூலை "தமிழ் இடப் பெயராய்வு" என்ற பெயரில் வெளியிட்டுள்ளார். ரா. பி. சேதுப்பிள்ளைக்கு அடுத்து இத்துறையில் நுண்மாண் நுழைபுலத்தோடு விளங்கும் நல்லறிஞர் என இவரைத் துணிந்து கூறலாம். வேறு பல அறிஞர்கள் அவ்வப்பொழுது நடைபெற்ற பல்வகைக் கருத்தரங்குகளில் பற்பலக் கட்டுரைகளைத் தயாரித்துப் படித்து இத்துறை வளர பாடுபட்டுள்ளனர். சில மாவட்டங்களில் உள்ள ஊர்ப் பெயர்களைத் தொகுத்துக் கொடுத்து இவ்வாய்வுக்குப் பெரிதும் உதவியவர் சோமலெ ஆவார். இவர்தம் மாவட்ட வரலாற்று நூல்கள் ஊர்ப் பெயராய்வுக்குப் பெரிதும் உதவும் என்பதில் ஐயமில்லை. வேறு பல அறிஞர்களும் வெவ்வேறு கோணங்களில் இதன் தொடர்பான கருத்துகளை எழுதி வெளியிட்டு இவ்வாய்வுக்கு வழி வகுத்துள்ளனர்.

இவ்வாறு ஆன்றவிந்தடங்கிய கொள்கைச் சான்றோர் காட்டிய செந்நெறியைப் பேணி, பழந்தமிழ் இலக்கியங்களில் இடம்பெற்ற ஊர்களின் பெயர்களை ஆராய்ந்தால் பயனுள்ளப் பல் வகைச் செய்திகள் நமக்குக் கிடைக்கும். "நம் இந்திய மொழிகளில் காணப்படும் எல்லாப் பழைய இலக்கியங்களிலும் அளவிறந்த பூகோளச் செய்திகள் காணப்படுகின்றன. நம்முடைய பதினெண் மகா புராணங்கள், உபபுராணங்கள் மண்டல சதகங்கள், சிற்றிலக்கியங்கள் முதலியவற்றில் பூகோளம், ஊர்வரலாறு ஆகியன பற்றிய நிறைய செய்திகள் உண்டு".[6] இவற்றுள் இடம் பெற்ற ஊர்ப் பெயர்களை ஆய்வதால் ஏற்படும் பயன்கள் எண்ணிறந்தன. "மனிதப் பண்பாட்டையும், நாகரிகத்தையும் ஆராய்ந்து வெளிப்படுத்துவதில் வரலாற்றுக்கும், தொல்பொருளாய்வுக்கும் என்ன பங்கு உண்டோ அப்பங்கு இடப்பெயராய்விற்கும் உண்டு என்று இன்று அறிஞர்கள் உணர்ந்துள்ளனர்"[7] "தொல்பொருளாய்வில் காணப்படாததும், வரலாற்றுச் சான்றுகளில் திரிபடைந்து அல்லது புறக்கணிக்கப்பட்டுக் காணப் படுவதுமான மொழியியல் செய்திகளை இடப்பெயர்கள் முழுமையாகத் தருகின்றன"[8] என்று கூறும் F. T. Waniwright கூற்று இங்கு ஒப்பு நோக்கக் கூடிய தொன்றாகும்.

---

6. தமிழ் இடப் பெயராய்வு — டாக்டர் கி. நாச்சிமுத்து பக். 30
7. தமிழ் இடப்பெயராய்வு—டாக்டர். கி நாச்சிமுத்து பக். 51.
8. ஷை ஷை பக். 51.

இற்றைய பெயர்கள் எவ்வாறு திரிபடைந்துள்ளன என்பதைக் கண்டறிய பழைய இலக்கியங்களில் உள்ள பெயர் வடிவங்கள் பெரிதும் உதவும். ஆயினும் பல பெயர்கள் இற்றைய நிலையில் எந்த ஆய்வுக்கும் சட்டுப்படாமல் நிற்பதோடு பழைய உண்மையான பொருளைத் தரவும் உதவவில்லை என்பது மிகத் தெளிவாகிறது. இதனால் இவ்வாய்வினைப் பயனற்றது எனக் கூறுவாரும் உளர். அது தவறாகும். பழைய இலக்கியங்கள் கூறும் ஊர்ப் பெயராய்வு இற்றைய மொழியியல் துறைக்குப் பெரிதும் உதவும். இத்துடன் கிளை மொழி ஆய்வுக்கும் பெரிதும் பயன்படுகிறது. அகராதிக்கலையை வளர்க்க இது வழி வகுக்கிறது. நம் மொழியில் பிறமொழித் தாக்கம் எவ்வாறு வளர்ந்து வந்தது என்பதைக் கண்டறியவும் உதவுகிறது. மேலும் வரலாறு, நிலநூல், தொல்பொருள் ஆய்வு, சமூகவியல், மானிடவியல், நாட்டுப்புறவியல், இயற்கை இயல் முதலான பல துறைகளுக்கும் இது பெரிதும் உதவும். இவ்வாறு பல வழிகளிலும் உதவும் இந்த ஊர்ப் பெயராய்வினைச் சில குறிப்பிட்ட கோட்பாட்டின் அடிப்படையில் ஆராய்ந்தால்தான் பொதுநிலைக் கொள்கைக்கும் சிறப்பு நிலைக் கொள்கைக்கும் பொருந்தும் வண்ணம் பயனுள்ள ஆய்வாக அமைக்க முடியும்.

நம் ஊர்ப் பெயராய்வுக்கு உட்பட்ட இலக்கியங்கள் தொல்காப்பிய இலக்கண நூலுடன், பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண் கீழ்க்கணக்கு, சிலப்பதிகாரம், மணிமேகலை, பெருங்கதை என மொத்தம் 40 நூல்கள் இடம் பெறுகின்றன. இவை மீட்டுருவாக்கத்தில் இற்றைய ஆய்வுக்குரிய கோட்பாட்டின் அடிப்படையில் ஆய்வதற்குரியவையாகும். இவ்விலககியங்களில் இடம் பெற்ற பாக்களை மூல ஆதாரமாகக் கொண்டுதான் ஊர்ப் பெயர்களைச் சேகரித்து ஆராயவேண்டி இருக்கிறது. ஒரு சில பாடவேறுபாடுகளையும் மனதிற்கொள்ள வசதி இருக்கிறது. குறிப்பிட்ட நாட்டின் எல்லைக்குள் அடங்கியதெனக் கண்டறிய பூகோள ஆய்வு அடிப்படையில் சில வசதிகள் இருக்கும். ஊர்ப் பெயர்களைத் தனித்தனியாக ஆராயும்பொழுது ஒரு குறிப்பிட்ட ஊரின் பெயர் பலவாக இருக்கும். அதனைக் கண்டறிய வேண்டும். ஒரே பெயர் சில திரிபுகளைப் பெற்றும் காணப்படும். அவற்றையும் கண்டறிய வேண்டும். ஒரே பெயர் சேர நாட்டில் இருப்பது போலவே சோழ நாட்டிலும் இருக்கலாம்; பாண்டிய நாட்டிலும் இருக்கலாம். இந்த வேறுபாட்டையும் அறிய வேண்டும். இவற்றிற்கு உரையாசிரியர்கள் உதவி பெரிதும் தேவைப்படும். எனவே மூலபாடத்தை உரையாசிரியர் துணை கொண்டு நன்கு ஆழ்ந்து கற்று, சரியான பெயரையும், பொருளை

யும் உய்த்துணரும் ஆய்வு முயற்சியைப் பொறுமையுடன் மேற் கொள்ளவேண்டும். ஒரே இலக்கியத்திற்குப் பலர் உரை எழுதி இருக்கவும் கூடும். அதனால் உரைவேறுபாடும், மறுப்புரைகளும் எழக்கூடும். அவற்றை ஆழ்ந்து கற்று, ஒப்பு நோக்கி ஏற்புடைய முடிவைப் பெற்றுப் பெயரின் ஆய்வினைச் செய்தல் வேண்டும். இதற்குப் பல புலவர்களின் பெயர் முன்னால் அமைந்த ஊர்ப் பெயர்களும் உதவி செய்யக்கூடும். அவற்றை முறையாக ஆய்ந்து, அதன் கருத்தைத் தெளிவுபடுத்தி ஆய்வுக்குப் பயன் படுத்தவேண்டும். ஊர்ப்பெயர்களின் முன்னாலும் பின்னாலும் இணைந்த சொற்களைத் தனித்து ஆராய்ந்து அவற்றின் அமைப்பு முறையை ஆய்ந்து பெயரின் உண்மைத் தன்மையை நிலை நாட்ட முயலவேண்டும்.

சில பெயர்கள் தாவரங்களோடு தொடர்புடையனவாக இருக்கும். அதன் காரணத்தை ஆய்வதோடு இன்று அந்தத் தாவரங்கள் உள்ளனவா, அவற்றிற்கு இன்று வழங்கப்படும் பெயர்கள் முதலியவற்றை ஆராய்ந்து முடிவு செய்ய வேண்டும். சில ஊர்ப் பெயர்கள் மன்னர் பெயர்களையோ தனிப்பட்ட பெயர்களையோ பெற்றிருக்கும். அவற்றையும் ஆராய்ந்து அதற்கானக் காரணத்தையும் ஆராய்ந்து அறிய வேண்டும். ஆற்றுப்படை இலக்கியங்கள் கூறும் ஊர்களின் பெயர்களைக் கொண்டு சாலை அமைப்பு முறையில் வரைபடங்கள் வரைய முடியுமா எனப் பார்த்து, முடியுமானால் வரைந்து தமிழக வரை படத்தில் குறித்துக் காட்ட வேண்டும். அதனால் அவ்வூரின் இருப்பிடத்தைத் தெளிவாக அறிய வாய்ப்புக் கிடைக்கும். இலக்கியங்களில் கூறப்பட்டப் போர்க்களங்கள் தொடர்பான ஊர்ப் பெயர்களைத் தனித்து ஆய்ந்து, சான்றுகளைக் கொண்டு நிறுவுதல் நலம் பயக்கும். கடல் கோள்பட்ட ஊர்களும், நகரங்களும் எவை என்பதை இலக்கியச் சான்றுகளுடன், பூகோள நூல்களுடன் ஒப்பிட்டுப் பார்த்து அவற்றின் உண்மை நிலையை எடுத்துக் கூற வேண்டும். நானிலங்களுக்கேற்ப ஊர்ப்பெயர்கள் அமைந்துள்ளன என்பதைத் தக்கச் சான்று காட்டி நிரூபிக்க இலக்கியத்தின் முதல், கரு, உரிப் பொருள்களைத் தக்க முறையில் பயன்படுத்த வேண்டும்.

பழந்தமிழ் இலக்கியங்கள் கூறுகின்ற ஊர்களைப் பற்றிய உண்மை நிலையைக் கண்டறிய கள ஆய்வு அவ்வளவாகப் பயன் படாது. ஓரளவு இன்றைய அமைப்பு நிலைக்கேற்ப பொருத்த முள்ள சில இடங்களில் மட்டுமே இவ்வாய்வு பயன்படும். அதனை நன்கு உணர்ந்து அதற்கேற்ப ஆய்வை மேற்கொள்ள வேண்டும்.

புதைபொருள் ஆராய்ச்சியும், கல்வெட்டாய்வும் பயன்படக் கூடிய நிலையும் இருப்பின் பயன்படுத்திக் கொள்ளலாம். தமிழகத்தோடு தொடர்புடைய பிற நாடுகளில் அக்காலத்தில் எழுந்த இலக்கிய நூல்களில் இடம்பெற்ற ஊர்ப்பெயர்களை எடுத்துக் கொண்டு நம் இலக்கியம் கூறும் பெயர்களோடு ஒப்பிட்டுக் காணலாம். வான்மீகி இராமாயணம் கூறும் கபாட புரம், இலங்கை புத்த நூல் கூறும் மகாவம்சம், அசோகர் கல் வெட்டுக் கூறும் ஊர்ப் பெயர்க் குறிப்பு முதலியவற்றைப் பயன் படுத்தி ஒப்பிட்டுக் காணலாம். சில மேலை நாடுகளில் திராவிட மொழிப் பெயரோடு தொடர்புடைய பெயர்கள் இருக்கின்றன. அவற்றை ஒப்பிட்டுப் பார்த்து, நம் ஆய்வுக்குப் பயன்படுத்த முடியுமேயானால் பயன்படுத்தி நல்ல கருத்தை எடுத்துக் கூறலாம். இதற்கு " The Problem of Dravidian origins A Linguistic, Anthropological and Archaelogical Approach - T. Balakrishnan Nayar" போன்ற நூல் நன்கு பயன்படும். இதற்கு முன்பு ஊர்ப் பெயராய்வு செய்த பிற மொழியாளர் ஆய்வு நூல்களை வழிகாட்டியாகப் பயன்படுத்தி நம் ஆய்வைச் செய்யலாம். இன்றைய ஆய்வாளர் பலர் எழுதி வெளியிட்ட சொல்லாய்வு நூல்களை இதற்கு நன்கு பயன்படுத்தலாம். இவ்வாறு நம் ஆய்வுக்குப் பயன்படும் வழிவகைகளை நன்கு தொகுத்து வைத்துக் கொண்டு ஆய்ந்தால் பயனுள்ள உண்மையான கருத்துகள் பல கிடைக்கக் கூடும். இத்தகு பயனுள்ள பல்வகை கோட்பாடுகளை மிக எச்சரிக்கையாகக் கையாண்டு, பழந்தமிழ் இலக்கியத்தில் இடம் பெற்ற ஊர்ப் பெயர்களை ஆய்ந்து அதனால் கிடைக்கப் பெற்ற சான்றுடன் கூடிய கருத்துகளை விரிவாகத் தனித்தனியாகத் தொகுத்தும் வகுத்தும் கூறியுள்ளதை அடுத்து வரும் பகுதிகளில் காணலாம். இந்த ஆய்வுக்கென மேற்கொண்ட பொதுநிலைக் கொள்கைகளும் சிறப்பு நிலைக் கொள்கைகளும் தமிழக பழைய வரலாறு, பண்பாடு, நாகரிகத்தின் அடிப்படையில் மேற்கொண்ட வையாகும். கோட்பாடுகள் அனைத்தும் தமிழ் இலக்கியக் கோட்பாடுகள் அனைத்தும் தமிழ் இலக்கியக் கோட்பாட்டிற்குட் பட்டனவாக அமைக்கப்பட்டிருப்பதைத் தொடர்ந்து கற்பார்க்கு வெள்ளிடை மலையென நன்கு விளங்கும் என நன்கு நம்பலாம்.

# 3. சங்க இலக்கியம் சுட்டும் ஊர்ப் பெயர்கள்.

'சங்கப் பாடல்களிலே ஊர்ப் பெயர்களின் பொருள் விளங்கு மாறு நேர்முகமாகவும் மறைமுகமாகவும் புலவர்கள் பாடியிருக் கிறார்கள்'[1] இச் சங்கப்பாக்களுக்கு இலக்கண நூலாகத் திகழ்ந்த தொல்காப்பியம் மக்கள் வாழுமிடத்தை 'ஊர்' என்றே குறிப் பிட்டுள்ளதைக் காணமுடிகிறது. முப்பெரும் பிரிவையுடைய இவ்விலக்கண நூல் மொத்தம் எட்டு இடங்களில் ஊர்ப் பெயர் களைக் குறிப்பிட்டுள்ளது. எல்லாம் மூன்றாவது பிரிவாகிய பொருளதிகாரத்தில்தான் இடம் பெற்றுள்ளன.

1. பேரூர் (அகத்திணையியல். 37ஆவது நூற்பா).
2. ஊரது சார்வும் (ஷ 40 ஷ)
3. ஊர்க்கொலை (புறத்திணையியல் 3 ஷ)
4. ஊர்ச்செரு (ஷ 13 ஷ)
5. ஊரொடு தோற்றம் (ஷ 30 ஷ)
6. ஊரும் பெயரும் (களவியல் 11 ஷ)
7. ஊரும் அயலும் (செய்யுளியல் 159 ஷ)
8. ஊரும் பெயரும் (மரபியல் 76 ஷ)

தொல்காப்பியத்திற்கு உரை எழுதிய சான்றோரும் இதன் தொடர்பாகப் பல கருத்துகளைக் குறிப்பிட்டுள்ளதைக் காண லாம். நச்சினார்க்கினியர் அகத்திணையியலில் கண்ட 17வது நூற் பாவிற்கு உரை எழுதுங்கால் நிலங்களுக்கேற்ப ஊர்ப் பெயர்கள் வைக்கப்பட்டுள்ளமையைக் குறிப்பிட்டுள்ளார். அவை எந்தெந்த நிலத்திற்குரிய ஊர்கள் என்பதைச் சுட்டிக்காட்ட வசதியாக அமைந்துள்ளன பழந்தமிழரின் புவியியல் நுண்ணறிவையும், ஊர்ப்பெயர் அமைக்கும்பொழுது மேற்கொண்ட வைப்புமுறை நல்லறிவையும் இதனால் உணர்ந்துகொள்ள முடிகிறது.

---

1. தமிழ் இடப்பெயராய்வு டாக்டர் இ. நாச்சிமுத்து பக். 123

நச்சினார்க்கினியரே ஊர் என்ற சொல்லையே எழுத்ததிகாரம் புணரியலில் 11 ஆவது நூற்பாவிற்கு எழுதிய உரையில் குறிப்பிட்டுள்ளதையும் காணமுடிகிறது. பிற உரையாசிரியர்களும் குறிப்பிட்டுள்ளனர் ஆயினும் நச்சினார்க்கினியர் கூறும் விளக்கம் சிறப்பு வாய்ந்ததாக அமைந்துள்ளது. ஊர்ப் பெயர்களின் பின்னொட்டாக அமைந்த சொற்கள் குறிப்பிட்ட நிலத்திற் குரியவை என ஆய்ந்து கண்டறிந்து வெளியிட்டுள்ளார்.

1. முல்லை நிலத்திற்குரியவை—பாடி, சேரி, பள்ளி.
2. குறிஞ்சி நிலத்திற்குரியவை—சிறுகுடி, குறிச்சி.
3. மருத நிலத்திற்குரியது—ஊர்.
4. நெய்தல் நிலத்திற்குரியவை—பட்டினம், பாக்கம்.
5. பாலை நிலத்திற்குரியது—பறந்தலை.

இவற்றின் அடிப்படையிலேயே ஊர்ப்பெயர்கள் அமைந்திருக்கும் முறையைச் சங்கப்பாடல்கள் சுட்டும். நிலங்களின் பெயர்களிலேயே சில ஊர்ப்பெயர்கள் அமைந்திருக்கும் தன்மையையும் காணமுடிகிறது. இதற்குக் கல்வெட்டு உறுதுணை செய்கிறது.

முல்லை—முல்லை மங்கலம்
குறிஞ்சி—குறிஞ்சிப் பாறை
மருதம்—மருதத்தூர்
நெய்தல்—நெய்தல் வாயில்
பாலை—சிறுபாலையூர்

இதன் அடிப்படையில் எழுந்த அமைப்பு முறைகளையே நச்சினார்க்கினியர் நன்கு ஆய்ந்து வெளியிட்டுள்ளார். ஏணிச்சேரி, இலவந்திகைப்பள்ளி, சிறுகுடி, குறுங்குடி, ஆலங்குடி, முனையூர், விரியூர், மருவூர்ப்பாக்கம், பட்டினப்பாக்கம், வெண்ணிப் பறந்தலை முதலிய பல ஊர்ப் பெயர்களையெல்லாம் சங்கப் பாடல்களில் காணலாம் நச்சினார்க்கினியர் கூறிய சில ஊர்ப்பெயர்களைக் காணமுடியவில்லை. அவை இலக்கியங்களில் இடம்பெறாமல் போயிருக்கக்கூடும் என ஊகிக்க இடம் உள்ளது. 'சங்ககாலப் பகுதியில் தமிழகப் பகுதியில் இருந்த மொத்த ஊர்களின் எண்ணிக்கைபற்றி தற்கால ஆராய்ச்சி முடிவுகளிலிருந்து மதிப்பீடு செய்ய இயலவில்லை[2] இது போலவே சங்க இலக்கியங்களில் தமிழகத்திலிருந்த எல்லா ஊர்களின் பெயர்களும் குறிப்பிடப்பட்டுள்ளன என்று நினைப்பதும் தவறு. குறிப்பிட்ட மிகக் குறைவான அளவிலேயே ஊர்ப்பெயர்கள் காணக் கிடைக்கின்றன. சங்க இலக்கியப் பாடல்களில் கிட்டத்தட்ட 240 ஊர்

2. ஷை ஷை பக். 126.

களின் பெயர்கள் குறிக்கப்பட்டுள்ளன. இவற்றுள் பிறநாட்டு ஊர்ப்பெயர்களும் இடம் பெற்றுள்ளன.

'கிடைக்கின்ற ஊர்ப்பெயர்களைப் பல படிநிலைகளில் ஆராய வேண்டியிருக்கிறது. முதலாவதாக அப்பெயர்கள் இன்றும் தொடர்ந்து வழக்கில் இருக்கின்றனவா, அப்பெயர் தாங்கிய ஊர்களின் தற்கால இருப்பிடங்கள் எவை, பெயர்கள் என்ன மாற்றங்களைப் பெற்றிருக்கின்றன என்பன போன்ற செய்திகள் ஆராயப்பட வேண்டும்'[3] இன்றைய நிலையில் உள்ளவற்றை ஆராய முற்படுங்கால் பல சிக்கல்கள் தோன்றுகின்றன. வரலாற்றின் அடிப்படையிலும், மொழியின் அடிப்படையிலும் புதுப்புது சிக்கல்கள் தோன்றி முன்னோர் கூறிய பல கருத்துகளுக்கு முரணாக அமைந்து விடுமோ என்ற அச்சம் எழ நேரிடுகிறது. "ஊர்ப் பெயர்களில் தற்கால வடிவங்களையும், இருப்பிடத்தையும் கண்டு பிடிப்பது கடினமானது. ஏனெனில் காலப்போக்கில் மொழி மரபுக்கேற்ப ஒலி நிலையில் பெயர்கள் மிகவும் திரிந்து காணப்படுகின்றன."[4] என்ற கூற்று மிகவும் பொருத்தம் உடையதாகும். மதுரை, தர்மபுரி போன்ற ஊர்ப்பெயர்களை இதற்குச் சான்று காட்டலாம். சங்ககால இலக்கியங்களில் இடம் பெற்ற பல ஊர்ப்பெயர்கள் மறைந்தும் விட்டன அப்படி மறைந்திருந்தாலும் அவற்றின் தொடர்பான கருத்துக்களைக் கண்டறிய இடைக்காலக் கல்வெட்டுகள் ஓரளவு உதவுகின்றன. அம்பர், அரசூர், அரும்புலியூர், அள்ளூர், ஆர்க்காடு, ஆரணி, ஆலங்குடி, இடைக்குளத்தூர், உம்பர்வளநாடு, உறத்தூர், உறந்தை, எயினூர், ஒல்லையூர்க்கூற்றம், கச்சிப்பேடு, கருவூர், காவிரிப்பாக்கம், குறுச்சி, கோனாடு, செங்கண்மா, தகடூர், திருக்கழுமலம் முதலான பல பழைய ஊர்களின் பெயர்களைப் பற்றிக் கண்டறிய கல்வெட்டுகள் பெரிதும் உதவுகின்றன. இவற்றின் உதவியால் மீட்டுருவாக்கத்தின் அடிப்படையில் சில ஊர்ப்பெயர்களை ஆராய வழி ஏற்படுகிறது. 'சங்க காலத்தில் இருந்து இன்று மறைந்து போன பெயர்கள் பல இடைக்காலக் கல்வெட்டுக்களில் காணப்படுகின்றன. எனவே, கல்வெட்டுக்களையும், செப்பேடுகளையும் அலசி ஆராய்ந்தால் பல ஊர்ப்பெயர்களின் இருப்பிடங்களைக் கண்டறிய முடியும்'[5] என்ற டாக்டர் கி. நாச்சிமுத்துவின் கருத்து நம் சங்ககால ஊர்ப்பெயர் ஆய்வுக்குப் பெரிதும் துணை

3. ௸ ௸ பக். 121.
4. ௸ ௸ ௸
5. ௸ ௸ பக். 122

செய்கிறது. இம்முறையைப் பின்பற்றி சில ஊர்ப்பெயர்களை ஆராய்ந்ததில் சில பயனுள்ள கருத்துகள் கிடைத்துள்ளன.

சங்ககால ஊர்ப்பெயர்களைச் சிலர் தவறாகக் கருதி புராணச் செய்திகளோடு தொடர்பு படுத்துவதை இன்றும் காண முடிகிறது. அஃது முற்றிலும் தவறாகும். புராணக் கதைகளைப் பற்றிய சில குறிப்புகளைக் கொண்டு இவ்வாறு சிலர் கூறுவதைக் காணலாம். பிற மொழியார் கூறும் இராமாயணம், பாரதம் போன்ற சில கதைப் பகுதிகள் சுவைக்கென இலக்கியங்களில் இடம் பெற்றிருந்தாலும், தொன்று தொட்டுக் கூறப்பட்டு வரும் ஊர்ப்பெயர்களுக்கும் இக்கதைகளுக்கும் எப்படி தொடர்பு ஏற்படுத்திக்கூற இயலும். ஆயினும் சிலர் பிற்காலத்து ஊர்ப் பெயர்களுக்கு இத்தகைய மரபைக் கையாண்டு இராமாயணமும், மகாபாரதமும் தமிழகத்தில் நடந்தது போலவே கூறி பொருத்திக் காட்ட முனைவர். அவை பொருத்தமுடையனவாகக் கருதப்பட் டாலும், இடைக்கால பக்தி மார்க்கத்தின் தாக்கத்தால் புதியன வாக வைக்கப்பட்ட ஊர்ப்பெயர்கள் என்றே கொள்ளுதல் வேண்டும். இத்தகைய மரபு சில மாவட்டங்களில் ஒன்று போல அமைந்திருப்பதைக் காணமுடிகிறது. தஞ்சாவூர் மாவட்டத்தில் இத்தகைய ஊர்ப்பெயர்கள் இருப்பதை இன்றும் காணலாம். பொன்மான் மேய்ந்த நல்லூர், புள்ளி மான்குடி, அகரமாங்குடி முதலிய ஊர்ப்பெயர்கள் புராணக்கதைத் தொடர்புடையவை எனக் கூறுவதைச் செவி வழிச் செய்தி என்பர். இது தவறாகும். இதன் அடிப்படையில் சங்க இலக்கிய ஊர்ப்பெயர்களை ஆய்வது கூடாது. அஃது நம் மரபுக்கு ஒவ்வா நிலையை உருவாக்கி விடும். 'பிற்காலத்தைப் போலப் புராணக் கதைகளைக் கூறி ஊர்களின் பெயர்க்கு விளக்கம் கூறும் மரபு சங்ககாலத்தில் இருந்ததாகத் தெரியவில்லை'[6] என்ற கருத்து நம் ஆய்வுக்குப் பெரிதும் அரண் செய்வதாக அமைந்துள்ளதைக் காணலாம்.

சங்கப்பாடல்களில் இடம் பெற்றுள்ள ஊர்ப்பெயர்களைக் காணுங்கால் பழந்தமிழரின் இயற்கையோடு இயைந்த இன்பியல் வாழ்வே நினைவுக்கு வருகிறது. மனிதன் தன் தேவையைப் பூர்த்தி செய்வதற்கேற்ற சூழலை அமைத்துக் கொண்டு வாழ ஆசைப்படுபவன். தான் வாழும் இடம் தனக்கேற்ற பாதுகாவலை வழங்குமா என் நன்கு ஆய்ந்து, அங்கே தன்னைச் சார்ந்தார் துணைகொண்டு ஊர்களை அமைக்க முயல்வது இயல் பூக்கத்தின் பாற்படும். அப்பொழுது மனிதனுக்கே இயல்பாக அமைந்த போலச் செய்தல், ஒப்புமையாக்கம் முதலிய பண்புகளைத்

6, ஷை ஷை பக். 124

துணையாகக் கொண்டு ஊர்களை அமைக்க முயல்வான். அதன் காரணமாக உணவு, உடை, உறையுள் போன்றவை நிறைவாகக் கிடைக்கும் முறையிலேயேதான் வாழிடங்களை அமைக்க விழைந்ததால் எந்நிலத்தில் ஊரை அமைக்க முற்பட்ட போதும் அந்நிலத்தின் செழிப்பான, வளமான, பாதுகாப்பான பகுதியையே தேர்ந்தெடுத்து அமைத்துக் கொண்டான் என்பதைச் சங்கப் பாடல்கள் சுட்டும் ஊர்களைக் கொண்டு கண்டறிய முடிகிறது. பழந்தமிழன் தான் தேர்ந்தெடுத்த வாழிடங்களை உற்று நோக்கி ஆராயும் பொழுது, மேற்கொண்ட உளப்பாங்கு இன்றைய உளவியல் அறிஞர்களின் முடிந்த முடிபுக்குப் பெரிதும் பொருத்தமாக அமைந்திருப்பதைக் காண முடிகிறது.

மானிடன் இயல்பாக மூவகை உணர்ச்சியைப் பெற்றவன். அவை,

1. பசி உணர்வு
2. விளையாட்டு உணர்வு
3. இன்ப உணர்வு

இம்மூன்றும் நல்ல உணர்வாக எழுந்து முழுமை பெறவும், மனிதன் எதிர்பார்க்கும் நிறைவு பெறவும் தன்னைச் சூழ்ந்துள்ள நீர்நிலை நிலவளம், தாவரங்கள், தட்பவெப்பநிலை, சக்தி முதலியவற்றை உற்றுநோக்கி ஆராயும் பொழுது அங்கே அவன் மனவெழுச்சிக்கு முதலிடம் கிடைத்து விடுகிறது. அதனால்தான் சிலர் குறிஞ்சியிலும், சிலர் முல்லையிலும், சிலர் நெய்தலிலும் வாழ ஊர் அமைத்துக் கொண்டதைக் காட்டிலும், பலர் மருத நிலத்தில் ஊர் அமைத்து வாழவிரும்பினர் எனத்தெரிய வருகிறது. பெரும்பாலோர் பாலை நிலத்தில் வீடு அமைக்க விரும்பாததற்கு இதுவே காரணமாகவும் அமைகிறது. இக்காரணமே ஆறலை கள்வர் வாழ்விடம் பாலையாக அமைந்து அங்கும் சிற்றூர் பல அமைய நேரிட்டன. உலக நாகரிகம் பற்றி ஆய்வு செய்தோர் ஆற்றங்கரைகளில்தான் நாகரிகம் பிறந்துவளர்ந்து முதிர்ச்சியுற்ற தென்பர். மக்களும் தொடக்கக் காலத்தில் ஆற்றங்கரை யோரத்திலேயே ஊர்கள் அமைக்க விழைந்து, அப்பணியில் ஈடு பட்டதால்தான் ஆற்றங்கரைச் சிற்றூர், பேரூராக வளர்ந்து நகர மாகத் திகழ்வதைக் காணமுடிகிறது. சங்க இலக்கியமும் ஆற்றங் கரையில் அமைந்த ஊர்களை மிகுதியாகச் சுட்டுவதைக் காண முடிகிறது. மனித வாழ்வுக்குத் தேவையான வசதிகளைத் தரக் கூடிய பொருளாதார வளமுள்ள இடங்களில் நிறைய ஊர்கள்

தோன்றுகின்றன. எனவேதான் பழைய காலத்தில் நீர்ப்பாசன வசதியுள்ள ஆற்றுப் பகுதிகளில் நிறைய ஊர்கள் தோன்றின.[7]

இவ்வூர்களுக்குப் பெயர்வைக்கும் பொழுது மனிதனுக்கு இயல்பாக அமைந்த அழகுணர்ச்சி பெரிதும் உதவிற்று எனலாம். தன்னைச் சூழ்ந்துள்ள அழகுப்பொருட்கள் அனைத்தையும் ஊர்ப் பெயர்களில் இடம்பெறச் செய்து வீட்டதற்கு இதுவே காரண மாகும். ஓங்கி உயர்ந்து நின்று எல்லா வளங்களையும் வழங்கும் மலையின் அழகைக் கண்டு அதன் அடிப்படையில் ஊர்களுக்குப் பெயர் வைத்தமையால்தான் குன்றம், குன்றூர், செங்கோடு, பரங்குன்றம், மாலிருங்குன்றம், நாஞ்சில், முதிரம், கொல்லி முதலிய ஊர்ப்பெயர்கள் தோன்றின. சிலர் தாம்வாழும் காட்டுப் பகுதியை மனதிற் கொண்டு தம் ஊர்களுக்குப்பெயரிடும்பொழுது அங்கு மிகுதியாக வளர்ந்த மரங்களை மனதிற் கொண்டும், திரிந்த விலங்குகளை மனதிற் கொண்டும், பறவைகளை மனதிற் கொண்டும் ஊர்ப்பெயர்கள் அமைத்ததை விரிவாகக் காண முடி கிறது. இஃது எல்லா நிலங்களிலும் நடைபெற்ற ஒரு செய லாகக் கருத இடம் ஏற்பட்டாலும் முல்லை நிலப்பகுதியில் வேறு பொருட்களை வைத்துப் பெயரிட வழி ஏற்படாததால் இவற் றையே முதற்காரணமாக ஏற்க வேண்டியிருக்கிறது. காலப் போக்கில் அவ்வூர்கள் செம்மையுற்ற மருதநில ஊர்களைப் போலவே அமைந்து விடுவதையும் காண முடிகிறது. இதன் அடிப் படையில் ஆர்க்காடு, ஆலங்கானம், ஆலம்பேரி, இருப்பை, மாங் காடு, முதுவெள்ளிலை, வாகை, விச்சி, குராப்பள்ளி, கச்சி, கடம் பின் பெருவாயில் முதலிய ஊர்கள் அமைந்திருப்பதைச் சங்கப் பாடல்கள் உணர்த்துகின்றன. நன்கு செழிப்பு வாய்ந்த நிலம் மருதநிலம். அப்பகுதியில் ஊர்கள் மிகுதியாக அமைய ஆறு, குளம், ஏரி முதலிய நீர்நிலைகளே காரணம். எனவே இப்பகுதியில் நீர் நிலையின் அடிப்படையில் அரிசில், காரி யாறு, பொறையாறு, கயத்தூர், குளமுற்றம், பாழி, பிசிர், மாவிலங்கை முதலிய பெயர்கள் அமைந்திருப்பதைக் காண முடிகிறது. இப்பகுதியில் கோட்டைகள் மிகுதியாகக் கட்டப் பட்டு வந்தமையால், அதன் அடிப்படையிலும் ஊர்கள் அமைந் துள்ளன. எயில், கானப் பேரெயில் முதலியவற்றைச் சான்று காட்டலாம். ஆயினும் பிற நிலங்களில் கட்டப்பட்ட கோட்டை களோடு கூடிய ஊர்களும் இருந்தன வென்பதற்கு எயிற்பட்டினம் கிடங்கில், குடவாயில், குணவாயில் முதலியவற்றைச் சான்று காட்டலாம்.

---

7. ஷை ஷை பக். 165,

கடலும் கடலைச் சார்ந்த இடமும் நெய்தலாகும். அங்கு அமையும் ஊர்களைப் பெரும்பாலும் பட்டினம் என்றே அழைப்பர். ஆயினும் கடற்கரையை யொட்டிப் பல சிற்றூர்களும் இருந்தன. அலைவாய், காவிரிப்பூம்பட்டினம், கோடி, இடைக்கழி நாடு, நீர்ப்பெயற்று முதலியவை கடற்கரையில் அமைந்த ஊர்கள் இதனை யொட்டி அமைந்த நகரப்பகுதியைப் பாக்கம் என்று அழைத்ததை மருவூர்ப்பாக்கம், பட்டினப்பாக்கம் என்று சிலப்பதிகாரம் சுட்டும். பாலைநிலத்தைச் சார்ந்த ஊர்ப்பகுதியைப்பொதுவாகப் பறந்தலை என்றே குறிப்பர் என நச்சினார்க்கினியர் தம் உரையில் கூறியதற்கேற்ப வெண்ணிப் பறந்தலை என்ற ஊர் காணப்படுகிறது. ஆயினும் இதுபற்றிய கருத்து வேற்றுமை நிலவுகிறது. ஆறலைகள்வர் வாழ்ந்த பகுதியும் பாலைநிலப் பகுதியே. அப்பகுதியைப் புலவர் பெருமக்கள் ஊர் என்றே குறித்துள்ளனர். அவற்றைக் குறிக்கும் சிறப்புப்பெயர்கள் குறிப்பிடப்படவில்லை. ஓரிடத்தில் குறும்பூர் என்ற ஓர் ஊர்ப்பெயர் இடம் பெற்றுள்ளது.

அவற்றைத் தவிர வேறு பல நோக்கிலும் ஊர்ப்பெயர்கள் அமைந்திருந்தமையைக் காணமுடிகிறது. யாதேனும் ஒரு பொருளை அடிப்படையாகக்கொண்டே ஊர்ப்பெயர்கள் வைக்கபட்டிருத்தல் வேண்டும். இங்கு "எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே" என்ற காப்பியர் கருத்தை நினைத்தல் நலம். மேலும் இலக்கண ஆசிரியர்கள் கூறும் பெயர் பற்றிய பொதுவான கருத்துகள் ஊர்ப்பெயர்களோடு தொடர்புடையனவாக அமைந்துள்ள நிலையைக் காண முடிகிறது. பெயர் இருவகைப் படும் என்பர். ஒன்று இடுகுறிப் பெயர், மற்றொன்று காரணப் பெயர். ஒவ்வொன்றும் பொது, சிறப்பு என இருஉட்பிரிவுகளைப் பெற்று இடுகுறிப் பொதுப்பெயர், இடுகுறிச் சிறப்புப்பெயர், காரணப்பொதுப்பெயர், காரணச் சிறப்புப்பெயர் என நான்காக அமையும். இத்துடன் காரண இடுகுறிப்பெயர் ஒன்றும் சேர்த்து ஐந்தாகக் கூறப்படுவதுண்டு. இக்கருத்தையொட்டி சங்க கால இலக்கியம் கூறும் ஊர்ப்பெயர்களை ஆராயின் அனைத்திற்கும் சில சான்றுகள் கிடைப்பதைக் காணலாம். அழுந்தை, உரோடகம் எக்கூர், ஏறை, கொடும்பை, சிக்கற்பள்ளி, பாரம், மாறோக்கம் முதலிய பெயர்களின் அமைப்புக் காரணத்தை ஆராய்ந்து அறிய முடியாததால் இடுகுறிப்பெயருள் அடக்கலாம். (இந்நிலை ஏதாவது காரணம் அறியும் வரையில்). இப்பெயர்களைப்பொது, சிறப்பு என வகைப்படுத்த முடியாது. அட்டவாயில் என்னும் சொல் போர் நடந்த ஊரைக் குறிப்பதாகக் கொள்ள இடமிருக்கிறது. அது போலவே முனையூரும் போரின் காரணமாக

அமைந்த பெயராகக் கொள்ள இடமிருக்கிறது. அரிமணவாயில் என்பது கள்மணக்கும் வாயில் என்னும் பொருளில் அமைந்தது. இவற்றைப் பேலவே அள்ளூர், ஊணூர், கள்ளூர், கள்ளில், தேனூர் போன்ற பெயர்களும் காரணத்தால் அமைந்தவையே. எனவே இப்பெயர்களைக் காரணப் பெயர் என்று கூறலாம். இப் பெயர்களையும் பொதுப் பெயர் என்றும், சிறப்புப் பெயர் என்றும் பகுத்துக்கூற இயலவில்லை. கிடங்கில், முள்ளூர், கயத்தூர் போன்ற ஊர்ப் பெயர்களைக் காரண இடுகுறிப் பெயராகக் கருதலாம். கிடங்கில் காரணம் கருதும் பொழுது அகழி இருக்கும் எல்லா இடங்களுக்கும் பெயராகிக் காராணம் கருதாத பொழுது குறிப்பிட்ட ஓரிடத்திற்கே இடுகுறிப் பெயராகி நிற்பதால் காரண இடுகுறிப் பெயர் என அழைக்கலாம். முள்ளூர் முட்செடி களை மிகுதியாக உடைய ஊர்களை எல்லாம் குறித்தாலும் குறிப்பிட்ட ஒரூரின் பெயரேயாகும். கயத்தூர் குளம் உள்ள எல்லா ஊரையும் குறித்தாலும் இடுகுறியாக ஒரு குறிப்பிட்ட ஊரையே குறிக்கும். எனவே இவற்றைக் காரண இடுகுறிப் பெயராகக் கருதலாம்.

இடப் பெயராய்வு வரலாற்று அடிப்படைச் சான்றாக அமை வதோடு புவியியல் கருத்தும், பண்பாடு பற்றிய கருத்தும், மொழி பற்றிய கருத்தும், மனநிலை பற்றிய கருத்தும் கண்டறிய பெரிதும் உதவும்.[8] குமரி என்ற பெயர் ஆற்றைக் குறிக்கும் என்றும், மலையைக் குறிக்கும் என்றும், நாட்டைக் குறிக்கும் என்றும், ஊரைக் குறிக்கும் என்றும் பலர் பலவிதமாகப் பேசவும் எழுதவும் செய்கின்றனர் இடப் பெயராய்வில் வரலாற்று அடிப்படைச் செய்திகள் பலவும் ஒருமுகமாக்கப்படும் பொழுது வெளிப்படும் செய்திகள் பலவாகும். அவை தமிழக வரலாற்றி றிற்குப் பெரிதும் உதவுகின்றன. குமரி என்ற சொல் கன்னி, துர்க்கை, குமரிமுனை, அழிவின்மை, கற்றாழை என்னும்

---

8. The place name study, one of the fecund sources of historical research, merits a deep, analytical study, since it renders in valuable help not only in trading the geographical and cultural history of the people but also in examining its linguistic aud pshychological potentialities—

Plant-place Names in Tamil by Dr. S. V. Subramanian and Tmt. Bagavathi. P. 1.

பொருட்களைத் தரும் என அகராதி கூறும். இதில் இடம் தொடர்பானது குமரிமுனை என்பதாகும். இதனைப் பற்றி இளங்கோ அடிகள் குறித்துள்ளார்.

"பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக்
குமரிக்கோடும்"
(சிலப். காடுகாண்காதை 19-20)

என்னும் அடிகளில் குமரி என்பது மலையைக் குறிப்பதாக வந்துள்ளது. குமரி என்று மட்டும் பதிற்றுப் பத்துக் குறித்துள்ளதைக் காணமுடிகிறது.

"ஆரியர் துவன்றிய பேரிசை இமயம்
தென்னங் குமரியொ டாயிடை" (பதிற் 11:23-24)

"கடவுள் நிலைஇய கல் ஓங்கு நெடுவரை
வடதிசை எல்லை இமயம் ஆக
தென்னம் குமரியொடாயிடை அரசர் (ஷை 43:6—8)

சிலப்பதிகார உரையாசிரியர் அடியார்க்கு நல்லார் உரையின் வாயிலாக இது யாறு எனத் தெரியவருகிறது. குமரிக்கண்டம் என்பது கடலால் கொள்ளப்பட்ட ஒரு நிலப்பகுதி. இந்தியாவின் தெற்கே இருந்தது. இக்கால ஆராய்ச்சியாளர் இதனை, லெமூரியாக் கண்டம் என்பர். இந்நிலப்பரப்பு எழுநூற்றுக் காவதம் என்றும் இதில் ஏழ்தெங்க நாடு, ஏழ் மதுரை நாடு ஏழ் முன் பாலை நாடு, ஏழ் பின் பாலை நாடு, ஏழ்குண கரை நாடு,ஏழ்குன்றநாடு, ஏழ்குறும்பனைநாடு என நாற்பத்தொன்பது நாடுகளும் மற்றும் குமரி, கொல்லம் முதலிய பல மலைநாடுகளும் இருந்தனஎன்றும் சிலப்பதிகாரவுரைகூறுகிறது. இக்கண்டத்திற்கு பஃறுளியாறு தெற்கெல்லையாகவும் குமரியாறு வடக்கெல்லையாகவும் இருந்தன. குமரிக்கோடு என வருவதால் குமரிமலையொன்று இருந்ததாகக் கொள்ளலாம் என்றும் அவ்வுரை குறிப்பிடுகிறது. இவற்றின் துணை கொண்டு ஆராயும்பொழுது குமரி என்ற ஓர் ஊர் கிடையாது எனத் தெளிவுபடுகிறது. மலைக்கும் அதன் அருகே பாய்ந்தோடிய ஆற்றுக்கும் இப்பெயர் இடப்பட்டு அழைக்கப்பட்டு வந்தது என்பதும் தெளிவாகிறது. இப்பொழுது குமரி முனையைக் குறிக்கிறது. எனவே இதனைச் சங்க இலக்கியம் சுட்டும் ஊர்ப் பெயராகக் கொள்ள இயலவில்லை.

இது போன்றே பழமுதிர்ச்சோலை என்னும் இடப்பெயரும் வரலாற்று ஆய்வுக்கு உதவுகிறது. இது ஊரின் பெயரா?

சோலையையுடைய மலையின் பெயரா? என்ற வினாக்கள் முதலில் எழுகின்றன. பிறகு முருகனுக்கும் பழமுதிர்ச்சோலைக்கும் தொடர்பு உண்டா? பழமுதிர்ச் சோலை அறுபடை வீடுகளில் ஒன்றா? என்ற வினாக்களும் எழுகின்றன. இத்தகு வினாக்களுக்கு விடைகாணப் பலர் கருத்துக்களைத் தொகுத்தும் பகுத்தும் பார்க்க வேண்டியுள்ளது. மதுரையை அடுத்துள்ள அழகர் மலையே பழமுதிர் சோலையாகும் எனக் கூறுவர். அம் மலையில் அழகர் கோயில் இருக்கின்றது. இது திருமாலுக்குரிய கோயில். இம்மலையைத் திருமாலிருஞ்சோலை என்றும் குறிப்பிடுவர். முன்பு இங்கு முருகன் கோயில் இருந்தது என்றும், அது அழகர் கோயிலுக்கு எதிரில் இருந்தது என்றும் கூறுவர். கி. பி. இரண்டாம் நூற்றாண்டின் முற்பாதியில் எழுதப்பெற்ற சிலப்பதிகாரத்தில் "திருமால் குன்றம்" (11:91) என்று குறிக்கப்பட்டுள்ளதே இந்த அழகர் மலை என்றும் கூறுவர். அக்குன்றில் திருமால் கோயில் இருந்தது (11 : 133) என்றும் சிலப்பதிகாரம் கூறும் அங்கு முருகன் கோயில் இருந்திருக்குமாயின் இளங்கோவடிகள் உறுதியாகக் குறித்திருப்பர். அகநானூறு 59ஆவதுபாவில் மதுரை மருதம் இளநாகனார் மதுரையை அடுத்துள்ள திருப்பரங்குன்றத்தைப் பாடியது போல பழமுதிர்ச்சோலையைக் குறித்துப் பாடவில்லை. அகநானூறு 149ஆவது பாவில் எருக்காட்டூர்த்தாயங் கண்ணனார் திருப்பரங்குன்றத்தைப் பாடியுள்ளார். அவரும் பழமுதிர் சோலையைக் குறித்துப் பாடவில்லை. எனவே இளங்கோவடிகள்கூறும் திருமால்குன்றம் பழமுதிர்சோலை என்பதற்கோ, முருகனுடையது என்பதற்கோ சான்று சங்கப் பாடல்களிலும் இல்லை. மேலும் உரையாசிரியர் கலித்தொகை 93-ஆம் பாடலுக்கு உரை எழுதும்பொழுது அப்பாடலில் குறிப்பிட்ட குன்றம் திருப்பரங்குன்றத்தையே குறிக்கின்றது என்கிறார். 27-ஆவது கலிப்பாடலில் இடம் பெற்ற 'வென் வேலான் குன்று' என்பதற்கு "முருகன் திருப்பரங்குன்றம்" என்றே குறித்துள்ளார். இந்த இரண்டு செய்யுட்களிலும் திருப்பரங்குன்றம் வெளிப்படையாகக் குறிப்பிடப்படவில்லை. ஆயினும் மதுரையிலே பிறந்து வளர்ந்த நக்கினார்க்கினியர் திருப்பரங்குன்றத்தையே இவை குறிக்கின்றன என்பர். சங்க இலக்கியங்களுக்கு உரை எழுதிய அப் பேரறிஞர் மதுரைக்கு அண்மையில் உள்ள அழகர் மலையைப் பற்றிக் குறிப்பிடவில்லை. அங்கு மெய்யாகவே முருகன் கோயில் இருந்திருக்குமேயானால் அதனையும் தம் உரையில் குறித்துக் காட்டியிருப்பார். எனவே அழகர் மலை முருகனுக்குரிய மலையன்று என்றும், பழமுதிர் சோலை மலை அதுவல்ல என்றும் தெளிவாகிறது.

பரிபாடல் முருகனுக்குரிய எட்டுப் பாடல்களைக் குறிப்பிடுகிறது. அவற்றுள் பழமுதிர் சோலை பற்றியும் முருகன் கோயில் பற்றியும் குறிப்பிடவில்லை. இவ்வெட்டுப் பாடல்களையும் பாடிய ஏழு புலவர்களும் இதுபற்றி யாதொன்றும் குறிப்பிடவில்லை. எனவே மதுரைக்கு ஒருபுறம் முருகன் கோயிலும், மற்றொருபுறம் திருமால் கோயிலும் இருந்தன என்று கூறுவதே பொருத்தமாகும். திருமுருகாற்றுப்படையில் நக்கீரர் ''பழமுதிர் சோலை மலை'' எனக்குறிப்பிட்டு அதன் செழிப்பையும் வளத்தையும் குறிப்பிடும்பொழுது மிளகுக்கொடி வளர்வதாகவும், மலையருவி அகில், சந்தனம் முதலியவற்றைத் தள்ளிக்கொண்டு வந்து தேன் கூட்டை அழித்து வீழ்வதாகவும் கூறுவர். இவை மலை நாட்டிற்குரியவையாகும். எனவே நக்கீரர் இந்த மலையைக் குறிக்கவில்லை எனத் தெரிகிறது.

இதனைப் பற்றி ஔவை சு. துரைசாமிப்பிள்ளை கூறிய கருத்து ஒப்பு நோக்கத்தக்கது. ''இம்முருகாற்றுப்படை பழமுதிர் சோலை மலை கிழவோன் என்றது கொண்டு, பழமுதிர் சோலை என ஒரு திருப்பதி முருகனுக்குரியதாகக் கூறுவதுண்டு. நச்சினார்க்கினியர் உரையால் அத்தகையதொருதிருப்பதி இருப்பதென அறிய இயலவில்லை. முருகாற்றுப்படையில் சொல்லமைப்பும் அதனை வற்புறுத்தவில்லை. ஆயினும் பழமுதிர் சோலை என ஒன்று தனியே கொண்டு, அதுவே மதுரைக்கு அண்மையில் 'அழகர்மலை' என வழங்கும் பகுதி என்பவரும் உண்டு. அதனைத் திருமாலடியார் 'திருமாலிருஞ் சோலைமலை' என்கின்றனர். அவர்கள் சோலைமலை என வழங்குவதும் முருகாற்றுப்படை பழமுதிர் சோலைமலை என வழங்குவதும் ஒத்திருப்பது பற்றி இவ்வாறு கோடற்கு இடமுண்டாகிறது. இதுவும் நன்கு ஆராய்தற்குரியது'' என்று குறிப்பிட்டுள்ளார். (பத்துப் பாட்டுச் சொற்பொழிவுகள் பக். 45.) இவராலும் இதனைப் பழமுதிர் சோலை என நிலை நாட்ட இயலவில்லை.

அழகர் கோயில் கல்வெட்டும் பாண்டியர், விசயநகர வேந்தர் காலத்தன. அவை கீழிரணிய முட்டத்துத் திருமாலிருஞ் சோலை என்று குறிப்பிடுகின்றன. திருமாலிருஞ் சோலை என்பது கி. பி. 1656-இல் ஒரு சிற்றூராக இருந்தது. அவ்வூரைச் சேர்ந்த வேளாளன் அவ்வூர்ப் பெருமானுக்கு இரண்டு சிற்றூர்களை வாங்கித் தானமாக விட்டான். மலைமீது இருந்த திரு ஆழி ஆழ்வார் திருமேனிக்கு எதிரில் விளக்கெரிக்க நிவந்தம் விடப்பட்டது. அழகர் மலைக் கல்வெட்டுகளும் இவ்வாறு திருமால் கோயில் இருந்ததையே குறிக்கும். எனவே அழகர் மலையைப் பழமுதிர்

சோலை மலை எனக்குறிப்பது ஏற்புடைத்தாகாது என்றும் அங்கு முருகன் கோயில் இருந்ததில்லை என்றும், திருமாலிருஞ் சோலையே அழகர் மலை என்றும், அங்கு திருமாலுக்குரிய கோயிலே உள்ளது என்றும் முடிந்த முடிபாகக் கூற வழி ஏற்படு கிறது. இவ்வாறு இடப்பெயராய்வு காரணமாகப் பழமுதிர் சோலை பற்றிய பல செய்திகள் நமக்குக் கிடைத்துள்ளன என் பதை அறிய முடிகிறது.

"சேரி" என்ற இடப்பெயர் ஏணிச்சேரி போன்ற ஊர்ப் பெயரில் இடம் பெற்றாலும், பெரும் விவாதத்திற்குரிய பெய ராக அமைந்துள்ளது. நச்சினார்க்கினியர் அகத்திணையியலில் முல்லைக்குரிய ஊர்கள் மூன்று வகையாகப் பெயரிட்டு அழைக்கப் படும் எனக் குறிப்பதில் சேரியை ஒன்றாகக் குறிப்பர். ஆனால் இது எல்லா நிலத்திலும் இடப்பெயராகவும், ஊர்ப்பெயராகவும் இருந்திருக்கக் கூடும் என்ற கருத்து சங்கப்பாடல்களால் வெளிப்படுகிறது. கொற்கை . நகரில் முத்துக் குளிப்பவர் சேரியும், சங்கு எடுப்பவர் சேரியும் குறிக்கப் பட்டுள்ளமை மதுரைக் காஞ்சியில் (135-136) குறிப்பிடப் பட்டுள்ளது. நன்னன் தலைநகரிலும் சேரிகள் இருந்தன என்பதை இந்நூல் (619) குறிப்பிடுகிறது. சேரி என்பது இடைக்காலத்தில் சிற்றூர்க்கு வெளியில் தாழ்த்தப்பட்டவர் வாழும் தெருக்களைக் குறிப்பதுபோல அக்காலத்தில் குறிப்பிடவில்லை. தொல் காப்பியர் "சேரி" பற்றிக் குறிப்பிட்டுள்ளார். பொருளதிகாரம் அகத்திணையியல் 40ஆவது நூற்பாவில் "ஏமப்பேரூர்ச் சேரி" என்று குறிப்பிட்டுள்ளார். அகநானூறு ஊரும் சேரியும் (220; 380) என்று குறிப்பிடுகிறது. ஐங்குறு நூறு "எம்மூர் அம்பல் சேரி அலராம்" (279) என்று குறிப்பிடுகிறது. சிலப்பதிகாரம் "ஊரீர் முறையோ, சேரியீர் முறையோ" எனக் குறிப்பிடுகிறது. அகநானூறு மகளிர் சேரி என்றும், பரிபாடல் ஆடுவார் சேரி என்றும் சிலம்பு மாலைச் சேரி, பரதவர் சேரி, வலை வாழ்நர் சேரி, புறஞ்சேரி என்றும் குறிப்பிடுகின்றன. இவ்வாறு பல இலக்கியங்களில் சேரி இடப்பெயராகவே குறிப்பிடப்பட்டுள்ள மையைக் காணமுடிகிறது. கல்வெட்டுகளும் பல்வகைச் சேரி களைக் குறிப்பதோடு பார்ப்பனச்சேரி என்று குறிப்பிடுவதையும் காணமுடிகிறது. எனவே 'சேரி' என்ற சொல் குடியிருப்புத் தொடர்பான இடப்பெயரேயாகும். சங்க இலக்கியங்களில் இஃது ஏணிச்சேரி எனப் பின்னொட்டாக அமைந்து ஊர்ப் பெயராகக் குறிப்பிடப்பட்டுள்ளதைக் காணமுடிகிறது.

சில இடப்பெயர்களைக் கூறாமல் அண்மையிலுள்ள ஓரிடத்தைச் சுட்டும் முறையும் சங்க இலக்கியத்தில் காணப்படுகிறது. திருச்சிராப்பள்ளி நகரம் மலையொன்றை நடுவே பெற்றமையால் அதனை அகநானூறு "உறந்தைக் குணாஅது குன்றம்" எனக் குறிப்பிடுகிறது. சில சங்கப் பாடல்கள் ஊரின்பெயரை நேர்முகமாகக் கூறாமல் அதனுடன் தொடர்புடைய தொடரை அழகாகக் கூறி, ஊர்ப்பெயரை விளக்கிக் குறிப்பதைக் காணலாம். சிறுபாணாற்றுப்படை எயில்பட்டினத்தை, மதிலொடு பெயரிய பனிநீர் படுவிறல் பட்டினம்' எனக் குறிப்பிடுகிறது. மதுரைக் காஞ்சி சாவியூர் என்ற ஊர்ப்பெயரை "சீர் சான்ற உயர் நெல்லின் ஊர் கொண்ட உயர் கொற்றவ" எனக் குறிப்பிடுகிறது. சில ஊர்கள் ஆற்றங்கரையை அடுத்து அமைந்திருக்கும் நிலையைச் சில தொடரால் குறிப்பிட்டு அவை இருக்கும் இடங்களைச் சுட்டுவதைக் காணலாம். சங்க காலத்தில் இறைவன் காட்சியளிக்கும் திருக்கோலத்தைக் குறிக்கும் நிலையை உணர்த்தும் தன்மையைக் குறிக்கும் பெயர் ஊர்ப்பெயராக இருந்த நிலையை இருந்தையூர் சுட்டுகிறது. கருப்பொருள் வழியாகவும் ஊர்ப்பெயர்கள் அமைந்திருப்பதைத் தாவரத்தாலும், பறவைகளாலும், விலங்குகளாலும், பூக்களாலும் ஊர்ப்பெயர்கள் அமைந்திருக்கும் நிலையைக்கொண்டே அறிய முடிகிறது. பல ஊர்ப்பெயர்களின் பின்னொட்டாக அமைந்தவை இடம், நீர்நிலை, குடியிருப்பு, தெரு, நாட்டுப்பிரிவு முதலியவற்றைச் சுட்டுவதற்காகவே அமைந்தவை போலத் தோன்றுகின்றன. அதங்கோடு ஆலங்கானம், மாங்காடு, அலைவாயில், ஆடுதுறை, இடைக்கழிநாடு, தலையாலங்கானம், கோட்டம்பலம் எனப் பற்பல ஊர்ப்பெயர்கள் தாம்பெற்ற பின்னொட்டுகளால் யாதேனும் ஒன்றைச் சுட்டி நிற்பதைக் காணமுடிகிறது.

சில ஊர்கள் எவற்றை மிகுதியாகப் பெற்றிருக்கின்றனவோ அவற்றை வைத்துப் பெயரிடப்பட்டுள்ள நிலையையும் காணமுடிகிறது. நெல் மிகுதியாக விளைவதால் நெல் செறிந்த ஊர் எனக் குறிக்க 'பிண்ட நெல்லின் அள்ளூர்' எனக் குறித்துள்ளனர். கள்ளின் மணம் மிகுதியாகப் பரவியிருப்பதால் 'அரிமண வாயில் உறத்தூர்' எனக் குறிக்கப்பட்டுள்ளது. உண்ணும் பொருள் மிகுதியாகக் கிடைப்பதால் ஓரூர் ஊணூர் எனப்பட்டது. கள் மிகுதியாகக் கிடைக்கும், ஊரைக் கள்ளூர் என்றும், கள்ளில் என்றும் அழைத்துள்ளனர். தேன்கூடுகள் மிகுந்து தேனை வழங்குவதால் தேனூர் என அழைக்கப்பட்டது. இவ்வாறுபல ஊர்ப்பெயர்களை ஆராயும் பொழுது ஒவ்வொரு ஊரின் தனிச்சிறப்பையும் ஊகித்துக் கண்டறிய முடிகிறது. இது போலவே பல

ஊர்கள் தன்மையால் பெயர்பெற்றிருக்கும் நிலையையும் காண முடிகிறது. ஈரந்தை, ஏரகம், ஒல்லையூர், ஐயூர், சிறுகுடி, நல்லூர், நீடூர், பூஞ்சாற்றூர், மாற்றூர், முக்காவல் நாடு, வியனூர் முதலான ஊர்ப்பெயர்களை இத்தன்மைக்குச் சான்று காட்டலாம்.

ஊர்ப்பெயர்கள் யாதேனும் காரணத்தால் மாற்றம் அடைந்திருப்பதையும் காணமுடிகிறது "ஒருவகை நிலத்தில் வாழ்ந்த மக்கள் வேறுவகை நிலங்களில் குடியேறியதுண்டு. அவ்வாறு குடியேறியவர்கள் தாம் முன்பு வாழ்ந்த ஊர்ப்பெயர்களையே தாம் போய்க் குடியேறியமைத்த குடியிருப்புகளாகிய ஊர்களுக்கும் இடும் வாய்ப்பு இருந்தமையாலும், நிலத்தின் இயல்புகள் மாற்றம் அடைந்து ஒருவகை நிலம் மற்றொரு வகை நிலமாக மாறும் வாய்ப்பு இருந்தமையாலும் மேற்கூறிய பெயர் வகைகளின் அமைப்பில் காலப்போக்கில் மாற்றம் ஏற்பட்டிருக்கலாம்.[9] சில ஊர்ப்பெயர்கள் மறைந்து, அங்குள்ள கோயில்களின் பெயரையே ஊர்ப்பெயராகப் பெற்ற நிலையும் உண்டு. கானப்பேரெயில் நாளடைவில் காளையார் கோயில் என அவ்வூர்க் கோயிலின் பெயரையே ஊர்ப்பெயராகப் பெற்ற அளவிற்குக் காலப் போக்கில் மாற்றம் பெற்றது. சில ஆறுகளின் பெயர்கள் அருகே உள்ள ஊர்களுக்குப் பெயரான நிலையைக் கயத்தாறு என்ற ஊர்ப் பெயர் சுட்டும். கோட்டை வாயிலைக் குறித்த சில பெயர்கள் பிற்காலத்தில் ஊர்ப்பெயர்கள் ஆனமைக்குக் குடவாயில், கடம்பின் பெருவாயில் முதலியவற்றைச் சான்று காட்டலாம்.

திசைப் பெயர்களின் அடிப்படையில் சில ஊர்ப்பெயர்கள் சங்கப் பாடல்களில் இடம் பெற்றுள்ளன. ஒரு குறிப்பிட்ட ஊர் அது எத்திசையில் அமைந்த ஊர் எனக் கண்டறிய முதலில் கூறப்பட்டு, பின் அதன் பெயராகவே நிலைத்து விட்டதோ என ஐயுறும் நிலையில் சில ஊர்ப் பெயர்கள் அமைந்துள்ளன. குடந்தை, குடவாயில், குடநாடு, குணவாயிற் கோட்டம் எனப் படும் பலவும் ஊர்ப்பெயர்களாகவே காணப்படுகின்றன. இவற்றைப் போலவே ஓர் இடத்தைச் சுட்டிவந்த பெயர் ஊர்ப்பெயராக அமைந்து விட்ட நிலையை, அம்பர் என்ற ஊர்ப் பெயரில் காணலாம். மேலும் தலை, இடை, வெளி முதலான இடத்தைச் சுட்டும் உருபுச் சொற்களும் ஊர்ப்பெயர்களில் இடம்பெற்றுள்ள நிலையைக் காண முடிகிறது. தலையாலங்கானம், இடைக்கழி நாடு, இடைக்காடு, இடைக்குன்றூர், இடையாறு, எருமைவெளி

---

9. கல்வெட்டில் ஊர்ப்பெயர்கள் - ஆர். ஆளவந்தார். பக். 22.

முதலியவற்றை இப்பிரிவில் அடக்கலாம். முக்காவல்நாடு என்ற ஊர்ப்பெயர் எண்ணுப்பெயரோடு கூடிய ஊர்ப் பெயருக்குச் சான்றாக அமைகிறது. விலங்குகளின் பெயரில் ஆலூர், உம்பற் காடு, எருமை வெளி, கோழி, செங்கண்மா, புல்லாற்றூர் முதலி யவை ஊர்ப் பெயர்களாக அமைந்துள்ளன. கடம்பனூர் தனிப் பட்ட மனிதன் பெயரால் அமைந்த ஊர்ப்பெயராகும். காகந்தி, கிள்ளிமங்கலம், கோவூர், கோநாடு முதலியவை மன்னர் பெய ரால் அமைந்த ஊர்ப் பெயர்களாகும். வீட்டையும், அதன் பகுதி யையும் குறிக்கும் பெயர்கள் ஊர்ப்பெயர்களில் இடம் பெற்றிருப் பதைக் காணமுடிகிறது குளமுற்றம். கள்ளில், வாயில், செந்தில், இடங்கில் முதலியவற்றை இப்பிரிவில் அடக்கலாம்.

புலவர்களின் பெயர்களைத் துணையாகக் கொண்டு கண்டறியக் கூடிய ஊர்ப்பெயர்கள் ஏராளமாக உள்ளன. அப் புலவர் பெயர்களால் மொத்தம் 40 ஊர்ப்பெயர்கள் கண்ட றியப்பட்டுள்ளன. இப்பெயர்கள் பாடல்களில் இடம்பெற வில்லை. இவற்றிற்குமேல் புலவர் பெயரோடும் சேர்த்துக் கூறப் பட்டுப் பாடல்களிலும் இடம்பெற்ற சில ஊர்ப்பெயர்களும் உண்டு. மன்னர்களின் பெயர்களோடு இணைந்தும் சில ஊர்ப் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. அவற்றுள் சில பாடல்களிலும் இடம் பெற்றுள்ளன. மன்னர் பெயரோடு கூறப்பட்ட சித்திரக் கூடம், கூடகாரம் முதலியவை ஊர்ப்பெயராகா. சித்திரக்கூடம் என்றால் ஓவியம் வரையப்பட்ட மேல்மாடம் அல்லது அந்தப் புரம் என்று தான் பொருள் கொள்ள வேண்டும். இதுபோலவே கூடகாரம் என்பதும் அரண்மனையின் மேல் மாடத்தைக் குறிக் கிறது. எனவே சித்திர மாடத்துத் துஞ்சிய கிள்ளி வளவன், பாண்டியன் கூடகாரத்துத் துஞ்சிய மாறன் என்ற தொடர்களில் உள்ளவை இடப்பெயர்களேயாகும். ஊர்ப்பெயர்களாகா.

டாக்டர் கி. நாச்சிமுத்து தம் "தமிழ் இடப்பெயராய்வில்" அகப்பா என்பதை ஊர்ப்பெயராகக் கொண்டுள்ளார். அது இடத்தைக் குறிக்கும் ஒரு பெயர்ச் சொல்லேயன்றி ஊர்ப்பெயர் அல்ல. ஊர்ப்பெயராகக் கொள்ள முடியவில்லை. டாக்டர் உ. வே. சாமிநாதையர் தம் நற்றிணைப் பதிப்பில் 'அகப்பா' என்ற பெயர் கழுமலத்தின் மதிலைக் குறிக்கும் என்று கூறுவர். எனவே அகப்பா என்பது ஊர்ப்பெயராகாமல் இடப்பெயராகி நிற்பதைக் காணலாம்.

பல ஊர்ப்பெயர்களின் உண்மை நிலையைக் கண்டறிய முடியாமல் அவை திரிபடைந்திருக்கும் நிலையையும் காண

முடிகிறது. மதுரை என்ற ஊர்ப்பெயர் மருதமரம் காரணமாக மருதை என முன்பு அழைக்கப்பட்டுப் பிறகு பல திரிபுகளைப் பெற்று மதுரை ஆயிற்று என S. ஞானமுத்து அவர்களும் M சுந்தரம் அவர்களும் தத்தம் நூலில் குறிப்பிடுவர். பழுவூர் என்பது ஆலமரம் நிறைந்த ஊர் எனக் கூறச் சான்றுகள் பல உள. திருமதி, பாலாம்பாள் இதனைச் சான்று காட்டி நிரூபித்துள்ளார். பழுமரம் என்ற சொல்லமைப்பு வினைத்தொகையாக அமைவதோடு, ஆலமரத்தையும் குறிக்கும். தமிழ் அகராதி பழுமரத்திற்குப் பொருள் ஆலமரம் என்றே குறித்துக் கூறுகிறது. யவனச்சேரிதான் ஏணிச்சேரி எனத் திரிந்தது எனக் கருத இடம் உண்டு. ஓவியர் பெருமகன் நாடு ஒய்மாநாடு எனத் திரிந்தது என்பர். கோன்காலம் கொண்காணம் என்றும், கோனூர் கொன்னூர் என்றும் திரிந்தவை எனக் கருத இடம் ஏற்படுகிறது.

பொருள் விளங்கா நிலையில் பல ஊர்களின் பெயர்கள் அமைந்திருந்த நிலையை நம் சங்கப் பாடல்களில் காண முடிகிறது. அழுந்தை, எக்கூர், ஏறை, கொடும்பை, சிக்கற்பள்ளி, பாமுளூர், பாரம், மாந்தை, மோகூர், வெள்ளூர் முதலிய ஊர்ப் பெயர்களின் உண்மைப் பொருளைக் கண்டறிவது கடினமாக உள்ளது. நுண்மாண் நுழை புலத்தார் நுனித்து அறிந்து காணலாம். ஊர்ப்பெயர்களில் பல நாட்டுப் பிரிவுகளான கூற்றத்தை குறிக்கவும், கோட்டத்தைக் குறிக்கவும், நாட்டைக் குறிக்கவும் பயன்பட்டுள்ளன. மிழலைக் கூற்றம், குணவாயிற் கோட்டம், கோநாடு முதலியவற்றை இந்நிலைக்குச் சான்று காட்டலாம். சங்ககாலப் பாடல்கள் சுட்டும் ஊர்ப்பெயர்கள் 'திரு' என்ற அடைமொழியைப் பெறவில்லை. அது பிற்கால வழக்காகக் கருதப்படுகிறது. 'திருமால் குன்றம்' என்ற ஒரு பெயர் மட்டுமே 'திரு' என அடைமொழியைப் பெற்று அமைந்த நிலையில் உள்ளது. பரங்குன்றம் திருப்பரங்குன்றம் என்றும், செந்தில் திருச்செந்தில் என்றும், சீரலைவாய் திருச்சீரலைவாய் என்றும் ஏற்பட்ட வழக்குப் பிற்காலத்ததாக அமைகிறது. சங்கப் பாடல்களில் குறிப்பிடப்படவில்லை.

தலைவியின் நலம் பாராட்டுவதற்காகத் தலைவன் பலவாறு புனைந்துரைப்பான். அப்பொழுது அவளது மேனிச் சிறப்பையும், பிற நலன்களையும் ஊர்களோடு ஒப்பிட்டுப் புகழ்ந்து கூறுவதைக் காண முடிகிறது. அந்நிலையில் ஊர்ப்பெயர்கள் பெரும்பாலும் உவமைகளாக இடம் பெற்றிருக்கின்றன. "பெருங்கொடி நுடங்கும் அட்டவாயில் இருங்கதிர்க் கழனிப் பெருங்கவின் அன்ன நலம் பாராட்டி" என அகநானூறு (326) கூறும். "தொண்டி அன்ன என் நலம் தந்து" எனத் தலைவி தன் நலத்தைத் தானே

யும், வாணிகம் செய்த நிலையையும் சிலப்பதிகாரம் முதலிய நூல்களின் வாயிலாகக் காணமுடிகிறது. கடல்கடந்தும் தமிழன் சென்று பிறநாட்டாரோடு தொடர்பு கொண்டிருந்தான் என்பதையும் சங்கப்பாக்கள் சுட்டுகின்றன. மாபாரதப் போர் வீரர்க்கு உணவளித்துப் பெருமை பெற்ற மன்னனைப் புறம் நினைவுபடுத்துகிறது. இலங்கையோடு தொடர்பு கொண்டதை மகாவம்சம், தீபவம்சம் சுட்டிக் காட்டுகின்றன. வடநாட்டோடு தொடர்பு கொண்டிருந்ததை அசோகன் கல்வெட்டும், பிறநூல்களும் எடுத்துப் பகர்கின்றன. இமயம் வரைத் தமிழன் சென்ற வரலாறு விரிவாகப் பேசப்படுகிறது. எனவே வட மொழியாளரோடும், பிறநாட்டாரோடும் ஏற்பட்ட பல்வகைத் தொடர்பு காரணமாக மொழிக் கலப்பு ஏற்பட நேரிட்டது. அதனால் சங்க காலத்தின் இறுதியில் ஊர்ப்பெயர்களில் கலப்பு ஏற்பட்டிருக்கக் கூடும் என ஊகிக்க இடமிருக்கிறது.

சங்கப் பாடல்களில் இடம்பெற்ற பிறநாட்டுப் பெயர்களைப் பற்றி ஆராயும் பொழுது பல முக்கிய நாட்டின் பெயர் இடம் பெற்றிருப்பதைக் காண முடிகிறது. அங்கநாடு, அடவி நாடு, அவந்தி, இலங்காதீவம், கருநாடகம், கலிங்கம், காந்தார நாடு காம்போசம், கோசலநாடு, சம்புத்தீவு, சாவகநாடு, துளுநாடு, மகத நாடு, மணிபல்லவம், மராட்டம், மாளுவதேசம், வச்சிர நாடு, வத்தவ நாடு முதலிய நாடுகளின் பெயர்கள் காணக்கிடக்கின்றன. சில தலைநகரங்களின் பெயர்களும் காணப்படுகின்றன. அசோதரம், அத்தினபுரம், அயோத்தி, கோசம்பி, பாடலி, வாரணம் முதலிய நகரங்களின் பெயர்கள் இடம் பெற்றுள்ளன. சில பேரூர்ப் பெயர்களும் காணப்படுகின்றன. அமராவதி, அரிபுரம். இடவயம், இரத்தினபுரம், கபிலபுரம், சண்பை நகர், சிங்கபுரம், நாகபுரம், போதனபுரம், விஞ்சை முதலியவை இப்பிரிவில் குறிப்பிடத்தக்கன. சிற்றூர்ப் பெயர்கள் காணப்படவில்லை. சில பெயர்கள் தமிழகத்தில் இடம்பெற்ற ஊர்ப்பெயர்களோ என ஐயுறும் வண்ணம் அமைந்துள்ளன. அமராவதி, அரிபுரம், கபிலபுரம், கொங்கணம், சண்பை நகர், திருநகர், நாகபுரம் முதலியவைத் தமிழகத்தில் உள்ள ஊர்களைக் குறிக்கும் ஊர்ப்பெயர்கள்போல் தோன்றுகின்றன.

அடவி என்பது காட்டைக் குறிக்கும். காடுகள் மிகுந்த பகுதி அடவி நாடு எனப் பெயர் பெற்றிருக்கக் கூடும். அரிபுரம் திருமால் தொடர்பானச் செய்திகளைக் கொண்டு ஏற்பட்ட ஊர்ப் பெயராகக் கருதலாம். அல்லது சிங்கம் என்ற விலங்குப் பெயரோடு தொடர்புடைய ஊர்ப்பெயராகக் கருதலாம்.

சண்பக மரங்கள் மிகுந்திருந்தமையால் சண்பை நகர் என வந்திருக்கக் கூடும். சம்பு என்பது நாவல் மரத்தைக் குறிக்கும். இம்மரம் மிகுந்து வளர்ந்திருந்த பகுதி சம்புத் தீவு எனப் பெயர் பெற்றது எனலாம். பாடலி என்பது பாதிரி மரங்களைக் குறிக்கும். இம்மரம் மிகுந்து வளர்ந்திருந்த பகுதி இப்பெயர் பெற்றிருக்கக் கூடும். இது பாடலிபுத்திரம் என அழைக்கப்படும். தமிழகத்திலுள்ள திருப்பாதிரிப் புலியூர் என்ற ஊர்ப்பெயரும் இந்த அடிப்படையில் அமைந்த ஊர்ப்பெயராகும். புட்பம் என்பது மலரைக் குறிக்கும். மலர் மிகுந்த பூஞ்சோலை நிறைந் திருந்தமையால் புட்பகம் என்ற இப்பெயர் பெற்றிருக்கலாம். இவ்வாறு சில ஊர்ப் பெயர்களுக்குக் காரணம் கண்டறிய முடிகிறது. பல ஊர்ப்பெயர்களுக்கு நம்மால் காரணம் கண்டறிய முடியவில்லை. அப்பெயர்களின் மூல மொழியை ஆராய்ந்தால் அவற்றிற்கும் பொருள் விளங்கக்கூடும். இவ்வாறுசங்க இலக்கியப் பாக்களில் பிறநாட்டின் ஊர்ப் பெயர்கள் பல யாதேனும் ஒரு காரணம் கூறும் வகையில் சுட்டிக் காட்டப் பட்டிருப்பதைக் காண முடிகிறது.

அறியலாகும் சில உண்மைகள்.

பழங்காலத்தில் இயற்கைக்கும் ஊர்ப்பெயர்க்கும் நெருங்கிய தொடர்பு ஏற்பட்டிருந்திருக்கிறது. பொதுவாக ஊர்ப்பெயர் கள் இயற்கைப் பெயர் என்றும், செயற்கைப் பெயர் என்றும் அமைந்துள்ள நிலையைக் காணலாம். ஆற்றங்கரைகளில் அமைந்த ஊர்ப்பெயர்கள் மிகுதியாகவும் சிறப்பாகவும் காணப் படுகின்றன. பாலை நிலத்து ஊர்ப்பெயர்கள் அரிதாகக் காணக் கிடக்கின்றன. தாவரத்தோடு தொடர்புடைய ஊர்ப்பெயர்கள் புவியியல் தத்துவத்தை அடையாளம் காண உதவுகின்றன. மனிதன் தாவரத்தையும் புவியையும் எவ்வாறு தனக்குச் சாதக மாக அமைத்துக் கொண்டான் எனத் தெரிந்து கொள்ள முடி கிறது. சில ஊர்ப்பெயர்களை உற்று நோக்குங்கால் மொழி யியல் அடிப்படையிலும், வரலாற்று அடிப்படையிலும், வேறு அடிப்படையிலும் முடிந்த முடிபாக விளக்கம் கூறும் நிலையில் அமையாதிருப்பதையும் காண முடிகிறது. புலவர் பெருமக்களை அவர்களின் சொந்த ஊர்ப்பெயர்களோடு குறிப்பிட்டு எழுது வதும், கூறுவதும் சிறப்பாகவும் மிகுதியாகவும் கையாளப்பட்டு வந்திருக்கிறது. பெரும்பாலான ஊர்களின் பெயர்கள் சங்க இலக்கியங்களில் இடம் பெறவில்லை. அவற்றைக் கண்டறிய வேறு சான்றுகளும் கிடைக்கவில்லை. ஊர்ப் பெயர்களுக்கும் சமூகச் செயற்பாடுகளுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. மனித எண்ணம் அரசியல் மாற்றத்தாலும், கலைத்தாக்கம்

முதலிய வற்றாலும் காலந்தோறும் அமைந்தும், மாற்றம் பெற்றும், திரிந்தும் வந்துள்ள நிலையையும் காண முடிகிறது. பழந்தமிழக மன்னர்கள் மேற்கொண்ட போர்களினால் பல ஊர்கள் அழிந்து போயின. அவற்றைக் கண்டறிய சங்கஇலக்கியங்கள் ஓரளவு உதவுகின்றன. உருவாக்கப்பட்ட புதிய ஊர்கள் எவை எவை எனக் கண்டறிய முடியவில்லை. அழிந்த ஊர்கள் அனைத்தையும் கண்டறிய இவை போதிய சான்றாக அமையவில்லை.

சங்க இலக்கியக் காலத்தில் வழக்கிலிருந்த ஊர்ப்பெயர்கள் முழுமையும் சங்க இலக்கியங்களில் இடம் பெற்றிருக்கும் என்று எதிர்பார்க்க முடியாது. ஏனெனில் சங்கப்பாடல்கள் வரலாற்றைக் கூறும் போக்கில் அமைந்தவையன்று. அவையனைத்தும் இலக்கியத்தன்மை உடையவை. சுவை பயப்பனவாக அமைய அவை உதவின எனக் கூறலாம் ஆயினும் வரலாறு படைக்கவும் அவை உதவ வேண்டும் என்ற எண்ணத்துடன் குறிப்பிடப்பட்டிருக்கலாம் என்ற எண்ணம் தோன்ற இடமளிக்கிறது. சில வரலாற்றுச் செய்திகளையும், பட்டினங்களையும், ஊர்களையும் சங்க இலக்கியங்களில் கூறியிருப்பது பாட்டின் தொடர்பானச் செய்திகளாகவே காணப்படுகின்றன. அவற்றைக்கொண்டு அறியப்படும் செய்திகளே பரந்துபட்டு இன்றைய ஆய்வுக்கு நல்விருந்தாக அமைந்துள்ளன. அத்தகு இலக்கியங்கள் சுட்டும் குடியிருப்பு இடங்களை ஆறு வகையாக வகுத்துக் கூறலாம். அவை:—

1. சிற்றூர்
2. ஊர்
3. பேரூர்
4. மூதூர்
5. நகரம்
6. நாடு

என்பன. ஒவ்வொரு குடியிருப்பின் தனித் தன்மைகளும் முறையாக எடுத்துக் கூறப்பட்டுள்ளன.

சிற்றூர் பற்றிய செய்திகள் பல. பாலை நிலத்தில் எயினர் வாழ்ந்த குடியிருப்புகளைக் கொண்ட சிற்றூர்கள் இருந்தன. நாடுகாவல் புரியும் எயினர் வாழ்ந்த அரண்கள் ஆங்காங்கு இருந்தன. முல்லை நிலத்தில் வரகு வைக்கோலால் வேயப்பட்ட குடில்களைக்கொண்ட ஆயர்தம் சிற்றூர்கள் அமைந்திருந்தன. முல்லையை யடுத்த மருதநிலச் சிறூர்கள் வளத்துடன் காணப்பட்டன. மருத நிலத்தில் உழுவித்துண்ணும் வேளாளர் வாழ்ந்த வளமனைகளையும், உழுதுண்ணும் வேளாளர் வாழ்ந்த இல்லங்களையும் கொண்ட சிற்றூர்கள் அங்கங்கு அமைந்திருந்தன. மருத

நிலத்துக் குளங்களிலும், ஏரிகளிலும் மீன்பிடித்து வாழ்ந்த வலையர் குடிசைகளில் வாழ்ந்தனர். அவர்தம் சிற்றூர்கள் சில இருந்தன. தென்னந்தோப்பு மாந்தோப்புகளுக்கிடையில் சீறூர்கள் பல இருந்தன. அங்கிருந்த வீடுகளின் முற்றங்களில் மஞ்சள் பயிர் செய்யப்பட்டது. வீடுகளுக்குப் பின்புறம் மணம் வீசும் பூந்தோட்டங்கள் இருந்தன. அங்குப் பலாவும், வாழையும், பனைமரங்களும் இருந்தன. சில சீறூர்களில் பாக்கு மரங்களும், தென்னை மரங்களும் வளர்ந்திருந்தன.

ஊர்பற்றிய கருத்துகளும் நிறையக் கூறப்பட்டுள்ளன. ஊர்களில் பலவகைத் தெருக்கள் இருந்தன. அந்தணர் முதலிய பல்வேறு சாதியினரும் கைத்தொழிலாளரும் இனிது வாழ்ந்து வந்த வீதிகள் இருந்தன. அந்தணர் தெரு தூய்மை உடையதாகவும், நாய் இல்லா வாயில்களை உடையதாகவும் இருந்தது. அதனை 'ஆசில் தெரு, என்று புலவர் குறிக்கின்றார். பலர் கூடிக் கடவுளை வணங்கியும், பல செய்திகளைப் பேசியும் தங்குதற்குரிய மன்றங்கள் ஊரின்கண் இருந்தன. ஊரார் நீருண்ணுதற்கும் ஆடுதற்கும் ஆறில்லாத இடங்களில் ஊருக்கு அண்மையில் பொய்கைகள் இருந்தன. சிலவிடங்களில் கேணிகள் இருந்தன. ஊருக்கு அணித்தாகப் பொய்கையும் அதற்கு அப்பாற் சிறிது தூரத்தே கான்யாறும் இருந்ததாக ஒரு செய்யுள் கூறும். "யாம் எம் மயிருக்கு மண் தடவி நீராடற்கு அக் கான் யாற்றுக்கு வருவேம்" என்று ஒருத்தி கூறியிருக்கிறாள். இதனால் ஊராரால் உண்ணப்படும் நீர்ப்பொய்கையில் நீராடல் பிழையென்று அவர்கள் எண்ணியிருந்தமை புலப்படும்.

பல்வகைப் பெருமையோடும் சிறப்போடும் அமைந்த சற்றுப் பெரிதான ஊரினைப் பேரூர் எனத் தனியாக அழைக்கும் மரபும் இருந்ததாகத் தெரிகிறது. புலவர், அந்தணர், சான்றோர் முதலியோர் பேரூர் என்ற பெயர் அமையக் காரணமாக இருந்தனர் எனக் கூறலாம்.

மூதூர் எனப்படுவது அவ்வூரின் பழமையைக் குறிக்கிறது. நகரங்களின் அருகிலும், கோட்டைகளை யடுத்துப் புற நகரமாயும், துணை நகரமாயும், நகர்ப்புறக் கிராமமாயும், கிராம நகரமாய் அமைந்தவற்றை மூதூர் என அழைத்து வந்தனர் என்ற குறிப்பு சங்க இலக்கியங்களில் காணப்படுகிறது.

நாகரிகம் நிறைந்த மக்களோடும், பல்வகைத் தொழிலோடும் பிற சிறப்போடும், அரசியல் தொடர்போடும், வாணிக நலத்தோடும் அமைந்த மிகப்பெரிய குடியிருப்புகளை நகரம் என்று அழைத்தனர். பெரும்பாலும் தமிழக நகரங்கள் அரசன் குடியிருப்

பும், அரண்மனையும், கோட்டையும் சூழ நின்று அமைந்திருக்கும் நிலையை இலக்கியங்கள் சுட்டிக் காட்டுகின்றன.

சிற்றூர், ஊர், பேரூர், மூதூர், நகரம் ஆகியவை தம்முள் அடங்கிய பெரும்பகுதியை, ஒரு மன்னர் ஆட்சிக்குட்பட்ட பகுதியை நாடு என அழைத்தனர். நாட்டுப் பிரிவுகளில் ஒன்றாக வும் இது கருதப்பட்டுள்ளது கூற்றம், கோட்டம், வளநாடு, நாடு என்பவை நாட்டின் பிரிவுகளுக்கு இடப்பட்ட அரசாங்கக் குறியீட்டுப் பெயர்கள். கூற்றத்தில் சிற்றூர், ஊர் இடம் பெற்றன என்றும், கோட்டத்தில் சிற்றூர், ஊர், மூதூர், பேரூர் இடம் பெற்றன என்றும், வள நாட்டில் சிற்றூர், ஊர், பேரூர், மூதூர், நகரம் அனைத்தும் இடம் பெற்றன என்றும் இவையெல்லாம் அடங்கியதே நாடு என்றும் நாம் எண்ண அரிய பல சான்றுகள் இலக்கியங்களில் இடம் பெற்றுள்ளன.

## ஒப்பீட்டால் அறியும் உண்மைகள்

அறிவியல் வளர்ச்சியின் காரணமாகப் பல்வகைப் பயனுள்ள புதியத் துறைகள் உருவாகியுள்ளன. அவற்றுள் குடியிருப்புப் புவியியல் (Geography of Settlements) துறையும் ஒன்று. மேலை நாட்டறிஞர்கள் உலக நாடுகளில் மக்கள் வாழ்கின்ற குடியிருப்பு களைப் புவியியல் தத்துவத்தினைத் துணையாகக் கொண்டு ஆராய்ந்து பல அரிய உண்மைகளை வெளியிட்டுள்ளனர். அவ் வாய்வில் பழங்காலக் கிரேக்க, ரோமானிய நாடுகளில் அமைந்த குடியிருப்புகளிலிருந்து இன்று வரை உள்ள அமைப்பு முறைகளை ஆராய்ந்து பல அடிப்படை உண்மைகளை உருவாக்கியுள்ளனர். அவர்கள் சிற்றூர், ஊர், பேரூர், நகரம் எனப் பல நிலையில் குடியிருப்புகளைப் பற்றி ஆய்ந்து பல உண்மைகளைக் கண்டறிந்துள்ளனர். அவ்வாறு அவ் வாய்வில் கூறப்பட்டப் பலநாட்டுக் குடியிருப்பு அமைப்புகளையும், அவற்றால் உருவாக்கப்பட்டக் கொள்கைகளையும் சங்க இலக்கியம் காட்டும் ஊர்ப்பெயர்க ளோடு ஒப்பிட்டுக் காணும் பொழுது அறிவியல் கொள்கையாளர் ஆய்ந்து கண்டறிந்த நிலைகளுக்கு ஏற்பவும் நம்நாட்டுப் பழம் பெரும் ஊர்களும் நகரங்களும் அமைந்து அவற்றிற்கேற்பப் பெயர்களையும் பெற்றிருந்தன என்பதைக் கண்டறிய முடிகிறது.

"இந்தியாவில் பழங்காலத்திலேயே கிராமங்களுக்குப் பலவித வடிவங்கள் இருந்தன. உதாரணமாக ஆரியர்களுடைய கிராமங்கள் 'ஸ்வஸ்திக்' நிலவரைப் படிவத்தைக் கொண்டிருந்தன.

கிராமத்தின் நுழைவாயிலை எளிதாகப்பாதுகாக்கும் பொருட்டே இந்த வடிவம் ஏற்பட்டிருக்கிறது. இந்த வடிவம் பொதுவாகக் காவற்படை முகாம்களில் பின்பற்றப்படுவதாகும். ஆரியர்களுடைய கிராமங்களில் சாலைகள் வடக்கு—தெற்காகவும் கிழக்கு—மேற்காகவும் குறுக்கு அமைப்பில் காணப்பட்டன பாதுகாப்புத் தேவையில்லாத இடங்களிலும், வரண்ட நிலப்பகுதியிலும் குடியிருப்புகள் சிதறலாகக் காணப்பட்டன"[10]

இக் கருத்தோடு நம் சங்க இலக்கியம் கூறும் சிற்றூர், ஊர் அமைப்பையும், பெயரையும் ஒப்பிட்டுப் பார்த்தால் ஆரியர் குடியிருப்பைக் காட்டிலும் நம் குடியிருப்பு மிகச் சிறப்பாக அமைந்திருந்ததோடு அதன் தன்மைக்கேற்பப் பெயர்களும் அமைந்திருந்த நிலையைப் பல ஊர்ப் பெயர்களின் துணை கொண்டு முடிவு செய்ய முடிகிறது. மருவூர், வெள்ளைக்குடி, அம்பர், பிசிர், கோழி, புல்லாற்றூர், உறந்தை, குழுமூர், ஐயூர், கருவூர், சிறுகுடி, நீடூர், நல்லூர், மையல், வியனூர் போன்ற ஊர்ப்பெயர்கள் மூலம் அறியும் அந்த ஊர்களின் அமைப்பை ஒப்பிட்டுப் பார்த்தால் இவ்வுண்மையை அறியலாம்.

உலகில் பல நாடுகளில் அமைந்த கிராமங்கள் பெருநகரை ஒட்டியே அமைந்து மூதூர், பேரூர் என்னும் பெயர் பெற்றுத் திகழ்ந்திருக்கின்றன. "பெருகரின் விளிம்பு என்று சொல்லப்படுகின்ற பகுதிக்குப் புறநகர் (suburb), துணை நகரம் (Sub-Town), நகர்ப்புறக் கிராமம் (Urban Village), கிராம நகரம் (Village Town) போன்ற பல்வேறு பெயர்கள் வழங்கப்படுகின்றன"[11] என்று கூறப்படும் கருத்தோடு நம் சங்ககால நகரங்களை ஒட்டி அமைந்திருந்த சிற்றூர், ஊர், மூதூர், பேரூர்களை ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது நம் முன்னோர் குடியிருப்புப் புவியியல் அறிவையும் நன்கு பெற்றிருந்தனர் எனத் தெரிய வருகிறது. இத்தகு சிற்றூர்களே நகரங்கள் தோன்றக் காரணமாயின. "நீர்ப்பாசன விவசாயம் மேற்கொள்ளப்பட்ட நைல் நதிப் பள்ளத்தாக்கு, பெர்ஷியன் குடாவிலிருந்த டெல்டா பகுதிகள், சிந்து சமவெளி ஆகிய பகுதிகளில் தாம் முதன் முதலில் நகர்புறப் புரட்சி ஏற்பட்டது."[12] சங்க இலக்கியம் சுட்டும் காவிரி, வைகை, பொருநை முதலிய

---

10. குடியிருப்புப் புவியியல் (Geography of Settlements) —அ. சிவமூர்த்தி - தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனம். 1975—பக். 138.
11. ௸ ௸ (பக். 159)
12. ௸ ௸ (பக். 176)

நதிப் பகுதிகளில் அமைந்த நீர்ப்பாசன விவசாயம் தமிழக நகர்ப் புறப் புரட்சியைத் தோற்றுவித்த நிலையைக் காண முடிகிறது. இத்தகு நகர்ப்புறப் புரட்சி முதன் முதலில் ஏற்படுவதற்குக் காரணமாக அமைந்தது மிதமிஞ்சிய உணவு உற்பத்தியேயாகும். நம் தமிழகத்தில் "சோழநாடு சோறுடைத்து" என்றும்,

"மாடுகட்டிப் போரடித்தால் மாளாது செந்நெல் என்று
யானைகட்டிப் போரடித்த அழகான தென்மதுரை"

என்றும் கூறும் மொழித்தொடர்கள் இக்கருத்தை நிலைநாட்டும். இதனுடன்,

"பிண்ட நெல்லின் அள்ளூரன்ன" (அகம். 46)
"கூனி குயத்தின் வாய்நெல் அரிந்து
சூடு கோடாகப் பிறக்கி நாள்தொறும்
குன்று எனக் குவைஇய குன்றாக் குப்பை
கடுந்தெற்று மூடையின் இடம் கெடக் கிடக்கும்
சாலிநெல்லின் சிறைகொள் வேலி
ஆயிரம் விளையுட்டு ஆக
காவிரி புரக்கும் நாடுகிழ வோனே"
(பொருநராற்றுப் படை. 242-248)

என்று சங்க இலக்கியங்கள் கூறும் கருத்துகளையும் ஒப்பிட்டுக் காணும் பொழுது இவ்வுண்மை புலனாகும்.

"கிராமங்களும் நகரங்களும் தோன்றுவதற்குப் பொருத்த மான தலம் தேவைப் படுகின்றதென்றாலும், அவற்றின் வளர்ச்சிக்குச் சூழமைவுதான் காரணமாக இருக்கிறது. சூழமைவு கிராமத்தின் வளர்ச்சிக்கு அவ்வளவாகத் தேவைப்படுவதில்லை. ஆனால் நகரம் வளர்ச்சியடைவதற்கு இது முக்கியமானதாகும். ஏனெனில் நகரத்தின் இயக்கம் அதனைச் சுற்றியுள்ள இடத்தின் உற்பத்தித் திறனைப் பொறுத்துத்தான் அமைகிறது. சுற்றியுள்ள சூழ்நிலைதான் நகரத்திற்கு உயிர் நாடியாகும்".[13] நம் சங்க இலக்கியம் பகரும் நகரங்களின் சூழமைப்பினை இதன் அடிப்படையில் உற்று நோக்கினால் அவற்றின் செல்வச் செழிப்பிற்கும் வளர்ச்சிக்கும் நகரம் சூழ்ந்துள்ள சிற்றூர்களும் பேரூர்களும் அமைந்திருந்தன எனத் தெரிந்து கொள்ள முடிகிறது. பெருநகரைச் சூழ்ந்து புறநகர், துணைநகர், நகர்ப்புற கிராமம், கிராம நகரம் முதலியவை அமைந்திருந்த நிலையைச் சங்ககால நாட்டின் வரை படங்களைத் தயாரித்தால் கண்டறியமுடியும். கிராமங்கள் விவ

13. ஷை ஷை பக். 200.

சாயத்தாலும் பிறவற்றாலும் வளர்ச்சியடைந்து நகரமாகப் படிப் படியாக உயர்வதற்குச் சூழமைவு காரணம் எனக் கூறும்பொழுது, சூழமைவு என்பது பற்றிச் சற்றுச் சிந்திக்க வேண்டியுள்ளது. "சூழமைவு என்பது நகரைச் சுற்றியுள்ள இயற்கையமைப்பும் கலாசார அமைப்பும், அரசியல் அமைப்பும், நகர எல்லை ஆகிய வற்றைக் குறிக்கிறது. சாலைகள் கூடுகின்ற இடம், போக்கு வரத்துச் சாலைகள் மாறுபடுகின்ற இடம் ஆகியவையும் ஆகிய வையாவும் நகரங்களின் வளர்ச்சிக்குக் காரணமான சூழமை வாகும்"[14] என்ற கருத்து நம் தமிழகத்திற்கும் பொருத்த மானதே. அதனைச் சங்க இலக்கியம் கற்பார் நன்கு அறிவர்.

நகரத்திற்கும் நாகரிகத்திற்கும் பெருந் தொடர்பு இருக் கிறது. பழங்காலத்து நகரங்கள் பெரும்பாலும் அறிவாலயங் களாக இருந்து வந்தன. "சிட்டி என்ற ஆங்கிலச் சொல் லத்தீன் பதமான சிவிட்டாஸ் என்பதிலிருந்து மருவியதாகும். சிவிட்டாஸ் என்ற சொல்லுக்கு நாகரிகம் என்று பொருள். நகரத்திற்கு இச் சொல்லைப் பயன்படுத்துவதிலிருந்து இவ்விடம் நாகரிகம் உள்ள வர்கள் வாழ்கின்ற பகுதி என்று குறிப்பிடப்படுகிறது. இங்குதான் மனிதப் பண்பாடுகள் தோன்றி வளர்ச்சி பெற்றுள்ளன. பல அறிவாலயங்களும், தொழில் நுணுக்கமும், கலைகளும் நகரத் திற்குள்தாம் செழிப்புற்றிருந்தன"[15] சங்க இலக்கியம் பகரும் காவிரிப் பூம்பட்டினம், மதுரை, வஞ்சி, உறந்தை, காஞ்சி முதலிய நகரங்களின் சிறப்பியல்புகளைக் காணும் பொழுது, குடியிருப்புப் புவியியலார் கூறும் நகரத்தின் அமைப்புக்கொள்கை எவ்வளவு பொருத்தமுடையதாகக் காணப்படுகிறது? இந்த நகர அமைப்புக் கொள்கைகள் அனைத்தையும் நம் பழந் தமிழர் அறிந் திருந்து, குடியிருப்புப் புவியியல் அறிவையும் பெற்றிருந்தனர் என்பதை அறியும் பொழுது நாம் வியக்காமல் இருக்கமுடிய வில்லை. சங்க இலக்கிய ஊர்ப்பெயர்கள் காட்டும் சிறப்பு வர லாற்று நிலையாகும் இது. எனவேதான் நகரம் என்பது சிறப்புப் பணியும் சமூக இயக்கமும் கொண்ட மனித உறை விடமாகும் எனக் கூறப்படுகிறது.

"நாகரீகம் எத்தகைய பழமையோ, அத்தகைய பழமையை நகரங்களும் பெற்றிருக்கின்றன. ஏனென்றால் நாகரீகத்தின் வளர்ச்சிக்கும் நகரங்களின் தோற்றத்திற்கும் நெருங்கிய

---

14. ஷை ஷை பக். 200.
15. ஷை ஷை பக். 158.

தொடர்பு உள்ளது. மக்கள் கூடிவாழ்ந்து தங்கள் பண்பாட்டை வெளிப்படுத்துவதற்கு நகரங்கள் மையமாக இருந்தன. நகரங்கள் சமூக மரபின் கிடங்காகவும் (ware house) பல்வேறு பண்பாடுகள் கூடுகின்ற மையமாகவும், தத்துவத்தின் ஊற்றாகவும் இருந்து வந்தன. இளங்கோ வடிகளும், சீத்தலைச்சாத்தனாரும் உருத்திரங்கண்ணனாரும் காட்டுகின்ற சங்ககால நகரங்கள் இத்தகு மாண்புகளைப் பெற்றுத் திகழ்ந்தன.

"லூயிஸ் மம்போர்டு நகரத்தின் வளர்ச்சியில் ஆறு நிலைகளைக் குறிப்பிடுகிறார். ஒவ்வொரு காலத்தின் அறிவுநிலை, தொழில் நுணுக்கம் ஆகியவற்றையும் பொறுத்து நகரங்கள் படிப்படியாக வளர்ச்சி பெறுகின்றன. எனவே இந்த நகரங்களின் ஆறு நிலைகளும் அந்தந்தக் காலத்தின் தொழில் நிலையை எடுத்துக் காட்டுகின்றன."[16] இந்த ஆறு நிலைகளாவன:-

1. இயோபாலிஸ் (Eopollis)
2. பாலிஸ் (Polis)
3. மெட்ரோபாலிஸ் (Metropolis)
4. மெகலோ பாலிஸ் (Megolopolis)
5. டிரனா பாலிஸ் (Tyranna polis)
6. நெக்ரோபாலிஸ் (Nekropolis)

என்பன. "இயோ பாலிஸ்" நகர்ப்புற மார்க்கத்தின் தொடக்க நிலையாகும். மக்கள் கூடி வாழ்கின்ற ஒரு சிறு சமூகத்தை இது குறிக்கிறது. நாடோடி வாழ்க்கை முறையிலிருந்து மனிதன் நிரந்தரமாக ஒரு இடத்தில் விவசாயம் செய்யத் தொடங்கியபோது குடியிருப்புகள் நிரந்தரமாகி விட்டன. விவசாயத்தில் கூட்டுறவு முறை அவசியமாக இருந்ததால், கூடி வாழ்கின்ற பண்பாடு வளர்ச்சி பெற்றது. இதன் விளைவாக நிரந்தரக் கிராமக் குடியிருப்புகளும் சமூக அமைப்பும் ஏற்பட்டன. 'இயோபாலிஸ் என்பது நிரந்தரமான கிராமத்தைக் குறிக்கிறது. இதுவே நகர்ப்புற மாக்கத்தின் முதற்படியாகும்."[17] இத்தகு நிலையில் அமைந்த சிற்றூர்கள் ஏராளமாக இருந்த நிலையை நம் சங்கப்பாடல்கள் சுட்டியுள்ளன.

" 'பாலிஸ்' என்பது பல கிராமங்கள் ஒன்று சேர்ந்து காணப்படுவதாகும். இயோபாலிசை யடுத்து இந்நிலை ஏற்படுகிறது. பாதுகாப்பு, வாணிகம், கல்வி, கலாச்சாரம் ஆகியவற்றிற்காக

---

16. ஷை ஷை பக்.191.
17. ஷை ஷை பக். 191

மக்கள் ஒன்று சேர்ந்து வசிக்கத் தொடங்கினர். மேற்கூறிய நோக்கத்திற்காகக் கிராமங்கள் ஒன்று சேர்ந்து ஒரு பாலிஸ் ஆக மாறுகின்றன. இதுவே நகரத்தின் தொடக்க நிலையாகும். இந் நிலையில் இந்நகரம் அளவில் சிறியதாக இருக்கிறது.[18] சங்க இலக்கியம் காட்டும் உறந்தை நகர் அடுத்த சிராப்பள்ளிக்குன்றம் பெற்ற வளர்ச்சியையும், பிற்காலத்தில் நகராகிய சிறப்பையும் ஒப்பு நோக்க இடமளிக்கிறது. இதுபோல பல நகரம் பண்டைக் காலத்தில் தோன்றியிருக்கக் கூடும். இதனையே பேரூர் என்று அழைத்தனர்.

" 'மெட்ரோபாலிஸ்' கிராமத்தையும் நகரத்தையும்விட அளவில் மிகப் பெரியதாகும். எனவே இது பெருநகரம் என்றும், தாய் நகரம் என்றும் அழைக்கப்படுகிறது."[19] உறந்தை, கொற்கை,மருங்கூர்ப் பட்டினம், குணவாயிற் கோட்டம்,மருவூர்ப் பாக்கம், பட்டினப்பாக்கம் போன்றவற்றை 'மெட்ரோபாலிஸ்' என அழைக்கலாம்.

"பல பெருநகரங்கள் இணைந்து இருப்பதை 'மெகலோ பாலிஸ்' என்பர்."[20] இங்குதான் மனித சமூகநீதி சரியத் தொடங்கியது. காவிரிப்பூம்பட்டினத்தில் பல பெருநகரப் பிரிவுகள் இணைந்து அமைந்திருந்த நிலையையும், மதுரையில் இது போலவே பல பெருநகரப் பிரிவுகள் இணைந்து அமைந்திருந்த நிலையையும் இலக்கியங்கள் சுட்டுகின்றன. அப்பகுதிகளை நாம் பேரூர் என்றும் மூதூர் என்றும் அழைக்கிறோம். பொய்க்கரி கூறியோனையும், அறியாமையால் கீரிப் பிள்ளையைக் கொன்ற மனைவியை விட்டுப் பிரிந்து சென்ற பார்ப்பனனையும், பொற்கொல்லனின் கொடுமதியையும், செழியனின் அநீதியையும் இத்தகு 'மெகலோ பாலிஸ் நகரங்களில்தான் காண முடிகிறது.

"மெகலோ பாலிஸ் நிலையை அடுத்து நகர்ப்புறம் 'டிரனா பாலிஸ்' நிலையை அடைகிறது. இது நகர்ப்புறத்தின் கட்டுக் கடங்காத வளர்ச்சியைக் குறிக்கிறது"[21]

---

18. ஷை ஷை பக். 192
19. ஷை ஷை பக். 192
20. ஷை ஷை பக். 192
21. ஷை ஷை பக். 193

"நெக்ரோபாலிஸ் என்பது டிரனாபாலிஸ் மேலும் வளர்ச்சி பெற்றால் இறுதியில் நெக்ரோபாலிஸ் என்று அழைக்கப்படும். போர், பஞ்சம், வறுமை ஆகியவையே அங்கு காட்சியளிக்கும்"[22]

இத்தகைய இந்த இரண்டு வகை நகரங்கள் நம் பழந்தமிழகத்தில் இல்லையென்றே கூறுவதற்குச் சங்கப்பாடல்கள் சான்று பகரும். நகர வளர்ச்சிகளில் அக்கறை காட்டும் மக்களும் அரசினரும் இந்த இருநகரங்களும் தோன்றாத நிலையில் வளர்ச்சியைக் கட்டுப்படுத்த முயலவேண்டும் என்ற கருத்தையும் இவை நமக்குக் குறிப்பாக உணர்த்துவதைக் காணலாம். இன்று நம் நாட்டில் காணப்படும் வளர்ச்சி எதிர்காலத்தில் எத்தகைய துன்பத்தை உருவாக்கப்போகிறது என்பதைக் குடியிருப்புப் புவியியல் துறை எச்சரிப்பதை அலட்சியப்படுத்தாமல் நகர வளர்ச்சிகளைக் கட்டுப்படுத்துவது நம் கடமையாகும். லூயிஸ் மம்போர்டு கருத்துப்படி தற்போது மெகலோ பாலிஸ்நிலையில்உள்ள நகர்ப்புறம் மேலும் வளர்ச்சி பெற்றால் இந்நிலைகளை அதாவது இந்தத் துன்பம் நிறைந்த இரு நகரங்களின் நிலைகளை அடையக்கூடும். இத்தகு நகர் வளர்ச்சியை நம் சங்ககால மக்களும் விரும்பவில்லை என்பதைச் சங்க இலக்கியத்தின் வாயிலாக அறியும் பழந்தமிழரின் குடியிருப்புத் தத்துவத்தின் மூலம் அறியலாம்.

"நகரத்தின் இருப்பிடத்தை நாம் ஆராய்ந்தோமானால் அது அங்கு அமைவதற்கு ஊக்கம் தந்த காரணிகள் நமக்கு புலனாகும்"[23] "நிலம் நீர்நிலைகளின் அமைப்பு, பரப்பு, நிலத்தோற்றம், நீர்வசதி, தாவரம் போன்றவற்றைப் பொறுத்து நகரத்தின் தலம் சிறப்புப் பெறுகிறது. பொதுவாக நகரம் அமைவதற்குப் பெரிய சமநிலம் தேவைப்படுகிறது"[24] "தலத்தின் அடிப்படையில் நகரங்களைப் பதிமூன்று வகைப்படுத்தலாம்"[25] எனக் குடியிருப்புப் புவியியலார் கூறுவர். அவை:-

1. ஆற்றங்கரை நகரம் (River Town)
2. கூடு துறையில் அமைந்த நகரம் (Confluence Town)
3. துறைமுக நகரம் (Port Town)
4. கணவாயில் அமைந்த நகரம் (Gap Town)

---

| | | | |
|---|---|---|---|
| 22. | ஷை | ஷை | பக். 193 |
| 23. | ஷை | ஷை | பக். 200 |
| 24. | ஷை | ஷை | பக். 201 |
| 25. | ஷை | ஷை | பக். 202 |

5. சந்தை நகரம் (Market Town)
6. சுரங்கத் தொழில் நகரம் (Mining Town)
7. தொழில் நகரம் (Industrial Town)
8. நிர்வாக நகரம் (Administrative Town)
9. வாசஸ்தல நகரம் (Resort Town)
10. சமயப்பணி நகரம் (Religious Town)
11. பண்பாட்டு நகரம் (Cultural Town)
12. தற்காப்பு நகரம் (Defence Town)
13. இராணுவ நகரம் (Military Town)

புவியியலார் கூறும் இப்பதின் மூன்று வகையான நகரக் குடியிருப்புகளும் நம் பழந்தமிழகத்தில் இருந்தன என்பதற்கு இலக்கியங்கள் நிறைய ஊர்ப்பெயர்களைக் குறிப்பிட்டுக் கூறி யுள்ளன. ஒவ்வொன்றிற்கும் ஒரு சில ஊர்களைச் சான்றாகக் காணலாம்.

1. ஆற்றங்கரை நகரம்—அரிசில், காரியாறு, பொறையாறு.
2. கூடுதுறையில் அமைந்த நகரம்—கூடல், கூடலூர்.
3. துறைமுக நகரம்—தொண்டி, கொற்கை, பூம்புகார்.
4. கணவாயில் அமைந்த நகரம்—ஆய்குடி. ஏரகம்.
5. சந்தை நகரம்—மதுரை, பூம்புகார், வஞ்சி, முசிறி.
6. சுரங்கத் தொழில் நகரம்—(தொடர்ந்த நுட்பமான ஆய்வில் காணலாம்)
7. தொழில் நகரம்—செயலூர், கொற்கை.
8. நிர்வாக நகரம்—கருவூர், காஞ்சி.
9. வாசஸ்தல நகரம்—ஏழில், பறம்பு, பாரம்.
10. சமயப்பணி நகரம்—காஞ்சி.
11. பண்பாட்டு நகரம்—உறையூர்.
12. தற்காப்பு நகரம்—பாழி, கிடங்கில்.
13. இராணுவ நகரம்—அட்டவாயில், முனையூர்.

மேலே சான்று காட்டிய ஊர்களில் பல நகரமாகவே நமக்குத் தெரிய வருகின்றன. சில சிற்றூர் போலவும், பேரூர் போலவும் காணப்படுகின்றன. புவியியலார் கருத்துப்படி இச் சிறப்புடைய குடியிருப்புத் தலங்கள் நகரங்களாகவே கருதப்படவேண்டுமெனத் தெரிகிறது. எனவே சிற்றூரும், பேரூரும் நகர அந்தஸ்தைப் பெற்று விடுகின்றன. இன்று பேரூராட்சி, நகராட்சி, மாநகராட்சி என நிர்வாக வசதிக்காகப் பிரிக்கப்படும் பல ஊர்கள் சிற்றூராக வும், பேரூராகவும் இருப்பதைக் காணலாம். இவ்வாறு சங்க

இலக்கியப் பாடல்கள் காட்டும் ஊர்ப்பெயர்கள் அனைத்தும் நமக்குப் புதிய பல சிந்தனைகளை ஒப்பீட்டின் வழியாக உரு வாக்கியுள்ளதைக் காணலாம்.

இத்தகைய ஊர்ப்பெயர்கள் பொதுக் கூறாகவும் சிறப்புக் கூறாகவும் எவ்வாறு அமைந்திருக்கின்றன என்பவதையும், அதன் பின் ஒவ்வொரு ஊர்ப் பெயரும் என்னென்ன கருத்தை நமக்கு விளக்கிக் காட்டுகிறது என்பதையும் முறையாகக் கண்டறிந்து விட்டால் பழந்தமிழர்தம் மாண்பு பளிச்செனமின்னி வெளிப்படு வதைக் காணலாம். அவற்றை இனித் தொடர்ந்து ஆய்வோம்.

# 4. ஊர்ப் பெயர்களின் அமைப்பு முறை

ஊர்ப்பெயர்கள் அமைப்புமுறையை நோக்கும் பொழுது அவை இருவேறு தனிக்கூறுகளைக் கொண்டவையாக அமைந்திருப்பதைக் காணலாம். ஊர்ப்பெயரின் ஈற்றிலே ஊர்ப்பெயர் விடுதியாக அமைந்திருக்கும் கூறு பொதுக்கூறு எனப்படும். இப் பொதுக் கூறுகள்தாம் ஊரின் பெயராய் முதலில் அமைந்தவை. காலப் போக்கில் அதே பெயருள்ள ஊர்கள் பல தோன்றிய பொழுது, அவ்வூர்களிடையே வேறுபாடு தோன்றுவதற்காக முற் பகுதியில் சேர்க்கப்பட்ட கூறுதான் சிறப்புக் கூறு எனப்படும். இது ஊர்ப்பெயரின் முன் ஒட்டாக அமைந்து ஒரு குறிப்பிட்ட ஊரை இனங்கண்டு கொள்ள உதவியது. ஆகவே பொதுக்கூறு, சிறப்புக் கூறு என்ற இருவேறு தனிக் கூறுகளைக் கொண்டு ஊர்ப் பெயர்கள் அமைந்தன.

இலக்கியத்தில் காணப்படும் பெருப்பாலான ஊர்ப்பெயர் கள் சிறிய அளவில் இரண்டு தனிக் கூறுகளைக் கொண்டவை யாகவே அமைந்துள்ளன.

| | |
|---|---|
| அலைவாய் | செல்லூர் |
| ஆடுதுறை | துறையூர் |
| கருவூர் | தேனூர் |
| காரியாறு | நல்லூர் |
| சிறுகுடி | நீடூர் |

போன்ற ஊர்கள் சிறிய அளவில் அமைந்தவை.

பொதுக்கூறு அல்லது சிறப்புக் கூறுடன் மேலும் சில பகுதி கள் இணைந்து அதிகப்படியான கூறுகள் கொண்டவையாகவும் சில ஊர்ப்பெயர்கள் அமைந்துள்ளன.

அரிமணவாயில் உறத்தூர்
இடைக் குன்றூர்
எருக்காட்டூர்

கடம்பின் பெருவாயில்
காவிரிப்பூம் பட்டினம்
குணவாயிற் கோட்டம்
குறுங்கோழியூர்
புல்லாற்றூர்
பூஞ்சாற்றூர்
வெண் மணிவாயில்

போன்ற ஊர்ப்பெயர்கள் அதிகப்படியான கூறுகள் கொண்டவை யாக அமைந்துள்ளன.

ஒரு சில ஊர்ப்பெயர்கள் இவ்விதிக்கு விலக்காகவும் அமைந் துள்ளன. மரூஉப் பெயர்களாகவோ வேறு வகையாகவோ ஒரே கூறாக - ஒரே சொல்லாக அமைந்த ஊர்ப்பெயர்களும் உள்ளன.

| | |
|---|---|
| உறந்தை | பாழி |
| காஞ்சி | புகார் |
| கோழி | மதுரை |
| கூடல் | மல்லி |
| கோடி | வஞ்சி |

போன்ற பெயர்களை எடுத்துக்காட்டாகக் கூறலாம்.

### பொதுக்கூறு

சங்க இலக்கியங்களில் வரும் ஊர்ப் பெயர்களில் கீழ்க் காணும் நாற்பத்து மூன்று விதமான பொதுக்கூறுகள் அமைந் துள்ளன. இவையெல்லாம் தனிப்பொதுக் கூறுகளே.

| | |
|---|---|
| அகம் | நகர் |
| அம்பலம் | நாடு |
| ஆறு | நியமம் |
| இல் | பட்டினம் |
| ஊர் | பள்ளி |
| காடு | பாக்கம் |
| காரம் | பாடி |
| கானம் | புரம் |
| கிரியம் | பேடு |
| குடி | பேர் |
| குன்றம் | பேரி |
| குன்று | மங்கலம் |
| கூடல் | மலம் |

கூற்றம் மலை
கை மாடம்
கோட்டம் முற்றம்
கோடு வயம்
சேரி வாய்
தீவம் வாயில்
தீவு வெளி
துறை வெண்ணிலை
தேசம்

இத்தகைய பொதுக்கூறுகளை இயற்கை அமைப்பு செயற்கை அமைப்பு, குடியிருப்பு ஆகிய நிலைகளில் பகுத்துக் காண்கின்றனர் இடப்பெயராய்வாளர். இலக்கியத்தில் காணும் ஊர்ப்பெயர்களையும் அந் நிலையில் பகுத்துக் காணலாம்.

காடு, குன்றம், குன்று போன்ற பொதுக் கூறுகள் இயற்கை அமைப்பு நிலையில் அமைந்தவையாகும்.

காடு — உம்பற்காடு
குன்றம்— மால்குன்றம்
குன்று — பரங்குன்று.

அம்பலம், கோட்டம் போன்ற பொதுக் கூறுகள் செயற்கை அமைப்பு நிலையில் அமைந்தவையாகும்.

அம்பலம் — கோட்டம்பலம்
கோட்டம் — குணவாயிற் கோட்டம்.

இல், ஊர், குடி, சேரி, நகர், நாடு, பட்டினம், பாக்கம் போன்ற பொதுக் கூறுகள் குடியிருப்பு நிலையில் அமைந்தவை யாகும்.

இல் — அழும்பில்
ஊர் — உறத்தூர்
குடி — சிறைக்குடி
சேரி — ஏணிச்சேரி
நகர் — அருட்டநகர்
நாடு — அவந்திநாடு
பட்டினம் — காவிரிப்பூம்பட்டினம்
பாக்கம் — பட்டினப்பாக்கம்.

இயற்கை அமைப்பு, செயற்கை அமைப்பு நிலையில் அமைந்த பொதுக்கூறுகளை நிலஅமைப்பு, நீர்நிலை போன்ற வகையிலும் பகுத்துக் காணலாம்.

குன்றம், குன்று, கோடு, மலை போன்ற பொதுக்கூறுகள் இயற்கை நில அமைப்பைச் சார்ந்தவையாகும்.

குன்றம் — மால்குன்றம்
குன்று — பரங்குன்று
கோடு — அதங்கோடு
மலை — கொல்லிமலை

அகம், அம்பலம், இல், கூடல், கூற்றம், கோட்டம், தேசம், நாடு, முற்றம், வாயில் போன்ற பொதுக்கூறுகள் செயற்கை நில அமைப்பைச் சார்ந்தவையாகும்.

அகம் — உரோடகம்
அம்பலம் — கோட்டம் பலம்
இல் — அழும்பில்
கூடல் — மாடக்கூடல்
கூற்றம் — முத்தூற்றுக் கூற்றம்
கோட்டம் — குணவாயிற் கோட்டம்
தேசம் — மாளுவதேசம்
நாடு — இடைக்கழி நாடு
முற்றம் — குளமுற்றம்
வாயில் — அட்ட வாயில்

ஆறு போன்ற பொதுக்கூறு இயற்கை நீர்நிலை அமைப்பைச் சார்ந்தது.

ஆறு — இடையாறு.

துறை போன்ற பொதுக்கூறு செயற்கை நீர்நிலை அமைப்பைச் சார்ந்தது.

துறை — ஆடுதுறை.

ஊர், குடி, சேரி, நகர், பட்டினம், பாக்கம், புரம், பேடு, மங்கலம் பேன்ற பொதுக் கூறுகள் குடியிருப்பு அமைப்பைச் சார்ந்தவையாகும்.

ஊர் — அரிமண வாயில் உறத்தூர்
குடி — ஆலங்குடி
சேரி — ஏணிச் சேரி
நகர் — திருநகர்
பட்டினம் — காவிரிப்பூம்பட்டினம்
பாக்கம் — பட்டினப் பாக்கம்
புரம் — கபிலபுரம்

பேடு — கச்சிப்பேடு
மங்கலம் — கிள்ளி மங்கலம்

கை, நியமம், பள்ளி, பேர், வயம், வெண்ணிலை போன்ற சில பொதுக்கூறுகள் மேற் கூறிய பகுப்பில் அடங்காதவையாக வும் அமைந்துள்ளன.

கை — கொற்கை
நியமம் — நொச்சி நியமம்
பள்ளி — இலவந்திகைப்பள்ளி
பேர் — கானப் பேர்
வயம் — இடவயம்
வெண்ணிலை — முது வெண்ணிலை.

**சிறப்புக் கூறு.**

ஊர்ப்பெயர்கள் அமைப்பில் சிறப்புக்கூறு முன் ஒட்டாக அமையும். கீழ்க்காணும் நூற்றிரண்டு விதமான சிறப்புக்கூறுகள் அமைந்துள்ளன.

| | | |
|---|---|---|
| அதவம் | எருக்காடு | குணக்கு |
| அரி | எருமை | குரா |
| அரிமணம் | எறிச்சல் | குழு |
| அலை | ஏணி | குளம் |
| அழுந்து | ஏர் | குறும்பு |
| அள்ளு | ஏழ் | குன்று |
| ஆ | ஐ | கூடல் |
| ஆடு | ஒல்லை | கொடுகு |
| ஆய் | கச்சி | கொல் |
| ஆர் | கடம்பு | கொல்லி |
| ஆலம் | கடியல் | கொண் |
| இரத்தினம் | கயம் | கொன் |
| இருந்தை | கரு | கோ |
| இடை | கரும்பு | கோடு |
| இலவந்திகை | கள்ளி | கோவல் |
| ஈரம் | காரி | கோழி |
| உகாய் | காவிரி | கோன் |
| உம்பல் | கானம் | சாவி |
| உறை | கிடங்கு | சாறு |
| ஊண் | கிள்ளி | சிக்கல் |
| எயிற் | குடக்கு | சித்திரம் |

சிரா
சிறு
சிறுமை
சிறை
செம்மை
செல்
தகடு
துறை
தேன்
நான்
நான்மாடம்
நீடு
நெய்தல்
நொச்சி
பரம்
பாமுள்
பாழி
புலி
பொறை
மரு
மா
மாடல்
மால்
மிழலை
முகையல்
முத்து
முரஞ்சி
முள்
முனை
மை
வயல்
வாகை
வாரணம்
விரிச்சி
வெண்மணி
வெள்ளை
வேம்பு
வேல்
வேள்

பொதுக்கூறு போலவே சிறப்புக் கூறும் ஊர்ப் பெயர்களில் தனியாக ஒரே ஒரு முன் ஒட்டாகவும், ஒன்றற்கு மேற்பட்ட முன் ஒட்டாகவும் அமைந்துள்ளன. தனியாக அமைந்த சிறப்புக் கூறு தனிச் சிறப்புக் கூறு என்றும், ஒன்றற்கு மேற்பட்டதாக அமைந்த சிறப்புக் கூறு தொகைச் சிறப்புக் கூறு என்றும் பெயர் பெறும்.

அள்ளூர்
கிள்ளி மங்கலம்

தனியாக ஒரே ஒரு சிறப்புக்கூறு பெற்று அமைந்த ஊர்ப் பெயர்கள்.

இடைக்கழிநாடு
கடம்பின் பெருவாயில்.

ஒன்றற்கு மேற்பட்ட சிறப்புக் கூறுகள் பெற்று அமைந்த ஊர்ப் பெயர்கள்.

சிறப்புக் கூறுகளை விளக்கப்பெயர் அடை என்றும், ஆட் பெயர் அடை என்றும், இந்த இரண்டு பிரிவுகளில் அடங்காத பிற வகைப் பெயர் அடை என்றும் வகைப்படுத்துகின்றனர் இடப் பெயராய்வாளர்கள்.

**விளக்கப்பெயர் அடை.**

விளக்கப்பெயர் அடை என்ற பிரிவில் நில அமைப்பு, நீர் நிலைகள், தாவரம், விலங்கு, ஒப்புமைக்கூறு போன்றவை அடங்கும்.

குன்று, கொல்லி, கோடு போன்ற இயற்கை நில அமைப்பைக் குறிக்கும் சிறப்புக்கூறுகள் என்ற பிரிவில் அடங்கும்.

குன்று — குன்றூர்
கொல்லி — கொல்லிமலை
கோடு — கோட்டம் பலம்
இலவந்திகை — இலவந்திகைப்பள்ளி
எயில் — எயிற்பட்டினம்
குறும்பு — குறும்பூர்
வயல் — வயலூர்.

அலை, காவிரி போன்ற இயற்கை நீர் நிலையைக் குறிக்கும் சிறப்புக்கூறுகளும், ஈரம், கயம், கிடங்கு, குளம், துறை போன்ற செயற்கை நீர் நிலையைக் குறிக்கும் சிறப்புக் கூறுகளும் நீர்நிலையைக் குறிக்கும் சிறப்புக் கூறுகள் என்ற பிரிவில் அடங்கும்.

அலை — அலைவாய்
காவிரி — காவிரிப்பூம்பட்டினம்
ஈரம் — ஈரந்தூர்
கயம் — கயத்தூர்
கிடங்கு — கிடங்கில்
குளம் — குளமுற்றம்
துறை — துறையூர்

அதவம், ஆர், ஆலம், உகாய், கடம்பு, கரும்பு, கானம், குரா, மா, முள், வாகை, வேம்பு போன்ற சிறப்புக் கூறுகள் தாவரத்தைக் குறிக்கும் சிறப்புக்கூறு என்ற பிரிவில் அடங்கும்.

அதவம் — அதங்கோடு
ஆர் — ஆர்க்காடு
ஆலம் — ஆலங்குடி
உகாய் — உகாய்க்குடி
கடம்பு — கடம்பின் பெருவாயில்
கரும்பு — கரும்பனூர்
கானம் — கானப்பேர்
குரா — குராப்பள்ளி
மா — மாங்குடி

முள் — முள்ளூர்
வாகை — வாகை
வேம்பு — வேம்பற்றூர்

ஆ, உம்பல், எருமை, கோழி, வாரணம் போன்ற சிறப்புக் கூறுகள் விலங்கினைக் குறிக்கும் சிறப்புக்கூறு என்ற பிரிவில் அடங்கும்.

ஆ — ஆமூர்
உம்பல் — உம்பற்காடு
எருமை — எருமைவெளி
கோழி — கோழி
வாரணம் — வாரணம்

இடை, ஏழ், ஒல்லை, குடக்கு, குறுமை, சிறு, செம்மை, நால், வெண்மை போன்ற சிறப்புக்கூறுகள் ஒப்புமையைக் குறிக்கும் சிறப்புக்கூறு என்ற பிரிவில் அடங்கும்.

இடை — இடைக்காடு
ஏழ் — ஏழில்
ஒல்லை — ஒல்லையூர்
குடக்கு — குடவாயில்
சிறு — சிறுகுடி
செம்மை — செங்கண்மா
நால் — நாலூர்
வெண்மை — வெண்குன்று

**ஆட்பெயர் அடை**

ஆய், காரி போன்ற இயற்பெயர்களாய் அமைந்த சிறப்புக் கூறுகளும், ஐ, கோன், வேள் போன்ற பொதுப் பெயர்களாய் அமைந்த சிறப்புக் கூறுகளும் ஆட்பெயர்களைக்குறிக்கும் சிறப்புக் கூறுகள் என்ற பிரிவில் அடங்கும்.

ஆய் — ஆய்குடி
காரி — காரியாறு
ஐ — ஐயூர்
கோன் — கோனாடு
வேள் — வேளூர்

**பிறவகைப்பெயர் அடை**

அழுந்து, அள்ளு, ஆடு, இரு, உறை, கொல், விளங்கு போன்ற தொழிற் பெயர்களாய் அமைந்த சிறப்புக் கூறுகளும்,

ஊண், தேன் போன்ற உணவுப் பொருட் பெயராய் அமைந்த சிறப்புக் கூறுகளும், எருக்காடு, கடியல், கோவல், சாறு, செல், மிழலை, முத்து, முனை, மை, விரிச்சி, வெண்மணி வேல் போன்ற பிறவற்றைக் குறிக்கும் பெயர்களாய் அமைந்த சிறப்புக் கூறு களும், பரம், மால் போன்ற தெய்வங்களைக் குறிக்கும் பெயர் களாய் அமைந்த சிறப்புக் கூறுகள் பிறவகைப் பெயர் அடை என்ற பிரிவில் அடங்கும்.

| | | |
|---|---|---|
| அழுந்து | — | அழுந்தூர் |
| அள்ளு | — | அள்ளூர் |
| ஆடு | — | ஆடுதுறை |
| இரு | — | இருந்தையூர் |
| உறை | — | உறையூர் |
| கொல் | — | கொற்கை |
| விளங்கு | — | வீளங்கில் |
| ஊண் | — | ஊணூர் |
| தேன் | — | தேனூர் |
| எருக்காடு | — | எருக்காட்டூர் |
| கடியல் | — | கடியலூர் |
| கோவல் | — | கோவலூர் |
| சாறு | — | பூஞ்சாற்றூர் |
| செல் | — | செல்லூர் |
| மிழலை | — | மிழலைக்கூற்றம் |
| முத்து | — | முத்தூர்க் கூற்றம் |
| முனை | — | முனையூர் |
| மை | — | மையல் |
| விரிச்சி | — | விரிச்சியூர் |
| வெண்மணி | — | வெண்மணி வாயில் |
| வேல் | — | வேலூர் |
| பரம் | — | பரங்குன்று |
| மால் | — | மாலிருங்குன்றம் |

மேற்கூறிய வகையில் பொதுக் கூறுகளையும் சிறப்புக் கூறு களையும் கொண்ட ஊர்ப்பெயர்கள் இலக்கியங்களில் இடம் பெற்றுள்ள தன்மையைத் தொடர்ந்து வரும் ஊர்ப்பெயர்கள் விளக்கத்தில் காண்போம்.

# 5. ஊர்ப் பெயர் விளக்கம்.

**தமிழக ஊர்கள்.**

**அட்டவாயில்.**

இரு பெரு மன்னர் போரிட்ட இடம் என்பதைக் குறிக்கும் அட்டவாயில் என்பது பின்னர் ஊருக்குப் பெயராய் அமைந்தது என எண்ண வாய்ப்பு உள்ளது.

இவ்வூர்ப் பெயர் அகநானூற்றுப் பாடல் ஒன்றில் இடம் பெற்றுள்ளது. பெருங்கொடி அசைந்து பறக்கும் ஊர் என்றும், அங்குள்ள கழனிகள் பசுங்கதிர்களைத் தாங்கிப் பெருங் கவினுடையன என்றும் அக் கவினையொத்தக் கவினுடையவள் தலைவி என்றும் கூறி, தலைவியின் நலம் பாராட்டப் பெற்றுள்ளது.

அகப்பொருள் பற்றிக் கூறும் இலக்கியப் பாடல்களில் ஊர்ப் பெயர்கள் இடம் பெற்றிருப்பதை நோக்கும்பொழுது ஓர் உண்மை புலப்படும். தலைவியின் நலம் பாராட்டப்பெறும் இடங்களில் ஊர்ப்பெயர்கள் பல இடம் பெற்றிருக்கின்றன. ஊரின் வளமும் பெயரும் கூறி அப்பெருங்கவின் ஒத்த நலமுடையாள் எனத் தலைவியின் நலம் பாராட்டப் பெற்றுள்ளது. இதன் மூலம் அக் குறிப்பிட்ட நகரின் வளமும் நமக்குத் தெரிகிறது.

"பெருங் கொடி நுடங்கும் அட்டவாயில்
இருங்கதிர்க் கழனிப் பெருங்கவின் அன்ன
நலம்பாராட்டி, நடை எழில் பொலிந்து
விழவில் செலீஇயர் வேண்டும்......" (அகம். 326:5-8)

**அதங்கோடு.**

அதங்கோடு என்னும் ஊரில் வாழ்ந்த ஆசான் அதங்கோட்டாசான் எனப் பெயர் பெற்றார். பிறந்து வாழ்ந்த ஊரால் பெயர் பெற்றவர்கள் சங்க காலப் புலவர்களில் பலர். தொல்

காப்பியர் தம் நூலை நிலந்தரு திருவிற் பாண்டியன் அவைக் களத்தில் அதங்கோட்டாசானுக்கு ஐயந்திரிபறத் தெரிவித்தார் என்று பனம்பாரனார் இயற்றிய சிறப்புப்பாயிரம் கூறுகிறது.

கன்னியாகுமரியிலிருந்து திருவனந்தபுரம் செல்லும் பெரு வழியில் உள்ள கல்குளம் வட்டத்தைச் சார்ந்த திருவிதாங்கோடு தான் இந்த அதங்கோடு என்றும், அதங்கோடு என்ற ஊர்ப் பெயரே திரு என்ற சிறப்படையுடன் திருவதங்கோடு என வழங்கப் பெற்றதாகவும், திருவதங்கோடு நாளடைவில் திருவிதாங்கோடு என்று மெல்ல மெல்ல மாற்றம் பெற்றதாகவும் கருதுகின்றனர். திருவிதாங்கோடு என்று திரிந்த பெயரே நாட்டின் பெயராகவும் வழங்குகின்றது.

ஆசிரியரை ஆசான் என்று வழங்கும் முறையை இன்றும் கொண்டுள்ள கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்ததே இவ்வூர் என்ற கருத்தும் உள்ளது.

அதங்கோடு என்ற ஊர் பண்டைக் காலத்தில் சிறப்புடைய பேரூராய் விளங்கியது என்பதற்குரிய அடையாளமாக அவ்வூரில் பழைய கோட்டை, மதில் முதலியன சிதைந்த நிலையில் உள்ளன.

அதங்கோடு என்ற பெயருடன் விளவங்கோடு வட்டத்திலும் ஓர் ஊர் உள்ளது.

'கோடு' என்னும் பொதுக்கூறு உச்சி என்ற ஒரு பொருளை யும் தரும் சொல். 'அதவம்' என்பது ஒரு மரப்பெயர் என்று குறுந்தொகைப் பாட்டொன்றால் தெரிகிறது.

ஆகையால் அதவங்கோடு என்ற ஊர்ப்பெயர், விளவங்கோடு என்பது போல மரப்பெயரால் பெற்ற ஓர் ஊர்ப்பெயர். அல்லது அதவமரங்கள் நிறைந்த மலைப்பகுதி என்னும் பொருளில் பெற்ற பெயர், எனக் கருத இடம் உள்ளது. அதவங்கோடு என்ற பெயரே அதங்கோடு என ஆகி இருக்க வேண்டும்.

"நிலந்தரு திருவிற் பாண்டியன் அவையத்து
அறங்கரை நாவின் நான்மறை முற்றிய
அதங்கோட் டாசாற் கரில்தபத் தெரிந்து"
(தொல். சிறப்புப்பாயிரம்)

"ஆற்று அயல்எழுந்த வெண்கோட்டு அதவத்து
எழுகுளிறு மிதித்த ஒரு பழம்போலக்
குழைய கொடியோர் நாவே" (குறுந். 24: 3–5)

**அம்பர்.**

சோழ நாட்டில் அம்பர் என்ற பெயருடன் ஓர் ஊர் உள்ளது. தஞ்சை மாவட்டத்தில் பூந்தோட்டம் புகைவண்டி நிலையத்திற்குத் தென்கிழக்கே சுமார் நான்கு கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. இவ்வூரை அடுத்து அம்பர் மாகாளம் உள்ளது.

"அரிசிலம் பொருபுனல் அம்பர் மாநகர்க் குரிசில் செங்கண்ணவன் கோயில் சேர்வரே" என்னும் தேவாரத்தின்மூலம் அரசிலாற்றங்கரையில் அம்பர் மாநகர் அமைந்து இருந்தமையை அறிகிறோம். ஆற்றில் அக் கரையில் அமைந்த ஊர் என்னும் பொருள்பட அம்பர் என்ற பெயர் அமைந்திருக்கலாம். சுசீந்திரத்தில் பழையாற்றின் அக் கரையில் அமைந்த ஊர் அக்கரை என்றே பெயர் பெற்றிருப்பது ஒப்பு நோக்கத்தக்கது.

அம்பர் என்னும் ஊர் அருவந்தை என்ற வள்ளலுக்கு உரியதாக இருந்தது என்பதைஅம்பர்கிழான் அருவந்தையைக் கல்லாடனார் பாடிய புறநானூற்றுப் பாட்டு ஒன்று தெரிவிக்கிறது.

புலவர் பெயர் ஊர்ப்பெயருடன் இணைத்துக் கூறப்பட்டதை போல வள்ளல் முதலியோரின் பெயரும் ஊர்ப்பெயருடன் இணைத்துக்கூறப்பட்ட மரபும் இருந்தது என்பதற்கு இது ஒரு சான்று.

சோழன் கிள்ளிக்குரிய அம்பரைச் சூழ்ந்து அரிசில் என்னும் ஆறு ஓடியதாக கூறும் சங்க இலக்கியப் பாடலும் அம்பர் என்ற ஊர் சோழ நாட்டினகத்ததே என்ற கருத்தை வலியுறுத்துகிறது.

அம்பர் என்ற பெயருடன் மற்றும் ஓர் ஊர் ஜெய்ப்பூர் அரசின் தலைநகராக இருந்துள்ளது. இவ்வூர் நம் சங்கஇலக்கியங்களில் குறிக்கப்பெற்ற அம்பர் இல்லை.

"ஏந்து கோட்டு யானை இசைவெங்கிள்ளி
வம்பு அணி உயர்கொடி அம்பர் சூழ்ந்த
அரிசில் அம்தண் அறல் அன்ன இவள்
விரிஒலி கூந்தல் விட்டு அமைகலனே" (நற், 141: 9-12)

"காவிரி அணையும் தாழ்நீர்ப் படப்பை
நெல்விளை கழனி அம்பர் கிழவோன்
நல் அருவந்தை வாழியர்......" (புறம், 385:8-10)

**அரிசில்**

அரிசில் என்ற ஊர்ப்பெயர் இவ்வூரைச் சேர்ந்த புலவர் பெயருடன் இணைத்துக் கூறப்பட்ட நிலையில் சங்க இலக்கியங்களில் இடம் பெற்றுள்ளது. கொள்ளிடத்தின் வடபாலுள்ள அரியலூர் என்ற ஊர்ப்பெயரின் மரூஉவே அரிசில் என்ற பெயர் என்ற கருத்து உள்ளது. அரிசில் என்ற பெயரே அரியில் என்றாகி, அரியிலூர் என மருவியதாகவும் கருதுகின்றனர். ஆயின் தஞ்சாவூர் மாவட்டத்தில் கும்பகோணத்திற்குத் தென் கிழக்கே நாலரை மைல் தொலைவில் அரிசிலாற்றங் கரையில் அரிசிற் கரைப்புத்தூர் என்று ஓர் ஊர் உள்ளது. இதற்கும் அரிசில் என்ற ஊர்ப் பெயர்க்கும் யாதேனும் தொடர்பு உண்டா என்ற ஆய்வு விளக்கத்தை அளிக்கலாம்.

நற். 141-இல் அரிசில் ஆறு பற்றி கூறப்படும் கருத்து சோழன் கிள்ளியின் ஊராக அரிசிலைக் காட்டுகிறது. அரிசில் என்பது சோழநாட்டு ஆறு என்பதும் தெரிகிறது. எனவே அரிசில் என்ற ஊர் இன்றைய அரிசிற்கரைபுத்தூராக இருக்க வாய்ப்பு உள்ளது.

இந்த ஊரைச் சார்ந்த அரிசில் கிழார் பாடியனவாகக் குறுந்தொகை 193-ம் பாடலும், பதிற்றுப் பத்தின் எட்டாம் பத்தும், புறநானூற்று 146, 230, 281, 285, 300, 304, 342 ஆகிய பாடல்களும் கிடைக்கின்றன.

**அரிமண வாயில் உறத்தூர்.**

வேள் எவ்வியின் பகைவர்களைப் பற்றிக் கூறும் சங்க இலக்கியப்பாடல் ஒன்றில் அரிமண வாயில் உறத்தூர் என்ற ஊர்ப் பெயர் குறிக்கப்பெற்றுள்ளது. அரி-கள்; உறப்பு-செறிவு. கள்ளின் மணம் செறிந்த ஊர் அரிமண வாயில் உறத்தூர் என்று அமைந்திருக்கலாம்.

> "வாய்வாள் எவ்வி ஏவல் மேவார்
> நெடுமிடல் சாய்த்த பசும்பூண் பொருந்தலர்
> **அரிமண வாயில் உறத்தூர்** ஆங்கண்,
> கள்ளுடைப் பெருஞ்சோற்று எல் இமிழ் அன்ன,
> கவ்வை ஆகின்றால் பெரிதே!......" (அகம். 266:11-15)

**அரையம்.**

அரையம் என்ற ஊர்ப்பெயர் கபிலரால் புறநானூற்றுப் பாடலொன்றில் குறிக்கப்பெற்றுள்ளது. பாரி மகளிரை ஏற்றுக் கொள்ளாத இருங்கோவேளை நோக்கிப் பாடிய பாடல் அது. இரண்டு பகுதியான பெயரையுடையது(சிற்றரையம்,பேரரையம்.

என்றும், புகழ்ந்து பாடிய கழாஅத்தலையாரை இகழ்ந்ததனால் அழிவுற்றது என்றும் அப்பாடலில் கூறப்பெற்றுள்ளது.

அரை என்ற மரப்பெயர் (Ripal) காரணமாக இவ்வூர் அரையம் எனப் பெயர் பெற்றிருக்கலாம்.

"இருபால் பெயரிய உருகெழு மூதூர்
கோடிபல அடுக்கிய பொருள் நுமக்கு உதவிய
நீடுநிலை அரையத்துக் கேடும்கேள், இனி!
நுந்தை தாயம் நிறைவுற எய்திய
ஒலியற் கண்ணிப் புலிகடி மாஅல்!
நும்போல் அறிவின் நுமருள் ஒருவன்
புகழ்ந்த செய்யுள் கழா அத்தலையை
இகழ்ந்ததன் பயனே; இயல் தேர் அண்ணல் !"

(புறம். 202:6-13)

**அலைவாய்.**

திருமுருகாற்று படையிலும், அகநானூற்றிலும் அலைவாய் என்ற ஊர்ப்பெயர் குறிக்கப்பெற்றுள்ளது. புறநானூற்றிலும், சிலப்பதிகாரத்திலும் செந்தில் என்ற பெயரால் இதே ஊர் குறிக்கப்பெற்றுள்ளது. அலைவாய் என்பது கடற்கரையில் அமைந்த ஊரைக் குறிக்கத் தோன்றியிருக்கலாம்.

அலைவாய் என்ற ஊர்ப்பெயர் சீரலைவாய் அல்லது திருச்சீரலைவாய் என்றும், செந்தில் என்ற ஊர்ப்பெயர் திருச்செந்தில் மற்றும் செந்தூர் அல்லது திருச்செந்தூர் என்றும் வழங்கப் பெறுகின்றன. சீர் அல்லது திரு என்ற முன் ஒட்டுடன் வழங்கப் பெறுவதும், இல் என்ற பின் ஒட்டு ஊர் என மாறி வழங்கப் பெறுவதுமே இத்தகைய வழக்கிற்குக் காரணமாகும்.

இவ்வூர் நெல்லை மாவட்டத்தில் கடற்கரையில் காயல் பட்டினத்திற்குத் தெற்கில் மிக அழகாக அமைந்துள்ளது.

முருகப்பெருமான் சூரபன்மனோடு போராடி வெற்றி பெற்று ஜயாபிஷேகம் செய்து கொண்ட இடமாதலின் ஜயந்தி என்று இவ்வூர் பெயர் பெற்றது என்பது புராணம். அதுவே நாளடைவில் செந்தி என்று ஆகிப் பிறகு செந்தில், செந்தூர் என வழங்கியது என்பர். செயந்திபுரம் என்றும் வழங்குகின்றனர்.

"உலகம் புகழ்ந்த ஓங்குயர் விழுச்சீர்
அலைவாய்ச் சேறலும் நிலை இய பண்பே"

(பத்துப். திருமுருகு. 124-125)

"திருமணி விளக்கின் அலைவாய்ச்
செருமிகு சேஎயொடு உற்ற சூளே" (அகம். 266:20-21)

"வெண்டலைப் புணரி யலைக்குஞ் செந்தில்
நெடுவேள் நிலைஇய காமர் வியன்துறை" (புறம். 55:18-19)

"சீர்கெழு செந்திலுஞ் செங்கோடும் வெண்குன்றும்
ஏரகமும் நீங்கா இறைவன் கைவேலன்றே"
(சிலப். குன்றக்குரவை. 8)

**அழுந்தை.**

அழுந்தை திதியன் என்பவனுக்கு உரியதாய் இருந்தது. அகநானூற்றுப் பாடல் ஒன்றில் பெண்ணின் நலம் பாராட்டப் பெறும்பொழுது இவ்வூர் உவமையாகக் கூறப் பெற்றுள்ளது.

கழக உரையாசிரியர் இதற்கு அழுந்தூர் என்று பொருள் கூறுவதைக் காணும்பொழுது அழுந்தை என்பது பின்னர் அழுந்தூர் என்று வழங்கியதை உணரலாம். கம்பன் பிறந்த திருவழுந்தூர் எனக் கருதலாம்.

"கடுந்தேர்த் திதியன் அழுந்தை கொடுங்குழை
அன்னி மிஞிலியின் இயலும்
நின் நலத்தருவியை முயங்கிய மார்பே. (அகம் 196:11-13)

பதினொரு வேளிரொடு வேந்தர் சாய
மொய்வலி அறுத்த ஞான்றை
தொய்யா அழுந்தூர் ஆர்ப்பினும் பெரிதே" (ஷை. 246:12-14)

**அழும்பில்.**

மதுரைக் காஞ்சி, அகநானூறு, புறநானூறு, சிலப்பதிகாரம் ஆகிய இலக்கியங்களில் அழும்பில் என்ற ஊர்ப்பெயர் குறிக்கப் பெற்றுள்ளது.

மானவிறல்வேள் என்ற குறுநில மன்னனுக்குரியது அழும்பில் என்று மதுரைக் காஞ்சி கூறுகிறது. அழும்பில் ஒழியாத புது வருவாயினையுடையது என்றும், சென்னிக்குரியது என்றும் அகநானூறு கூறுகிறது.

"பெரும்பூண் சென்னி அழும்பில்" என்று கூறப்பெறுவதால் இவ்வூர் சோழ நாட்டினது எனக் கருத இடமளிக்கிறது. சேர நாட்டிலும் அழும்பில் என்ற பெயருடன் ஓர் ஊர் இருப்பதாகத் தெரிகிறது.

புதுக்கோட்டைச் சீமையில் உள்ள அம்புக் கோயில் என்ற ஊரே பழைய அழும்பில் என்ற கருத்தும் உள்ளது. இவ்வூரில் உள்ள சிவன்கோயில் 'அழும்பிற் கோவில்' என வழங்கி, அதுவே நாளடைவில் அம்புக்கோயில் என மருவி ஊர்ப்பெயராயிற்று என்பர்.[1]

"இராசராச வளநாட்டுப் பன்றியூர் நாட்டு அழும்பில்' என்று புதுக்கோட்டை கல்வெட்டொன்று குறிக்கிறது.

சங்க இலக்கியப் பாடல்களிலும் சோழநாட்டு ஊராகக் கூறப் பெற்றிருப்பதால் ரா. பி. சேதுப்பிள்ளையின் கருத்து பொருத்த மானதாகத் தோன்றுகிறது.

"விளங்கு பெருந்திருவின் மானவிறல்வேள்
அழும்பில் அன்ன நாடிழந் தனரும்"
(பத்துப். மதுரைக். 344-345)

"பிணையலங் கண்ணி பெரும்பூட் சென்னி
அழும்பில் அன்ன அருஅ யாணர்" (அகம். 44:14-15)

"மாறுகொள் முதலையொடு ஊழ் மாறுபெயரும்
அழும்பிலன் அடங்கான் தகையும் என்றும்" புறம். 283:5-6)

"அறைபறையென்றே யழும்பில் வேளுரைப்ப"
(சிலப். 25:177)

**அள்ளூர்.**

அள்ளூர் என்பது பாண்டி நாட்டில் சிவ கங்கை வட்டத்தி லுள்ள ஓர் ஊர். நன்முல்லையார் என்ற சங்ககாலப் புலவர் ஒருவர் இவ்வூரினராதலின் அள்ளூர் நன்முல்லையார் என ஊராற் பெயர் பெற்றார்.

இவர் பாடல்கள் குறுந்தொகை, அகநானூறு, புறநானூறு ஆகிய சங்க இலக்கியங்களில் இடம் பெற்றன.

பாண்டியனின் அள்ளூர் நெற்குவியலையுடையது என்றும் அவ்வூர் போன்ற நலமுடையவள் தலைவி என்றும் பெண்ணின் நலம் பாராட்டப் பெற்றுள்ளது.

அள் என்ற சொல் செறிவு என்னும் பொருளது. நெல் செறிந்த ஊர் அள்ளூர் எனப் பெயர் பெற்றிருக்கலாம். "பிண்ட

1. ஊரும் பேரும்—ரா.பி. சேதுப்பிள்ளை.

நெல்லின் அள்ளூர்''—என்ற சங்க இலக்கியத் தொடர் இதை வலி யுறுத்தும்.

இதே பெயர் கொண்ட ஊர் ஒன்று சோழநாட்டில் தஞ்சை மாவட்டத்திலும் உள்ளது.

குறுந்தொகை 32, 67, 68, 93, 96, 140, 157, 202, 237 ஆகிய பாடல்களும், அகநானூற்று 46ஆம் பாடலும் புறநானூற்று 306ஆம் பாடலும் அள்ளூர் நன்முல்லையார் என்ற பெண்பாற் புலவர் பாடியவை.

''ஒளிறுவாள் தானைக் கொற்றச்செழியன்
பிண்ட நெல்லின் அள்ளூர் அன்ன என்
ஒண்டொடி நெகிழினும்நெகிழ்க'' (அகம். 46:13-15)

**ஆடுதுறை.**

ஆடுதுறை என்ற ஊர்ப்பெயர் மாசாத்தனார் என்ற சங்க காலப் புலவர் பெயரோடு சேர்த்துக் கூறப்பட்டுள்ளது.

சோழன் குள முற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவனை, அவன் இறந்த பொழுது வருந்தி ஆடுதுறை மாசாத்தனார் (புறம். 227) பாடியுள்ளார். காவிரியாற்றின் வடக்கிலொன்றும், தெற்கிலொன்றும் வடவெள்ளாற்றங் கரையிலொன்றும் ஆக மூன்றுஊர்கள் ஆடுதுறை என்னும் பெயருடன் இருக்கின்றன.

ஆறுகளில் மக்கள்இறங்கி நீராடுதற்கேற்ற இடமாகிய துறை என்னும்பெயரை, ஆற்றையடுத்துள்ள ஊர்கள்பெற்றிருப்பதற்கு ஆடுதுறை என்னும் ஊர்ப்பெயர் ஒரு சான்று.

**ஆமூர்.**

சிறுபாணாற்றுப்படை, ஐங்குறு நூறு, அகநானூறு, புறநானூறு ஆகிய சங்க இலக்கியங்கள் நமக்கு உணர்த்தும் ஊர்ப் பெயர்களுள் ஆமூர் என்பதும் ஒன்று.

அழகிய குளிர்ந்த கிடங்கினையும், அரிய காவலையும், அகன்ற அகங்களையும், நிறைந்த அந்தணர்களையும் உடையது ஆமூர் என்று சிறுபாணாற்றுப்படை கூறுகிறது.

சோழரின் ஆமூர் அன்ன நலமுடையவள் தலைவி எனத் தலைவியின் நலம் பாராட்டுகிறது ஐங்குறு நூறு.

கொடுமுடி என்னும் மன்னனால் பாதுகாக்கப் பெறுவதும் நெடுந் தொலைவிலும் விளங்கித் தோன்றுவதும் ஆகிய சிறப்பினையுடையது ஆமூர் என்று அகநானூறு கூறுகிறது. இந்த

ஆமூர் குறும்பொறை மலையின் கீழ்ப்பாலுள்ள பாலை நிலத்தது.

கவுதமன் சாதேவனார் என்ற என்ற சங்க காலப் புலவர் இவ் வூரினர். ஆகவே ஆமூர்க் கவுதமன் சாதேவனார் எனப் பெயர் பெற்றார்.

(ஆமூரைச் சேர்ந்த மல்லன் ஒருவனைச் சோழன் போர்வைக் கோப் பெருநற்கிள்ளி வென்ற பொழுது சாத்தந்தையார் என்ற புலவர் பாடியபாடல் ஒன்று புறநானூற்றில் இடம்பெற்றுள்ளது. "முக்காவனாட்டு ஆமூர் மல்லன்" என்ற கூற்று 'ஆமூர்' முக்கா வனாட்டைச் சேர்ந்தது என்பதைத் தெரிவிக்கிறது. இன்றைய மாமல்லபுரம் இருக்கும் பகுதி ஆமூர் நாடாக இருந்திருக்க வேண்டும்.)

வேலூரிலிருந்து கிடங்கிலை நோக்கிச் செல்லும் வழியில் ஆமூர் இருப்பதாகச் சிறுபாணாற்றுப் படையில் கூறப் பெற் றுள்ளது. ஆயினும் ஆமூர் என்னும் பெயர் கொண்ட ஊர் திண்டிவனம் வட்டத்தில் இல்லை. எனினும் வேலூருக்கு வட மேற்கில் ஏறத்தாழ நான்கரைமைல் தொலைவில் 'கொண் டாமூர்' என்றும், அதற்கு வடமேற்கில் மூன்றரை மைல் தொலை வில் சிற்றாமூர் என்றும், அதற்கும் வடமேற்கில் மூன்று மைல் தொலைவில் "நல்லாமூர்" என்றும் மூன்று ஊர்கள் உள்ளன. நல்லாமூருக்குச் சிறிது வடகிழக்கில் ஆறு மைல் தொலைவில் கிடங்கில் அமைந்துள்ளது. 'ஆமூர்' என்ற பெயருடன் ஊர் இல்லாமையாலும் சிறுபாணன் கூறியபடி இந்த நல்லாமூரே கிடங் கிலுக்கு அண்மையில் இருப்பதாலும், அந்தப் பாணன் கூற்றுப்படி வேலூருக்கும் இந்த நல்லாமூருக்கும் இடையில் மருதவளம் காணப்படுவதாலும் இந்த நல்லாமூரே சங்ககால ஆமூராய் இருந் திருக்கலாம் என்று கொள்வது பொருத்தமாகும்.

ஆமூர் முதலி என்ற ஒரு வள்ளல் இவ்வூரினர் என்றும், இவரைக் காளமேகப் புலவர் பாடினார் என்றும், அவ்வாறு பாடும்பொழுது பாதி வெண்பா பாடிய உடனேயே அவ்வள்ளல் பரிசளித்தார் என்றும் ஒரு செய்தி கூறப் பெறுகிறது.

"மருதஞ் சான்ற மருதத் தண்பணை
அந்தண ரருகா வருங்கடி வியனகர்
அந்தண் கிடங்கின் அவன் ஆமூரெய்தின்"

(பத்துப். சிறுபாண். 186-188)

"வெல்போர்ச் சோழர் ஆமூர் அன்ன இவள்
நலம் பெறு சுடர்நுதல் தேம்ப" (ஐங்குறு. 56:2-3)

"கொடுமுடி காக்கும் குரூஉக்கண் நெடுமதில்
சேண் விளங்கு சிறப்பின் ஆமூர் எய்தினும்
ஆண்டு அமைந்து உறையுநர் அல்லர்" (அகம்.159:18-20)

ஆமூர் கவுதமன் சாதேவனார் பாடியது.

"இன்கடுங் கள்ளின் ஆமூர் ஆங்கண்
மைந்துடை மல்லன் மதவலி முருக்கி
ஒருகால் மார்பு ஒதுங்கின்றே; ஒருகால்
வருதார் தாங்கிப் பின் ஒதுங்கின்றே. (புறம்.80:1-4)

**ஆய்குடி.**

ஆய் என்ற குலத்தில் வந்த ஆய் அண்டிரன் என்னும் வள்ளலின் ஊரே ஆய்குடி என்பது. இவ்வூர் பொதிய மலை நாட்டைச் சார்ந்தது. பொதிய மலைச் சாரலில் இன்றும் இவ்வூர் உள்ளது.

தெற்கில் ஆய்குடி என்ற ஒன்று இல்லையாயின் இந்தப் பரந்த உலகமே கீழ் மேலதாகி நிலைகுலையும் என்கிறார் முடமோசியார் என்ற புலவர்.

ஆய் அண்டிரன் ஆண்டநாடு மலைநாடு என்பதை "ஆஅய் நல்நாட்டு அணங்குடைச் சிலம்பில்" (அகம்.198:14), "வழைப் பூங்கண்ணி வாய்வாள் அண்டிரன், குன்றம் பாடின கொல்லோ" (புறம்.131:2-3) என்ற அடிகளாலும் அம் மலைப் பொதியிலே என்பதை, "கழல் தொடி ஆஅய் மழை தவழ் பொதியில்" (புறம். 128:5) என்ற அடியாலும் தெளிவாக உணரலாம்.

ஆய் அண்டிரன் காலத்தில் சிறந்திருந்த ஓர் ஊர் ஆய்குடி எனத் தெரிகிறது. அண்டிரன் ஆயர்குடியினன். இவனுடைய குலத்தினராகிய ஆயர்கள் வாழ்ந்த பகுதியாக இது இருந்திருக்கலாம். எனவே ஆயர்குடி என்பது ஆய்குடி என்ற பெயரைப் பெற்றிருக்கலாம்.

"தென் திசை ஆஅய்குடி இன்றாயின்
பிறழ்வது மன்னோ, இம் மலர்தலை உலகே"
(புறம். 132 : 8-9)

**ஆர்க்காடு.**

ஆர்க்காடு என்னும் ஊர் சோழ மன்னன் சேந்தன் தந்தையாகிய அழிசி என்பவனுக்கு உரியது என்று நற்றிணையும் குறுந்தொகையும் கூறுகின்றன. அகப்பொருள் பற்றிக் கூறும் இவ்

இலக்கியங்கள் தலைவியின் நலம் பற்றிக் கூறும் பொழுது ஆர்க்காடு அன்ன நலம் எனப் புகழ்ந்து உரைக்கும் நிலையிலேயே ஆர்க்காடு என்ற ஊரைக் குறித்துக் கூறியுள்ளன.

ஆர்க்காடு கிழார் மகனார் வெள்ளைக் கண்ணத்தனார் என்ற புலவர் பாடிய பாடலொன்று (அகம். 64) சங்க இலக்கியத்தில் உள்ளது. வெள்ளைக் கண்ணத்தனார் என்ற புலவரின் தந்தை ஆர்க்காடு கிழார் என்பவர் ஆர்க்காடு என்ற ஊரினர் எனத் தெரிகிறது.

சோழ மன்னனுக்குரிய ஆத்தியைக் குறிக்கும் 'ஆர்' என்ற மரத்தால் பெயர் பெற்ற ஊர் ஆர்க்காடு என்பது. ஆத்திமரம் நிறைந்திருந்த பகுதி ஆர்க்காடு என்று பெயர் பெற்றது.

ஆர்க்காடு என்ற பெயரே இன்று ஊருக்கும், மாவட்டத்திற்கும் பெயராக வழங்குகிறது. ஆர்க்காடு என்ற பெயருடைய மாவட்டம் வட ஆர்க்காடு மாவட்டம், தென் ஆர்க்காடு மாவட்டம் என இரண்டு பிரிவாக உள்ளது.

சங்க இலக்கியம் குறிக்கும் ஆர்க்காடு என்ற பெயருடைய இவ்வூர் வட ஆர்க்காடு மாவட்டத்தில் பாலாற்றங் கரையில் உள்ளது. இந்த ஆர்க்காடு கருநாடக நவாபுகள் காலத்தில் அவர்களுடைய தலைநகராக இருந்திருக்கிறது.

ஆர்க்காடு என்ற இதனை ஆற்காடு என்று கொண்டு ஆல மரக் காடு என்றும் கருதுகின்றனர். ஆறு காடு அங்கு இருந்தன என்று புராணம் கூற, அது வடமொழியில் ஷடாரண்யம் ஆயிற்று.

"திதலை யெஃகின் சேந்தன் தந்தை
தேங்கமழ் விரிதார் இயல்தேர் அழிசி
வண்டுமூசு நெய்தல் நெல்லிடை மலரும்
அரியலங் கழனி ஆர்க்கா டன்ன" (நற். 190 : 3-6)

"பகுமணி யானைப் பசும்பூட்சோழர்
கொடி நுடங்கு மறுகின் ஆர்க்கா டாங்கண்" (ஷை 227 : 5-6)

நிறைய ஒள்வாள் இளையர் பெருமகன்
அழிசிஆர்க்கா டன்ன இவள்
பழிதீர் மாணலந் தொலைதல் கண்டே (குறுந். 258 : 6-8)

**ஆலங்கானம்.**

ஆலங்கானம் என்ற இவ்வூர்ப்பெயர் மதுரைக் காஞ்சி, அகநானூறு, புறநானூறு ஆகிய சங்க இலக்கியங்களில் இடம் பெற்

றுள்ளது. ஆலங்கானம் என்றும் தலையாலங்கானம் என்றும் குறிக்கப்பெற்றுள்ளது.

ஊர்களின் அமைப்பு கருதி தலை, இடை, கடை என்ற முன் ஒட்டுகளில் ஒன்று ஊர்ப்பெயர்களோடு இணைத்துக் கூறும் முறையையொட்டி ஆலங்கானம் என்ற ஊர்ப்பெயர்களோடு தலை என்ற அடையுடன் தலையாலங்கானம் என வழங்கப் பெற்றுள்ளது.

சங்க இலக்கியங்களில் குறிக்கப்பெற்ற ஆலங்கானம் அல்லது தலையாலங்கானம் (தலையாலங்கானம் என்ற பெயர் தலை யாலங்காடு எனப்பெயர் பெற்றிருந்ததாகத் தேவாரத்தால் (கி. பி. ஏழாம் நூற்றாண்டு) தெரிகிறது. பாண்டியன் நெடுஞ் செழியன் தன்னை இளையன் என எண்ணி இகழ்ந்து தன் மீது படையெடுத்த சேர சோழர், வேளிர் ஐவர் ஆக எழுவரைப் பொருது வென்ற இடம் ஆகும். இப் போரில் சேர சோழர்கள் கொல்லப்பட்டனர். என்றும் தெரிகிறது. பெற்ற வெற்றியின் காரணமாகத் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ் செழியன் எனப்பட்டான். (அகம். 36, 116, 175, 209; புறம். 371, 372.)

பராந்தக வீர நாராயணனின் தளவாய்புரச் செப்பேட்டில் 'ஆலங்கானம்' என்றே குறிக்கப்பெற்றிருப்பதால் கி. பி. ஒன்ப தாம் நூற்றாண்டிலும் சங்ககாலப்பெயர் எவ்வித மாறுபாடு மின்றி வழங்கியதாகத்தெரிகிறது.

பெருங்கதையிலும் ஆலங்கானம் என்னும் ஊர்ப்பெயர் இடம் பெற்றுள்ளது. ஆனால் இது சங்க இலக்கியங்களால் குறிக்கப் பெறும்தமிழ்நாட்டு ஆலங்கானம் அன்று. பெருங்கதையில் இரண்டு இடங்கள் குறிக்கப்பெற்றுள்ளன ஒன்று விபுலகிரியின் பக்கத்தில் மிருகாவதியின் தந்தை தவஞ்செய்து கொண்டிருந்த இடம். மற்றொன்று பூக்கொய்தற்கு வந்த பத்திராபதி என்னும் தெய்வ மகள் யானையின் சேர்க்கையைக் கண்டு மனம் வேறுபட்டுப் பெண் யானையாகப் பிறக்கும்படி குபேரனால் சாபம் பெற்ற இடம். இது விந்த மலையின் பக்கத்தே நருமதையாற்றங் கரையி லுள்ளது.

"காலென்னக் கடிதுராய்
நாடுகெட எரி பரப்பி
ஆலங்கானத்து அஞ்சுவர இறுத்து"

(பத்துப். மதுரைக். 125—127)

...............செரு இறந்து
**ஆலங்கானத்து** அஞ்சுவர இறுத்த
வேல் கெழுதானைச் செழியன் பாசறை
உறைகழி வாளின் மின்னி......" (நற். 387:6-9)

"கொய் சுவல் புரவிக் கொடித்தேர்ச் செழியன்
**ஆலங்கானத்து** அகன்தலை சிவப்ப" (அகம். 36:13-14)

" கால் இயல் நெடுந்தேர்க் கைவண் செழியன்
**ஆலங்கானத்து** அமர் கடந்து உயர்ந்த
வேலினும் பல் ஊழ் மின்னி......" (ஷை 175:10-12)

"எழுவுறழ் திணிதோள் இயல்தேர்ச் செழியன்
நேரா எழுவர் அடிப்படக் கிடந்த
**ஆலங்கானத்து** ஆர்ப்பினும் பெரிதே. (ஷை 209:4-6)

"இமிழ் கடல் வளைஇய ஈண்டு அகன் கிடக்கை
தமிழ்தலை மயங்கிய **தலையாலங் கானத்து**
மன் உயிர்ப் பன்மையும் கூற்றத்து ஒருமையும்
நின்னொடு தூக்கிய வென் வேற் செழிய" (புறம். 19:1-4)

"ஞாலம் நெளிய ஈண்டிய வியன்படை
**ஆலங்கானத்து** அமர் கடந்து அட்ட" (ஷை 23:15-16)

"விபுலமென்னும் வியன்பெருங் குன்றத்து
அருவரை யருகர் ஆய்நலங் கவினிய
**ஆலங்கானத்து** அணியொடு பொலிந்த
ஞாலங் காவல் நஞ்சென நீக்கி"—
(பெருங். இலாவாண அவலந் 55-58)

"பல்வளைப் பணைத்தோள் பத்திராபதி யெனும்
மெல்லியல் தன்னை வேந்தன்விடுக்க அப்
பணியொடு சென்று பனிமலர் பொதுளிய
**ஆலங்கானத்து** ஆற்றயன் மருங்கின்"
(பெருங். நரவாண இயக்கன் 62-65)

**ஆலங்குடி.**

வங்கனார் என்ற சங்கப் புலவர் பெயருடன் இணைத்து ஆலங்குடி வங்கனார் என வழங்கப் பெற்றுள்ளதால் 'ஆலங்குடி' என்ற ஊர்ப்பெயரை நாம் அறிகிறோம்.

தஞ்சாவூர் மாவட்டத்தில் கும்பகோணத்திலிருந்து ஒன்பதாவது மைலில் ஆலங்குடி என்னும் பெயருடன் ஒரு சிற்றூர் உள்ளது.

இதே பெயருடன் ஒன்றற்கு மேற்பட்ட ஊர்கள் இருப்பதாகத் தெரிகிறது. சங்க இலக்கியத்தில் குறிக்கப் பெற்ற ஆலங்குடி எது என்று அறிய இயலவில்லை.

நற்றிணையில் 230, 330, 400 ஆகிய பாடல்களும், குறுந்தொகையில் 8, 45 ஆகிய பாடல்களும், அகநானூற்றில் 306-ஆம் பாடலும் புறநானூற்றில் 319 ஆம் பாடலும் ஆலங்குடி வங்கனார் பாடியவை.

ஒன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் ஆட்சி புரிந்த முதலாம் இராசராசனின் கல்வெட்டிலும் 'ஆலங்குடி' என்ற ஊர்ப்பெயர் காணப்படுகின்றது.

**ஆலத்தூர்.**

ஆலத்தூர் கிழார் பாடியனவாக உள்ள சங்க இலக்கியப் பாடல்கள் மூலம் '**ஆலத்தூர்**' என்ற ஊர்ப்பெயர் நமக்குக் கிடைக்கப் பெற்றுள்ளது. இப்பெயருடன் ஒன்றிற்கு மேற்பட்ட ஊர்கள் இருப்பதாகத் தெரிகிறது.

தென்ஆர்காடு மாவட்டத்தில் மரக்காணம் செல்லும் வழியில் **ஆலத்தூர்** என்ற பெயருடன் ஓர் ஊர் உள்ளது.

குறுந்தொகையில் 112, 350 ஆகிய பாடல்களும், புறநானூற்றில் 34, 36, 69, 225 ஆகிய பாடல்களும் ஆலத்தூர்கிழார் பாடியவை.

**ஆலம்பேரி.**

ஆலம்பேரி சாத்தனார் பாடியனவாக உள்ள சங்க இலக்கியப் பாடல்கள் மூலம் **ஆலம்பேரி** என்ற ஊர்ப்பெயர் நமக்குக் கிடைக்கப் பெற்றுள்ளது.

நற்றிணையில் 152, 255 ஆகிய பாடல்களும், அகநானூற்றில் 47, 81, 143, 175 ஆகிய பாடல்களும் ஆலம்பேரி சாத்தனார் பாடியவை.

**ஆவினன்குடி.**

ஆவிக்கோமானின் குடியினர் வாழ்ந்த ஊர் 'ஆவிகுடி' என வழங்கப்பெற்று, நாளடைவில் ஆவிநன்குடி என ஆகியிருக்க வேண்டும்.

ஆவிக் கோமானுக்குரிய நகர் பொதினி என்று அகநானூற்றுப் பாடல்கள் தெரிவிக்கின்றன. ஆகவே அந்த பொதினி நகர்ப் பகுதியே ஆவினன் குடியாக இருக்க வேண்டும் என்ற கருத்தும் சரியெனத் தோன்றுகிறது.

இப்பொதினியே காலப்போக்கில் 'பழனி' என்று மாறி வழங்கப் பெறுகிறது என்பர்.

இன்றுள்ள பழனி என்னும் தலத்தின் மலையடிவாரத்தில் உள்ள கோயிலே ஆவினன்குடி என்னும் ஊரைச் சேர்ந்த பழைய கோயில் என்றும், மலை மீதுள்ள கோயில் பிற்காலத்தது என்றும் கூறப்படுகிறது.

(பழனித் தல வரலாறு-பழனிதேவஸ்தான வெளியீடு. பக்.14)

சித்தன் வாழ்வு என்றும் ஆவினன்குடி முற்காலத்துப் பெயர் பெற்றிருந்தது எனத் தெரிகிறது. சித்தன் என்பது முருகக் கடவுளின் பெயர்களுள் ஒன்று.

"தாவில் கொள்கை மடந்தையொடு சின்னாள்
ஆவினன்குடி யசைதலு முரியன்"

(பத்துப். திருமுருகு. 175-176)

முருகன் நற்போர் நெடுவேள் ஆவி
அறுகோட்டு யானைப் பொதினி ஆங்கண்"

(அகம். 1:3-4)

முழவு உறழ் திணிதோள் நெடுவேள் ஆவி
பொன்னுடை நெடுநகர்ப் பொதினி அன்ன நின்

(ஷை 61 : 15-16)

**ஆவூர்.**

ஆ என்பது பசுவையும், ஆச்சாமரத்தையும் குறிக்கும் சொல். எனவே விலங்குப்பெயர் அல்லது மரப்பெயர் அடிப்படையில் தோன்றிய ஊராக வேண்டும்.

சங்கப் புலவர்களின் பெயர்களோடு இணைத்துக் கூறப்படுவதால் நாம் அறியும் ஊர்ப் பெயர்களுள் ஆவூரும் ஒன்று.

இதே பெயருடன் ஒன்றற்கு மேற்பட்ட ஊர்கள் உள்ளன.[2] கண்ணனார், காவிதிசள் சாதேவனார், கிழார், மூலங்கிழார், மூலங்கிழார் மகனார் பெருந்தலைச் சாத்தனார் ஆகியோர் இவ்வூரைச் சேர்ந்த புலவர்கள்.

நற்றிணையில் 265ஆம்பாடலும், அகநானூற்றில் 13, 24, 156 159, 202, 224 ஆகிய பாடல்களும், புறநானூற்றில் 38, 40, 166, 177, 178, 196, 261, 301, 322 ஆகிய பாடல்களும் அப் புலவர்கள் பாடியவை.

---

2. கலைக்களஞ்சியம் 1 : 453,

**இடைக்கழிநாடு.**

ஒய்மான் நாட்டு நல்லியக் கோடன் மீது சிறுபாணாற்றுப் படை என்னும் நூலை இடைக்கழிநாட்டு நல்லூர் நத்தத்தனார் பாடியுள்ளார்.

இடைக்கழிநாடு இப்போது எடக்குநாடு என்று வழங்கப் பெறுகிறதுஇடைக்கழிநாடு என்பதன் திரிபே எடக்குநாடுஎன்பது. இந்த இடைக்கழிநாடாகிய எடக்குநாடு செங்கற்பட்டு மாவட்டத்தில் மதுராந்தகம் வட்டத்தில் இருந்தது. இந்த எடக்கு (இடைக் கழி) நாட்டிலே இப்போதும் நல்லூர் என்னும் சிற்றூர் ஒன்று இருக்கிறது. நத்தத்தனார் என்ற புலவர் இந்த இடைக்கழி நாட்டு நல்லூரிலே வாழ்ந்தவராதல் வேண்டும். நல்லியக் கோடனுடைய ஒய்மாநாடு இடைக்கழிநாட்டுக்கு அண்மையில் தெற்குப் பக்கத்தில் இருந்தது.

இடைக்கழி நாடு செய்யூருக்குக் கிழக்கிலும் தென்கிழக்கிலும் தெற்கிலும் கடற்கரையோரத்தில் பரவியுள்ளது. இந் நாட்டின் இடையில் கழிவெளிகள் நீண்டு கிடக்கின்றன. இதுபற்றியே இந் நாடு இடைக்கழிநாடு எனப் பெயர் பெற்றது போலும்.

**இடைக்காடு.**

இவ்வூரைச் சார்ந்தவரான ஒரு சங்கப் புலவர் இடைக் காடனார் எனப் பெற்றார். ஊர் அமைப்பு முறையில் 'இடை' என்னும் அடைமொழியுடன் அமைந்த ஊர்ப்பெயர் **இடைக்காடு.**

தஞ்சாவூர் மாவட்டம் பட்டுக்கோட்டை வட்டத்தில் இடைக் காடு என்று ஓர் ஊர் உள்ளது. இடைக்காடு என்ற ஊர் மலையாளப் பகுதியைச் சார்ந்தது என்ற கருத்தும் உள்ளது.[3]

நற்றிணையில் 142, 221, 316 ஆகிய பாடல்களும், குறுந் தொகையில் 251ஆம் பாடலும், அகநானூற்றில் 139, 194, 274, 284, 304, 374 ஆகிய பாடல்களும், புறநானூற்றில் 42ஆம் பாடலும் இவ்வூர்ப் புலவர் பாடியவை.

**இடைக்குன்றூர்.**

இவ்வூரைச் சேர்ந்த சங்கப்புலவர் இடைக்குன்றூர் கிழார் எனப்பெற்றார்.

---

3. ஷை 1 : 537.

பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ் செழியனை இவர் பாடிய பாடல்கள் 76, 77, 78, 79 புற நானூற்றில் உள்ளன.

**இடையாறு.**

இடையாறு என்னும் இவ்வூர் தென் ஆர்க்காடு மாவட்டத் தில் திருக்கோயிலூர் வட்டத்தில் உள்ளது. இப்பொழுது இடையார் என வழங்கப் பெறுகிறது.

ஊர் அமைப்பால் இடை என்ற அடைமொழியுடன் வழங்கும் ஊர்ப்பெயர்களில் இடையாறு என்பதும் ஒன்று.

கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டைச்சேர்ந்த பராந்தக வீரநாரா யணனின் தளவாய்ப்புரச் செப்பேட்டிலும் 'இடையாறு' என்றே வழங்கி வந்துள்ளது. இதற்கும் பிற்காலத்தில்தான் இடையார் என வழங்க ஆரம்பித்திருக்க வேண்டும்.

"செல்குடி நிறுத்த பெரும்பெயர்க் கரிகால்
வெல்போர்ச் சோழன் இடையாற்று அன்ன
நல் இசை வெறுக்கை தருமார்..." (அகம். 141:22-24)

**இருந்தையூர்.**

இறைவன் அடியார்களுக்குக் காட்சி அளிக்கும் திருக்கோலங் களால் சில ஊர்கள் பெயர் பெற்றுள்ளன.

சென்னைக்கும் அரக்கோணத்திற்கும் இடையில் 'நின்றவூர்' என்னும் ஊர் உள்ளது. அங்கு திருமால் நின்ற கோலத்தில் காட்சி அளிக்கின்றார். அதனால் அவ்வூர் நின்றவூர் எனப் பெயர் பெற்றது,

பாண்டிநாட்டில் வைகைக் கரையில் திருமால் இருந்தருளும் கோலத்தைப் பரிபாடல் கூறுகிறது. இவ்வாறு காட்சியளித்த இடம் 'இருந்தவளம்' எனப்பெற்றது.

சிலப்பதிகாரத்தில் துன்பமாலையில் (அடி, 2-5) மாதரி குரவைக் கூத்து ஆடிய பின்னர் வையைக் கரையிலிருந்த நெடுமாலின் கோவிலுக்கு வழிபடச் சென்றதாகக் கூறப்படுகிறது. 'வையை நெடுமால் ஸ்ரீ இருந்தவளம் உடையார்' என்று அரும்பத உரையாசிரியர் குறித்துள்ளார்.

இருந்தவளம் என்பதன் குறுக்கமே இருந்தையென்பது. பரி பாடலில் இடம்பெற்ற ஊரும் இதுவே. பின்னர் நாளடைவில் இருந்தையூர் ஆகியிருக்க வேண்டும்.

மாதரி வையைக் கரையிலிருந்த நெடுமாலை வழிபடச் சென்றதாகக் கூறப்பட்டுள்ளதால், அந்நெடுமால் கோவில் மதுரைக்கு அண்மையில் இருந்ததாக வேண்டும்.

திருமால் கிடந்த கோலத்தில் காட்சி அளிக்கும் கோயிலாகக் கூடலழகர் கோயில் இன்றைய மதுரையில் இருக்கிறது. மதுரையில் தெற்கு மாசி வீதியும் மேலை மாசி வீதியும் கூடுகின்ற இடத்திற்கு அருகில் கூடல் அழகர் கோயில் இருக்கிறது. ஆகவே அந்தப்பகுதியே பரிபாடலில் கூறப்பெற்ற இருந்தையூர் எனக் கருத வேண்டியுள்ளது. இன்று இவ்வூர்ப்பெயர் மறைந்து, தற்கால மதுரையில் ஒரு பகுதியாகவே திகழ்கிறது.

இருந்தையூரில் கொற்றன் என்ற சங்ககாலப் புலவர் ஒருவர் இருந்துள்ளார். அவர் இருந்தையூர்க் கொற்றன் எனப்பெற்றார். குறுந்தொகை 335—ஆம் பாடல் அவர் பாடியது.

தென் ஆர்காடு மாவட்டம் திருக்கோவலூர் வட்டத்திலும் இன்று இருந்தை என்று ஓர் ஊர் உள்ளது.

''மருந்தாடும் தீம்நீர் மலிதுறைமேய
இருந்தையூர் அமர்ந்த செல்வ". (பரி. திரட்டு 1:4-5)

''ஆயர் முதுமக ளாடிய சாயலாள்
பூவும் புகையும் புனைசாந்துங் கண்ணியும்
நீடுநீர் வையை நெடுமா லடியேத்தத்
தூவித் துறைபடியப் போயினள்''—(சிலப். 18:2-5)

**இருப்பை.**

நற்றிணை, ஐங்குறு நூறு ஆகிய சங்க இலக்கியங்கள் மூலம் நாம் அறியும் ஊர்பெயர்களுள். ஒன்று இருப்பை என்பது. இலுப்பை மரங்கள் அடர்ந்த பகுதியில் அமைந்த குடியிருப்பு ஊராகி இருப்பை எனப் பெயர் பெற்றிருக்கும்.

அகப்பொருள் பற்றிக் கூறும் அந்த இலக்கியங்களில் தலைவியின் நலத்திற்கு உவமையாகவே இந்த ஊர்ப்பெயர் இடம் பெற்றுள்ளது. விராஅன் என்ற வள்ளலுக்குரியது இருப்பை எனத்தெரிகிறது.

''தெவ்வர்த் தேய்த்த செவ்வேல் வயவன்
மலிபுனல் வாயில் இருப்பை அன்ன, என்
ஒலி பல் கூந்தல் நலம் பெறப் புனைந்த.''—(நற். 260:6-8)

''விண்டு அன்ன வெண்ணெற் போர்வின்
கைவண் விராஅன், இருப்பை அன்ன
இவள் அணங் குற்றனை போறி''. (ஐங். 58:1-3)

**இலவந்திகைப்பள்ளி.**

பாண்டியன் நன்மாறன் இங்கே இலவந்திகைப் பள்ளியில் இறந்ததாகத் தெரிகிறது. பாண்டியனுக்குரியதாகவும், பாண்டி நாட்டதாகவும் இவ்வூர் இருந்திருக்கவேண்டும் எனக் கருத இடம் உள்ளது. இலவந்திகை என்ற சொல் வாவிசூழ்ந்த பொழிலைக் குறிக்கும். பள்ளி நகரமாக அமைய பொழில் அமைந்த நகரமெனப் பெயர் பெற்றதெனக் கொள்ளலாம்.

பாண்டியன் இலவந்திகைப்பள்ளித் துஞ்சிய நன்மாறனைப் புறநானூற்றில் 55, 56, 57, 196, 198 ஆகிய பாடல்களில் புலவர் சிலர் பாடியுள்ளனர்.

**ஈரந்தை.**

தோயன் மாறன் என்ற வள்ளலுக்குரியது ஈரந்தை எனத் தெரிகிறது. கோனாட்டு எறிச்சலூர் மாடலன் மதுரைக் குமரனார் இவனைப் பாடியுள்ளார்.

ஈரம் என்ற சொல் நீர்ப்பற்று என்னும் பொருளுடையது. நீர்ப்பற்று அமைந்த பகுதியில் உள்ள ஊர் இப்பெயர் பெற்றிருக்கலாம்.

ஈழத்தலரி என்பது அலரி வகையினுள் ஒன்று. இச்செடிப் பெயரோடு தொடர்புடையதாக இவ்வூர்ப் பெயர் அமைந்ததோ எனவும் ஆய்ந்து பார்க்கலாம்.

''ஈரந்தையோனே பாண்பசிப் பகைஞன்'' (புறம் 180:7)

**உகாய்க்குடி.**

சங்ககாலப் புலவர் ஒருவர் இவ்வூரினர் உகாய்க்குடிகிழார் எனப் பெற்றார். குறுந்தொகையில் 63ஆம் பாடல் உகாய்க்குடி கிழார் பாடியது.

உகா என்ற சொல் ஓமை, உவா மரங்களைக் குறிக்கும். இவ்வகை மரங்கள் சங்க இலக்கியத்தில் பல இடங்களில் குறிக்கப் பட்டுள்ளன இவ்வகை மரங்கள் நிறைந்த பகுதியே 'உகாய்க்குடி' எனப் பெயர் பெற்றிருக்கலாம்.

**உம்பற்காடு.**

இளங்கண்ணனார் என்ற சங்ககாலப் புலவர் உம்பற்காடு என்னும் ஊரினர் எனத் தெரிகிறது. ஆகவே அவர் உம்பற்காட்டு இளங்கண்ணனார் எனப் பெற்றார்.

இமயவரம்பன் தம்பி பல்யானைச் செல்கெழுகுட்டுவன் உம்பற்காட்டில் தன் கோல் நிறீஇ ஆண்டார்.

கடல் பிறக்கோட்டிய செங்குட்டுவனைப் பதிற்றுப்பத்தில் ஐந்தாம் பத்தால் பாடிய பரணர் உம்பற்காட்டு வாரியையும், அவன் மகன் குட்டுவன் சேரலையும் பரிசாகப் பெற்றார்.

உம்பற்காடு சேர நாட்டுப் பகுதியாகும். உம்பல் என்ற சொல் யானையைக் குறிக்கும். எனவே யானைகள் மிகுந்த காடு என்ற பொருளில் இவ்வூர் பெயர் பெற்றிருக்கலாம்.

அகநானூற்றில் 264ஆம் பாடல் உம்பற்காட்டு இளங்கண்ணனார் பாடியது.

"இமைய வரம்பன் தம்பி அமைவர
உம்பற்காட்டைத் தன்கோல் நிறீஇ" (பதிற். மூன்றாம் பத்தின் பதிகம் 1-2)

**உரோடகம்.**

கந்தரத்தனார் என்ற சங்ககாலப் புலவர் உரோடகம் என்ற ஊரினர். எனவே உரோடகத்துக் கந்தரத்தனார் எனப்பெற்றார். அகநானூற்றில் ஒரோடகத்துக் கந்தரத்தனார் என உரோடகம் என்ற பெயர் ஒரோடகம் எனக் குறிக்கப் பெற்றுள்ளது.

செங்கற்பட்டு மாவட்டத்தில் உரைகடம் என்ற பெயருடன் மூன்று ஊர்கள் உள்ளன என்றும், அவற்றுள் ஒன்றன் திரிபாக இப்பெயர் இருக்கலாம் என்று கருதும் கருத்து[4] ஆய்ந்து முடிபு காண வேண்டிய ஒன்று.

நற்றிணையில் 306ஆம் பாடலும், குறுந்தொகையில் 155ஆம் பாடலும் அகநானூற்றில் 69, 95, 191 ஆகிய பாடல்களும் உரோடகத்துக் கந்தரத்தனார் பாடியவை.

---

4. கலைக்களஞ்சியம்

**உறந்தை.**

உறந்தை என்னும் இவ்வூர்ப் பெயர் உறையூர் என்றும், கோழி என்றும் வழங்கப்பெற்றுள்ளது.'கோழி உறையூர்' என்பது பிங்கலம்.

உறப்பு என்ற சொல் செறிவு என்று பொருள்படுவதைக் காணும் பொழுது, மக்கள் நெருங்கி வாழ்ந்த இடமாக இருந்திருக்கலாம் எனத் தோன்றுகிறது.

''ஊர் எனப்படுவது உறையூர்'' எனப் பாராட்டப் பெற்ற இவ்வூர் இன்று திருச்சிராப்பள்ளி நகரின் ஒரு பகுதியாக இருக்கிறது.

பண்டைக் காலத்தில் சிறந்து விளங்கிய நகரங்களும் துறைமுகங்களும் ஆற்றையடுத்தே உண்டாயின. சோழ நாட்டின் பண்டைய தலைநகரமாய உறையூர் காவிரியாற்றின் கரையில் அமைந்திருந்தது.

அலெக்சாந்திரியா நாட்டு வணிகர் ஒருவர் முதல் நூற்றுண்டில் எழுதிய நூலின் மூலம், சோழநாடு கடற்கரைநாடு, உள்நாடு என இரு நாடுகளாக இருந்தது எனவும், கடற்கரை நாட்டைக் காவிரிப்பூம்பட்டினத்தைத் தலைநகராகக் கொண்டு மற்றொரு தாயத்தாரும் ஆண்டு வந்தனர் எனவும் தெரிய வருகின்றது.

உறந்தை நீதிக்குப் பெயர் போனது. சோழர்களின் ஆட்சிக் காலத்தில் மெல்லிய பஞ்சாடைகளின் வாணிகத்திற்குப் பெயர் பெற்றிருந்தது. இன்றைக்கும் உறந்தை (உறையூர்) கைத்தறி ஆடைகளுக்குச் சிறந்த இடமாக உள்ளது.

உறந்தை என்ற பெயரே முதலில் அமைந்தது. பின்னரே உறையூர் என்று வழங்கினர் என்பதனை இலக்கியச் சான்றுகள் காட்டுகின்றன. சங்க இலக்கியத்திலெல்லாம் 'உறந்தை என்ற ஆட்சியே மிக்கிருக்க, சிலப்பதிகாரத்தில் ஓரிடத்தில் 'உறையூர்' என்று இளங்கோ ஆண்டிருப்பதும், இவ்வூரைச் சேர்ந்த புலவர்கள் எல்லோருடைய பெயர்களும் 'உறையூர்' என்றே இணைத்துக் கூறப் பெற்றிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

கி. பி. பதின்மூன்றாம் நூற்றாண்டைச் சேர்ந்த மாறவர்மன் சுந்தரபாண்டியனின் கல்வெட்டில் 'உறந்தை' என்றே கூறப் பட்டுள்ளது.

இவ்வூருக்குக் கோழி என்றும் ஒரு பெயர் வழங்கியுள்ளது. ஒரு கோழி யானையைப் போரில் வென்ற இடமாதலின் இப் பெயர் பெற்றது எனச் சிலப்பதிகாரம் கூறுகிறது. இந்நகர் பார்வைக்குச் சிறையும் கழுத்துமாக அமைந்திருப்பதால் சிறையையுடைய கோழி எனப் பெயர் பெற்றது என்ற கருத்தும் உள்ளது.

பறவையின் பெயர்கள் சில ஊர்ப் பெயர்களில் அமைந் திருந்தமைக்குக் 'கோழி' என்ற இந்த ஊர்ப்பெயர் ஒரு சான்று.

வாழ்வும் தாழ்வும் நாட்டிற்கும் நகரத்திற்கும் ஏற்படும் போலும். பண்டைய நாளில் சிறந்திருந்த சில ஊர்கள் இந்நாளில் சிறப்பிழந்து இருக்கின்றன. சங்க காலத்தில் சோழநாட்டின் தலைநகராகச் சிறந்து விளங்கியது உறந்தை. அக் காலத்தில் சிராப்பள்ளி ஒரு சிற்றூராக அதன் அருகில் அமைந்திருந்தது. ஆனால் நாளடைவில் உறந்தையின் சிறப்புக் குறைய சிராப் பள்ளியின் சிறப்பு ஓங்கியது. இன்று தமிழ்நாட்டிலேயே தலை சிறந்த நகரமாக விளங்குகிறதுசிராப்பள்ளி மாநகர் நிலையை யும் பெறுகின்றது. பழம்பெருமை வாய்ந்த உறந்தை சிறப்பிழந்து உள்ளது.

சமணர்கள் மந்திரவலிமையினாலோ, தவ வலிமையினாலோ கல்மழையும் மண்மழையும் பொழியச் செய்து உறையூரை அழித் தார்கள் என்று தக்கயாகப் பரணி கூறுகிறது.

''மலை கொண் டெழுவார் கடல் கொண் டெழுவார்
மிசைவந்து சிலா வருடஞ் சொரிவார்
நிலை கொண் டெழுவார் கொலை கொண் டெழுவார்
இவரிற் பிறர் யாவர் நிசாசரரே''

இந்தத் தக்கயாகப்பரணி—கோயிலைப் பாடியது. 70-ஆம் தாழிசைக்குப் பழைய உரைகாரர், ''உறையூரில் கல் வருஷமும் மண்வருஷமும்(வருஷம்—மழை)பெய்வித்து அதனைக் கெடுத்துத் துரோகஞ் செய்தார் இவர் (சமணர்) அதற்குப்பின்பு இராசதானி திருச்சிராப் பள்ளியாய்த்து'' என்று கூறுகிறார்,

முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியனல் (கி.பி. 1216-1238, உறையூர் அழிக்கப் பட்டது என்பது வரலாறு.

கதுவாய்ச்சாத்தனார் (நற். 370), சல்லியன்குமரன் (குறுந். 309), சிறுகந்தன் (குறுந். 257), பல் காயனார் (குறுந். 374) முதுகண்ணன் சாத்தன் (குறுந். 133), புறம். 27, 29, 30, 325.) முதுகூத்தன் (குறுந். 353, 371, அகம். 137, 329 புறம். 331.) முது

கொற்றன் (குறுந். 221, 390) இளம்பொன் வாணிகனார் (புறம். 264.) ஏணிச் சேரி முடமோசியார் (புறம். 13, 127—135, 241,374, 375) மருத்துவன் தாமோதரனார் (அகம். 133, 257, புறம். 60, 170, 321) ஆகிய சங்க காலப் புலவர்கள் உறையூரைச் சேர்ந்த வர்கள்.

"நாடா நல் இசை, நல் தேர்ச் செம்பியன்
ஓடாப் பூட்கை உறந்தையும் வறிதே" (பத்துப். சிறுபாண், 82—83)

"பிறங்கு நிலை மாடத்து உறந்தை போக்கி" (பத்துப். பட்டின 285)

"மறம் கெழு சோழர் உறந்தை அவையத்து
அறம் கெட அறியாதாங்கு" (நற். 400;7-8)

"வளம் கெழு சோழர் உறந்தைப் பெருந்துறை
நுண்மணல் அறல் வார்ந்தன்ன" (குறுந். 116: 2-3)

"கறங்கு இசை விழவின் உறந்தைக் குணது" (அகம். 4: 14)

"மழை வளம் தரூஉம் மாவண் தித்தன்
பிண்ட நெல்லின் உறந்தை ஆங்கண்" (ஷை. 6:4-5)

"ஆரங் கண்ணி அடுபோர்ச் சோழர்
அறம் கெழு நல் அவை உறந்தை அன்ன" (ஷை. 93: 4-5)

"வென்று எறி முரசின் விறற் போர்ச் சோழர்
இன் கடுங் கள்ளின் உறந்தை ஆங்கண்" (ஷை. 135:5-6)

"தித்தன் வெளியன் உறந்தை நாள் அவைப்
பாடு இன் தெண் கிணைப் பாடு கேட்டு அஞ்சி" (ஷை. 226; 14-15)

"புனல் பொரு புதவின் உறந்தை எய்தினும்" (ஷை. 237: 14)

"கெடல் அரு நல்இசை உறந்தை அன்ன
நிதியுடை நல்நகர்ப் புதுவது புனைந்து" (ஷை. 369:14-15)

"காவிரிப் படப்பை உறந்தை அன்ன
பொன்னுடை நெடுநகர்" (ஷை. 385;4-5)

"மறம்கெழுசோழர் உறந்தைப் அவையத்து
அறம் நின்றுநிலையிற்று ஆகலின்" (புறம். 39;8-9)

"அறம் துஞ்சு உறந்தை பொருநனை" (ஷை. 58:9)

"உறந்தை அன்ன உரைசால் நன்கலம்" (ஷி. 352:110)

"செல்லா நல்இசை உறந்தைக் குணாது
நெடுங்கை வேண்மான் அருங்கடிப் பிடவூர்"
(ஷி. 395,19-20)

"தமிழ் வரம்பறுத்த தண்புன னன்னாட்டு
மாடமதுரையும் பீடா ருறந்தையும்
கலிகெழுவஞ்சியு மொலிபுனற் புகாரும்
அரைசு வீற்றிருந்த உரைசால் சிறப்பின்
மன்னன் மாரன் மகிழ்துணையாகிய
இன்னிள வேனில் வந்தனன்" (சிலப். 8:2-7)

"அறியாமையினின் றிழி பிறப்புற்றோர்
உறையூர் நொச்சி யொருபுடை யொதுங்கிப்
பன்னிருமதியம் படர்நோயு ழந்தபின்
முன்னையுருவம் பெறுக வீங்கிவரென" (ஷி. 10:241-244)

"முறஞ்செவி வாரணமுன் சமமுருக்கிய
புறஞ்சிறை வாரணம்" (ஷி. 10. 247-248)

"பூவினுள் பிறந்தோன் நாவினுள் பிறந்த
நான்மறைக் கேள்வி நவில்குரல் எடுப்ப
ஏம இன்துயில் எழுதல் அல்லதை
வாழிய வஞ்சியும் கோழியும் போலக்
கோழியின் எழாது, எம் பேரூர் துயிலே"(பரி. திரட்டு 8;7-11)

"யாணர் நல்நாட்டுள்ளும், பாணர்
பைதல் சுற்றத்துப் பசிப்பகை ஆகி,
கோழியோனே கோப்பெருஞ்சோழன்
பொத்துஇல் நண்பின் பொத்தியொடு கெழீஇ
வாய்ஆர் பெருநகை வைகலும் நக்கே" (புறம். 212:6-10)

**உறையூர்.**

பார்க்க உறந்தை.

**ஊணூர்.**

சங்கப் பாடல்களிலிருந்து நாம் அறியும் பெயர்களுள் ஊணூர் என்ற ஊர்ப்பெயரும் ஒன்று.

ஊணூர் தழும்பன் என்ற ஒரு வள்ளலுக்குரியதாக இருந்தது. (போரில் பெற்ற தழும்பால் பெயர் பெற்றவன் தழும்பன்). இவ்வூர் கடிமதில் வரைப்பினையுடையது. பழைய பல்வேறு நெற்கூடுகளையுடையது.

தழும்பனுக்கு உரிய ஊர் ஆதலின் தழும்பனூர் என்றும் ஊணூர் கூறப்பெற்றது.

ஊணூர் என்பது மருங்கூர்ப்பட்டினத்தின் அருகில் உள்ளது எனத் தெரிகிறது.

"இரும்பாண் ஒக்கல் தலைவன்! பெரும்புண்
ஏஎர் தழும்பன் ஊணூர் ஆங்கண்
பிச்சைசூழ் பெருங்களிறு போல, எம்
அட்டில் ஓலை தொட்டனை நின்மே" (நற்.300:9-12)

"பழம்பல் நெல்லின் ஊணூராங்கண்" (அகம்.220:13)

"பிடிமிதி வழுதுணைப் பெரும்பெயர்த் தழும்பன்
கடிமதில் வரைப்பின் ஊணூர் உம்பர்" (ஷை. 227:17-18)

"வாய் மொழித் தழும்பன் ஊணூரன்ன"
குவளை உண்கண் இவளை......" (புறம்:348:5-6)

('வாய்மொழித் தழும்பனூர் அன்ன'-என்ற பாட வேறுபாடு உள்ளது)

**எக்கூர்.**

மாசாத்தனார் என்ற சங்க காலப்புலவர் (புறம்.248) ஒக்கூர் மாசாத்தனார் என்றும், எக்கூர் என்ற பிரதிபேதமும் உண்டு என்றும் (உ.வே.சா. ஏழாம்பதிப்பு. 1971) தெரிகிறது. ஆளுடையார் கோயிலுக்குத் தெற்கே நான்கு மைல் தூரத்தில் இப்பெயருள்ள ஓரூர் இருக்கிறது.

**எயில்.**

எயில் என்பது கோட்டை எனப் பொருள்படும் சொல்லாயினும் ஊர்ப்பெயராகவும் அமைந்திருந்தமை சங்க இலக்கியங்கள் மூலம் நாம் அறியும் செய்தியாகும்.

பாண்டி நாட்டு ஊர்களுள் ஒன்று எயில் என்னும் பெயருடையது. பூதப்பாண்டியனின் நண்பனாகிய ஆந்தை என்ற சிற்றரசன் இவ்வூரை ஆண்டதாகத் தெரிகிறது. இவ்வூர்ப் பெயர் தவிர, பிறவும் எயில் என்ற பெயர் பெற்றிருந்தமை அறிய முடிகின்றது.

தொண்டை நாட்டில் இருபத்து நான்கு கோட்டங்கள் இருந்தன. அவற்றுள் ஒன்று எயில் கோட்டம் என்பது. தொண்டை நாட்டின் தலைநகரமாகிய காஞ்சிமாநகரம் அக்கோட்டத்தில்

அமைந்திருந்தது. அதனால் காஞ்சி எயிற்பதி[5] எனப் பெயர் பெற்றிருந்தது.

செஞ்சியின் அருகில் எய்யல் என்னும் பெயருடைய ஊர் ஒன்று உள்ளது. எயில் என்ற ஊர்ப்பெயரே எய்யல் என ஆகி இருக்கலாம் என்று எண்ண இடம் உள்ளது.

சோழநாட்டில் திருவாரூருக்கு அருகே பேரெயில் என்னும் பெயருடைய ஒரு கோட்டை இருந்தது. அக் கோட்டையைச் சுற்றியிருந்த சிற்றூர் பேரெயிலூர் என்று பெயர்பெற்றிருந்தது. இப்பொழுது அப்பெயர் பேரையூர் எனச் சிதைந்து வழங்குகிறது.

"பொய்யா யாணர் மையற் கோமான்
மாவனும், மன் எயில் ஆந்தையும், உரைசால்
அந்துவஞ் சாத்தனும், ஆதன் அழிசியும்
வெஞ்சின இயக்கனும், உளப்படப் பிறரும்
கண் போல் நண்பின் கேளிரொடு கலந்த" (புறம். 71 : 11–15)

எயிற்பட்டினம்:—(மதிலொடு பெயரிய பட்டினம்)

மதிலொடு பெயரிய பட்டினம் என்று ஓர் ஊர்ப்பெயர் சங்க இலக்கியத்தில் இடம்பெற்று இருக்கிறது. உரை வகுத்த நச்சினார்க்கினியர் அப் பட்டினத்தை 'எயிற்பட்டினம்' என்று குறித்துள்ளார். இது ஓய்மானாட்டு ஊர்களில் ஒன்று. ஓய்மானாட்டுத் துறைமுக நகரமும் ஆகும்.

சிறுபாணாற்றுப் படைத்தலைவன் நல்லியக்கோடன், "எயிற் பட்டினநாடன்" என்றே குறிக்கப் பெற்றுள்ளான். ஆகவே' மதிலொடு பெயரிய பட்டினம்-என்று சங்க இலக்கியத்தில் குறிக்கப் பெற்றுள்ள ஊர் 'எயிற்பட்டினம்' என்பது தெளிவு.

தென் ஆர்க்காடு மாவட்டத்தில் உள்ள இன்றைய மரக்காணமே எயிற்பட்டினம் என்ற கருத்து ஏற்றுக் கொள்ளத்தக்கதாக இல்லை மரக்காணம் என்பது சோழர் காலத்தில் (கி. பி. 900-1200) மனக்கானம் எனப் பெயர் பெற்றிருந்ததாகத் தெரிகிறது. மணற்காடு எனப் பொருள்படும் மணற்காணம் என்பதன் திரிபே மனக்கானம். அது நாளடைவில் விஜயநகரவேந்தர் ஆட்சிக் காலத்தில் மரக்காணம் ஆயிற்று என்றும் தெரிகிறது.

---

5, ஊரும் பேரும் ரா.பி. சேதுப்பிள்ளை. பக். 73,

ஒய்மானாட்டுக் கடற்கரைப்பகுதியில் பட்டினம்' என்னும் ஒரு நகரம் இருந்தது. அதன் பெயரால் கடற்கரைப்பகுதி பட்டினநாடு எனப் பெற்றது. ஒய்மானாட்டு உள் நாடுகளுள் பட்டினநாடு என்பது ஒன்று. மரக்காணம் அப் பட்டின நாட்டைச் சேர்ந்தது. 'முதலாம் இராசராசன் காலத்தில் (கி. பி. 985-1014) மரக்காணம் ஒய்மானாட்டுப் பட்டின நாட்டுத் தேவதான மனக்கானம் எனப் பெற்றது. மனக்கானம் என்ற கண்டராதித்த நல்லூர் என்றும் வழங்கப்பெற்றிருப்பதால் மரக்காணம் கண்டராதித்தன் காலத்தில் அவனது பெயரைப் பெற்றிருந்தது எனக் கூறலாம்.[6]

ஆகவே மரக்காணம் வேறு, எயிற்பட்டினம் வேறு.

பெரிபுலிஸ், தாலமி போன்றோர் குறித்துள்ள சோப் பட்டிமை என்பது இந்த மதிலால் பெயர்பெற்ற மதிற்பட்டினமாகிய எயிற்பட்டினமே,

"பாடல் சான்ற நெய்த னெடுவழி
மணிநீர் வைப்பு மதிலொடு பெயரிய
பனிநீர்ப் படுவிறற் பட்டினம் படரின்"
(பத்துப் சிறுபாண்—151-153)

"இம்மென் முழவின் எயிற்பட்டின நாடன்
செம்மல் சிலைபொருத தோள்"
(சிறுபாண். தனிப்பாடல்—1:34)

**எருக்காட்டூர்.**

எருக்கட்டு என்றால் உரத்திற்காகக் கிடை வைத்தல் என்று பொருள். கிடைவைத்த கொல்லை எனப்பொருள்படும். எருக்கட்டு என்ற சொல் நாளடைவில் எருக்காட்டு எனத்திரிந்து அப்பகுதியில் அமைந்த ஊரைக் குறித்திருக்கலாம்.

அல்லது எருக்கம் காடுகள் நிறைந்த ஊர்ப்பகுதியும் அப் பெயர் பெற்றிருக்கலாம்.

தாயங் கண்ணனார் என்ற சங்ககாலப் புலவர் இவ்வூரினர். ஆகவே எருக்காட்டூர்த் தாயங் கண்ணனார் எனப் பெயர் பெற்றார்.

---

6. பத்துப்பாட்டு ஆராய்ச்சி. டாக்டர் மா. இராசமாணிக்கனார் பக். 151

தஞ்சை மாவட்டத்தில் திருவாரூர்க்குத் தென்மேற்கில் சுமார் மூன்று மைல் தொலைவில் உள்ளது.

அகநானூற்றில் 149, 319, 357 ஆகிய பாடல்களும் புறநானூற்றில் 397—ஆம் பாடலும் எருக்காட்டூர்த் தாயங் கண்ணனார் பாடியவை.

**எருமை வெளி.**

இவ்வூரினரான ஒரு சங்ககாலப் புலவர் எருமை வெளியனார் என ஊர்ப்பெயரால் பெயர் பெற்றார்.

வெளி என்னும் கூறு சில ஊர்ப்பெயர்களில் அமைந்திருப்பதைக் காணலாம். நாகப்பட்டினத்துக்கு அருகே வடக்கு வெளி என்னும் பெயருடைய ஊர் ஒன்று உண்டு.

சங்ககாலத்துப் புலவர்களில் இருவர் வெளி என்னும் பெயரையுடைய ஊரினராகத் தெரிகிறது. எருமைவெளியனார் என்பது ஒருவர்பெயர். வீரைவெளியனார் என்பது மற்றொருவர் பெயர். அவ்விருவரும் முறையே எருமைவெளியிலும் வீரைவெளியிலும் பிறந்தவர் என்பது வெளிப்படை.[7]

எருமை வெளியனார் மகனார் கடவனார் அகநானூற்றில் 72ஆம் பாடலையும், எருமை வெளியனார் அகநானூற்றில் 73ஆம் பாடலையும், புறநானூற்றில் 273, 303 ஆகிய பாடல்களைவும் பாடியுள்ளனர்.

**எறிச்சலூர்.**

மாடலன் மதுரைக் குமரனார் என்ற சங்ககாலப்புலவர் இவ்வூரினர். ஆகவே எறிச்சலூர் மாடலன் மதுரைக் குமரனார் எனப் பெயர் பெற்றார்.

எறிச்சலூர் சோழநாட்டு உள் நாடுகளுள் ஒன்றான கோனாட்டைச் சேர்ந்தது. அறந்தாங்கிக்கும் குளகாப் பட்டிக்கும் மத்தியிலுள்ளது.

புறநானூற்றில் 54, 61, 167, 180, 197, 394 ஆகிய பாடல்கள் கோனாட்டு எறிச்சலூர் மாடலன் மதுரைக் குமரனார் பாடியவை.

**ஏணிச்சேரி :** யவனர் சேரி என்ற தொடர் நாளடைவில் ஏணிச்சேரி எனத் திரிந்து அமைந்திருக்கலாம். தலைநகராகிய

7. ஊரும்பேரும்—ரா. பி. சேதுப்பிள்ளை பக். 72.

உறையூரை யடுத்து யவனர்கள் தங்கி இருந்த பகுதியாகக் கருதலாம்.

முடமோசியார் என்ற சங்ககாலப் புலவர் இவ்வூரினர். ஆகவே ஏணிச்சேரி முடமோசியார் எனப் பெற்றார்.

ஏணிச்சேரி உறையூரை ஒட்டி இருந்ததாக வேண்டும். மதுரை மாநகரின் புறஞ்சேரி போல உறையூர் ஏணிச்சேரி அமைந்திருந்ததாகக் கருத வேண்டும். உறையூரின் ஏணிச்சேரி என்று கூறப் பெற்றமையால் இது தெளிவாகிறது.

புறநானூற்றில் 13, 127-135, 241, 374, 375 ஆகிய பாடல்கள் உறையூர் ஏணிச்சேரி முடமோகியார் பாடியவை.

**ஏரகம்.**

ஏரகம் அல்லது திரு ஏரகம் என்பது முருகனது படை வீடுகளில் ஒன்று.

வீடு என்னும் பொருள்படும் அகம் என்ற சொல் சில ஊர்ப் பெயர்களில் அமைந்திருக்கிறது. முதலில் வீட்டைக் குறித்த அகம் என்ற சொல் நாளடைவில் வீடுகளையுடைய ஊரைக் குறித்தது போலும்.

சோழ நாட்டில் தஞ்சையையடுத்த சுவாமி மலையே ஏரகம் என்பர். ஆனால் ஆராய்ச்சியாளர்கள் கருத்து அது தவறு என்பது. திருமுருகாற்றுப்படையில் ஏரகத்தைப் பற்றிக் கூறப் படும் குறிப்புகளின் அடிப்படையிலும், நச்சினார்க்கினியர் உரையைக் கொண்டும் ஏரகம் என்பது சுவாமி மலையின் வேறாகிய ஓர் ஊர் எனக் கருத இடமளிக்கிறது.

ஏரகத்து முருகன் கோயிலில் நாற்பத்தெட்டு ஆண்டு பிரம சரிய விரதம் காத்த வேதியர் மந்திரங்கள் கூற, ஈரஉடையணிந்த அருச்சகர் முருகனுக்குரிய ஆறெழுத்து மந்திரத்தைக் கூறி அருச்சனை செய்தனர் என்று திருமுருகாற்றுப்படை கூறுகிறது.

தென் கன்னட மாவட்டத்தில் புத்தூர் வட்டத்தில் கிழக்கே அமைந்துள்ள மேற்கு மலைத்தொடரின் மேற்கு பக்கத்து மலைப் பகுதியைச் சேர்ந்த துளு நாட்டில் குமாரக்ஷேத்திரம் அல்லது சுப்பிரமண்ய க்ஷேத்திரம் என்ற ஒரு சிற்றூர் உள்ளது. இங்கே உள்ள கோயிலில் முருகனுக்கு நடைபெறும் பூசைகளின்போது அருச்சகர் நீராடி ஈர ஆடையுடன் இருந்தே அருச்சனை புரிதல் வழக்கம். அவரும் அவருடைய உதவியாளரும் நீராடிய பின்பே ஈர ஆடையுடன் கருவறையுள் நுழைவர். உதவியாளர் மந்திரங்களைக் கூற அருச்சகர் அருச்சனை புரிவர். (ஸ்ரீசுப்பிர மணிய க்ஷேத்திரம். ஆங்கில நூல் பக். 5-8)

ஏரகத்து முருகன் கோயிலைப் பற்றித் திருமுருகாற்றுப் படை கூறும் செய்தியையும், 'ஏரகம் மலை நாட்டகத்தொரு திருப்பதி' எனக் கூறும் நச்சினார்க்கினியரின் கூற்றையும் கொண்டு, துளுநாட்டைச் சேர்ந்த குமார ஷேத்திரமே திருமுருகாற்றுப்படை குறிக்கும் ஏரகம் என்று கருத வேண்டும் என்பது ஆராய்ச்சியாளர் கருத்து.[8]

மந்திரம் ஓதுவோரையும் அருச்சகரையும் தனித்தனியாகப் பெற்ற வேழிமலை (நாகர் கோயிலுக்கு அண்மையிலுள்ள வேள் மலை) யை ஏரகம் எனக் கூறுவோரும் உண்டு.

இன்று கோயிலில் நடை பெறும் நடை முறையை வைத்துக் கொண்டு அன்றைய நிகழ்ச்சியோடு தொடர்பு படுத்தி முடிவு செய்ய இயலுமா என்பதை ஆராய்ந்து முடிவு காண வேண்டும். ஈர ஆடையுடன் ஒருவர் மந்திரம் கூற, மற்றொருவர் அருச்சனை புரிதல் சாதாரண நடை முறையாக இருக்கலாகாதா? ஓதுவார் பாடல் ஓத, அருச்சகர் அருச்சிக்கும் வழக்கும் இன்றும் பலமுருகன் கோயில்களில் நடை முறையில் இருப்பதைக் காணலாம்.

ஏர் என்றால் அழகு. அகம் என்றால் இடம். அழகிய சோலை கள் நிறைந்த பகுதி என்ற பொருளில் இப்பெயர் 'ஏரகம்' என அமைந்திருக்கவும் வாய்ப்புண்டு போலும். அறுபடை வீடுகளுள் பிற எல்லாம் மலைப்பகுதிகளாய் அமைந்தமை போன்று இதுவும் சிறந்த மலைப்பகுதி என்ற நிலையில் அழகிய சோலைகள் நிறைந்த இடமாக அமைய வாய்ப்புண்டு. அழகுணர்ச்சி மிக்க தமிழர்கள் அழகிய ஊர்ப் பகுதியை ஏரகம் எனப்பெயரிட்டழைத் தனர் எனக் கருதுவது பொருத்தமாகத் தோன்றுகிறது.

வடமொழியில் ஏரகம் என்றால் கோரைப்புல் என்று பொருளாம். கோரைப்புல் மிகுந்த பகுதி ஏரகம் என்று பெயர் பெற்றிருக்கலாம் என்றும் கருதலாம். இக்கருத்து ஆய்தற்குரியது. காஞ்சி மரங்கள் நிறைந்த இடம் காஞ்சி என்றும், காரைச் செடி கள் நிறைந்த இடம் காரைக் காடு என்றும் வழங்கும் நிலையும் ஒப்பு நோக்கத்தக்கது.

"இரு மூன்று எய்திய இயல்பினின் வழாஅது,
இருவர்ச் சுட்டிய பல்வேறு தொல்குடி,
அறு நான்கு இரட்டி இளமை நல் யாண்டு

---

8. பத்துப் பாட்டு ஆராய்ச்சி- டாக்டர் மா. இராச மாணிக்கனார், சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்த் துறை வெளியீடு 1970. முதற் பதிப்பு)

ஆறினில் கழிப்பிய, அறன் நவில் கொள்கை,
மூன்று வகைக் குறித்த முத்தீச் செல்வத்து
இரு பிறப்பாளர், பொழுது அறிந்து நுவல,
ஒன்பது கொண்ட மூன்று புரி நுண்ஞாண்,
புலராக் காழகம் புலர, உடீஇ,
உச்சிக் கூப்பிய கையினர், தற்புகழ்ந்து,
ஆறு எழுத்து அடக்கிய அருமறைக் கேள்வி
நா இயல் மருங்கில் நவிலப் பாடி,
விரை உறு நறுமலர் ஏந்தி—பெரிது உவந்து,
ஏரகத்து உறைதலும் உரியன்''- (பத்துப். திருமுருகு. 177-189.)

''சீர் கெழு செந்திலும் செங்கோடும் வெண் குன்றும்
ஏரகமும் நீங்கா இறைவன் கை வேலன்றே" (சிலப். 24: 8: 1)

**ஏழில்.**

நன்னன் என்பவன் ஏழில் குன்றத்திலிருந்து ஆட்சி புரிந்த தாகச் சங்க கால இலக்கியங்கள் கூறுகின்றன. இப்பொழுது மலையாள நாட்டில் ஏழுமல (Elumala) என்று வழங்கப் பெறும் இடமே அந்த ஏழிற் குன்றம்.

தற்காலத்திய வட மலபாரைச் சேர்ந்தஏழில் மலை, கொண் கானம், பூழிநாடு ஆகியவை அடங்கிய பகுதியே நன்னன் ஆட்சிக் குட்பட்டிருந்த நாட்டின் பகுதியாகக் கருதப் பெறுகிறது.

''ஏழில்-ஒருமலை. இது நன்னன் என்பவனுக்குரியது. ஏழிலை பாலையென்னும் மரமும் ஆம் என்பர் உ. வே. சாமிநாதையர்,[9]

இக்குன்றத்தையடுத்த காடுகளில்இயற்கையாகவே ஏழிலைப் பாலை என்ற மரம் வளர்வதைத்தான் நேரில் சென்ற பொழுது பார்த்ததாகவும், ஆகவே அம்மரத்தின் பெயரால் 'ஏழில்' என அக் குன்று சங்க காலத்தில் பெயர் பெற்றது எனக் கருதுவது சரியே என்றும் கூறப்படுகிறது. காஞ்சி என்பது காஞ்சி என்ற மரப்பெயராலும் வஞ்சி என்பது வஞ்சிஎன்ற மரப்பெயராலும்,

---

9. குறுந்தொகை. 138-ஆம் பாடல் விளக்கவுரை. நான்காம் பதிப்பு. 1962)

கொற்கை என்பது கொற்கு என்ற மரப்பெயராலும் பெயர் பெற்றமையை ஒப்புமையாகக் கூறப்படுகிறது.[10]

ஏழில் மரம் கேரளச் சடங்குகளில் இன்றும் மிகமுக்கிய இடம் பெற்றுள்ளது. கிராம மக்களின் தெய்வ வழிபாட்டில் இம்மரம் இடம் பெற்றுள்ளது. பகவதி தேவதையின் மரம் என்று கருதப் படுகிறது. பகவதி கோயில் வேண்டுதலை நிறைவேற்றிக் கொள்ள அம் மரத்தில் பெரிய ஆணிகள் அடிக்கின்றனர். இவ்வா றெல்லாம் அப்பகுதி மக்களோடு மிகநெருங்கிய தொடர்புடைய மரம் ஏழில்.

யாழ் போன்று தோற்றம் பெற்றதால் ஏழில் எனப் பெயர் பெற்றது என்ற அவ்வை துரைசாமி அவர்களின் கருத்துப் பொருத்தமற்றது என்றும், இசையொலியைக் குறிக்கும் எழால் என்ற சொல்லோடு இயைபுபடுத்திக் கூறினாரோ என்றும் P. L. சாமி கூறுகிறார். தான் நேரில் சென்று பார்த்த பொழுது யாழ் வடிவுத் தோற்றமே இல்லை என்பதை அறிந்ததாகவும் கூறு கிறார்.

எனவே ஏழில் என்பது மரப்பெயரால் பெற்ற ஊர்ப்பெய ரென்று தெரிகிறது.

"பொன்படு கொண்கான நன்னன் நல்நாட்டு
ஏழிற்குன்றம் பெறினும், பொருள்வயின்
யாரோ பிரிகிற்பவரே" (நற் 391 : 6-8)

"எம்மில் அயலது ஏழில் உம்பர்" (குறுந். 138 : 2)

"ஏழில் நெடுவரைப் பாழிச் சிலம்பில்
களி மயிற் கலாவத்தன்ன தோளே". (அகம். 152 : 13-14)

"இன்கனி நறவின் இயல்தேர் நன்னன்
விண்பொரு நெடுவரைக் கவாஅன்
பொன்படு மருங்கின் மலைஇறந் தோரே" (ஷை 173 : 16-18)

"நுணங்கு நுண் பனுவற்புலவன் பாடிய
இனமழை தவழும் ஏழிற் குன்றத்து" (ஷை. 345: 6-7)

"அருங் குறும்பு எறிந்த பெருங்கல வெறுக்கை
சூழாது சுரக்கும் நன்னன் நல்நாட்டு,
ஏழிற்குன்றத்துக் கவாஅன்..." (ஷை- 349 : 7-9)

10. Nannan of north Molabar. P.L. Samy. Tamil civilization (quarterly research Journal of the Tamil university, Thanjavur Vol, No 1.)

**ஏறை.**

குறமகள் இளவெயினி என்ற சங்க காலப் புலவர் ஏறைக் கோனைப் பாடினார் (புறம்.157) என்ற குறிப்பின் மூலம் நமக்குக் கிடைக்கும் ஊர்ப்பெயர் ஏறை என்பது. இவ்வூரைச் சேர்ந்த வள்ளல் ஏறைக்கோன் எனப்பெற்றார்.

**ஐயூர்.**

ஐ என்றால் அழகு. எனவே அழகிய ஊர் என்ற பொருளில் அமைந்து ஐயூர் எனப் பெயர் பெற்றிருக்கலாம். தலைவன் என்ற பொருளும் இருப்பதால் தலைவனின் ஊர் என்ற பொருளிலும் அமைந்திருக்கலாம். ஐயூர் என்பது சோழ நாட்டகத்ததாகிய ஓரூர் எனத் தெரிகிறது.

புறநானூற்றில் 21-ஆம் பாடலைப் பாடிய மூலங்கிழார் என்ற புலவரும், நற்றிணையில் 206, 334 ஆகிய பாடல்களையும், குறுந்தொகையில் 123, 206, 322 ஆகிய பாடல்களையும், அகநானூற்றில் 216-ஆம் பாடலையும், புறநானூற்றில் 51, 228, 314, 399 ஆகிய பாடல்களையும் பாடிய முடவனார் என்ற புலவரும் ஐயூரைச் சேர்ந்தவர்கள்.

**ஒக்கூர்.**

ஒக்கூர் என்பது பாண்டி நாட்டில் திருக்கோட்டியூர் பக்கத்தே உள்ள ஓரூர்.

எக்கூர் என்பதே இவ்வூர் என்ற கருத்தும் உள்ளது.

அகநானூற்றில் 14-ஆம் பாடலையும், புறநானூற்றில் 248-ஆம் பாடலையும் பாடிய மாசாத்தனார் என்ற புலவரும், குறுந்தொகையில் 126, 139, 186, 220, 275 ஆகிய பாடல்களையும் அகநானூற்றில் 324, 384 ஆகிய பாடல்களையும், புறநானூற்றில் 279-ஆம் பாடலையும் பாடிய மாசாத்தியார் என்ற புலவரும் ஒக்கூரைச் சேர்ந்தவர்கள்.

**ஒல்லையூர்.**

ஒல்லை என்ற சொல் பழமை என்ற பொருளையுணர்த்தும். ஊரின் பழமை குறித்து ஒல்லையூர் எனப் பெயர் பெற்றிருக்கலாம்.

புதுக்கோட்டை மாவட்டத்தில் ஒலிமங்கலம் என்று அழைக்கப்படும் ஊரே ஒல்லையூர். ஒலியமங்கலம் என்ற ஊரே இது என்று தெரிகிறது.

திருமெய்யத்துக்குப் பக்கத்தில் இப் பெயரோடு ஓரூர் உள்ளது.

"மன்பதைக்காக்கும் நீள் குடிச்சிறந்த
தென்புலங்காவலின் ஒரீஇப்பிறர்
வன்புலங் காவலின் மாறியான் பிறக்கும்" (புறம்.71)

என்ற பாடலடிகள் ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியன் தென் புலங்காவல் புரிந்த மன்னன், பாண்டிய நாட்டவன் என்பதனை உணர்த்தும். எனவே ஒல்லையூர் பாண்டி நாட்டுப் பகுதி என்ப தனையும் குறிக்கிறது.

ஒல்லையூர் நாடும் இருந்திருக்கிறது. பாண்டி நாட்டின் வட வெல்லையில் ஒல்லையூர் நாடு ஒரு சிறு பகுதி. இச்சிறு பகுதியைச் சோழர் பறித்துக் கொண்டனர். பாண்டிய மன்னர்களால் ஒல்லை யூரை மீட்க முடியவில்லை பலமுறை சோழர் மேல்படை கொண்டு தாக்கினர். வெற்றி கிட்டவில்லை.

பூதப்பாண்டியன் பட்டம் பெற்று நாட்டை ஆளத் தொடங் கியதும் முன்னோரைத் தொடர்ந்து ஒல்லையூரை மீட்கப் போரிட்டான்; வென்றான். ஆகவே ஒல்லையூர் தந்த (வென்ற) பூதப்பாண்டியன் ஆனான்.

பூதப்பாண்டி என்ற ஊர் பூதப் பாண்டியன் என்னும் மன் னன் பெயரால் வழங்குகிறது. மன்னன் பெயரால் ஊர் பெயர் பெறும் வழக்கிற்கு இது ஒரு சான்று. இவ்வூர் நாஞ்சில் நாட்டுத் தென் திருவிதாங்கூர் பகுதியிலுள்ளது.

ஒல்லையூர் கிழான் மகன் பெருஞ்சாத்தான் என்னும் வள்ளல் இவ்வூரைச் சேர்ந்தவன்.

அகநானூற்றில் 25-ஆம்பாடலும், புறநானூற்றில் 71 ஆம் பாடலும் ஒல்லையூர் தந்த பூதப் பாண்டியன் இயற்றியவை.

ஒல்லையூர் கிழான் மகன் பெருஞ்சாத்தனைக் குடவாயிற் கீரத்தனார் புற நானூற்றில் 242ஆம் பாடலால் பாடியுள்ளார்.

"ஆண்மை தோன்ற ஆடவர்க் கடந்த
வல் வேற் சாத்தன் மாய்ந்த பின்றை
முல்லையும் பூத்தியோ, ஒல்லையூர் நாட்டே"
(புறம் 242 : 4-6)

**ஒய்மாநாடு.**

'உறுபுலி துப்பின் ஓவியர் பெருமகன்! (பத்துப். சிறுபாண்-122) என்று நல்லியக் கோடன் என்ற வள்ளல் கூறப்

பெற்றுள்ளான். ஓவியர் குடியிற் பிறந்த பெருமகன் ஆகியஓவியர் பெருமகன் என்ற பெயர் 'ஒய்மான்' என மருவி, அவன் ஆண்ட நாடு ஒய்மாநாடு எனப் பெயர் பெற்றது போலும்.

ஒய்மாநாடு திண்டிவனத்திற்கு வடக்கிலுள்ள மா விலங்கையை வட வெல்லையாகவும், கடலைத் தென் எல்லையாகவும், சூணாம்பேடு என்னும் ஊரையடுத்த வில்லிப் பாக்கத்தைக் கிழக்கு எல்லையாகவும் கொண்டது. மேற்கில் ஏறத்தாழ விழுப்புரம் வரையில் பரவியிருந்ததாகவும் தெரிகிறது. இந்நான்கு எல்லைகளுக்குள்ளேயே எயிற்பட்டினம் இருந்தது. இந் நாட்டைச் சேர்ந்தனவாக இலக்கியங்கள் கூறும் வேலூர், ஆமூர் என்னும் ஊர்கள் இன்னும் இருக்கின்றன.

புறநானூற்றில் 176-ஆம் பாடலால் புறத்திணை நன்னாகனார் ஒய்மான் நல்லியக் கோடனைப் பாடியுள்ளார்.

> "உறுபுலிதுப்பின், ஓவியர் பெருமகன்
> களிற்றுத் தழும்பு இருந்த கழல் தயங்கு திருந்துஅடி
> பிடிக்கணம் சிதறும் பெயல் மழைத்தடக்கை
> பல்இயக் கோடியர் புரவலன் பேர்இசை
> நல்லியக் கோடனை......" (பத்துப். சிறுபாண். 122-126)

**கச்சி**

கச்சி என்ற பெயரையே சங்க இலக்கியங்கள் குறிக்கின்றன. பின்னர்தான் காஞ்சி என்ற பெயரையேக் காண்கின்றோம். கச்சி என்ற பெயர் (சீந்தில் என்பது பொருள்) தாவரப் பெயரே. காஞ்சி என்ற பிற்காலப் பெயரும் தாவரப் பெயர் அடிப் படையில் அமைந்ததே. எனவே கச்சி, காஞ்சி, என்ற இரண்டு பெயருமே தாவரப் பெயர் அடிப்படையில் அமைந்தனவே எனக் கூறுவதில் தவறொன்றுமில்லை.

செங்கற்பட்டு மாவட்டத்தின் பழைய நகரம் கச்சி. கச்சி என்ற நகரமும் காஞ்சி என்ற நகரமும் ஒன்று என்றும், இரண்டும் வெவ்வேறான தனித்தனி இரு நகரங்கள் என்றும் இருவேறு வகையான கருத்து உள்ளது.

இன்றுள்ள காஞ்சி நகரத்திற்குக் கிழக்கிலுள்ள நிலப் பரப்பிலேயே சங்க காலக் காஞ்சி மாநகர் அமைந்திருந்தது என்றும் கருதுகின்றனர்.

கச்சி மாநகரம் ஏகாம்பரேசுவரர் கோயில் கச்சபேசர் கோயில், உலகளந்த பெருமாள் கோயில் ஆகிய கோயில்களுக்குக்

கிழக்கிலும், யதோத்தகாரி கோயிலுள்ள பகுதிக்கும் திருக்காலி மேட்டுக்கும் வடக்கிலும் அமைந்து இருந்திருக்க வேண்டும் என்று கருதுவது பொருத்தமாகும்.

கச்சி மாநகரம் தாமரை மலர் போன்ற அமைப்புடைய தாக இருந்தது. அதனைச் சுற்றிலும் அகழி இருந்தது. அகழி யைச் சுற்றிக் காவற்காடு இருந்தது கச்சியில் சோலைகள் இருந்தன.

கச்சிப்பேடு என்பது கச்சியின் புறநகர் என்று பொருள்படும். பெரும்பாணாற்றுப்படை பாடப்பெற்ற சங்க காலத்திலும் இக் கச்சிப்பேடு இருந்தது என்பதைக் கச்சிப்பேட்டு நன்னாகையார், கச்சிப் பேட்டு இளந்தச்சனார், கச்சிப் பேட்டுப் பெருந்தச்சனார் போன்ற வழக்காறு கொண்டு நன்கு அறியலாம்.

திருவெஃகாக் கோயிலுள்ள இடம் முதற் பராந்தகன் காலத் தில் (கி.பி. 907-953) கச்சிப்பேடு என வழங்கப் பெற்றிருக்கிறது. பேடு என்பது நகரத்தின் வெளிப்பகுதியை (புறநகர்ப் பகுதி)க் குறிப்பதாகும். பேடு என்னும் இச்சொல்லே காலப்போக்கில் பேட்டை என மாறியதுபோலும். சிறிய காஞ்சீபுரத்துக்குக் கிழக்கில் நாசரத்துப் பேட்டை, ஐயன் பேட்டை, நாயக்கன் பேட்டை என்பனவும் பெரிய காஞ்சீபுரத்துக்கு வடக்கிலும் வட மேற்கிலும் பஞ்சுப்பேட்டை, ஒலிமுகமது பேட்டை என்பனவும் ஒப்புநோக்கத்தக்கன. (சென்னையைச் சுற்றி சிந்தாதிரிப் பேட்டை, முத்தியாலு பேட்டை, சௌகார் பேட்டை முதலிய பேட்டைகளும் இவை போன்றனவே)

இன்றைய காஞ்சிபுரம் பெரிய காஞ்சிபுரம், பிள்ளையார் பாளையம் அட்க்ஸன் (Hudgson) பேட்டை, சிறிய காஞ்சிபுரம் எனப் பலப் பிரிவுகளாகப் பிரிந்துள்ளது. அட்க்ஸன் பேட்டைப் பகுதியிலேதான் திருவெஃகா அமைந்துள்ளது. பெரிய காஞ்சிபுரத் திலுள்ள ஏகாம்பரேசுவரர் கோயில், முதலாம் ஆதித்த சோழன் காலத்தில் (கி.பி. 880-907) கச்சிப்பேட்டில் அமைந்திருந்தது. பெரிய காஞ்சிபுரத்துப் புத்தேரி தெருவில் உள்ள கச்சபேசுவரர் கோயில் கச்சிப்பேட்டை சேர்ந்தது என்று முதலாம் இராசராசன் (கி.பி. 985-1012) காலத்துக் கல்வெட்டு ஒன்று தெரிவிக்கின்றது. அதற்குச் சிறிது வடகிழக்கில் உள்ள உலகளந்த பெருமாள் கோயில் (ஊரகம்)என்பதும் கச்சிப்பேட்டைச்சேர்ந்தது என்பதும் உத்தம சோழன் (கி.பி. 969—985) கல்வெட்டில் குறிக்கப்பெற் றுள்ளது. முதற் பராந்தகன் (கி.பி. 907—955) காலத்தில் கயிலாசநாதர் கோயில் கச்சிப்பேட்டு பெரிய திருக்கற்றளி எனப்

பெற்றது. முதலாம் இராசராசன் மகனான முதலாம் இராசேந்திரன் (கி.பி. 1012—1044) வெளியிட்ட திருவாலங்காட்டுச் செப்பேடுகளில் இக் கச்சிப்பேடு "எயிற்கோட்டத்து எயில் நாட்டு நகரம் கச்சிப்பேடு" என்று குறிக்கப் பெற்றுள்ளது. உத்தம சோழன் காலத்தில் சோழர் அரண்மனை கச்சிப்பேட்டிலேதான் இருந்திருக்கிறது.

சிறிய காஞ்சிபுரம் சோழர்காலத்தில் அத்தியூர் என வழங்கப் பெற்றது. அது எயிற்கோட்டத்து எயில்நாட்டு அத்தியூர் என வழங்கப் பெற்றது. அது அக் காலத்தில் காஞ்சிநகரத்தின் பகுதியன்று எனவும் தெரிகிறது.

மணிமேகலைக் காலத்தில் தொண்டை நாட்டின் தலைநகரமாகக் காஞ்சிநகர் விளங்கியது. தேவலோகந்தான் மண்ணுலகில் வந்து கிடந்ததோ என்று மதிக்கும்படியாக இருந்தது காஞ்சி" என்று மணிமேகலை புகழ்கிறது. காஞ்சி என்பது பொன். காஞ்சி நகர்—பொன்னகர்—இப்பெயர் காஞ்சியின் அழகையும் வளத்தையும் குறிக்கிறது.

காஞ்சியைத் தலைநகராகக் கொண்டு சோழமன்னர்கள் ஆண்டு வந்தனர். அந்த நகரத்தில் தவம்புரிவோர், சமயவாதிகள் பலர் இருந்தனர். இதனால் 'தொண்டைநாடு சான்றோர் உடைத்து' என்னும் பெருமை பெற்றது. பதினெட்டு மொழிகளைப் பேசும் பலநாட்டு மக்களும் அந்நகரத்தில் இருந்தனர். அந்நகரின் நடுவில் புத்தர் கோயில் இருந்தது. நகரின் தென்மேற்கில் ஒரு பூஞ்சோலை, குளம், சோலையில் புத்தபீடிகை இவை அமைக்கப்பட்டிருந்தன. இச்செய்திகள் மணிமேகலை நூல் தருவன.[11]

காஞ்சி என்ற ஊர்ப்பெயர் மரப்பெயரால் பெயர் பெற்றது. பிற்காலத்தில் புரம் என்ற பின் ஒட்டுடன் இணைந்து காஞ்சிபுரமாயிற்று. இன்று மக்கள் பேச்சு வழக்கில் கஞ்சி என்றும், கஞ்சிபுரம் என்றும் வழங்குகின்றனர்.

கி. பி. பன்னிரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்தவனாகிய இரண்டாம் இராசாதிராசனின் கல்வெட்டு ஒன்றில் காஞ்சி என்றே இவ்வூர் குறிக்கப்பெற்றுள்ளது.

---

11. சிலம்பும் மேகலையும் வித்துவான் எம். நாரயண வேலுப்பிள்ளை. பக். 111

சங்ககாலத்தில் கச்சி என வழங்கப்பெற்று, காலப் போக்கில் காஞ்சி என்ற பெயர் நிலைத்ததோ என்று எண்ணவும் இடமளிக்கிறது.

நற்றிணையில் 123ஆம் பாடல் காஞ்சிப் புலவனார் பாடியது. 144 மற்றும் 213 ஆம்பாடல்கள் கச்சிப் பேட்டுப் பெருஞ்சாத்தனார் பாடியவை. 266—ஆம் பாடல் கச்சிப் பேட்டு இளந்தத்தனார் பாடியது.

குறுந்தொகையில் 30, 172, 180, 192, 197, 287 ஆகிய பாடல்கள் கச்சிப்பேட்டு நன்னாகையார் பாடியவை. 213 மற்றும் 216 ஆகிய பாடல்கள் கச்சிப்பேட்டுக் காஞ்சிக் கொற்றன் பாடியவை.

"அடங்காத் தானையோடு உடன்று மேல்வந்த
ஒன்னாத் தெவ்வர் உலைவிடத்து ஆர்த்து,
கச்சியோனே, கைவண் தோன்றல்" (பத்துப். பெரும்பாண். 148-420)

"பொன்னெயிற் காஞ்சி நகர்க்கவினழிய" (மணிமேகலை கந்திற்பாவை வருவதுரைத்த காதை (418.)

"கச்சி முற்றத்து நின்னுயிர்கடை கொள" (ஷை 174)

"ஆங்கவன் தானு நின்னறத்திற் கேதுப்
பூங்கொடி கச்சி மாநகராதவின்" (ஷை கச்சிமாநகர் புக்க காதை 151-152)

"பொன்னெயிற் காஞ்சி நாடுகவினழிந்து" (ஷை ஷை 156)

**கச்சிப்பேடு.**

பார்க்க—கச்சி

**கடம்பனூர்:** கடம்பன் என்னும் சொல் ஒருபழைய குடியையும், முருடன் என்ற பொருளையும் குறிக்கும் சொல். முரட்டுத் தன்மை வாய்ந்த ஒரு பழைய குடியைச் சார்ந்தவனின் ஊர் என்ற பொருளில் இவ்வூரின்பெயர் அமைந்ததோ என்றுஎண்ணத் தோன்றுகிறது. சாண்டில்யன் என்ற சங்ககாலப் புலவர் இவ்வூரினர்.

ஆகவே கடம்பனூர்ச் சாண்டில்யன் எனப் பெயர் பெற்றார்.

குறுந்தொகை 307 ஆம்பாடல் கடம்பனூர்ச் சாண்டில்யன் பாடியது.

**கடம்பின் பெருவாயில்.**

கடம்பு என்ற மரவகை நிறைந்த பகுதியாய் இருந்து இப்பெயர் பெற்றிருக்கலாம் என்று எண்ணவாய்ப்பு இருக்கிறது.

பதிற்றுப்பத்தில் நான்காம் பத்தின் பதிகத்தில் கடம்பின் பெருவாயில் என்ற ஓர் ஊர்ப் பெயர் குறிக்கப் பெற்றுள்ளது. சேரமன்னன் நார்முடிச்சேரல் என்பவன் இவ்வூரில் நன்னனை வென்று, அவன் காவல் மரமாகிய வாகையைத் தடிந்து வெற்றி கொண்டான் என்பது செய்தி.

கடம்பர்களின் நாட்டின் நகர் கடம்பின் பெருவாயில் போலும்.

நன்னன் பாழியில் நிறுத்தியிருந்த சேனையுடன் போர் புரிந்தான் என்று யூகிக்க முடிகிறது. பாழி நன்னனின் ஏழில் குன்றத்தைச் சார்ந்தது. அதையடுத்தே கடம்பின் பெருவாயில் என்ற ஊர் இருந்திருக்கலாம் என்ற எண்ணமும் தோன்றுகிறது.

> "பூழி நாட்டைப் படையெடுத்துத் தழீஇ,
> உருள்பூங் கடம்பின் பெருவாயில் நன்னனை
> நிலைச் செருவின் ஆற்றலை அறுத்து, அவன்
> பொன்படு வாகை முழுமுதல் தடிந்து"
>
> (பதிற். நான்காம்பத்து. பதிகம் 6-9.)

**கடியலூர்.**

உருத்திரங்கண்ணனார் என்ற சங்க காலப் புலவர் இவ்வூரினர். ஆகவே கடியலூர் உருத்திரங்கண்ணனார் எனப் பெற்றார்.

கடியலூர் பாண்டி நாட்டிலுள்ள ஓர் ஊர். திருநெல்வேலி மாவட்டத்திலுள்ளது.

குறுந்தொகையில் 352-ஆம் பாடலும், அகநானூற்றில் 167-ஆம் பாடலும் கடியலூர் உருத்திரங்கண்ணனார் பாடியவை.

**கண்டீரம்.**

கண்டீரம் என்ற சொல் சதுரக்கள்ளி என்ற பொருளையுடையது. இது மலைப்பகுதியில் காணும் தாவர வகை. இவ்வகைத் தாவரம் நிறைந்த பகுதி என்னும் பொருளில் கண்டீரம் என இவ்வூர் பெயர் பெற்றிருக்க வாய்ப்பு உண்டு.

பெருநள்ளி என்ற வள்ளல் கண்டீரம் என்ற ஊரின் தலைவன். எனவே கண்டீரக் கோப் பெருநள்ளி எனப் பெற்றான். இவனை வன்பரணர் பாடிய பாடல்கள் சங்க இலக்கியத்தில் இடம் பெற்றுள்ளன.

கடையெழு வள்ளல்களில் ஒருவனாகிய கண்டீரக்கோப் பெருநள்ளி தோட்டி என்னும் மலைக்கும் அதைச் சார்ந்த மலை

நாட்டுக்கும் தலைவன் எனத் தெரிவதால் கண்டீரம் என்பது தோட்டி மலைப்பகுதியைச் சார்ந்ததாக இருக்குமோ என்று எண்ணத் தோன்றுகிறது.

புறநானூற்றில் 148 முதல் 151 வரையுள்ள பாடல்கள் வன்பரணர் கண்டீரக்கோப் பெருநள்ளியைப் பாடியவை.

"இரும்பு புனைந்து இயற்றாப் பெரும்பெயர்த் தோட்டி
அம்மலை காக்கும் அணி நெடுங்குன்றின்,
பளிங்கு வகுத்தன்ன தீம் நீர்
நளிமலை நாடன் நள்ளிஅவன் எனவே (புறம். 150:24-28)

**கயத்தூர்.**

கயத்தூர் என்பது நீர்நிலை காரணமாக உண்டாகிய பெயர். கயம் என்ற சொல் குளம் என்னும் நீர்நிலையைக் குறிக்கும்

கிழான் என்ற சங்க காலப் புலவர் இவ்வூரினர். ஆகவே கயத்தூர் கிழான் எனப் பெயர் பெற்றார்.

குறுந்தொகை 354-ஆம் பாடல் இவர் பாடியது. கயத்தூர் சோழ நாட்டிலுள்ளது.

**கரும்பனூர்.**

கரும்பு என்ற தாவரப் பெயருக்கும் இவ்வூர்ப் பெயர்க்கும் உள்ள தொடர்பு ஆய்ந்தால் ஏதாவது தோன்றலாம்.

கரும்பனூர் கிழான் என்ற சங்க கால வள்ளல் வேங்கட நாட்டைச் சார்ந்தவன் என்று நன்னாகனார் கூறுவதால் கரும்பனூர் என்பது வேங்கட மலையைச் சார்ந்த நாட்டைச் சார்ந்தது என்று எண்ண இடமளிக்கிறது.

புறநானூற்றில் 381 மற்றும் 384 ஆகிய இரண்டு பாடல்களும் கரும்பனூர் கிழானை நன்னாகனார் பாடியவை.

"சிறுநனி, ஒருவழிப் படர்க என்றோனே, எந்தை,
ஒலிவெள் அருவி வேங்கடநாடன்
உறுவரும் சிறுவரும் ஊழ்மாறு உய்க்கும்
அறத்துறை அம்பியின் மான, மறப்புஇன்று,
இருங்கோள் ஈராப் பூட்கை,
கரும்பனூரன் காதல் மகனே." (புறம். 381: 21-26)

**கருவூர்.**

மன்னனுக்கு எல்லாவகையிலும் கருவாக (முக்கியமாக) அமைந்த ஊர் எனப் பொருள் படும்படி அமைந்த ஊராகக் கருத இடமுண்டு.

தமிழ் நாட்டில் பண்டை நாளில் சிறந்து விளங்கிய நகரங்கள் பலவற்றுள் கருவூரும் ஒன்று. தற்காலத்தில் கரூர் என வழங்கப் பெறுகிறது. சங்க இலக்கியப் பாடல்கள் கருவூரின் பெருமையை எடுத்தியம்புகின்றன. அந்நகரின் செழிப்பையும், பண்டைப் பெருமையையும் விளக்குகின்றன.

ஆன்பொருநை என்னும் ஆம்பிராவதி ஆற்றின் வடகரையில் அமைந்துள்ள கருவூர் பண்டைச் சோழமன்னர் முடிபுனைந்து கொண்ட ஐந்து நகரங்களுள் ஒன்று என்பர். இருப்பினும் சேரனின் தலைநகரே கருவூர்.

ஓதஞானி, கதப்பிள்ளை, கிழார், கீரன், எயிற்றியனார், சேரமான்சாத்தன், பவுத்திரன், கண்ணம்பாளனார், கண்ணம் புல்லனார், கலிங்கத்தார், நன்மார்பன், பூதஞ்சாத்தனார், பெருஞ் சதுக்கப் பூதநாதனார் ஆகிய புலமை சான்றோர் இவ்வூரினர்.

நற்றிணையில் 343-ஆம் பாடலும், குறுந்தொகையில் 64, 265, 380 ஆகிய பாடல்களும், அகநானூற்றில் 309-ஆம் பாடலும், புறநானூற்றில் 380-ஆம் பாடலும், 168-ஆம் பாடலும் கருவூர்க் கதப்பிள்ளைச் சாத்தனார் அல்லது கருவூர்க் கதப் பிள்ளைப் பாடியவை.

நற்றிணையில் 281, 312 ஆகியபாடல்கள் கருவூர்க் கீரன் எயிற்றியனார் பாடியவை.

குறுந்தொகையில் 71-ஆம் பாடல் கருவூர் ஓதஞானிபாடியது. 170-ஆம் பாடல் கருவூர் கிழார் பாடியது. 268-ஆம் பாடல் கருவூர்ச் சேரமான் சாத்தன் பாடியது. 162-ஆம் பாடல் கருவூர்ப் பவுத்திரன் பாடியது.

அகநானூற்றில் 180, 263 ஆகிய பாடல்கள் கருவூர்க்கண்ணம் பாளனார் பாடியது. 63-ஆம் பாடல் கருவூர்க் கண்ணம் புல்லனார் பாடியது. 183-ஆம் பாடல் கருவூர்க் கலிங்கத்தார் பாடியது. 277-ஆம் பாடல் கருவூர் நன்மார்பன் பாடியது. 50-ஆம் பாடல் கருவூர்ப் பூதஞ்சாத்தனார் பாடியது.

புறநானூற்றில் 219-ஆம் பாடல் கருவூர்ப் பெருஞ் சதுக்கப் பூதனார்பாடியது.

"கடும் பகட்டியானை நெடுந்தேர்க் கோதை
திருமா வியனகர்க் கருவூர்முன்றுறை" (அகம். 98:20-21)

"தந்தை தம்மூராங்கண்
தெண்கிணை கறங்கச் சென்றாண் டட்டனனே"
(புறம். 78:11-12)

(தந்தை தம்மூர் என்றது தாம் தோற்றிச் செய்த நகரமே யன்றி உறையூரும், கருவூரும் முதலாகிய ஊர்களை—என்பது உரை.)

**கழாஅர்.**

கழாஅர் என்னும் ஊர் மத்தி என்னும் மன்னனுக்குரியது. நிலவளம் நீர்வளம் மிக்கது என்று சங்க இலக்கியங்கள் கூறுகின்றன.

கீரன் எயிற்றி என்றும் கீரன் எயிற்றியன் என்றும் வழங்கப் பெற்ற சங்க காலப்புலவர் இவ்வூரினர். ஆகவே கழார்க்கீரன் எயிற்றி என்றோ கழார்க்கீரன் எயிற்றியன் என்றோ பெயர் பெற்றார்.

குறுந்தொகையில் 35, 261, 330 ஆகிய பாடல்களும், அகநானூற்றில் 163, 217, 235, 294 ஆகிய பாடல்களும் இப்புலவர் பாடியவை.

"மாசுஇல் மரத்த பலி உண் காக்கை
வளிபொருநெடுஞ்சினை தளியொடுதூங்கி,
வெல் போர்ச் சோழர் **கழாஅர்க்** கொள்ளும்
நல் வகை மிகுபலிக் கொடையொடு உகுக்கும்
அடங்காச் சொன்றி, அம்பல் யாணர்
விடக்குடைப் பெருஞ்சோறு, உள்ளுவன இருப்ப,"
(நற். 281:1-6)

"நறுவடி மாஅத்து விளைந்து உகுதீம்பழம்
நெடு நீர்ப் பொய்கைத் துடுமென விழூஉம்,
கைவண் மத்தி, **கழாஅர்** அன்ன" (ஐங். 61:1-3)

**கழுமலம்.**

கழுமலம் என்னும் பெயருடைய ஒரூர் சேரமன்னன் குட்டுவன் என்பவனுக்குரியது என்று சங்க இலக்கியம் கூறுகிறது.

பெரும்பூட் சென்னி என்ற மன்னனின் வரலாற்றோடு இக் கழுமலம் என்ற ஊர் தொடர்புடையது என்றும் கூறுகிறது.

சேரனுக்குரிய கழுமலம் என்னும் ஊரை முற்றி, அதன் கண்ணிருந்த கணையன் என்னும் தலைமைப் படைத்தலைவனுட் பட அவ்வூரைக் கைப்பற்றித் தன் நாட்டோடு கூட்டியவன் பெரும்பூட்சென்னி என்னும் சோழமன்னன்.

பழையன் சோழ மன்னனுடைய படைத்தலைவன். இவன் நன்னன் முதலிய ஆறு படைத்தலைவர்களும் தத்தம் படையோடு கூடியிருந்த பாசறையைப் படை கொண்டு தாக்கிப் பெரும் பாலோரைக் கொன்று வீழ்த்திப் பின்னர் அப் பகைவர் படைக் கலனால் விழுப்புண் பட்டு மாய்ந்தனன். இக் களம் கண்டு பெரும் பூட்சென்னி என்னும் சோழ மன்னன் வெகுண்டு எழுந்து கழுமலம் என்னும் ஊரைத்தாக்கி ஆங்கிருந்த கணையன் என்னும் சேரமன்னனுடைய படைத் தலைவர்க்குந் தலைவ னாகிய மறவனையும் அக்கழுமலம் என்னும் ஊரையும் கைப் பற்றினன் என்பது வரலாறு.

சோழ வளநாட்டில் திருக்கழுமல வளநாடு என்று ஒன்று இருந்ததாகவும் அதன் தலைநகரமே கழுமலம் என்றும் கூறப்படு கிறது.

தஞ்சை மாவட்டத்தின் சீர்காழி வட்டத்தின் தலைநகரமாகிய சீர்காழிக்குக் கழுமலம் என்ற ஒரு பெயரும் இருந்தது என்றுகருதப் படுகிறது. இவ்வூர் காவிரிப்பூம்பட்டினத்தை அடுத்திருப்பதால் சோழர்களின் பட்டத்து யானையை இங்கே கட்டியிருப்பது வழக்கம் என்றும், ''கழுமலத்தியாத்த களிறு" என்ற பழமொழிப் பாட்டுத் தொடர் இதையே குறிக்கிறது என்றும் கருதுகின்றனர்.

சோழநாட்டுக் கழுமலம் ஒரு காலத்தில் சேரர் ஆட்சியில் இருந்து பெரும்பூட் சென்னியால் மீட்கப்பட்டது என்று கருத இடமளிப்பதாகத் தோன்றுகிறது. சோழ நாட்டின் திருக்கழுமல வளநாட்டின் தலைநகராகப் பண்டைக் காலத்தில் விளங்கியது இவ்வூர்.

''பருந்துபடப் பண்ணிப் பழையன் பட்டெனக்
கண்டது நோனானாகித் திண்டேர்க்
கணையனகப் படக் கழுமலந் தந்த
பிணையலங்கண்ணிப் பெரும்பூட் சென்னி"

(அகம் 44:11-14)

**கள்ளில்.**

ஆத்திரையன் என்ற சங்ககாலப் புலவர் கள்ளில் என்னும் ஊரைச் சேர்ந்தவர் ஆதலின் கள்ளில் ஆத்திரையன் எனப்பெயர் பெற்றார்.

பெரும்பாலும் மக்கள் வாழும் வீட்டைக் குறிக்கும் 'இல்' என்பது சில பழமையான ஊர்ப்பெயர்களில் சேர்ந்திருக்கிறது.

திருச்சி மாவட்டத்தில் உள்ள அன்பில் என்ற ஊர்ப்பெயர் ஒப்பு நோக்கத்தக்கது,

கள்ளில் என்ற பெயருடன் தொண்டை நாட்டில் ஓர் ஊர் உள்ளது.

குறுந்தொகையில் 293ஆம் பாடலும், புறநானூற்றில் 175, 389 ஆகிய பாடல்களும் கள்ளில் ஆத்திரையன் பாடியவை.

[அடுத்து வரும் கள்ளூர் என்ற ஊர்ப்பெயரும் இக் கள்ளில் என்ற ஊர்ப்பெயரும் ஒரே ஊரைக் குறிக்கின்றனவா அல்லது வெவ்வேறு ஊரா என்பது ஆய்ந்து முடிவு காண வேண்டிய ஒன்று.]

**கள்ளூர்.**

மது கிடைக்கும் இடம் அல்லது விற்கும் இடம் நாளடைவில் குடியிருப்பாகி ஊராக அமைந்து கள்ளூர் என்ற பெயரைப் பெற்றிருக்கலாம்.

சங்ககாலப் பாடல்கள்மூலம் நமக்குக் கிடைக்கும் ஊர்ப் பெயர்களுள் கள்ளூர் என்பது ஒன்று. பெண்ணின் அணிநலத் திற்கு உவமையாகவே கூறப்பெற்றுள்ளது.

> "தொல் புகழ்நிறைந்த பல் பூங்கழனி
> கரும்பமல் படப்பைப் பெரும்பெயர்க் கள்ளூர்
> திருநுதற் குறுமகள் அணிநலம் வவ்விய"
>
> (அகம் 259:14-16)

**காகந்தி.**

சோழனின் தலைநகராகிய காவிரிப்பூம்பட்டினத்திற்குக் காகந்தி என்று ஒருபெயர் இருந்ததாகத் தெரிகிறது. இன்று இப் பெயர் வழக்கில் இல்லை.

சோழ மன்னனுக்குக் கணிகை வயிற்றுதித்த ககந்தன் என்பவன், பரசுராமனுக்கு அஞ்சிப் புகார் நகரை விடுத்துச் செல்லலுற்ற தன் தந்தையின் கட்டளையால் அப்பதியைக் காத் தான். ககந்தனால் காக்கப்படுதலின் காகந்தி எனப் பெயரிட்டுச் சென்றான் சோழமன்னன் என்று மணிமேகலைமூலம் தெரிகிறது.

நீலகேசியில் வேதவாதச் சருக்கத்தில் "காதம் பலவுங் கடந்த பின் காகந்திக் கடிநகருள்"—என இப்பெயருள்ள நகரமொன்று கூறப்பட்டிருக்கிறது (உ.வே, சாமிநாதையர் மணிமேகலை முதற் பதிப்பு 1898 அபிதான விளக்கம் பக். 6)

"பவ்வத்திரிக் கோட்டத்துக் காகந்தி நகரில் உள்ள பண்டரங் கீசுரம், "இராசேந்திர சோழ மண்டலத்துப் பவ்வத்திரி" என்ற கல்வெட்டுத் தொடர்கள் மூலம் நெல்லூர் மாவட்டத்துக் கூடூர் வட்டத்து ரெட்டிப் பாளையம் பகுதியும், அதனையடுத்த பண்டரங்கம் என்ற பகுதியும் காகந்தி எனப் பெயர் பெற்றிருந்தது எனத் தெரிகிறது. நெல்லூர் மாவட்டப் பகுதியை வென்ற கரிகாலனே தனது வளமார்ந்த தலைநகரின் பெயர்களுள் ஒன்றை புதிய நாட்டுக்கு இட்டான் எனக் கொள்ளலாம்.

"துயர் நீங்கு கிளவியின் யான் தோன்றளவும்
ககந்தன் காத்தல் காகந்தி யென்றே
இயைந்த நாமம் இப்பதிக்கிட்டு"—
(மணிமே. சிறைசெய் காதை. 36—38)

**காஞ்சி**

பார்க்க. கச்சி

**காண்ட வாயில்**

"கழிசூழ் படப்பைக் காண்டவாயில்' என்ற சங்க இலக்கியப் பாடலின் தொடரின்மூலம் நாம் அறியும் ஊர் காண்டவாயில் என்பது.

மரக்காணத்தை அடுத்த மாண்ட வாயில் என்னும் ஊரே காண்டவாயில் என்று அறிஞர் எண்ணுகின்றார்.[12] இக் கருத்துப் பொருத்தமுடையதாகவே தோன்றுகிறது.

காண்டம் என்றால் நீர்- காண்ட வாயில் நீர்வாயில். நீர்த் துறை அல்லது நீர்க்கரை என்ற பொருளில் காண்டவாயில் என்ற ஊர்ப்பெயர் அமைந்திருக்கலாம் என்ற எண்ணம், மேற்காணும் மாண்டவாயில் என்பதே காண்ட வாயிலாக இருக்கலாம் என்ற கருத்தை வலியுறுத்துகிறது.

"...... தோழி! கலங்குநீர்க்
கழி சூழ் படப்பைக் காண்டவாயில்
ஒலி காவோலை முள்மிடை வேலி
பெண்ணை இவரும் ஆங்கண்
வெண்மணற் படப்பை எம்அழுங்கல் ஊரே"(நற்.38:6-10)

இவ்வூர் பனைமரங்கள் உயர்ந்த பெரிய மணல் மேட்டினை யுடையது என்பதை இன்றும் நேரில் காணலாம்.

---

12. பி.எல், சாமி அவர்கள் நேரில் கூறியது.

**காரியாறு.**

காரியாறு பாய்ந்து வளஞ் செய்த பகுதி காரியாறு எனப் பெயர் பெற்றிருக்கலாம் என்ற எண்ணம் இப்பெயர் ஆற்றுப் பெயரால் பெயர் பெற்றதை வலியுறுத்தும்.

காரியாறு என்னும் ஊரில் துஞ்சிய நெடுங்கிள்ளி என்ற சோழ மன்னன் காரியாற்றுத் துஞ்சிய நெடுங்கிள்ளி எனப் பெற்றான்.

சோழன் நலங்கிள்ளி யுழைநின்று உறையூர் புகுந்த இளந்தத் தன் என்ற புலவனைக் காரியாற்றுத் துஞ்சிய நெடுங்கிள்ளி ஒற்று வந்தானென்று கொல்லப்புக்குழி கோவூர் கிழார் பாடி உய்யக் கொண்டார் என்று தெரிகிறது. (புறம். 47)

காரி என்ற வள்ளலின் பெயருக்கும் இவ்வூர்ப் பெயருக்கும் ஏதேனும் தொடர்பு உண்டா என்பது அறிய வேண்டும்.

சேலம் மாவட்டத்திலுள்ள காரிமங்கலம் என்னும் ஊர் காரி என்ற வள்ளலின் பெயரோடும், கோவை மாவட்டத்திலுள்ள ஓரி சேரி என்னும் ஊர் ஓரி என்ற வள்ளலின் பெயரோடும் தொடர் புடையதாக கருதப்படுகிறது.

ஏழிற் குன்றத்திற்கு அருகில் செருவத்தூர் என்று ஓர் ஊர் இருப்பதாகவும், காரி என்றும் ஓரி என்றும் பெயர்கொண்ட இரு பகுதிகளாக அவ்வூர் அமைந்தது என்றும், காரி, ஓரி என்ற வள்ளல்களின் பெயரால் அமைந்தது போலும் என்று கருதப் படுகிறது.[13]

**காவிரிப்பூம்பட்டினம்.**

காவிரியாறு கடலோடு கலக்குமிடத்தில் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் சோழர் தலைநகராகச்சிறந்துவிளங்கியது காவிரிப்பூம்பட்டினம். பூம்புகார் நகரம் என்றும், பூம்பட்டினம் என்றும் இவ்வூரைப் புலவர்கள் அழைத்தனர்.

காவிரிப்பூம்பட்டினம் சோழநாட்டின் சிறந்த துறைமுக நகரமாகும். கி.பி. முதலிரண்டு நூற்றாண்டுகளில் தமிழகத்து வாணிகத்தைப் பற்றி யெழுதிய பிளினி போன்றவர் இந்நகர வாணிகத்தைப் பற்றித் தம் நூல்களில் குறித்துள்ளனர். புத்த

13. Nannan of North Malabar – P.L Samy, Tamil civilization (Quarterly Research Journal of the Tamil Uuiversity, Thanjavur). Vol. 1. No.1.

சாதக் கதைகளில் இந்நகரத்தைப் பற்றிய குறிப்பு இருப்பதால் முற்பட்ட காலத்திலிருந்தே சிறப்புற்ற துறைமுக நகரமாக இருந்திருக்க வேண்டும். இங்கு கிடைத்த புதை பொருள்களைக் கொண்டு இந்நகரம் கிறிஸ்துவுக்கு முற்பட்ட வாழ்க்கையையுடைய தென்பதை ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்தனர்.[14]

இவ்வூர் மருவூர்ப்பாக்கம் (புறநகர்) பட்டினப்பாக்கம் (அகநகர்) என்னும் இரு பிரிவுகளைப் பெற்றிருந்தது.

இவ்வூர் கடலில் புகுமிடத்தில் இருந்ததால் புகார் என்றும் அழைக்கப்பெற்றது. காவிரிப்பூம்பட்டினம் என்பதும் அதே காரணத்தால் அமைந்த பெயர். கந்தரதத்தன், காரிக் கண்ணன், சேந்தன் கண்ணன் ஆகியோர் இவ்வூரினர்.

குறுந்தொகையில் 342 ஆம் பாடல் காவிரிப்பூம் பட்டினத்துக் கந்தரதத்தனார் பாடியது. 297 ஆம் பாடல் காவிரிப்பூம் பட்டினத்துக் காரிக்கண்ணன் பாடியது. 347 ஆம் பாடல் காவிரிப்பூம்பட்டினத்துச் சேந்தன் கண்ணன் பாடியது.

அகநானூற்றில் 107, 123, 285 ஆகிய பாடல்கள் காவிரிப்பூம் பட்டினத்துக் காரிக்கண்ணனார் பாடியவை. 103, 271 ஆகிய பாடல்கள் காவிரிப்பூம்பட்டினத்துக் கண்ணனார் பாடியவை.

புறநானூற்றில் 57, 58, 169, 171, 353 ஆகிய பாடல்கள் காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார் பாடியவை.

"நிலம்கொள வெஃகிய பொலம் பூண்கிள்ளி,
பூவிரி நெடுங்கழி நாப்பண், பெரும் பெயர்க்
காவிரிப் படப்பைப் பட்டினத்தன்ன
செழுநகர்........................." (அகம். 205:10—13)

"காவிரிப் படப்பைப் பட்டினந் தன்னுள்" (சிலப். அடைக்கலக் காதை. 151)

"காவிரிப் படப்பை நன்னகர் புக்கேன்"
(மணிமே. ஆபுத்திரனோடு மணிபல்லவம் அடைந்த காதை. 16.)

"கவேரக் கன்னிப் பெயரொடு விளங்கிய
தவாக்களி மூதூர்ச் சென்று பிறப்பெய்தி"
(ஷெ. பீடிகைகண்டு பிறப்புணர்ந்த காதை. 52)

14. பத்துப்பாட்டு ஆராய்ச்சி—டாக்டர் மா. இராச மாணிக்கனார்

"காவிரிப்பட்டினங் கடல் கொளு மென்றவத்
தூவுரை கேட்டு.........................." (ஷி. கச்சிமாநகர்புக்க
காதை. 135.)

**கானப்பேரெயில்.**

பாண்டியன் உக்கிரப்பெருவழுதி கானப்பேரெயிலைக் கைப் பற்றியவனே என்று சங்க இலக்கியத்தில் கூறப்பெற்றிருக்கிறது. அதனால் கானப்பேரெயில் கடந்த உக்கிரப்பெருவழுதி எனப் பெயர் பெற்றான். அவனை ஐயூர் மூலங்கிழார் பாடியபாடல் மூலம் அக்கோட்டையின் அகழியின் ஆழம், மதிலின் உயரம், மதிலின் மேல் அமைந்த ஞாயில், காவற்காடு ஆகியவற்றைப் பற்றி அறிகின்றோம். (புறம். 21)

கானப்பேர் என்ற இடத்தில் அமைந்தமையால் கானப் பேரெயில் என்று அக் கோட்டையைக் குறித்துக்கூறினர் போலும்.

அக் கோட்டையின் தலைவனாக வேங்கைமார்பன் என்ற வீரன் இருந்தான். அவனைத்தான் உக்கிரப்பெருவழுதி என்ற பாண்டியன் வென்று கைப்பற்றினான்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் மானாமதுரைக்குப் பக்கத் தில் உள்ள காளையார் கோயில்தான் கானப்பேர் என்று கருது கின்றனர். "கானப்பேர் உறைகாளை" என்று தேவாரத்தில் அவ் வூர் ஈசன் குறிக்கப் பெற்றுள்ளதால் அவ்வூரின் பெயர் கானப்பேர் என்றுதான் இருந்திருக்க வேண்டும். பழைய ஊர்ப் பெயர்கள் மறைந்து கோயில் பெயர்களால் பிற்காலத்தில் வழங்கும் ஊர்களும் உண்டு. அம்முறையில் காளையார் அமர்ந் தருளும் கோயில் காளையார் கோயில் என ஆகி நாளடைவில் அக்கோயிற்பெயர் ஊர்ப்பெயராகி, பழைய பெயர் மறைந்தது போலும்.

சங்ககாலத்தில் கானப்பேர் என்றிருந்த பெயர் தேவார காலத்திற்குப் பிறகு காளையார் கோயில் என ஆகியிருக்க வேண்டும்.

**கிடங்கில்.**

நடுநாட்டிலே ஓய்மாநாட்டு நல்லியக்கோடனின் ஆட்சியி லிருந்த ஓரூர் தென் ஆர்க்காடு மாவட்டத்தில் திண்டிவனம் நகரத்தின் அருகில் உள்ளது. கிடங்கல் என இப்பொழுது வழங்கப் பெறுகிறது.

இந்த ஊர் மிகப் பழமையானது. இந் நகரத் தெருக்களில் இருந்த புழுதியை யானைகளின் மதநீர் அருவி நனைத்து அடக்கியதாக சங்க இலக்கியம் கூறுகிறது.

இவ்வூர் திண்டிவனம் நகரில் உந்து வண்டி நிலையத்தை அடுத்து, பள்ளமான இடத்தில் அமைந்துள்ளது. அங்கே ஒரு சிவன் கோயிலும், சில தெருக்களும் உள்ளன. அதைச் சுற்றிலும் இடிந்த மதிற்சுவர்கள் காணப்படுகின்றன. அம் மதிற் சுவர்களை சுற்றிலும் அகழி இருந்திருக்க வேண்டும். அகழி இருந்தமைக்கான அடையாளங்கள் காணப்படுகின்றன. அவ்வூரிலுள்ள சிவன் கோயிலில், கி.பி. 11 முதல் 15ஆம் நூற்றாண்டு வரையிலான காலத்துக் கல்வெட்டுகள் சில உள்ளன. அவை சோழர், சம்புவராயர், விசயநகர வேந்தர்களின் காலக் கல்வெட்டுகள். "ஒய்மானாட்டு கிடக்கை நாட்டுக் கிடங்கில்" என்னும் ஊரில் அக் கோயில் இருப்பதாகக் கல்வெட்டுகள் கூறுகின்றன.

இதற்கு ஒரு கிலோ மீட்டர் வடக்கில் உள்ள திண்டிவனத்தில் ஒரு சிவன் கோயில் உள்ளது. அது திண்டீசுரம் என்பது. அக்கோயிலிலுள்ள சோழர்காலத்துக் கல்வெட்டுகள் கி. பி. 1300 காலத்தவை. அக்கல்வெட்டுகள் அக்கோயில் "ஒய்மானாட்டு கிடக்கைநாட்டுக் கிடங்கிலான இராஜேந்திர சோழ நல்லூர்த் திண்டீசுரம்" என்று குறித்துள்ளன. ஆகவே அதுவும் கிடங்கில் என்னும் ஊரில் இருந்தது என அறியலாம். இன்றைய திண்டி வனம் நகரத்தின் பெரும்பகுதி பண்டையக் கிடங்கிலே என்று கூறலாம்.

இன்று 'கிடங்கில்' என்ற ஊர் நல்லியக்கோடனின் அரண்மனை இருந்த பகுதியாக இருந்திருக்க வேண்டும்.

செஞ்சியில் இருந்த நவாபுவின் ஆட்சிக்குட்பட்ட அம்பர்கான் என்பவர் கி. பி. 1677இல் கிடங்கிற் கோட்டையையும் அகழியையும் சீர்திருத்தி அமைத்தார் என்று தெரிகிறது.[15]

முற்காலத்தில் சிறந்து விளங்கிய கிடங்கில் இப்பொழுது திண்டிவனத்தின் ஒரு உட்பகுதியாக அமைந்திருக்கிறது.

(அகழி சூழ்ந்தபகுதி பொதுவாகக் கிடங்கில் என்று கூறப் படும்.)

---

15. South Arcot District Gezetteer P. 368

கிடங்கில் காவிதி கீரங்கண்ணனார், கிடங்கில் காவிதிப் பெருங்கொற்றனார், கிடங்கில் குலபதி நக்கண்ணனார் ஆகிய சங்கப் புலவர்கள் இவ்வூரினர்.

நற்றிணையில் 218ஆம் பாடலைக் காவிதி கீரங்கண்ணனார் என்ற புலவரும், 364ஆம் பாடலைக் காவிதிப் பெருங்கொற்றன் என்ற புலவரும், குறுந்தொகையில் 252ஆம் பாடலை குலபதி நக்கண்ணன் என்ற புலவரும் பாடியுள்ளனர்.

''கிளைமலர்ப் படப்பைக் கிடங்கில் கோமான்

(பத்துப். சிறுபாண். 160)

''அமுதம் உண்க, நம் அயல் இலாட்டி
கிடங்கில் அன்ன.........
...................
பெருமலை நாடலை வருஉம்' என்றோளே'' (நற் 65:2)

கிடங்கு என்ற சொல் அகழி என்றும் பண்டகசாலை என்றும் பொருள் படுவதால் இந்த இரண்டில் ஒன்றன் அமைப்பால் பெற்ற பெயர் என்று எண்ணலாம்.

**கிள்ளிமங்கலம்.**

கிள்ளிமங்கலம் என்ற இவ்வூர் சோழ மரபினரின் கிள்ளி என்ற பெயரைப் பெற்று விளங்குகிறது. கிள்ளிமங்கலம் என்ற இப்பெயர் தற்காலத்தில் கிண்ணிமங்கலம் என்று வழக்கில் உள்ளது.

கிண்ணிமங்கலம் மதுரை மாவட்டத்தில் திருமங்கலம் வட்டத்தில் உள்ளது.

கிழார் என்ற புலவரும், அவர் மகனார் சேரகோவனாரும் இவ்வூரைச் சேர்ந்தவர்கள். ஆகவே கிள்ளிமங்கலங்கிழார் என்றும், கிள்ளிமங்கலங் கிழார் மகனார் சேரகோவனார் என்றும் பெயர் பெற்றனர்.

நற்றிணையில் 365ஆம் பாடல் கிள்ளிமங்கலங்கிழார் மகனார் சேரகோவனார் பாடியது. குறுந்தொகையில் 76, 110, 152, 181 ஆகிய பாடல்கள் கிள்ளிமங்கலங்கிழார் பாடியவை.

**குடந்தை.**

குடந்தைவாயில் என்றும், குடந்தை என்றும், குடவாயில் என்றும் கூறப்படுவன எல்லாம் ஒரே ஊரின பெயரே.

சோழர் குடந்தை என்று கூறப்படுவதால் இவ்வூர் சோழனுக்குரியதாக இருந்திருக்க வேண்டும் என்பது உறுதி.

உ. வே. சாமிநாதையர், பின்னத்தூர் அ. நாராயணசாமி ஐயர், பெருமழைப்புலவர் சோமசுந்தரனார் போன்றோர் சங்க இலக்கியப்பாடல்களுக்கு உரை எழுதும் போது குடந்தை என்ற சொல்லுக்குக் குடவாயில் என்றே பொருள் கூறுகின்றனர்.

குடந்தை என்றும், குடந்தை வாயில் என்றும், குடவாயில் என்றும் குறிக்கப்பெற்ற ஊரே இன்று குடவாசல்என்று வழங்கும் ஊராகும். இவ்வூர் தஞ்சை மாவட்டத்தில் நன்னிலம் வட்டத்தி லுள்ளது.

இல்லின் வாய் அல்லது வீட்டின் வாய் என்று பொருள் படும் வாயில் என்ற சொல்லுடன் வழங்கப்பெறும் சில ஊர்ப் பெயர் களில் குடந்தைவாயில் அல்லது குடவாயில்என்னும் இந்த ஊரும் ஒன்று. ஊர்கள் அமைந்துள்ள திசையை அவற்றின் பெயர் உணர்த்தும் நிலையும் இப்பெயரில் அமைகின்றது. முற்காலத்தில் சிறந்து விளங்கிய ஒரு பெருநகரின் மேலவாசலாக அமைந்த இடம் நாளடைவில் ஓர் ஊராக அமைந்து குடவாசல் என்று பெயர் பெற்றிருக்க வேண்டும்.

கோச் செங்கட் சோழன் தன்னோடு போர் செய்து தோல்வி யுற்ற சேர மன்னனைக் குடவாயிற் கோட்டம் என்னும் சிறைக் கோட்டத்தில் அடைத்து வைத்திருந்தான் என்ற செய்தி, குட வாயிலில் ஒரு சிறைக் கோட்டம் அமைந்து இருந்த நிலையை நமக்கு உணர்த்துகின்றது.

குடவாசலில் அமைந்திருந்த பழைய கோட்டை மதில்கள் பற்றிய செய்தியைத் தேவாரமும் உணர்த்துகிறது.

குடந்தை என்று நாலாயிர திவ்வியப் பிரபந்த பாடல்களிலும் தேவாரப் பாடல்களிலும் குறிக்கப்படும் ஊர் இன்றைய கும்ப கோணமாகும். இது குடமூக்கு என்றும் குறிக்கப்படுகிறது.

சங்க இலக்கியத்தில் கூறப்பெற்ற குடந்தை, குடந்தைவாயில் குடவாயில் என்பது தற்காலத்திய குடவாசல் என்ற ஊராக இருக்க வேண்டும் என்று தோன்றுகிறது.

ஓர் ஊரின் பெயர் காலப் போக்கில் பின்னர் வேறொரு பெய ராகத் திரிதலும், இப்பெயரே பிறிதோர் ஊருக்குப் பெயராக அமைதலும் ஆகிய தன்மையை நாம் காண முடிகிறது.

நற்றிணையில் 27, 212, 379 ஆகிய பாடல்களையும், குறுந் தொகையில் 281, 369 ஆகிய பாடல்களையும், அகநானூற்றில் 35, 44, 60, 79, 119, 129, 287, 315, 345, 366, 385 ஆகிய பாடல்களை

யும், புறநானூற்றில் 242ஆம் பாடலையும் பாடிய கீரத்தனார் என்ற புலவரும், குறுந்தொகையில் 79ஆம் பாடலைப் பாடிய கீரனக்கன் என்ற புலவரும் இவ்வூரைச் சேர்ந்தவர்கள்.

"தேர் வண் சோழர் குடந்தை வாயில்
மாரி அம்கிடங்கின் ஈரிய மலர்ந்த
பெயல் உறுநீலம் போன்றன விரவே" (நற் 379 : 7-9)

"பொங்கடி படிகயம் மண்டிய பசுமிளை,
தண் குடவாயில் அன்னோள்
பண்புடை ஆகத்து இன்துயில் பெறவே" (அகம். 44 : 17-19)

"கொற்றச் சோழர் குடந்தை வைத்த
நாடுதரு நிதியினும் செறிய
அருங்கடிப் படுக்குவள், அறன்இல் யாயே" (ஷை. 60 : 13-15)

குடநாடு.

கொடுந்தமிழ் நாடு பன்னிரண்டனுள் ஒன்று. தமிழ்நாட்டின் மேற்குப் பகுதி திசைப்பெயருடன் இணைந்து குடநாடு என்னும் பெயர் பெற்றது. அந்நாட்டு மன்னன் சேரன் குடவர்கோ எனப் பெயர் பெற்றான். எருமை என்ற ஒரு மன்னன் குடநாட்டை ஆண்டுள்ளான். இவன் சேர மரபினனாக ஆகியிருக்க வேண்டும்.

"வடவர் உட்கும் வான்தோய் வெல் கொடிக்
குடவர் கோமான் நெடுஞ் சேரலாதற்குச்
சோழன் மணக்கிள்ளி ஈன்றமகன்"
(பதிற். ஐந்தாம்பதிகம் 1-3)

"குடவர் கோவே! கொடித் தேர் அண்ணல்
வாரார் ஆயினும் இரவலர் வேண்டி
தேரின் தந்து, அவர்க்கு ஆர்பதன் நல்கும்
தகைசால் வாய்மொழி இசைசால் தோன்றல்"
(பதிற். 55:9-12)

"முடம் முதிர் பலவின் கொழு நிழல் வதியும்
குடநாடு பெறினும் தவிரலர்
மடமான் நோக்கி! நின்மாண் நலம் மறந்தே"
(அகம். 91:16-18)

"நுண் பூண் எருமை குடநாட்டன்ன என்
ஆய்நலம் தொலையினும் தொலைக..." (ஷை. 115:5-6)

"வரையா ஈகைக் குடவர் கோவே" (புறம். 17:40)

"பெரும் பெயர் ஆதி, பிணங்கு அரில் குடநாட்டு
எயினர் தந்த எய்ம்மான் எறி தசைப்
பைஞ்ஞிணம் பெருத்த பசுவெள் அமலை,
வருநர்க்கு வரையாது தருவனர் சொரிய
இரும்பனங் குடையின் மிசையும்
பெரும்புலர் வைகறை" (புறம். 177:12-17)

**குடவாயில்.**

பார்க்க குடந்தை.

**குணவாயிற் கோட்டம்.**

சேரன் செங்குட்டுவனின் தம்பியாகிய இளங்கோ துறவறம் பூண்டு அருந்தவம்புரிந்த இடம் குணவாயிற் கோட்டம் என்பது. இது வஞ்சிமாநகரின் கிழக்குத் திசையில் அமைந்திருந்தமையால் ஊர்கள் அமைந்திருந்த திசையால் பெயர்பெற்ற குடவாயில் போன்றே இவ்வூரும் குணவாயில் என்று பெயர் பெற்றிருக்க வேண்டும். இளங்கோ தவம்புரிந்த கோட்டம் அமைந்திருந்த வஞ்சிமாநகரின் குணவாயில் பகுதி பிற்காலத்தில் அப்பெயருடன் ஓர் ஊராயிற்று போலும்.

"குணவாயில் கோட்டம்" என்ற சிலப்பதிகாரப் பதிகத்தின் அடிக்குப் பொருள் எழுதிய அரும்பத உரையாசிரியரும், அடியார்க்கு நல்லாரும் குணவாயில் என்பதற்குத் திருக்குண வாயில் என்று கூறினர். திருக்குணவாயில் என்பது ஓரூர் என்றும், அது வஞ்சியின் கீழ்த்திசையின்கண் உள்ளதென்றும் அடியார்க்கு நல்லார் கூறினர்.

"குண வாயிற் கோட்டத் தரசுதுறந் திருந்த
குடக் கோச் சேரலிளங் கோவடிகட்கு" (சிலப். பதிகம். 1-2)

"குணவாயில் கொங்கு நாட்டில் உள்ளதென்பர் சிலர். (ஆராய்ச்சித் தொகுதி. ப. 247) திருவஞ்சிக்குளம் என வழங்கும் திருவஞ்சைக் களத்தின்அருகேயுள்ளதென்பர் சிலர். திருவஞ்சைக் களம் என்னும் திருக்கோயிலையுடைய கொடுங்கோளூரில் (Granganore) குணவாய் என்ற ஊர் உள்ளதென்று 'உண்ணியாடி சரிதம்' என்னும் மலையாளக்காவியம் கூறுகின்றது. இது பன்னிரண்டாம் நூற்றுண்டில் எழுதப்பட்டதென்பர்"— என்ற கருத்தும் காணப்படுகிறது.[16]

16. ஊரும் பேரும்—ரா. பி. சேதுப்பிள்ளை, பக். 230.

**குராப்பள்ளி.**

குராப்பள்ளியில் துஞ்சியதால் சோழன் பெருந்திருமாவளவன் குராப்பள்ளித் துஞ்சிய சோழன் பெருந்திருமாவளவன் எனப் பெயர் பெற்றான். குராப்பள்ளியைப் பற்றிய வேறு செய்திகள் ஒன்றும் தெரியவில்லை.

புறநானூறு 58, 60 197ஆம் பாடல்கள் குராப்பள்ளியில் துஞ்சிய மன்னனைப் பற்றிப் பாடியவை.

குராப்பள்ளி என்பது குராமரங்கள் அடர்ந்த பகுதியால் பெற்ற ஊர்ப்பெயராக இருக்கலாம்.

**குழுமூர்.**

உதியன் என்னும் வள்ளல் வாழ்ந்த ஊர் குழுமூர். இவ் வள்ளல் இரவலர்க்கு உணவு அளிப்பதைத் தலையாயக் கடமை யாகக் கொண்டிருந்தான். ஆகையால் அவன் அட்டிலில் இரவலரின் ஆரவாரம் ஓயாமல் ஒலித்துக் கொண்டே இருந்தது என்றும் தெரிகிறது.

சிறந்த பசுக்களையுடைய நிலப்பரப்பினையுடைய குழுமூர் என்று சங்க இலக்கியம் கூறுவதால், இவ்வூர் நிலப்பரப்பில் பசுக்கள் குழுமியிருந்தன என்று தெரிகிறது.

இவ்வாறு குழுமியிருந்த காரணத்தால் குழுமூர் எனப்பெயர் பெற்ற ஊராக எண்ண இடமளிக்கிறது.

"பல்லான் குன்றிற் படுநிழல் சேர்ந்த
நல்லான் பரப்பின் குழு மூராங்கண்
கொடைக்கடன் ஏன்ற கோடா நெஞ்சின்
உதியன் அட்டில்போல ஒலிஎழுந்து" (அகம் 168:4-7)

இன்றும் ஊர்ப்புறத்தே மாடுகளைக் கூட்டமாக மடக்கி வைக்கும் பொது இடத்திற்கு மந்தைவெளி என்னும் பெயருள்ளமை ஒப்பு நோக்கத்தக்கது.

**குளமுற்றம்.**

குளமுற்றம் என்னும் ஊர் சேர நாட்டிலுள்ளது. (கலைக் களஞ்சியம்) இந்த ஊரிலே துஞ்சிய சோழ மன்னன் ஒருவன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவன் எனப் பெற்றான். (புறம் 69.)

ஊரின் வெளியிடம் எனப் பொருள்படும் முற்றம் என்ற சொல் அமைந்த ஊர்ப்பெயர்களில் ஒன்று. இது குளம் என்ற நீர் நிலை காரணமாகக் குளமுற்றம் எனப்பெயர் பெற்றது போலும்.

**குறுக்கை.**

குறுக்கைப் பறந்தலையில் அன்னி என்னும் மன்னன் திதியனோடு போரிட்டு, அவன் காவல் மரமாகிய புன்னையை வெட்டி வீழ்த்தினான் என்று சங்க இலக்கியம் கூறுகிறது. போர் நடைபெற்ற அந்தப்போர்க்களம் அமைந்த ஊர்ப்பெயராகிய குறுக்கை என்பதனோடு இணைந்து குறுக்கைப் பறந்தலை எனப் பெற்றது.

வேளாளர் குலத்தினரில் ஒருபிரிவினர் குறுக்கையர் குடியினர். குறுக்கையர் குடியினர் வாழ்ந்த நிலப்பகுதி குறுக்கைஎனப்பெயர் பெற்றிருக்கலாம் என எண்ணுவது பொருத்தமாக இருக்கலாம்.

குறுக்கை என்னும் பெயருடன் தஞ்சைமாவட்டத்து மாயவரம் வட்டத்தில் ஒன்றும், திருச்சி மாவட்டத்தில் லால்குடி வட்டத்தில் ஒன்றும் ஆக இரண்டு ஊர்கள் உள்ளன.

"அன்னிக் குறுக்கைப் பரந்தலை திதியன்
தொல்நிலை முழுமுதல் துமியப் பண்ணி,
புன்னை குறைந்த ஞான்றை" (அகம். 45 : 9-11)

"அன்னி குறுக்கைப் பறந்தலை, திதியன்
தொல் நிலை முழுமுதல் துமியப் பண்ணிய
நன்னர் மெல் இணர்ப் புன்னை போல" (ஷை 145 : 11-13)

**குறுங்குடி.**

குடி என்னும்சொல் ஊர் என்ற பொருளை குறிக்கும். வெகு தொலைவில் இல்லாமல் அருகில் குறுகிய தொலைவில் உள்ள ஊர் குறுங்குடி எனப் பெயர் பெற்றிருக்கலாம் என்று எண்ணத் தோன்றுகிறது.

இவ்வூரினரான மருதன் என்ற சங்ககாலப் புலவர் குறுங்குடி மருதன் எனப்பெயர் பெற்றார். குறுந்தொகையில் 344ஆம் பாடலும், அகநானூற்றில் 4-ஆம் பாடலும் குறுங்குடி மருதன் இயற்றியவை.

பாண்டிநாட்டில் நெல்லை மாவட்டத்தில் குறுங்குடி என்று ஓர் ஊர் உள்ளது.

திருமாலின் வாமனாவதாரத்தோடு தொடர்பு படுத்தி இவ் ஊரின் பெயர் திருக்குறுங்குடி என வந்ததாகப் புராணச் செய்தி கூறுகிறது.

**குறுங்கோழியூர்.**

கிழார் என்ற சங்க காலப் புலவர் குறுங்கோழியூரைச் சேர்ந்தவர். ஆகவே அவர் குறுங்கோழியூர் கிழார் எனப் பெயர் பெற்றார்.

செங்கற்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்த மதுராந்தகம் வட்டத்திலுள்ள கருங்குழியே அன்றைய குறுங்கோழியூர் என்ற கருத்து உள்ளது. தொண்டை நாட்டைச் சேர்ந்த குறுங்கோழியூர், குறுங்கோழி என்று ஆகி, இப்பொழுது கருங்குழி என வழங்கப்பெறுகிறது என்பர். (ரா. பி. சேதுப்பிள்ளை, ஊரும்-பேரும் பக். 1 1.)

புறநானூற்றிலுள்ள 17, 20, 22 ஆகிய பாடல்கள் குறுங்கோழியூர் கிழார் பாடியவை.

**குறும்பூர்.**

குறும்பு என்பது பாலை நிலத்து ஊர். இப் பெயர் அடிப்படையில் குறும்பூர் என்ற ஊர்ப் பெயர் தோற்றம் பெற்றதா என்பது தெரியவில்லை.

விச்சியர் கோமகன் பகைவர்களுடன் பொருத பொழுது குறும்பூர் ஆர்த்தது என்று சங்க இலக்கியம் கூறுகிறது.

''வில் கெழுதானை விச்சியர் பெருமகன்
வேந்தரொடு பொருத ஞான்றைப் பாணர்
புலி நோக்குறழ் நிலை கண்ட
கலிகெழு குறும்பூரார்ப்பினும் பெரிதே (குறுந். 328:5-8)

**குன்றம்—குன்று.**

குன்றம் என்பதும் குன்று என்பதும் மலை என்னும் பொருளையுடையனவே.

குன்றம் என்ற சொல் வேங்கடமலையைக் குறிக்கவும் ஆளப்பட்டிருக்கிறது சங்க இலக்கியத்தில். வேங்கடமலை புல்லி என்பவனுக்கு உரியதாக இருந்தது. பரிபாடலில் 9, 18 ஆகிய பாடல்களைப் பாடிய பூதனார் என்ற புலவர் குன்றத்தைச் சேர்ந்தவராதலின் குன்றம் பூதனார் எனப் பெயர் பெற்றார்.

''புடையலங் கழற்காற் புல்லி குன்றத்து
நடையருங் கானம் விலங்கி, கோன் சிலைத்
தொடை அமைபகழித் துவன்று நிலைவடுகர்,
பிழி ஆர் மகிழர், கலி சிறந்து ஆர்க்கும்
மொழி பெயர் தேஎம் இறந்தனர் ஆயினும்,
பழிதீர் மாண் நலம் தருகுவர் மாதோ''—(அகம். 295:13-18)

குன்றம், குன்று என்ற இரண்டு சொற்களும் பரங்குன்றத்தைக் குறிக்க ஆளப்பட்டுள்ளன.

திருப்பரங்குன்றம் தற்கால மதுரைக்கு அருகில் உள்ளது. இவ்வூர் சங்க காலத்திலேயே முருகனின் தலமாக விளங்கி இருக்கிறது. முருகனது அறுபடை வீடுகளுள் ஒன்று இத்தலம்.

இருபது நூற்றாண்டிற்கு முன் இக்குன்றம் சமணமுனிவர்கள் தங்கி இருந்த எட்டுக் குன்றுகளில் ஒன்றாக இருந்தது. சமணர் தவம் புரிந்த இடங்கள் இங்கு உண்டு.

பல்லவர் ஆட்சியிலும் பாண்டியர் ஆட்சியிலும் இவ்வூர் சிறப்புற்றிருந்தது. முஸ்லீம் ஆட்சியில் இங்கே ஒரு பள்ளி வாசல் ஏற்பட்டது. (கலைக்களஞ்சியம்)

"மாடம் மலிமறுகிற் கூடற் குட வயின்
இருஞ் சேற்று அகல் வயல் விரிந்து வாய் அவிழ்ந்த
முள்தாட் தாமரைத் துஞ்சி, வைகறைக்
கள் கமழ் நெய்தல் ஊதி, எல் படக்
கண் போல் மலர்ந்த காமரு சுனை மலர்,
அஞ்சிறை வண்டின் அரிக்கணம் ஒலிக்கும்
குன்று அமர்ந்து உறைதலும் உரியன் "(பத்துப். திருமுருகு 71-77)

"பரங்குன்றில் பன்னிரு கைக் கோமான் தன் பாதம்
கரம் கூப்பி கண்குளிரக் கண்டு......(ஷை ஷை. தனிப்பாடல் 9:1-2)

"தனி மழை பொழியும் தண் பரங்குன்றில்
கலி கொள் சும்மை, ஒலி கொள் ஆயம்". (பத்துப். மதுரைக்: 263-264)

"இவ் வையை யாறு என் றமாறு என்னை? கையால்
தலை தொட்டேன், தண் பரங்குன்று". (பரி. 6: 94-95)

"பரங்குன்று இமயக் குன்றம் நிகர்க்கும்". (ஷை. 8:11)

"........மறப்பு அறியாது நல்கும்
சிறப்பிற்றே—தண் பரங்குன்று" (ஷை. 8: 45-46)

"வருபுனல் வையை மணல் தொட்டேன்; தரு மண வேள்
தண் பரங்குன்றத்து அடி தொட்டேன் என்பாய்" (ஷை,8: 61 62)

"கேட்டுதும் பாணி; எழுதும்கிணை-முருகன்
தாள் தொழு தண்பர ங்குன்று'— (ஷை 8:81-82)

"மண் பரிய வானம் வறப்பினும், மன்னுகமா,
தண் பரங்குன்றம்! நினக்கு" (ஷி. 8: 129-130)

"மணி மழை தலைஇ யென, மா வேனில் கார் ஏற்று,
தணி மழை தலையின்று, தண்பரங்குன்று" (ஷி 9: 10- 11)

"வித்தகத் தும்பை விளைத்தலான், வென் வேலாற்கு
ஒத்தன்று, தண்பரங்குன்று" (ஷி. 9; 68- 69)

"பாடல் சான்று பல் புகழ் முற்றிய
கூடலொடுபரங்குன்றின் இடை". (ஷி, 17: 22- 23)

"சுனை மலர்த் தாது ஊதும் வண்டு ஊதல் எய்தா:
அனைய, பரங்குன்றின் அணி" (ஷி. 17; 38- 39)

"தெய்வ விழவும் திருந்து விருந்து அயர்வும்
அவ்வெள் அருவி அணிபரங்குன்றிற்கும்" (ஷி. 17:42-43)

"நிலவரை அழுவத்தான் வான் உறை புகல் தந்து
புலவரை அறியாத புகழ்பூத்த கடம்பு அமர்ந்து
'அருமுனி மரபின் ஆன்றவர் நுகர்ச்சிமன்
இருநிலத்தோரும் இயைக!' என ஈத்தநின்
தண் பரங்குன்றத்து, இயல்அணி நின்மருங்கு
சாறுகொள் துறக்கத் தவளொடு
மாறுகொள்வது போலும், மயிற் கொடி வதுவை"
(ஷி. 19:1-7)

"நேர்வரை விரிஅறைவியல் இடத்து இழைக்கச்
சோபன நிலையது துணி பரங்குன்றத்து
மாஅல் மருகன் மாட மருங்கு" (ஷி. 19;65.57)

"நிரை ஏழ் அடுக்கிய நீள் இலைப்பாலை
அரைவரை மேகலை, அணிநீர்ச்சூழி
தரை விசும்பு உகந்த தண் பரங்குன்றம் (ஷி. 21:13-15)

"கொழுநன் மகிழ்தூங்கி, கொய்பூம்புனல் வீழ்ந்து
தழுவும் தகைவகைத்து—தண் பரங்குன்று (ஷி. 21:44.45)

"சேய்மாடக் கூடலும் செவ்வேள் பரங்குன்றும்
(ஷி. திரட்டு 12.2)

"சூர் மருங்கு அறுத்த சுடர்இலை நெடுவேல்
சினம்மிகுமுருகன் தண்பரங் குன்றத்து" (அகம். 59:10-11)

**குன்றூர்.**

குன்றை அடுத்துள்ள ஊர் என்ற நிலையில் குன்றூர் என்ற ஊர்ப்பெயர் தோற்றம் பெற்றிருக்கவேண்டும் எனத் தோன்றுகிறது.

இப் பெயருடன் ஊர்கள் ஒன்றற்கு மேற்பட்டு இருப்பதாகத் தெரிகிறது. வேளிர்கள் வாழும் நகரமாகிய கீழ்கடற்கரையிலுள்ள குன்றூரும் ஒன்று. நீலகிரி மலையில் இப்பொழுது குன்னூர் என்ற பெயருடன் வழங்கும் ஊரும் ஒருகாலத்தில் குன்றூர் என்ற பெயருடன் வழங்கியதே.

கிழார் என்னும் புலவரும் அவர் மகன் கண்ணனாரும் இவ் வூரினர் ஆகையால்தான், குன்றூர் கிழார் என்றும் குன்றூர் கிழார் மகனார் கண்ணத்தனார் என்றும்பெயர் பெற்றிருந்தனர். நற்றிணையில் 382ஆம் பாடல் கண்ணத்தனாரும், புறநானூற்றில் 338ஆம் பாடல் கிழாரும் பாடிய பாடல்களாகும்.

தொன்றுமுதிர் வேளிர் என்றும், குன்றூர் குணாது தண் பெரும் பௌவம் என்றும் இலக்கியங் கூறுவதை நோக்கும் பொழுது கீழ்க்கடற்கரையை அடுத்த குன்றூரே சங்ககாலக் குன்றூர் என்று எண்ண இடமளிக்கிறது.

பழன யாமைப் பாசடைப் புறத்து,
கழனி காவலர் சுரி நந்து உடைக்கும்,
தொன்றுமுதிர் வேளிர், குன்றூர் அன்னஎன்
நல்மனை நனிவிருந்து அயரும்
கைதூ வின்மையின் எய்தாமாறே" (நற். 280:6-10)

"கணைக் கோட்டு வாளைக் கமஞ்சூல் மட நாகு
துணர்த் தேக்கொக்கின் தீம்பழம் கதூஉம்
தொன்று முதிர் வேளிர் குன்றூர்க் குணாது
தண்பெரும் பௌவம் அணங்குக தோழி!" குறுந். 164:1-4)

**கூடல்.**

கூடல் என்றும், நான்மாடக் கூடல் என்றும், மதுரை என்றும் சங்க இலக்கியங்களில் கூறப்பெறும் ஊர்ப்பெயர்கள் ஒரே ஊரைக் குறிப்பனவேயாகும். அதாவது மதுரை என்ற ஊரையே குறிக்கும். ஆலவாய் என்பதும் அதன் பெயர்.

சங்க இலக்கியங்களில் கூடல் என்ற பெயரே பல இடங்களில் காணப்படுகிறது அடை மொழியுடன் நான்மாடக்கூடல் எனவும் வழங்கப்படுகிறது. மதுரை என்ற பெயர் அருகியே இடம் பெறுகிறது.

கூடி இருத்தல் என்ற பொருளில் கூடல் எனப் பெயர் பெற்றிருக்கலாம் எனத் தோன்றுகிறது. சங்கப் புலவர்கள் கூடி இருந்து தமிழாய்ந்தமை நாம் அறிந்ததே.

மாடங்களுடன் கூடியது என்ற பொருளில் நான்கு என்ற அடையுடன் நான்மாடக்கூடல் எனவும் பெயர் பெற்றது போலும்.

"நான்கு மாடங்கூடலின் நான் மாடக்கூடல் என்றாயிற்று. அவை திருவாலவாய், திருநள்ளாறு, திருமுடங்கல், திருநடுவூர்" என்பர் நச்சினார்க்கினியர் (கலித்தொகை 92ஆம் பாடலின் உரை) இக்கருத்து சங்க கால அமைப்புக்கு ஏற்றதாய் இல்லை.

அடுத்து மதுரை என்ற பெயர் இக்காலத்தில் வழக்கில் அதிக மாக இருந்தாலும், சங்க காலத்தில் அருகியே இருந்தமை தெளிவு. பேச்சு வழக்கில் இன்று காணும் மருதை என்ற பெயரே மதுரை என மருவி வழங்கி இருக்க வேண்டும். அதாவது பண்டைக் காலத்தில் மரத்தால் ஊர்ப்பெயர்கள் அமையும் முறையையொட்டி மருத மரங்கள் நிறைந்த மருத நிலத்தின் அடிப்படையில் மருதை என்ற பெயர் தோன்றி, நாளடைவில் மதுரை என மாறி வழங்கியதாகக் கருதவேண்டும். அப்பண்டைய பெயரே இன்றும் பேச்சுவழக்கில் வழங்கிய வருவது கண் கூடு. சங்க இலக்கியத்தில் யாண்டும் மருதை என்ற பெயர் இடம் பெறவே இல்லை. மருவி வழங்கிய மதுரை என்ற பெயரே இடம் பெற்றுள்ளது. காரணம் இலக்கியங்களில் புலவர்கள் பாட ஆரம்பிப்பதற்கு முன்னமே மருதை என்ற பெயர் மதுரை என மருவி வழங்க ஆரம்பித்து விட்டமையேயாம்.

வருணன் சினத்தால் பெய்த மழையை, விலக்க இறைவன் கட்டளையால் நான்கு மேகங்கள் மாடங்களாகக் கூடிநகரத்தைக் காத்தமையால் நான்மாடக்கூடல் என்ற பெயர் பெற்றது என் பதோ, நகரின் அழகில் மகிழ்ந்த சிவன் மதுவைத் தெளித்தமை யால் மதுரை எனப் பெயர் பெற்றது என்பதோ பொருத்தமாகத் தோன்றவில்லை.

நகரின் அமைப்பைக் குறித்துக் காட்ட சிவபெருமான் அனுப்பிய ஆலகால நாகம் தன் தலையையும் வாலையும் கூட்டிப் காண்பித்தது அவ்வாறு வாலும் வாயும் கூடியதால் ஆலவாய் எனப் பெயர் பெற்றது என்பதும்,

கடம்ப மரங்கள் நிறைந்த கடம்பவனத்தில் ஒரு கடம்பமரத் தின் கீழ் தேவேந்திரன் சிவலிங்கத்திற்குப் பூசை செய்ய, அதை அறிந்த பாண்டியன் அந்த வனத்தை நகராக்கினன். அதனல்தான் கடம்பவனம் என்ற ஒரு பெயர் மதுரைக்கு உண்டு என்பதும் புராணச் செய்தி.

பாண்டியன் தொன்மையான தலைநகராய் அலைவாய்' என்ற பெயரை, அந்நகரின் அழிவுக்குப் பிறகு, சங்ககாலத் தம்

தலைநகராய மதுரைக்கும் இட்டனன். அந்த அலைவாய் என்ற பெயரே ஆலவாய் என மாற்றம் பெற்று, அதற்கு ஒரு புராணக் கதையும் உண்டாக்கப்பட்டது என்ற கருத்தும் குறிப்பிடத் தக்கது.[17]

வையை ஆற்றை ஒட்டி மதுரைநகர் அமைந்திருந்தது. அதன் நீர்த் துறைகறைகளை ஒட்டிப் பூங்காக்கள் இருந்தன, இடையில் பெரும் பாணர் சேரி இருந்தது. அடுத்து அகழி, அகழியை அடுத்து கோட்டை அமைந்திருந்தன, கோயில் பழமையானது; வலிமை வாய்ந்தது. கோட்டையின் உள்ளே அகன்ற தெருக்களும், நடு நாயகமாய் அரண்மனையும் விளங்கின"—இவை மதுரையைப் பற்றிப் பத்துப்பாட்டுத் தரும் செய்தி.

இன்றைய மதுரைச் சங்க கால மதுரையல்ல. இன்றைய மதுரைக்குத் தெற்கில் சுமார் மூன்று மைல் தொலைவில் அவனி யாபுரம் என்றஊர் உள்ளது. அங்குள்ள கோயிலில் சிவன் சொக்க நாதர். அம்மை மீனாட்சி.

இன்றைய மதுரைக்குத் தெற்கில் சுமார் இரண்டு மைல் தொலைவில் ' கோவலன் பொட்டல்' என்று ஒருமேடு உள்ளது, கோவலன் கொல்லப்பட்ட இடம் அது தான் என்பது கர்ணபரம் பரைச் செய்தி.

இந்த அவனியாபுரமும் கோவலன் பொட்டலும் இடையி லுள்ள நிலப்பகுதியுமே சங்ககாலக் கூடல் என்று கருதுகின்றனர். நாளடைவில் இன்றுள்ள மதுரை ஒரு புதிய நகரமாகத் தோன்றி யது என்றும் எண்ணுகின்றனர்.[18]

"திரு வீற்றிருந்த தீது தீர் நியமத்து
மாடம் மலி மறுகிற் கூடல் குடவயின்" (பத்துப். திருமுருகு 70-71.)

"மாடம் பிறங்கிய மலிபுகழ்க் கூடல்
நாள் அங்காடி நனந்தலைக் கம்பலை" (ஷை. மதுரைக். 429-430)

"நாம் வேண்ட நல் நெஞ்சே! நாடுதி போய், நானிலத்தோர்
தாம் வேண்டும் கூடல் தமிழ்" (ஷை. ஷை. தனிப்பாடல் 1: 3-4)

---

17. சங்க நூல்களில் மணிகள்—பி, எல். சாமி, ஐ. ஏ. எஸ், சேகர் பதிப்பகம், சென்னை-78. பக். 93-94.
18. பத்துப்பாட்டு ஆராய்ச்சி -டாக்டர் மா. இராச மாணிக்கனார்

"வண்டு ஆர் கமழ் தாமம் அன்றே—மலையாத
தண் தாரான் கூடல் தமிழ்".
(ஷி.. ஷி. தனிப்பாடல் 2: 3-4)

"ஓம்பு அரண் கடந்த அடுபோர்ச் செழியன்
பெரும் பெயர்க் கூடல் அன்ன நின்
கரும்புடைத் தோளும் உடையவால் அணங்கே".
(நற். 39: 9-11)

"பொற்றேர்ச் செழியன் கூடல் ஆங்கண்
ஒருமை செப்பிய அருமை, வான் மூகை
இரும் போது கமழும் கூந்தல்,
பெரு மலை தழீஇயும், நோக்கு இயையுமோ மற்றே"
(ஷி. 288 : 9-12)

"குன்றம் உடைத்த ஒளிர் வேலோய்! கூடல்
மன்றல் கலந்த மணி முரசின் ஆர்ப்பு எழ". (பரி. 8: 29-30)

"ஏமுறு நாவாய் வரவு எதிர் கொள் வார் போல்,
யாம் வேண்டும் வையைப் புனல் எதிர் கொள் கூடல்".
(ஷி. 10:39-40)

"மதிமாலை மால் இருள் கால் சீப்ப, கூடல்
வதிமாலை, மாறும் தொழிலான்......". (ஷி. 10:112-113)

"ஆடல் தலைத்தலை சிறப்ப. கூடல்
உரைதர வந்தன்று, வையைநீர்;......" (ஷி. 12:30-31)

"பாடல் சான்று பல் புகழ் முற்றிய
கூடலொடு பரங்குன்றின் இடை". (ஷி. 17:22-23)

"கொய் உளை மான்தேர்க் கொடித் தேரான் கூடற்கும்
கைஊழ் தடுமாற்றம் நன்று". (ஷி. 17:45-46)

"புலத்தினும் போரினும் போர் தோலாக் கூடல்"
(ஷி. 19:8)

"குன்றொடு கூடல் இடையெல்லாம் ஒன்றுபு" (ஷி. 19:15)

"கோடு ஏறு எருத்தத்து இரும்புனலில் குறுகி,
மாட மறுகின் மருவி மருகுற,
கூடல் விழையும் தகைத்து-தகைவையை." (ஷி. 20:24-26)

"நெடு நீர் மலிபுனல், நீள் மாடக் கூடல்
கடி மதில் பெய்யும் பொழுது" (ஷி. 20:106-107)

"நாக நீள் மணி வரை நறு மலர் பல விரைஇ,
காமரு வையை கடுகின்றே கூடல்" (ஷி. திரட்டு. 2:3-4)

"பொற் றேரான் தானும், பொலம் புரிசைக் கூடலும்
முற்றின்று — வையைத்துறை" (ஷை.ஷை.2:26-27)

"பணிவு இல் உயர் சிறப்பின் பஞ்சவன்கூடல்"(ஷை.ஷை.2;46)

"வெரு வரு கொல் யானை வீங்கு தோள் மாறன்,
உரு கெழு கூடலவ ரோடு,......" (ஷை. ஷை. 2: 91-92)

"ஈவாரைக் கொண்டாடி, ஏற்பாரைப் பார்த்து உவக்கும்
சேய் மாடக் கூடலும், செவ்வேள் பரங்குன்றும்,
வாழ் வாரே வாழ்வார் எனப்படுவார்........"
(ஷை.ஷை.12:1-3)

"ஆனாச் சீர்க் கூடலுள் அரும்பு அவிழ் நறு முல்லை,
தேனார்க்கும் பொழுது, எனத் தெளிக்குநர் உளராயின்"
(கலித். 30:11-12)

"மீளி வேல் தானையர் புகுதந்தார்
நீள் உயர் கூடல் நெடுங் கொடி எழவே" (ஷை. 31:24-25)

"பூந் தண் தார், புலர் சாந்தின், தென்னவன் உயர் கூடல்"
(ஷை. 57:8)

"கனவினால் சென்றேன்—கலி கெழு கூடல்
வரை உறழ் நீள் மதில் வாய் சூழ்ந்த வையைக்
கரை அணி காவினகத்து" (ஷை.92:11-13)

"அரண் பல கடந்த, முரண் கொள் தானை,
வாடா வேம்பின், வழுதி கூடல்" (அகம். 93:8-9)

"நெடுநல் யானை அடுபோர்ச் செழியன்
கொடி நுடங்கு மறுகின் கூடல்......" (ஷை.149:13-14)

"வாடாப்பூவின் கொங்கர் ஓட்டி
நாடு பல தந்த பசும் பூட் பாண்டியன்
பொன் மலி நெடுநகர்க் கூடல்......" (ஷை.253:4- 6)

"கடும்பகட்டுயானை நெடுந் தேர்ச் செழியன்,
மலைபுரை நெடுநகர்க் கூடல்......" (ஷை.296:11-12)

"பெரும் பெயர் வழுதி கூடல் அன்ன தன்
அருங்கடி வியன் நகர்ச்சிலம்பும் கழியாள்" (ஷை. 315:7-8)

"எம்மனை வாராயாகி, முன் நாள்,
நும்மனைச் சேர்ந்த ஞான்றை, அம்மனைக்
குறுந் தொடி மடந்தை உவந்தனள் — நெடுந்தேர்,
இழையணி யானைப் பழையன் மாறன்,

மாடமலி மறுகின் கூடல் ஆங்கண்,
வெள்ளத் தானையொடு வேறு புலத்து இறுத்த
கிள்ளி வளவன் நல் அமர் சா அய்,
கடும்பரிப் புரவியொடு களிறு பல வவ்வி,
ஏதில் மன்னர் ஊர் கொள,
கோதைமார்பன் உவகையின் பெரிதே" (ஷை.346:16-25)

"வான் ஆர் எழிலி மழைவளம் நந்த,
தேன் ஆர் சிமைய மலையின் இழிதந்து,
நான்மாடக்கூடல் எதிர்கொள்ள, ஆனா
மருந்து ஆடும் தீம்நீர் மலிதுறை மேய
இருந்தையூர் அமர்ந்த செல்வ"...... (பரி. திரட்டு1:1-5)

"உலகம் ஒருநிறையாத் தான் ஓர் நிறையாப்
புலவர் புலக் கோலால் தூக்க, உலகு அனைத்தும்
தான்வாட, வாடாத தன்மைத்தே—தென்னவன்
நான் மாடக் கூடல் நகர்" (ஷை. ஷை. 7:1-4)

"நான்மாடக்கூடல் மகளிரும் மைந்தரும்
தேன் இமிர் காவில் புணர்ந்திருந்து ஆடுமார்,
ஆனாவிருப்பொடு அணி அயர்ப" (கலித் 92:65-67)

"கண் ஆர் கண்ணி கடுந்தேர்ச் செழியன்
தமிழ் நிலைபெற்ற, தாங்கு அருமரபின்
மகிழ்நனை, மறுகின் மதுரையும் வறிதே"
(பத்துப்.சிறுபாண் 65-67)

"மைபகு பெருந்தோள் மழவர் ஓட்டி,
இடைப்புலத்து ஒழிந்த ஏந்து கோட்டுயானை,
பகைப்புலம் கவர்ந்த பாய்பரிப் புரவி,
வேல் கோல் ஆக, ஆள் செலநூறி,
காய்சின முன்பின் கடுங்கட் கூளியர்
ஊர் சுடு விளக்கின், தந்த ஆயமும்,
நாடுடை நல்எயில் அணங்குடைத் தோட்டி,
நாள்தொறும் விளங்கக் கைதொழுஉப் பழிச்சி
நாள் தரவந்த விழுக்கலம், அனைத்தும்,
கங்கை அம்பேர் யாறு கடற் படர்ந்தாங்கு
அளந்து கடை அறியா வளம்கெழு தாரமொடு,
புத்தேள் உலகம் கவினிக் காண்வர
மிக்குப் புகழ் எய்திய பெரும் பெயர் மதுரை
(ஷை. மதுரைக் 687-699)

"சேகா! கதிர்விரி வைகலில், கை வாரூஉக் கொண்ட
மதுரைப் பெருமுற்றம் போல, நின் மெய்க்கண்
குதிரையோ, வீறியது?" (கலித் 96:65-67)

**கூடலூர்.**

ஆறுகள் கூடும் இடம் கூடல் எனப்பெயர் பெற்று, அங்கே அமைந்த ஊரும் கூடலூர் எனப்பெயர் பெற்றிருக்கலாம்.

தென் ஆர்க்காடு மாவட்டத்தில் உள்ள கடலூர் கெடில நதியும், உப்பனாறும் கூடும் இடத்தில் அமைந்துள்ளது. கடலூர் என்றும், இன்று வழங்கப்படுகிறது. இந்த ஊர் கடல் அருகே அமைந்துள்ள காரணத்தால் கடலூர் எனப் பெயர் பெற்றதாகக் கூறப்படும கருத்து அவ்வளவு ஏற்புடையதல்ல. கூடலில் அமைந்த ஊர் கூடலூர் எனப் பெயர் பெற்று, அப்பெயரே கடலூர் என மருவி வழக்கில் வந்திருக்க வேண்டும்எனக் கூறுவதே பொருத்தமாகும்.

கூடலூர் என்ற பெயருடன் மலை நாட்டில் ஒரு கூடலூர் இருந்ததாகத் தெரிகிறது. இன்றைய ஊட்டி மலைத் தொடரில் மைசூர் செல்லும் வழியிலுள்ள கூடலூர் இது போலும்.

மதுரைக் கூடலூர் கிழார் என்ற தொடர் மதுரையை அடுத்து இருக்கும் கூடலூரைக் குறிப்பதாகக் கொள்ளலாம். இன்றைய மதுரை மாவட்ட கம்பங் கூடலூர் போலும்.

நற்றிணையில் 200, 380 ஆகிய பாடல்களையும், புறநானூற்றில் 299 ஆம் பாடலையும் பாடிய கிழாரும் கூடலூரைச் சேர்ந்தவர்கள்.

முதுமொழிக் காஞ்சியை இயற்றியவரும் ஐங்குறு நூறு தொகுத்தவருமான கிழார் என்ற புலவர் கூடலுரைச் சேர்ந்தவரே.

**கொடுகூர்.**

அக்கரை கண்ணிக்கொடுகூரை எறிந்தான் கடல் பிறக் கோட்டிய செங்குட்டுவன் என்ற செய்தி கொடுகூர் அக்கரையில் இருந்தமையைப் புலப்படுத்துகிறது.

ஒடுங்குதல் அல்லது பொருந்துதல் என்னும் பொருளையுடைய கொடுகு என்ற பகுதியைப்பெற்ற கொடுகூர் என்ற ஊர்ப் பெயர், அக்கரையில் பொருந்தியிருந்தமையால் பெற்ற பெயரோ என எண்ண இடமளிக்கிறது.

"அக்கரை நண்ணிக் கொடுகூ ரெறிந்து
பழையன் காக்குங் கருஞ்சினை வேம்பின்
முழாரை முழுமுதல் துமியப் பண்ணி".
(பதிற். ஐந்தாம்பத்து. பதிகம் 12—14)

**கொடும்பை.**

இவ்வூர் பாண்டி நாட்டின் கண்ணது. சிலப்பதிகாரக் காலத்தில் உறையூரிலிருந்து மதுரைக்குச் செல்லும் வழியிலிருந்ததென்று தெரிகிறது. கொடும்பை என்பது குளம் என்னும் பொருளையுடைய சொல்லாதலின் இவ்வூர்ப் பெயர் நீர்நிலையால் பெயர் பெற்றதாகக் கருதலாம்.

பராந்தக நெடுஞ்செழியன் (கி. பி. 768—815) வேள்விக் குடிச் செப்பேட்டில் கொடும்பாளூர் என்று இவ்வூர் குறிக்கப்பெற்றுள்ளது.

புதுக்கோட்டைப் பகுதி குளத்தூர் வட்டத்தில், புதுக்கோட்டைக்கு சுமார் 25 மைல் தொலைவில் இப்பெயருடன் பழைய ஊர் ஒன்று உள்ளது. சோழரோடு உறவு பூண்டிருந்த இருக்குவேளிர்களின் தலைநகரமாகக் கொடும்பாளூர் இருந்திருக்கிறது. இறுதியில் முஸ்லீம்களால் அழிக்கப்பட்டதாகத் தெரிகிறது.[19]

இராசசிம்மன் (கி. பி. 907—931) சின்னமனூர்ப் பெரிய செப்பேட்டில் கொடும்பைமாநகர் என்று இவ்வூர் குறிக்கப்பெற்றுள்ளது.

"நெடும் பேரத்த நீந்திச் சென்று
கொடும்பை நெடுங்குளம் கோட்டகம் புக்கால்" (சிலப். காடு காண்காதை. 69—70)

**கொண்கானம்.**

கொண்கானத்தின்கண் நன்னனின் ஏழில்மலை இருந்ததாக சங்க இலக்கியம் கூறுகிறது. ஏழில்மலை என்பது ஏழுமல என்று இப்பொழுது மலையாளத்தில் கூறப்படுவதே. ஆகவே கொண்கானம் இன்றைய வடமலபார்ப் பகுதியாகும்.

இந்தக் கொண்கானமே சிலப்பதிகாரத்தில் கொங்கணம் எனக் குறித்துக் கூறப்பெற்ற பகுதி என்பர்.[20]

காடும் மலையும் நிறைந்த பகுதியாகத் தோன்றுவதால்) அந்த மன்னனின் கானம் கோன்கானம் (கோனுக்குரியகானம்,

19. கலைக்களஞ்சியம்—4:239
20 Nannan of North Malabar P. L. Samy. P. 104.

எனப் பெயர்பெற்று, நாளடைவில் கோன் என்பது கொன் என மருவி கொன்கானம் என்று ஆகி கொண்கானம் என வழங்கப் பெற்றதோ என்று ஒரு எண்ணம் தோன்றுகிறது.

"பொன்படு கொண்கான நன்ன னன்னாட்
டேழிற் குன்றம் பெறினும்"—(நற். 391:6—7)

"கொங்கணர் கலிங்கர் கொடுங்கருநாடர்"— (சிலப். 25. காட்சிக்காதை. 156)

"கொங்கணக் கூத்தரும் கொடுங்கருநாடரும்"— (ஷை 26. கால்கோட்காதை: 106)

**கொல்லி.**

கொல்லி என இலக்கியங்களில் இடம்பெற்ற ஊர்ப்பெயர் மலைப்பகுதி ஊராகும். ஊரின்பெயர் அவ்வூர் அமைந்த மலைப் பகுதிக்கோ. மலைப்பகுதியின் பெயர் அங்கே அமைந்த ஊருக்கோ பெயராக அமைந்திருக்க வேண்டும். கொல்லி மலைப் பகுதியில் அமைந்தது இவ்வூர்.

கொல்லிமலை ஓரி என்ற வள்ளலுக்குரியது.

கொல்லிமலை சேலம் மாவட்டத்தில் நாமக்கல், ஆத்தூர் வட்டத்திலுள்ள ஒரு குன்றுத் தொடர். இம்மலையில் கொல்லிப் பாவை என்று ஒரு தெய்வப்படிமம் செய்துவைக்கப்பட்டிருந்தது. அது ஒரு பூதத்தால் அமைக்கப்பட்ட அழகிய பாவை என்று சங்க நூல்கள் கூறுகின்றன.

கொல்லிக் கூற்றத்தில் தகடுரெறிந்த பெருஞ் சேரவிரும் பொறை அதிகமானோடு இருபெரு வேந்தரையும் உடனிலை வென்று முரசுங்குடையுங் கலனுங் கொண்டான் என்று பதிற்றுப் பத்து கூறுகிறது.

"மாரி வண்மகிழ் ஓரிக் கொல்லிக்
கலிமயில் கலாவத்தன்ன இவள்
ஒலிமென் கூந்தல் நம் வயினானே" (நற். 265:7-9)

"கொல்லிக் கண்ணன்......" (குறுந். 34)

"பெரும்பூட் பொறையன் பேஎமுதிர் கொல்லிக்
கருங்கட் டெய்வம் குடவரை எழுதிய
நல்லியற் பாவை யன்ன" (குறுந். 89:4-6)

"காந்தள் அம்சிலம்பில் சிறுகுடி பசித்தென
கடுங்கண் வேழத்துக் கோடு நொடுத்து உண்ணும்
வல்வில் ஓரிக் கொல்லிக் குடவரை" (ஷை. 100:3-5)

"கொல்லிக் கூற்றத்து நீர்கூர் மீமிசைப்
பல்வேற் றானை யதிகமானோ
டிருபெரு வேந்தரையு முடனிலை வென்று
முரசுங் குடையுங் கலனுங் கொண்டு"

(பதிற். எட்டாம்பத்து பதிகம் 2-5)

"கழைவிரிந்து எழுதரு மழைதவழ் நெடுங்கோட்டுக்
கொல்லிப் பொருந! கொடித்தேர்ப் பொறைய"

(ஷை. 73:14-15)

"முழவின் அமைந்த பெரும்பழம் மிசைந்து
சாறு அயர்ந்தன்ன, கார் அணியாணர்த்
தூம்பு அகம் பழுனிய தீம்பிழி மாந்தி
காந்தள் அம்கண்ணி செழுங்குடிச் செல்வர்
கலிமகிழ் மேவலர் இரவலர்க்கு ஈயும்
சுரும்பு ஆர் சோலைப் பெரும்பெயற் கொல்லி"

(ஷை. 81:19-24)

"களிறு கெழுதானைப் பொறையன் கொல்லி
ஒன்று நீர் அடுக்கத்து வியல்அகம் பொற்பக்
கடவுள் எழுதிய பாவையின்
மடவது மாண்ட மாஅயோளே" (அகம். 62:13-16)

"..............................ஓரி
பல்பழம் பலவின் பயம்கெழு கொல்லிக்
கார்மலர் கடுப்ப நாளும்
ஏர்நுண் ஓதி மாஅயோளே" (ஷை. 208:21-24)

"ஓரிக் கொன்று சேரலர்க்கு ஈத்த
செவ்வேர்ப் பலவின் பயம் கெழு கொல்லி
நிலைபெறு கடவுள் ஆக்கிய
பலர்புகழ் பாவை அன்னநின் நலனே" (ஷை. 209:14-17)

"எரிமருள் கதிர திருமணி இமைக்கும்
வெல்போர் வானவன் கொல்லிக் குடவரை
வேய்ஒழுக்கு அன்னசாய் இறைப் பணைத்தோள்"

(ஷை. 213: 14-16)

"மறம்மிகு தானை பசும்பூண் பொறையன்
கார்புகன்று எடுத்த சூர்புகல் நனந்தலை
மாஇருங் கொல்லி உச்சித்தாஅய்,
ததைத்து செல்அருவியின் அலர் எழப்பிரிந்தோர்

(ஷை. 303:4-7)

"துன்னருந் துப்பின் வென்வேற் பொறையன்
அகல் இருங் கானத்துக் கொல்லி போல
தவா அரியரோநட்பே" (ஷை. 338:13-15)

"கொல்லி ஆண்ட வல்வில் ஓரியும்" (புறம். 158:5)

**கொற்கை.**

கொற்கை என்பது ஒரு துறைமுகநகரம். பொருநையாறு கடலோடு கலக்குமிடத்தில் விளங்கியது. இத்துறையில் விளைந்த முத்து கடல் கடந்த நாடுகளில் வாணிகப் பொருளாக அமைந்த சிறப்பினது. செங்குட்டுவன் காலத்தில் வெற்றி வேற் செழியன் என்னும் பாண்டியன் கொற்கை நகரைத் தலைநகராகக்கொண்டு அரசாண்டான்.[21] இக் கொற்கை இப்பொழுது திருநெல்வேலி மாவட்டத்தில் ஒரு சிற்றூராக உள்ளது.

கி. பி. 80 இல் நமது நாட்டுக் கடற்கரையைப் பார்வையிட்ட பெரிப்புளுஸ் என்னும் பயணநூலின் ஆசிரியரான கிரேக்கர், 'கொற்கை என்பது கன்னியாகுமரிக்கு அப்பாலுள்ள துறைமுகம். அங்கு முத்தெடுக்கும் தொழில் நடைபெறுகிறது. தண்டிக்கப் பெற்ற குற்றவாளிகள் அத்தொழிலைச் செய்கின்றார்கள். கொற்கை பாண்டி நாட்டைச் சேர்ந்தது"[22] என்று எழுதியுள் ளமை இந்நகரம் பாண்டி நாட்டைச் சார்ந்ததே என்ற கருத்தை வலியுறுத்தும்.

முத்தெடுப்போர் கொற்கையில் ஒரு தனிச் சேரியில் வாழ்ந் தனர். அதைச் சுற்றிலும் மதுக்குடிப்போர் வாழ்ந்த பாக்கம் இருந்தது.[23]

"திருச்செந்தூர் கல்வெட்டு ஒன்றில் 'கொல்கை' என்ற குறிப்பு உள்ளதால் 'கொல்கை' என்னும் பெயரே 'கொற்கை' ஆகியிருக்கவேண்டும் என்று அறிஞர் கால்டுவெல் எண்ணுகிறார். கொல்+கை' எனப் பிரித்துக் கொலை செய்யும் கை போன்றது என்று பொருள் கொண்டார். தொல் முது மாந்தரின் கொல் கருவி கையாகவே இருந்ததாகலின் அப்பெயர்ப் பொருத்தத்தால் கொற்கை'யாகி இருக்கவேண்டும் என விளக்கினார். கால்டு வெல் அவர்களின் திருநெல்வேலி வரலாற்று நூலை மொழி பெயர்த்த டாக்டர் ந. சஞ்சீவி, கடற்கரைப்பட்டினமாகிய கொற்

---

21. சிலப்பதிகாரம்—உரைபெறு கட்டுரை.
22. Foreign notices of South India, K. A. N. Sastri P. 59.
23. மதுரைக் காஞ்சி: 135—138.

கைக்கும் கடல் அலைப்புக்கும் உள்ள தொடர்பை எண்ணி, 'அலைகள் கொல்லும் (தாக்கும்) இடம்"—கொற்கை என்று பொருள் கண்டார்.[24] இக் கருத்துப் பொருத்தம் உள்ளதாகத் தோன்றவில்லை. கொல் என்னும் சொல் கொலைத் தொழிலோடு தொடர்பு கொண்டதாகக் கருதுவது பொருந்தவில்லை.

''கொண்டுழிப் பண்டம் விலையொரீஇக் கொற்சேரி' (ஐந்திணை ஐம்பது 21.)

''கொற் சேரித் துன்னூசி விற்பவர் இல்" (பழமொழி 5() இத் தொடர்களில் 'கொற்சேரி' என்பது கொல்லுச் சேரியைக் குறிக்கும். ஆகவே தொழிலைக் கொண்டு, கொற்கைப்பெயர் பெற்றது எனக் கருதுவதைவிட கொல்லுத் தொழில் கொண்டே கொற்கைப் பெயர்பெற்றிருக்கவேண்டும் என்பர்.[25]

'பொன் செய் கொல்லர்' [26] என்ற சங்க இலக்கியத் தொடர் பொன் கொண்டு பணிசெய்வோர் பொற் கொல்லர் எனப்பட்டதைக் குறிக்கும்.

படைக்கலம் முதலிய கருவிகள் செய்தல். அணிகலம் உண்கலம் முதலாம் கலங்கள் செய்தல், தெய்வத் திருஉரு செய்தல் ஆகியவை பொதுமைக் கொல்லுத் தொழில். 'காசு' என்னும் நாணயம் செய்யும் தொழில் தனிமைக் கொல்லுத் தொழில். அரசர் இருந்து கோன்மை செலுத்தும் கோ நகர்க் கண்ணே செய்யப் பெறும் சிறப்புக் கொல்லுத்தொழில். தங்க வேலை நடைபெறும் இடம் அக்கசாலை எனப் பெறும். கொற்கையில் அக்கசாலை விநாயகர் கோயில் என்றே ஒரு கோயில் உள்ளது. அக்கோயில் கல்வெட்டு ''மதுரோதைய நல்லூர் அக்கசாலை ஈசுவரமுடையார் கோயில் தானத்திற்காக"—என்று குறிக்கிறது. இன்றைக்கும் அந்த விநாயகர் கோயில் நிலைவாயில் மேற்கல்லில் ''அக்கசாலை ஈசுவரமுடையார்'' என்னும் கல்லெழுத்து விளங்குகிறது. அக்கோயிலைச் சுற்றி தெருக்கள் பதின் மூன்று இருந்தன என்றும், அவையெல்லாம் அக்கசாலைத் தெருக்கள் என்றும் செவிவழிச் செய்தி கூறுகிறது. கோயில் குளத்தின் வடபாலுள்ள ஊர் 'அக்கசாலை' என்னும் பெயருடன்

---

24. புலவர் இரா. இளங்குமரன்—செந்தமிழ்ச் செல்வி, சிலம்பு 50—பரல்1. Sep. 81.

25. ஷை

26. சிலப். 5:31; 20:74.

இன்றும் விளங்குகிறது. ஆனால், அக்கசாலை, அக்காசாலை ஆகியுள்ளது. இக்காரணங்களால் கொற்கை என்னும் ஊர்ப்பெயர் கொல்லுத் தொழிலால் பெற்ற பெயர் என்பதே சரியான முடிபு.[27]

'கொற்கு' என்பது ஒரு மரப்பெயர் என்றும் அப்பெயர் அடிப்படையில் 'கொற்கை' எனப் பெயர் பெற்றது என்றும் ஒரு கருத்து உள்ளது.[28]

"தோள்புறம் மறைக்கும், நல்கூர் நுசுப்பின்
உளர் இயல் ஐம்பால் உமட்டியர் ஈன்ற
கிளர் பூண் புதல்வரொடு கிலிகிலி ஆடும்
தத்துநீர் வரைப்பின் கொற்கைக் கோமான்"

(பத்துப். சிறுபாண். 59-62)

"விளைந்து முதிர்ந்த விழுமுத்தின்
இலங்குவளை இருஞ்சேரி
கட் கொண்டிக் குடிப்பாக்கத்து
நல் கொற்கையோர் நசைப்பொருந"

(ஷை. மதுரைக் 135-138)

"முத்துப்படு பரப்பின் கொற்கை முன்துறை" (நற். 23:66

"இருங்கழிச் சேயிறா இனப்புள் ஆரும்
கொற்கைக் கோமான் கொற்கையம் பெருந்துறை

(ஐங். 188:1-2)

"மறப்போர் பாண்டியன் அறத்தின் காக்கும்
கொற்கை அம்பெருந்துறை முத்தின் அன்ன
நகைப் பொலிந்து இலங்கும் எயிறுகெழு துவர்வாய்"

(அகம். 27:8—10)

"நல் தேர் வழுதி கொற்கை முன்துறை" (ஷை. 130:11)

---

27. புலவர் இரா. இளங்குமரன்—செந்தமிழ்ச் செல்வி — சிலம்பு. 56. பரல் 1. Sep 81

28. Even Korkai the ancient sea port of the Pandya kingdom probably got its name from korku, the Indian Laburnam which bears most beautiful dropping clusters of golden flowers. The name of korku occurs in Sangam literature in Narrinai (302) (Nannan of North Malabar P. L. Samy. Tamil cvilization (quarterly Research Journal of the Tamil university, Thanjauvur-Vol. 1. No. 1. P. 96.)

"வினை நவில் யானை விறற் போர்ப் பாண்டியன்
புகழ்மலி சிறப்பின் **கொற்கை** முன்துறை
அவிர்கதிர் முத்தமொடு வலம்புரி சொரிந்து
தழையணிப் பொலிந்த கோடு ஏந்து அல்குல்
பழையர் மகளிர் பனித்துறைப் பரவ" (ஷை 20: 3-7)

"பேர் இசைக் **கொற்கைப்** பொருநன் வெண்வேல்
கடும்பகட்டு யானை நெடுந்தேர்ச் செழியன்"
(ஷை. 296:10-11)

"இலங்கு இரும் பரப்பின் எறி சுறா நீக்கி
வலம்புரி மூழ்கிய வான்திமிற் பரதவர்
ஒலிதலைப் பணிலம் ஆர்ப்ப, கல்லென
கலிகெழு **கொற்கை** எதிர்கொள" (ஷை. 350:10-13)

"அன்று தொட்டுப் பாண்டியனாடு மழைவறங்கூர்ந்து வறுமையெய்தி வெப்பு நோயும் குருவும் தொடரக் **கொற்கை**யிலிருந்த வெற்றி வேற்செழியன் நங்கைக்குப் பொற்கொல்லர் ஆயிரவரைக் கொன்று களவேள்வியால் விழவொடு சாந்தி செய்ய நாடுமலிய மழை பெய்து நோயும் துன்பமும் நீங்கியது"[29]

"தண்செங் கழுநீர்த் தாதுவிரி பிணையல்
**கொற்கை** யம் பெருந்துறை முத்தொடு பூண்டு"
(ஷை. 14: 79-80)

"வாயிலோன், வாழி யெங் **கொற்கை** வேந்தே வாழி"
(ஷை. 20 : 30)

"நற்றிறம் படராக் **கொற்கை** வேந்தே" (ஷை. 20:66)

"**கொற்கைக்** கோண்கன் குமரித்துறைவன்" (ஷை. 23:11)

"**கொற்கை** யிலிருந்த வெற்றி வேற்செழியன்
பொற் றொழிற் கொல்லர் ஈரைஞ்ஞூற்றுவர்
ஒருமுலை குறைத்த திருமா பத்தினிக்
கொருபகலெல்லை யுயிர்ப்பலி யூட்டி
உரைசெல வெறுத்த மதுரைமூதூர்" (ஷை. 27:127—131)

"தெற்கண் குமரி ஆடிய வருவேன்,
பொன் தேர்ச் செழியன் **கொற்கை** அம்பேர் ஊர்க்
காவதம் கடந்து கோவலர் இருக்கையின்
ஈன்ற குழவிக்கு இரங்கேன் ஆகி,
தோன்றாத் துடவையின் இட்டனன் போந்தேன்"
(மணிமே, 13 : 83-87)

---

29. சிலப். உரைபெறு கட்டுரை. 1.

**கோட்டம்பலம்.**

" கேட்டம்பலம் என்னும் இவ்வூர், சேரமான் மாக்கோதையுடன் தொடர்புடையதாகக் கூறப்பெற்றிருப்பதால் கோடு அதாவது மலையுச்சி அங்கே பலர் கூடும் இடம் அம்பலம்-மலையுச்சியில் பலர் கூடும் இடத்திற்குப் பெயராய் முதற்கண் கோட்டம்பலம் என்பது அமைந்து நாளடைவில் அந்த இடம் ஊராய் வளர்ந்த பொழுது அந்த ஊருக்குப் பெயராய் அமைந்ததோ என எண்ணத் தோன்றுகிறது.

இவ்வூரில் துஞ்சியதால் சேரமன்னன் சேரமான் கோட்டம் பலத்துத் துஞ்சிய மாக் கோதை எனப் பெயர் பெற்றான்.

நற்றிணையில் 95ஆம் பாடல் இவ்வூரினராய கோட்டம்பல வனார் என்னும் புலவர் பாடியது.

**கோடி.**

இன்றைய இராமேசுரத்துக்கு அருகில் கோடிக்கரை என்று ஓர் ஊர் இருக்கிறது. "தொன்முதுகோடி" என்று சங்க இலக் கியம் குறிப்பது இந்தக் கோடிக் கரை என்னும் ஊரையேயாகும். கடலுட் செல்லும் தரைமுனை எனப்பொருள்படும் கோடி என்ற சொல்லே இவ்வூர் கடற்கரையில் அமைந்த ஊர் என்பதைக் காட்டுகின்றது.

கோடிக் கரையைப் பற்றிச் சங்க நூல்களில் அகநானூற்றில் ஒரே ஒரு செய்தி வருகின்றது. அகநானூறு 70ஆம் பாடலில் 'தொன்முதுகோடி' என்று அழைக்கப்படும் கோடிக்கரைப் பாண்டிய மன்னருக்கு உரியதாகக் கூறப்பெற்றுள்ளது.

இங்கு ஓசையிட்டுக் கொண்டிருந்த பறவைகளின் ஒலியை இராமன் நிறுத்தினான் என்று அகப்பாட்டு கூறுகிறது.

கோடிக்கரையில் பறவைகள் நிறைய இருந்தனவாக அகநா னூறு கூறும் செய்தி மிகவும் சிறப்பானதாகும். இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னர் கோடிக் கரையில் பறவைகள் மிகுதியாக இருந்தமை பற்றி அகநானூறு கூறிய செய்தி இன்றும் உண்மை யாக இருப்பது மிகவும் வியப்பான செய்தியாகும்.

தமிழ்நாட்டில் பறவைகளை மிகுதியாகக் காண வேடந்தாங் கல் செல்லுவதைப்போல கோடிக்கரைக்கும் செல்லலாம். அங்கே பலவகைப் பறவை இனங்களைக் காணலாம். ஆகவேதான் கோடிக் கரையைப் பறவைகள் புகலிடமாகத் (Bird Santuary) தமிழக அரசுநிறுயுவிள்ளது. இந்தப்பறவைகள்புகலிடம் இரண்டா

யிரம் ஆண்டு வரலாற்றுச் சிறப்புடையது என்பதை அகநானூறு தெரிவிக்கிறது.

கோடிக்கரை முற்காலத்திலே தமிழ்நாட்டின் தென்முனை யிருந்து இலங்கைக்குச் செல்லக் குறுக்கு வழியாக இருந்ததாகத் தெரிகிறது. கோடிக் கரை முனைக்கும் (Point calimere) இலங்கை யிலுள்ள பேட்ரோ முனைக்கும் (Point pedro) 40 மைல் தூரம் உள்ளது.

''வென்வேற் கவுரியர் தொன்முது கோடி
முழங்கிரும் பௌவம் இரங்கும் முன்துறை,
வெல் போர் இராமன் அருமறைக்கு அவித்த
பல்வீழ் ஆலம் போல
ஒலி அவிந்தன்று இவ் அழுங்கல் ஊரே''. (அகம். 70 : 13-17)

**கோவல் (கோவலூர்)**

இவ்வூர் கோவல் என்றும் கோவலூர் என்றும் சங்க இலக் கியங்களில் குறிக்கப் பெற்றுள்ளது. மலையமான் திருமுடிக்காரி முதலியோர் ஆண்ட ஊர். ஒரு காலத்தில் அதியமான் நெடுமான் அஞ்சியால் வெல்லப் பட்ட ஊர்.

தென்னார்க்காடு மாவட்டத்தில் தென்பெண்ணையாற்றின் கரையின் கண்ணுள்ளது.

''துஞ்சா முழவிற் கோவல் கோமான்
நெடுந்தேர்க் காரி கொடுங்கால் முன்துறை
பெண்ணை யம்பேரியாற்று நுண் அறல் கடுக்கும்
நெறி இருங் கதுப்பின் என் பேதைக்கு
அறியாத் தேஎத்து ஆற்றிய துணையே''—(அகம். 35. 14-18)

''முரண்மிகு கோவலூர் நூறி நின்
அரணடு திரி ஏந்திய தோளே''— (புறம். 99. 13-14)

**கோவூர்.**

சோழன் நலங்கிள்ளி, கிள்ளி வளவன், நெடுங்கிள்ளி ஆகிய மன்னர்களைப் பாடியவரும், நற்றிணை 393-ஆம் பாடல், குறுந் தொகை 65ஆம் பாடல், புறநானூறு 31-33, 41, 44-47, 68, 70, 308 373, 382, 386, 400 ஆகிய பாடல்கள் இவற்றைப் பாடியவருமான கிழார் என்னும் புலவர் கோவூரைச் சேர்ந்தவர். ஆகவே கோவூர் கிழார் எனப் பெற்றார்.

**கோழி.**

பார்க்க உறந்தை.

**கோனாடு.**

இது சோழ நாட்டு உள்நாடுகளில் ஒன்று. எறிச்சலூர் இப் பகுதியைச் சேர்ந்தது.

வெள்ளாற்றுக்கு வடக்கே உள்ள பகுதி கோனாடு என வழங்கப் பெறுகிறது.

**சாலியூர்—(நெல்லின் ஊர்).**

தலையாலங் கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ் செழியன்" நெல்லின் ஊர் கொண்ட உயர் கொற்றவ"[30] என்று சங்க இலக்கியத்தில் கூறப்பெற்றுள்ளான். இதற்குப் பொருள் எழுதிய நச்சினார்க்கினியர் "நெல்லின் பெயரை"ப் பெற்ற சாலி யூரைக் கொண்ட உயர்ந்த வெற்றியையுடையவன்" என்று கூறி னார். மேலும் அவரே 'நெல்லின்' என்பதிலுள்ள இன்னை அசையாக்கி 'நெல்லூர்' என்பாரும் உளர் என்றார்.

நெல்லூர் அல்லது சாலியூர் என்று சங்க இலக்கியத்தில் கூறப் பெற்ற இன்றைய ஆந்திர நாட்டைச் சேர்ந்த நெல்லூர்தான் என்பதில் ஐயமில்லை. ஆந்திர நாட்டு அப்பகுதி வரை அன்றைய தொண்டைமண்டலம் அதாவது தமிழகம் பரவி இருந்தது என்று கருதவேண்டும் தமிழகத்தின் எல்லை அவ்வூர் வரை விரிவடைந் திருந்தது என்பதையும் சிறப்புற்றிருந்தது என்பதையும் சங்க இலக்கியத்தின் மூலம் உணரமுடிகிறது.

சங்க காலத்தில் அவ்வூரின் பெயர் சாலியூர் என வழங்கியதா அல்லது நெல்லூர் என வழங்கியதா என்பதும் ஆய்வுக்குரியதே. சாலி என்பது ஒருவகை நெல்லின் பெயர் என்பதை "சாலி நெல்லின்"[31] என்ற சங்க இலக்கியத்தொடர் மூலம் உணர முடி கிறது. ஆகவே 'நெல்லின் ஊர்' என்ற தொடர் சாலியூர் என்ற பெயரையே குறிப்பதாகக் கொள்ளுவதில் தவறொன்று மில்லை. அப்பெயரே அவ்வூர் தமிழர் ஆட்சியில் இருந்த காலத் திலேயே "நெல்லின் ஊர்" போன்ற புலவர் குறிப்புகளால் நெல்லூர் என்றே திரிந்து வழங்கியிருக்கலாம் என எண்ணுவதி லும் தவறு ஒன்றும் இருப்பதாகத் தெரியவில்லை. அவ்வாறு திரிந்து வழங்கிய பெயர் இன்றளவும் வழக்கில் நிலைத்து விட்டி ருக்கலாம்.

---

30. மதுரைக்காஞ்சி. 88.
31. பொருநராற்றுப்படை. 246.

"கூனி, குயத்தின் வாய்நெல் அரிந்து
சூடு கோடாகப் பிறக்கி, நாள்தொறும்,
குன்று எனக் குவைஇய குன்றுக் குப்பை
கடுந்தெற்று மூடையின் இடம் கெடக் கிடக்கும்,
சாலிநெல்லின், சிறை கொள் வேலி,
ஆயிரம் விளையுட்டு ஆக,
காவிரி புரக்கும் நாடு கிழவோனே."
(பத்துப். பொருந. 242-248)

"சீர்சான்ற உயர் நெல்லின்
ஊர் கொண்ட உயர் கொற்றவ." (ஷை. மதுரைக். 87–88)

**சிக்கற்பள்ளி.**

சேரமான் செல்வக் கடுங்கோவாழியாதன் **சிக்கற்பள்ளியில்** துஞ்சியதாகத் தெரிகிறது. சேரமான் சிக்கற்பள்ளி துஞ்சிய செல்வக் கடுங்கோ வாழியாதன்மீது குண்டுகட் பாலியாதன் என்ற புலவர் பாடிய சங்க இலக்கியப் பாடல் (புறம் 387) ஒன்று உள்ளது. இவ்வூரைப் பற்றிய பிற செய்திகள் ஒன்றும் அறிய முடியவில்லை.

**சித்திரமாடம்.**

பாண்டியன் **சித்திரமாடத்துத்** துஞ்சிய நன்மாறன், மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச்சாத்தனாரால் பாடப்பெற்றான் (புறம் 59) என்ற செய்தியால் நாம் அறியும் பெயர் சித்திர மாடம் என்பது. பெரும்பாலும் ஊர்ப் பெயராகத்தான் இருக்க வேண்டும் என்று எண்ண முடிகிறது. ஆயினும் அரண்மனையின் மேல்மாடம் எனக்கூறுவதே பொருத்தமுடையதாகத் தெரிகிறது.

**சிறுகுடி.**

தஞ்சை மாவட்டத்தில் பேரளத்துக்கு அருகே சிறுகுடி என்ற பெயருடன் ஓர் ஊர் உள்ளது.

மதுரை மாவட்டத்தில் நத்தத்துக்கு அருகேயும் இப்பெயருடன் ஓர் ஊர் உள்ளது.

குடி என்னும் சொல் ஊர்ப் பெயர்களில் அமைந்து குடியிருப்பை உணர்த்துவதாகும். உறவு முறையையுடைய பல குடும்பத்தார் ஒரு குடியினராகக் கருதப்படுவர். இத்தகைய குடியினர் சேர்ந்து வாழும் இடம் குடியிருப்பு என்றும், குடி என்றும் சொல்லப்படும்.[32] அத்தகைய குடியிருப்புகள் பரப்பின்

32. ஊரும் பேரும் ரா. பி. சேதுப்பிள்ளை. பக். 60

சிறுமையால் சிறுகுடி எனப் பெயர் பெற்றிருக்கலாம். (சென்னையை அடுத்துள்ள பெருங்குடி என்னும் ஊர்ப் பெயர் ஒப்பு நோக்கத்தக்கது)

குறிஞ்சி நிலத்து ஊர் சிறுகுடி எனப் பெயர் பெறும். கடற்கரை ஊரும் அப்பெயர் பெறுகின்றது. இவையெல்லாம் ஒரு குறிப்பிட்ட ஊரைக் குறிப்பன அல்ல.

பண்ணன் என்ற வள்ளலுக்குரியது சிறுகுடி என்று சங்க இலக்கியம் கூறுகிறது. ஆகவே சிறுகுடி கிழான் பண்ணன் என்னும் பெயர் பெற்றான்.

"வாணன் சிறுகுடி அன்ன" (நற். 340 : 9)

"மூதில் அருமன் பேரிசைச் சிறுகுடி" (ஷை. 367 : 6)

"தனக்கென வாழப் பிறர்க்கு உரியாளன்
பண்ணன் சிறுகுடிப் படப்பை நுண் இலைப்
புன்காழ் நெல்லிப் பைங்காய் தின்றவர்
நீர்குடி சுவையின் தீவிய மிழற்றி" (அகம். 54 : 14-17)

"நெடுங் கால் மாஅத்து ஊழுறு வெண் பழம்
கொடுந் தாள் யாமை பார்ப்பொடு கவரும்
பொய்கை சூழ்ந்த, பொய்யா யாணர்
வாணன் சிறுகுடி வடாஅது
தீம்நீர்க் கான்யாற்று அவிர் அறல் போன்றே

(ஷை 117 : 15-19)

"வெண்ணெல் அரிநர் மடிவாய்த் தண்ணுமை
பல்மலர்ப் பொய்கைப் படுபுள் ஓப்பும்
காய் நெல் படப்பை வாணன் சிறுகுடி" (ஷை 204 : 10-12)

"வாணன் சிறுகுடி வணங்குகதிர் நெல்லின்
யாணர்த் தண்பணைப் போது வாய் அவிழ்ந்த
ஒண் செங்கழுநீர் அன்ன........." (ஷை 269 : 22-24)

"கிள்ளி வளவன் நல்இசை உள்ளி,
நாற்ற நாட்டத்து அறுகாற் பறவை
சிறுவெள் ஆம்பல் ஞாங்கர் ஊதும்
கைவள் ஈகைப் பண்ணன் சிறுகுடி" (புறம் 70 : 10-13)

**சிறைக்குடி.**

நற்றிணையில் 16ஆம் பாடலையும் குறுந்தொகையில் 56, 57, 62, 132, 168, 222, 273, 300 ஆகிய பாடல்களையும் பாடிய

ஆந்தையார் என்ற சங்ககாலப் புலவர் சிறைக்குடி என்னும் ஊரினர். ஆகவே சிறைக்குடி ஆந்தையார் எனப் பெற்றார்.

**செங்கண்மா.**

'இரணிய முட்டத்துப் பெருங்குன்றூர்ப் "பெருங் கௌசிகனார் பல்குன்ற கோட்டத்துச் செங்கண் மாத்து வேள் நன்னன் சேய் நன்னனைப் பாடிய மலைபடுகடாம்" என்ற தொடர் 'செங்கண்மா' என்னும் ஊர் நன்னனுக்கு உரியது என அறிய முடிகிறது.

கொண்கானத்து நன்னன்வேறு. செங்கண் மாவைத் தலை நகராகக் கொண்டு பல்குன்ற நாட்டை ஆண்ட நன்னன் வேறு.[33]

நன்னன் சேய் நன்னனின் தலைநகராகிய இச்செங்கண் மாநகர் தொண்டைநாட்டைச் சார்ந்தது. வட ஆர்க்காடு மாவட்டத்திலுள்ள சவ்வாது மலைத்தொடரே நன்னனின் ஆட்சியின் கீழ் இருந்த மலைநாடு. அம் மலையின் தெற்கில் 'செங்கம்' என்னும் பெயருடன் இன்று விளங்கும் ஊரே நன்னன் காலத்தில் செங்கண்மா என்னும் பெயருடன் பெரிய நகரமாய் விளங்கியது.

செங்கண்மா என்றால் சிவப்பான கண்ணையுடைய விலங்கு-கரடி எனப்பொருள் காணப்பெறுகிறது. மலைநாட்டுப் பகுதியை சேர்ந்த இவ்வூர் 'சிவப்பான கண்ணையுடைய விலங்காகிய கரடி யுடன் ஏதாவது ஒரு வகையில் தொடர்பு கொண்டு பெயர் பெற்றதோ என எண்ணத் தோன்றுகிறது. இக்கருத்தை வலி யுறுத்த சான்று ஒன்றும் இல்லை. மேலும் நடைபெறும் ஆய்வில் இதற்கேற்ற சான்று ஏதாவது கிடைக்கலாம்

"மலையென மழையென மாடமோங்கித்
துனிதீர் காதலினினிதமர்ந்து றையும்
பனிவார் காவிற்புல் வண்டிமிரும்
நனிசேய்த்தன்றவன் பழவிறன் மூதூர்"
(பத்துப். மலைபடு. 484-487)

மூதூர் என்பது செங்கண்மாவைக் குறிப்பது. அக்காலத்தில் பெரிய நகரமாய் இருந்திருக்க வேண்டும் என்பதை விளக்கும் பகுதி இது.

---

33. Nannan of North Malabar by P. L. Samy. Tamil civilization (quarterly Research Journal of the Tamil University, Thanjavur) Vol. 1. No. 1,

**செந்தில்.**

பார்க்க அலைவாய்.

**செயலூர்.**

இளம்பொன் சாத்தன் கொற்றனார் என்றபுலவர் செயலூர் என்னும் ஊரினர் (அகம் 177)

"வயிரச் செயல் தாலி மணிவடம் (S. 1. 1. ii, 16) என்ற கல் வெட்டுத் தொடரில் இழைப்பட வேலை அதாவது ஆபரணத்தில் மணி வைத்துச் செய்யும் வேலை என்ற பொருளில் செயல் என்னும் சொல் ஆட்சி பெற்றுள்ளது இவ்வூரில் அந்த இழைப்பட வேலை நடைபெற்று வந்து அதனல் தான் இப்பெயர் பெற்றதோ என்ற எண்ணம் தோன்றுகிறது. நடைபெற்றதொழிலால் பெயர் பெற்ற ஊராக இருக்கலாம்.

செயலூரைச் சேர்ந்த புலவர் இளம் பொன் சாத்தன் கொற்றனார் எனப் பெயர் பெற்றிருப்பதை நோக்கும் பொழுது பொன் என்னும் அடைமொழி ஏதாவது சிறப்பைக் குறிக்கிறதோ என ஆயும் எண்ணம் உருவாகிறது. பொன் அணியில் இழைப்பட வேலை நடைபெறும் ஊரில் இருந்த புலவர் பெயரில் பொன் என்ற அடையிருப்பது நாம் மேற்கூறிய ஊர்ப் பெயர்க் காரணத்தை உறுதிப்படுத்துவதாகத் தெரிகிறது.

**செல்லூர்.**

செல்லூர் என்னும் பெயருடன் சோழ நாட்டின் கீழைக்கடற் கரையில் ஒரூர் இருந்தது.

வைகையாற்றின் வடகரையில் மதுரை நகரையடுத்து ஒரு செல்லூர் இருந்தது. இன்று மதுரைப் பெருநகரின் ஒரு பகுதி யாக இணைந்துள்ளது.

செல்லூர்க்குணாது பெருங்கடல் முழக்கிற்று ஆகி[34] என்ற சங்க இலக்கியத் தொடர் செல்லூருக்குக் கிழக்கே பெருங்கடல் இருந்த செய்தியை விளக்குவதால் சோழ நாட்டில் கீழைக் கடற் கரையில் இருந்த செல்லூரே சங்க இலக்கியத்தில் குறிக்கப் பெற் றிருக்க வேண்டும் என்று தெரிகிறது.

பரசுராமன் செல்லூரின்கண் வேள்வி செய்து முடித்தான் என்னும் வரலாற்றுச் செய்தியும் சங்கஇலக்கியத்தில் இடம் பெற்

---

34. அகநானூறு 90 : 9.

றிருப்பதாகக் கருதுகின்றனர்.[35] 'கெடாஅத்தீ' என்ற தொடருக்கு வேள்வித் தீ எனப் பொருள் கண்டார்.

குறுந்தொகையில் 363-ஆம் பாடலையும், அகநானூற்றில் 66, 250 ஆகிய பாடல்களையும் பாடிய புலவர்கள் இவ்வூரைச் சேர்ந்தவர்கள்.

"அருந் திறற் கடவுட் செல்லூர்க் குணா அது
பெருங் கடல் முழக்கிற்று ஆகி, யாணர்
இரும்பு இடம் படுத்த வடுவுடை முகத்தர்
கருங்கட் கோசர் நியமம் ஆயினும்! (அகம். 90:9—12).

" கெடா அத்தீயின் உருகெழு செல்லூர்
கடா அ யானைக் குழூஉச்சமம் ததைய,
மன்மறுங்கு அறுத்த மழுவாள் நெடியோன்
முன்முயன்று அரிதினின் முடித்த வேள்வி,
கயிறு அரையாத்த காண்தகு வனப்பின்
அருங்கடி நெடுந்தூண் போல, யாவரும்
காணலாகா மாண் எழில் ஆகம்" (ஷை. 220:3—9)

**தகடூர்.**

அதியமான் நெடுமான் அஞ்சி என்ற வள்ளலின் தலை நகராய் இருந்த ஊர் தகடூர்.

சேலம் மாவட்டத்திலுள்ள இன்றைய தருமபுரியே தகடூர் என்று கருதுகின்றனர். தருமபுரி சேலம் மாவட்டத்தில் ஓமலூர், ஒசூர் வட்டங்களுக்கு இடையிலுள்ள ஒரு வட்டம். இங்கு 9—10 ஆம் நூற்றாண்டு முதல் கல்வெட்டுகள் கிடைக்கின்றன. அக் காலத்து இதனை நுளம்பபல்லவர்கள் ஆண்டனர் என்று தெரிகிறது. 1178-ஆம் ஆண்டிலும், அதற்கு அடுத்த ஆண்டிலும் மூன்றாம் குலோத்துங்கன் கல்வெட்டுகள் கிடைக்கின்றன. பிறகு விஜய நகரக் கல்வெட்டுகள் கிடைக்கின்றன.[36]

"பல் பயன் நிலைஇய கடறுடைய வைப்பின்
வெல் போர் ஆடவர் மறம்புரிந்து காக்கும்
வில் பயில் இறும்பின், தகடூர் நூறி" (பதிற் 78:7—9)

---

35. அகநானூறு (செய்யுள் 121—400) கழகவெளியீடு 1970. பொ. வே, சோமசுந்தரனார் விளக்க உரை செய். 220. பக். 315.

36. கலைக்களஞ்சியம் 5—403.

"**தகடூர்** எறிந்து, நொச்சி தந்து எய்திய
அருந்திறல் ஒள் இசைப் பெருஞ் சேரல் இரும்பொறையை"
(ஷை. 8. ஆம்பத்து பதிகம். 9—10)

**தங்கால்.**

தங்கால் என்பது பாண்டி நாட்டிலுள்ள ஓரூர். திருத்தங்காலூர் என இன்று வழங்குகிறது. இவ்வூர் பாண்டியனால் வார்த்திகனுக்குப் பிரமதேயமாக வழங்கப்பெற்றது.

பூட்கோவலனார் என்ற சங்ககாலப் புலவர் இவ்வூரைச் சேர்ந்தவர்.

"செங்கால் தென்னன் திருந்து தொழில் மறையவர்
**தங்கால்** என்பதூரே அவ்வூர்ப்
பாசிலை பொதுளிய போதிமன்றத்துத்
தண்டே குண்டிகை வெண்குடை காட்டம்
பண்டச் சிறுபொதி பாதக் காப்பொடு
களைந்தனன் இருப்போன் காவல் வெண்குடை
விளைந்துமுதிர் கொற்றத்து விறலோன் வாழி"
(சிலப். 23:74-80)

"அறியா மாக்களின் முறைநிலை திரிந்தவென்
இறைமுறை பிழைத்தது பொறுத்தல் நுங் கடனெனத்
தடம்புனற் கழனித் **தங்கால்** தன்னுடன்
மடங்கா விளையுள் வயலூர் நல்கி" (ஷை. ஷை. 116-119)

**தலையாலங்கானம்.**

பார்க்க ஆலங்கானம்.

**திருச்செங்கோடு.**

செங்கோடு என்று இலக்கியத்தில் வழங்கிய ஊர்ப்பெயர் திரு என்னும் முன் ஒட்டுடன் இணைந்து திருச்செங்கோடு என வழங்குகிறது.

செந்நிறம் வாய்ந்த மலையின் சிகரம் என்னும் பொருளில் செங்கோடு எனப் பெயர் பெற்றிருக்கலாம். அல்லது செம்மையான அதாவது செங்குத்தான மலையின் சிகரம் ஆகையால் செங்கோடு எனப் பெயர் பெற்றது என்றும் கொள்ளலாம்.

பிற்காலத்தில் செங்குன்றம் என்றும் செங்குன்றூர் என்றும் பக்தி இலக்கியங்களில் கூறப்பெற்றுள்ளது.

இன்றைய சேலம் மாவட்டத்தின் தென்மேற்கு மூலையின் அமைந்திருக்கிறது திருச்செங்கோடு. இந்த ஊர்ப்பெயர் அப்பெயருடைய வட்டத்திற்கும் பெயராய் வந்துள்ளது.

ஆதிசேடன் பூசித்ததால் நாகமலை என்றும் இதற்குப் பெயர் உண்டு அதற்கு அறிகுறியாகப் பெரிய பாம்பின் உருவம் பாறையில் செதுக்கப்பட்டுள்ளது.[37]

"சீர்கெழு செந்திலும் செங்கோடும் வெண்குன்றும்
ஏரகமும் நீங்கா இறைவன்" (சிலப் 24:8-9)

**திருச்செந்தில்.**

பார்க்க. அலைவாய்.

**திருப்பரங்குன்றம்.**

பார்க்க-குன்று-குன்றம்.

**திருமால்குன்றம்.**

திருமால்குன்றம் என்பது மதுரையை அடுத்துள்ள அழகர் மலையேயாகும். திருமாலிருஞ் சோலை என்றும் பிற்காலத்தில் வழங்கப் பெற்றிருக்கிறது.[38]

அங்கே ஒருபிலம் உள்ளது என்றும், அப்பிலத்து நெறியில் புண்ணிய சரவணம், பவகாரணி, இட்டசித்தி என்னும் பெயர் கொண்ட மூன்று பொய்கைகள் உள்ளன என்றும் இலக்கியம் கூறுகிறது.

"அரிதின் பெறு துறக்கம் மாலிருங்குன்றம்
எளிதின் பெறல் உரிமை ஏத்துகம், சிலம்ப"
(பரி1. 15 : 17-18)

"கடம்பல கிடந்த காடுடன் கழிந்து
திருமால்குன்றத்துச் செல்குவி ராயிற்
பெருமால் கெடுக்கும் பிலமுண்டாங்கு
விண்ணோ ரேத்தும் வியத்தகு மரபிற்
புண்ணிய சரவணம் பவகரணியோ
டிட்ட சித்தி யெனும் பெயர் போகி
விட்டு நீங்கா விளங்கிய பொய்கை
முட்டாச் சிறப்பின் மூன்றுள...... (சிலப். 11 : 90-97)

---

37. கலைக்களஞ்சியம் 5:743.

38. "மதுரை நாட்டு மேலூர் வட்டத்திலுள்ள அழகர் கோயிலே திருமாலிருஞ் சோலை. M. E. R. 1928-29. தென் திருமாலிருஞ்சோலை என்பது திருநெல்வேலி நாட்டிலுள்ள சீவலப் பேரியின் பெயர் என்று சாசனம் கூறும் 408 of 1906" — ஊரும் பேரும் ரா. பி. சேதுப் பிள்ளை பக். 41.

**திருவெஃகா.**

'பாம்பணையாகிய பள்ளியில் துயில் கொண்ட திருமாலின் திருவெஃகா' என்பது சங்க இலக்கியச் செய்தி.

வெஃகல் என்றால் விருப்பம் என்றும் வெஃகுதல் என்றால் விரும்புதல் என்றும் பொருள் இருப்பதால் "பெருமகிழ் இருக்கையாகிய அவ்விடம் விருப்பம் தருவது, விரும்பி உறைவதற்கேற்ற இடம் என்ற கருத்தில் வெஃகா எனப் பெயர் பெற்று, திரு என்ற முன் ஒட்டுடன் இணைந்து திருவெஃகா என நாளடைவில் வழங்கி இருக்கலாம் என எண்ணத் தோன்றுகிறது.

காஞ்சிபுரத்திற்குத் தென்கிழக்கே சுமார் இரண்டு மைல் தொலைவில் உள்ளது திருவெஃகா.

பிரமன் செய்த வேள்வியை அழிக்க வந்த வேகவதி என்னும் ஆற்றைத் தடுக்கத் திருமால் அந்த ஆற்றின் குறுக்கே அணையாகப் பள்ளிகொண்டார் என்பது புராணச்செய்தி.

வேகவேது என்ற வடசொல் வேகவணை எனத் தமிழாகி வேகணை' வெஃகணை, வெஃகா என மருவி இவ்வூரைக் குறித்ததென்பர்.[39]

"..........................நீடுகுலைக்
காந்தள் அம் சிலம்பில் களிறு படிந்தாங்கு,
பாம்பணைப் பள்ளி அமர்ந்தோன் ஆங்கண்
வெயில் நுழைபு அறியா, குயில் நுழை பொதும்பர்
குறுங்காற் காஞ்சி சுற்றிய நெடுங்கொடிப்
பாசிலைக் குருகின் புன்புற வரிப்பூ,
கார் அகல் கூவியர் பாகொடு பிடித்த
இழைசூழ் வட்டம் பால் கலந்தவைபோல்,
நிழல் தாழ் வார் மணல் நீர் முகத்து உறைப்ப,
புனல்கால் கழீஇய பொழில்தொறும், திரள்கால்
சோலைக் கமுகின் சூல் வயிற்றன்ன
நீலப்பைங்குடம் தொலைச்சி, நாளும்
பெருமகிழ் இருக்கை மரீஇ........."

(பத்துப், பெரும்பாண்-371-383)

---

39. பத்துப்பாட்டு—பெரும்பாணாற்றுப்படை 383.
40. கனைக்களஞ்சியம் 6; 19.

**துறையூர்.**

துறையூர் ஓடைகிழார் என்ற புலவர் ஒருவர் பாடிய சங்க இலக்கியப் பாடல் ஒன்றில்' தண்புனல் வாயில் துறையூர்'' இடம் பெற்றுள்ளது. ஊரால் பெயர் பெற்றார் போலும் இப்புலவர்.

நீர்த்துறையின்கண் அமைந்த ஊர் துறையூர் எனப் பெயர் பெற்றிருக்க வேண்டும். 'நாள்தோறும் குளிர்ந்த நீர் ஓடும் வாய்த்தலைகளையுடைய துறையூர்' என்று சங்க இலக்கியம் கூறுகிறது.

துறையூர் என்ற பெயருடன் தென் ஆர்க்காடு மாவட்டத்தில் விழுப்புரம் வட்டத்தில் ஓர் ஊரும், திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் லால்குடி வட்டத்தில் ஓர் ஊரும், முசிரிவட்டத்தில் ஓர் ஊரும் உள்ளன.

''நினக் கொத்தது நீ நாடி
நல்கினைவிடுமதி பரிசில் அல்கலும்
தண்புனல் வாயிற் றுறையூர் முன்றுறை
நுண்பல மணலினு மேத்தி
உண்குவம் பெரும நீ நல்கிய வளனே (புறம், 136:23-27)

**தேனூர்.**

சங்க இலக்கிய அகத்துறைப் பாடல்களில், தலைவியின் நலம் பாராட்டும் பொழுது 'தேனூரன்ன' என்னும் தொடர் பல இடங்களில் ஆட்சி பெற்றுள்ளது. இதன் மூலம் தேனூர் என்னும்ஊர்ப் பெயர் நமக்குக் கிடைக்கிறது.

இனிமை என்றும், மணம் என்றும் பொருள்படும் தேன் என்ற சொல்லின் அடியாக இவ்வூர்ப் பெயர் அமைந்திருக்கிறது. வேனிலிலும் தண்புனல் ஓடும் தேனூர் ஆகையால் சோலைகள் நிறைந்து மணம் பரப்பிக் கொண்டே இருந்தது. அதனால்தான் தேனூர் எனப் பெயர் பெற்றதோ எனத் தோன்றுகிறது.

இத் தேனூர் தென்னவன் நல்நாட்டு உள்ளது எனக் கூறப் பெற்றிருப்பதால் பாண்டி நாட்டின் அமைந்த ஊர் எனத் தெரிகிறது.

மதுரையையடுத்து வைகையில் வடகரையில் தேனூர் என்று ஓர் ஊர் உள்ளது.

பராந்தக வீரநாராயணனின் (கி. பி 859-907) தளவாய்புரச் செப்பேட்டில் இவ்வூர்ப் பெயர் இடம் பெற்றுள்ளது.

"திண் தேர்த் தென்னவன் நல்நாட்டு உள்ளதை
வேனில் ஆயினும் தண் புனல் ஒழுகும்
தேனூர் அன்ன இவள்......" (ஐங். 54 : 1–3)

"தேர்வண் கோமான் தேனூரன்ன" (ஷை. 55 : 2)

"ஆம்பலஞ்செறுவில் தேனூரன்ன" (ஷை. 57 : 2)

**தொண்டி.**

தொண்டி என்னும் பெயருடைய ஓர் ஊர் துறைமுகப் பட்டினமாக இருந்திருக்கிறது.

கடற்கழி என்னும் பொருளுடைய தொண்டி என்னும் சொல் படகுகள் போன்றவை வந்து செல்லுவதற்கு ஏற்ற ஆழமான பள்ளமான கடற்கரை ஓரத்தில் அமைந்த இடத்தைக் குறிக்க முதலில் பயன் படுத்தப் பெற்று, நாளடைவில் கடற்கரை நகரத்திற்குப் பெயராய் அமைந்திருக்க வேண்டும்.

தொண்டி என்ற பெயருடன் தமிழ் நாட்டில் இரண்டு துறைமுக நகரங்கள் இருந்தன என்று இலக்கியங்களால் தெரிகிறது.

அவற்றுள் ஒன்று சங்ககாலத்தில் மேற்குக் கடற்கரையில் அமைந்திருந்த தொண்டி என்னும் துறைமுக நகரம். இது சேரர்களுக்குரியது.

மற்றொன்று கிழைக் கடற்கரையில் பிற்காலத்தில் அதே பெயருடன் அமைந்த நகரம். இது சோழர்களுக்குரியது.

ஒரு கடற்கரை நகரம் அழிந்த பிறகு அதே பெயருடன் வேறொரு நகரம் அமைந்திருக்க வேண்டும்.

மேலைக் கடற்கரையில் அமைந்திருந்த தொண்டி மார்கழி மலர்ந்த நெய்தல் மலராலும், நீராடுவோருடைய கோதையாலும் மணம் கமழும் கானலையுடையது. சேரமான் கோக் கோதை மார்பனுடையது. இத்துறைமுகநகரம்தொண்டிப்பத்து' என்னும் பத்துப் பாக்களால் ஐங்குறுநூற்றில் அம்மூவனார் என்னும் புலவரால் பாடப் பெற்றுள்ளது. இத் தொண்டி சேர மன்னரின் தாயத்தாருக்குத் தலை நகரமாக இருந்திருக்க வேண்டும். இத் தொண்டி முற்காலத்தில் பல நாட்டு மரக்கலங்களும் வந்து தங்கும். பெருந்துறைமுகமாக விளங்கியது என்பது பழைய நூல்களாலும் தாலமி என்னும் கிரேக்க ஆசிரியரது குறிப்புகளாலும் அறியப்படுகின்றது. அகலப் புழையை (ஆலப்புழை) அடுத்துள்ள தொண்டிப் பாயில் என்னும் சிற்றூரே பழைய தொண்டி எனக் கருதுகின்றனர்.

'ஓங்கிரும் பரப்பின் வங்க வீட்டத்துத் தொண்டியோர் (சிலப். 14 : 106-107) என்ற தொடருக்கு, 'குணதிசைக்கண் தொண்டி யென்னும் பதியிலுள்ள அரசரால்' என்று பொருள் கூறி 'தொண்டியோர் சோழகுலத்தோர்' என்று கூறிய அடியார்க்கு நல்லாரின் விளக்கம் மற்றொரு தொண்டி சோழர் களுக்கு உரியது என்பதைக் காட்டுகிறது.

பகைவரை அட்டு, அவர் பல்லைக் கொணர்ந்து தமது கோட்டை வாயிற் கதவில் வைத்துத் தைக்கும் பண்டை வழக்கையொட்டி, தொண்டை நகரின் வாயிற் கதவில், போரில் வெல்லப்பட்ட மூவன் என்பவனின் வலிய முட் போன்ற பற்களை பிடுங்கிக் கொணர்ந்து வைத்துஇழைத்திருந்தனர். இத்தொண்டி நகரின் தலைவன் சேரமான் கணைக்காலிரும்பொறை.

''திண்டேர்ப் பொறையன் தொண்டி
தன்திறம் பெறுக, இவள் ஈன்றதாயே" (நற். 8 : 9-10)

''..............................மூவன்
முழுவலி முள்ளெயி றழுத்திய கதவிற்
கானலந் தொண்டிப் பொருநன்'' (ஷை 18 : 2-4)

கல்லென் புள்ளின் கானல் அம் தொண்டி,
நெல் அரி தொழுவர் கூர்வாள் உற்றென,
பல் இதழ் தயங்கிய கூம்பா நெய்தல்
நீர் அலைத் தோற்றம் போல
ஈரிய கலுழும் நீநயந்தோள் கண்ணே'' (ஷை 195 : 5-9)

''குணகடல் திரையது பறைபுத நாரை
திண்டேர்ப் பொறையன் தொண்டி முன்துறை
அயிரை ஆர் இரைக்கு அணவந்தாஅங்கு"
(குறுந். 128 : 1-3)

''திண் தேர் நள்ளி கானத்து அண்டர்
பல் ஆ பயந்த நெய்யின், தொண்டி
முழுதுடன் விளைந்த வெண்ணெல் வெஞ்சோறு
எழுகலத்து ஏந்தினும் சிறிது—என்தோழி
பெருந்தோள் நெகிழ்த்த செல்லற்கு
விருந்து வரக் கரைந்த காக்கையது பலியே" (ஷை 210 : 1-6)

''தொண்டி அன்ன என் நலம் தந்து
கொண்டனை சென்மோ மகிழ்ந நின் (ஷை 238 : 4-5)

"குடக்கோ நெடுஞ் சேரலாதற்கு வேளள்
ஆவிக்கோமான் தேவி ஈன்ற மகன்
தண்டா ரணியத்துக் கோட்பட்ட வருடையைத்
தொண்டியுள் தந்து கொடுப்பித்துப் பார்ப்பார்க்குக்
கபிலையொடு குடநாட்டு ஓர் ஊர் ஈத்து
வானவரம்பன் எனப்பேர் இனிது விளக்கி"
(பதிற். 6ஆம் பத்து பதிகம் 1–6)

"வளைகடல் முழவின் தொண் டியோர் பொருந"
(ஷை. 88:21)

"பழந்திமில் கொன்ற புதுவலைப் பரதவர்
மோட்டுமணல் அடைகரைக் கோட்டு மீன் கெண்டி
மணம் கமழ் பாக்கத்துப் பகுக்கும்
வளம் கெழு தொண்டி அன்ன இவள் நலனே"
(அகம். 10:10-13)

"நெடுந்திமில் தொழிலொடு வைகிய தந்தைக்கு
உப்பு நொடை நெல்லின் மூரல் வெண் சோறு
அயிலை துழந்த அம்புளிச் சொரிந்து
கொழுமீன் தடியொடு குறுமகள் கொடுக்கும்
திண்தேர்ப் பொறையன் தொண்டி அன்ன" (ஷை. 60:3-7)

"வெண்கோட்டு யானை விறற் போர்க்குட்டுவன்
தெள்திரைப் பரப்பின் தொண்டி முன்துறை"
(ஷை. 290:12-13)

"குலை இறைஞ்சிய கோள்தாழை
அகல்வயல், மலைவேலி
நிலவுமணல் வியன் கானல்
தெண்கழிமிசைத் தீப்பூவின்
தண் தொண்டியோர் அடுபொருந" (புறம். 17:9-13)

"கோதை மார்பின் கோதையானும்
கோதையைப் புணர்ந்தோர் கோதையானும்
மாக்கழி மலர்ந்த நெய்தலானும்,
கள் நாறும்மே, கானல் அம் தொண்டி" (ஷை. 48:1-4)

"..........................ஓங்கிரும் பரப்பின்
வங்க வீட்டத்துத் தொண்டியோரிட்ட (சிலப். 14:106-107)

**நல்லூர்.**

இடைக்கழி நாட்டு ஊர்களில் நல்லூர் என்பது ஒன்று.

இடைக்கழி நாடு என்பது செங்கற்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்தது. செய்யூருக்குக் கிழக்கிலும், தென்கிழக்கிலும், தெற்கிலும் கடற்கரையோரத்தில் பரவியுள்ளது.

நல்லூர் என்னும் ஊர்ப்பெயர் நன்மை என்ற பண்பையுணர்த்தும் சொல்லை அடிப்படையாகக் கொண்டு பெயர் பெற்றிருக்க வேண்டும். சூழ்ந்துள்ள ஊர்களைவிட நீர்வளம், நிலவளம். மக்கள் மனவளம் போன்ற வற்றில் நல்லஊர் என்ற குறிப்பில் நல்லூர் எனப்பெயர் பெற்றிருக்கலாம்.

நல்லூர் என்னும் சொல்லை முன் ஒட்டாகவும், பின்ஒட்டாகவும் கொண்ட நல்லூர்ப் பெருமணம் கலிகடிந்த சோழநல்லூர் சுந்தரபாண்டிய நல்லூர், வீரபாண்டிய நல்லூர் போன்ற பல ஊர்ப்பெயர்கள் உள்ளன.

நல்லூர் என்பதையே பெயராகக் கொண்ட ஊர் இது. நம் இலக்கியத்தில் இடம் பெற்ற நல்லூர். ஒய்மாநாட்டு மன்னன் நல்லியக் கோடன் மீது சிறுபாணாற்றுப்படை பாடிய நத்தத்தனார் என்ற புலவரின் ஊர். இவ்வூர் இடைக்கழி நாட்டில் அமைந்தது.

நத்தத்தனார் பிறந்த நல்லூரில் அவர் நினைவாக உருவச் சிலைஒன்று 18-6-1958இல் அன்றைய சென்னை மாநிலஅமைச்சர் பக்தவத்சலம் தலைமையில் நிறுவப் பெற்றது.

கும்பகோணத்தருகிலும் நல்லூர் என்ற பெயருடைய ஊர் ஒன்று உள்ளது.

**நாஞ்சில்.**

நாஞ்சில் என்பது ஒரு மலையின் பெயர். அம்மலையை உள்ளடக்கிய நாடும் அப்பெயர் பெற்றது.

மதிலுறுப்பு என்னும் பொருளுடைய நாஞ்சில் என்னும் சொல் மதிலோடுகூடிய கோட்டை அமைந்த மலைக்குப் பெயராய் அமைந்தது போலும்.

கோட்டாறு என்னும் முக்கிய நகரத்தைக்கொண்டது நாஞ்சில் நாடு. இது சேர, சோழ பாண்டிய மன்னர்கள் ஆட்சியில் மாறி மாறி இருந்திருக்கிறது.

நெடுமாறன் என்னும் பாண்டியன் சேரனோடு நாஞ்சில் நாட்டில் போர் செய்து வென்றான் (பாண்டிக் கோவை) என்ற செய்தி பாண்டியர் ஆட்சியில் நாஞ்சில் இருந்ததையும் நாஞ்சில் நாட்டுக் கோட்டாறு, மும்முடிச் சோழபுரம் என்றும், சோழ

கேரளபுரம் என்றும் கல்வெட்டுகளில் குறிக்கப் பெற்றிருப்பதால் சோழர் ஆட்சியில் இந்நாடு இருந்ததையும் அறிவிக்கின்றன.

நாஞ்சில் நாடு முன்னர்த் திருவிதாங்கூர் இராச்சியத்தின் ஒரு பகுதியாய் இருந்து, 1956 முதல் தமிழ்நாட்டைச் சேர்ந்திருக்கிறது. இன்றைய கன்னியாகுமரி மாவட்டமே அப்பகுதியாகும். தமிழ்நாட்டின் தென் எல்லையாகிய குமரி இந்நாட்டில் உள்ளது.[41]

'உழாநாஞ்சில்' என்னும் சங்க இலக்கியத்தொடர் உழுபடையைக் குறிக்காமல் மலையைக் குறித்து நாட்டிற்குப் பெயராயிற்று. 'உயர்சிமைய' என்னும் தொடரும் சிகரங்களையுடைய மலையைக் குறிப்பதைக் காணலாம். நாஞ்சில் நாட்டுத் தலைவன் நாஞ்சில் வள்ளுவன் எனப் பெயர் பெற்றான்

"செவ்வரைப் படப்பை நாஞ்சில் பொருந!
சிறுவெள்ளருவிப் பெருங்கல் நாடனை" (புறம் 137:12-13)
"உயர்சிமைய உழாஅ நாஞ்சில் பொருந (ஷை 139:7)

**நாலூர்.**

சங்க இலக்கியங்களில் "நாலூர்க்கோசர் நன்மொழி" (குறுந் 15) என்பதுபோல் கோசரைக் குறிக்கும் இடங்களிலெல்லாம் நாலூர் என்ற அடையுடனே குறிக்கப்பட்டுள்ளது.

நான்கு ஊரிலுள்ள கோசர் என்றோ, நாலூர் என்ற ஊரிலுள்ள கோசர் என்றோ எண்ண இடமளிக்கிறது.

நாலை என்று சங்க இலக்கியத்தில் இடம் பெறும் இடம் நாலூர் என்ற ஊரே, மருவி நாலை என வழங்கு கிறது என்றும் கூறுகின்றனர். இவ்வூர் பாண்டிய நாட்டில் அருப்புக் கோட்டைக்கு அருகில் உள்ளது.[42]

நாலைக்கிழவன் நாகன் பாண்டியன் ஒருவனுடைய படைத் தலைவன். இவனை வடநெடுந்தத்தனார் பாடியுள்ளார். (புறம் 179)

**நியமம்.**

நியமம் என்று சுட்டப்பட்டுள்ள ஊர் செல்லூருக்குக் கிழக்கே இருந்த ஓர் ஊர் என்றும், கோசர் என்பவருக்கு உரியது என்றும் சங்க இலக்கியம் கூறியுள்ளது.

---

41. கலைக்களஞ்சியம் 6:333
42. ஷை 6:422

நகரம் அல்லது இடம் எனப் பொருள் தரும் நியமம் என்னும் சொல் காலடைவில் ஒரு குறிப்பிட்ட ஊருக்கே பெயராய் அமைந்து விட்டது போலும்.

நியமம் என்ற பெயருடன் தஞ்சை மாவட்டத்தில் ஓர் ஊர் இருப்பதாகத் தெரிகிறது. காரைக்குடிக்கு அருகில் உள்ள நேமத்தாம்பட்டி என்ற நியமும் நெல்லை மாவட்டத்திலுள்ள நேமமும் நியமம் என்ற ஊரே என்றும் கருத்து உள்ளது.

கோடிக்கரையை 'நிகம்' (Nigma) என்று பெரிப்புளூஸ் என்ற கிரேக்க நூலாசிரியன் குறிப்பிட்டுள்ளான். இக் கிரேக்க நூலாசிரியன் 'நிகம' என்று கூறும் ஊர்ப்பெயர் சங்க நூல்களின் நியமம் என்று வரும் பெயராகும் என்பர்.[43]

நொச்சி நியமம், என்ற பெயருடன் ஒரு நியமம் இருந்ததாக, நொச்சி நியமங்கிழார் என்ற புலவரின் பெயரால் அறிய முடிகிறது. திருச்சிராப்பள்ளிக்கு அருகிலுள்ள நொச்சியம் என்னும் ஊரே அந்த நொச்சி நியமம் என்ற கருத்தும் உள்ளது.[44]

''நெடுங் கொடி நுடங்கும் நியம மூதூர்க்
கடுந் தேர்ச் செல்வன் காதல் மகனே". (நற். 45 : 4-5)

"அருந் திறற் கடவுள் செல்லூர்க் குணஅது
பெருங்கடல் முழக்கிற்றாகி யாணர்
இரும்பிடம் படுத்த வடுவுடை முகத்தர்
கடுங்கண் கோசர் நியமம் ஆயினும்'' (அகம். 90 : 9-12)

**நீடூர்.**

நீடுதல் என்றால் பரத்தல் அல்லது செழித்தல் என்னும் பொருளையுடைய சொல்லாகும்- செழிப்பு மிகுந்த ஊர் நீடூர் எனப் பெயர் பெற்றிருக்கலாம்.

மாயூரத்தின் அருகில் நீடூர் என்னும் பெயருள்ள ஓர் ஊர் உள்ளது. அக் காலத்தில் பெரியதோர் ஊராக இருந்திருக்க வேண்டும் என்று தோன்றுகிறது. செழிப்பான வளம்மிக்க ஊராகவும் இருந்திருக்க வேண்டும்.

''யாழிசை மறுகின் நீடூர் கிழவோன்" (அகம். 266 ; 10)

---

43. இலக்கிய ஆய்வு—பி. எல். சாமி, சேகர் பதிப்பகம், சென்னை-1982. பக். 128.
44. தலைக்களஞ்சியம் 6:614.

**நீர்ப்பெயற்று.**

பெரும்பாணாற்றுப் படையில் நீர்ப்பெயற்று என்னும் ஓர் ஊர்ப்பெயர் குறிப்பிடப் பெற்றுள்ளது.

நீர்ப்பெயற்று என்பது கடல்நீர் 'உட்பெய்தலைக் கொண்டதாகிய நிலம் எனப் பொருள்படும். அதாவது உப்பங்கழியை யுடைய நிலப்பகுதியாகும்.

மாமல்லபுரத்திற்கு இரண்டுகல் தெற்கே கடல்நீர் நிலத்துள் நுழைந்து, மாமல்லபுரத்திற்குத் தென்மேற்கில் அரைக்கல் தொலைவுவரை பரவியுள்ளது. மாமல்லபுரத்திற்கு மேற்கில் தொடங்கி வடக்கே மூன்றுகல் தொலைவில் உள்ள சாளுவன் குப்பம் வரைவில் மணல் வெளி பரவியுள்ளது. இங்ஙனம் மாமல்ல புரத்திற்கு வடக்கிலும் தெற்கிலும் உள்ள மணல் வெளியை ஊடுருவிக் கொண்டே இன்றைய பக்கிங் ஹாம் கால்வாய் செல்கிறது. இம்மணல் வெளிகள் பண்டைக் காலத்தில் கடல்நீரைப் பெற்றிருந்தமையால்தான் இன்று மணல் வெளிகளாய் உள்ளன. எனவே சங்க காலத்தில் கடல்நீரைப் பெய்தலையுடைய நிலப் பரப்பாக இப்பகுதி இருந்திருத்தல் வேண்டும் என்பது தெளிவு. ஊரார் இப்பகுதியை இன்று கழிவெளி என்கின்றனர். இத்தகைய பகுதியின்எல்லையில் துறைமுகமும் பட்டினமும் இருந்தன என்று பெரும்பாணன் கூறியுள்ளான். ஆகவே அவன் குறித்தவை பிற்கால மாமல்லபுரம் இருந்த பகுதியேயாகும் என்பர்.[45]

மதுராந்தகம் வட்டத்தின் தென்பகுதியில் 'நீர்ப்பேர்' என்று உள்ள சிற்றூரே நீர்ப் பெயற்றாகலாம் என்றும் கூறுவர்.[46]

மாமல்லபுரத்தையடுத்த கழிவெளிப் பகுதியே நீர்ப்பெயற்று என்னும் பெயரையுடைய ஊராக இருக்கவேண்டும் என்ற கருத்தே பொருத்தமானதாகத் தோன்றுகிறது. நீர்ப்பெயற்று' என்னும் ஊரின் எல்லையில் துறைமுகமும் அமைந்திருந்தது என்று பெரும்பாணாற்றுப் படை கூறுவதால் இத்துறைமுகப் பட்டினமாகவும் கருத இடமளிக்கும் பிற்கால மாமல்லபுரப்பகுதியில் அமைந்த கழிவெளியே நீர்ப்பெயற்று என்னும் ஊர் இருந்த இடம் என்று கொள்ளுவதே பொருந்தும்.

---

45. பத்துப்பாட்டு ஆராய்ச்சி மா. இராசமாணிக்கனார் சென்னைப்பல்கலைக் கழக வெளியீடு 1970. பக். 65-66.
46. பத்துப்பாட்டு மூன்றாம் பதிப்பு-பக். 241 உ. வே. சாமிநாதையர் குறிப்பு.

நீர்ப்பெயற்று என்பதை 'நீர்ப் பெயர்த்து' எனத்தவறாகக் கொண்டு நீர்ப்பெயரையுடைய நகரம்[43] என்று கூறுவது பொருந் துவதாகத் தெரியவில்லை.

''வண்டல் ஆயமொடு உண்துறைத்தலைஇ,
புனல் ஆடுமகளிர் இட்ட பொலங்குழை
இரைதேர் மணிச்சிரல் இரை செத்து எறிந்தென,
புள் ஆர் பெண்ணைப் புலம்பு மடற் செல்லாது,
கேள்வி அந்தணர் அருங்கடன் இறுத்த
வேள்வித் தூணத்து அசைஇ, யவனர்
ஓதிம விளக்கின் உயர் மிசைக்கொண்ட,
வைகுறு மீனின் பையயத் தோன்றும்
நீர்ப்பெயற்று எல்லைப்போகி''—(பத்துப். பெரும். 311—319)

**நெய்தலங்கானல்.**

சோழன் நெய்தலங் கானல் இளஞ் சேட் சென்னியை ஊன் பொதி பசுங்குடையார் பாடியது (புறம். 70) என்ற தொடர் நெய்தலங்கானல் என்ற ஊர்ப்பெயர்ப் பற்றிய எண்ணத்தைத் தோற்றுவிக்கிறது.

இது இளஞ்சேட் சென்னியின் நகரம்.

**பட்டினப்பாக்கம்**

பட்டினப்பாக்கம் என்பதில் உள்ள பட்டினம், பாக்கம் என்ற இருசொற்களும் நெய்தல் நிலத்து ஊரைக்குறிக்கும் பொதுச் சொற்கள்.

பூம்புகார் நகரத்தின் ஒரு பிரிவு பட்டினப்பாக்கம் என்ற பெயரையுடையதாய் இருந்தது.

அக் காலத்தில் சிறந்திருந்த கடற்கரை நகரங்களின் அமைப்பைப் பண்டை இலக்கியங்கள் ஒருவாறு காட்டுகின்றன. ஒவ்வொரு பெரிய கடற்கரை நகரமும் இரு பாகங்களையுடையதாய் இருந்தது. அவற்றுள் ஒருபாகம் ஊர் என்றும், மற்றொருபாகம் பட்டினம் என்றும் அழைக்கப்பட்டன. பூம்புகார் நகரத்தின் ஒரு பாகம் மருவூர்ப் பாக்கம் என்றும், மற்றொரு பாகம் பட்டினப் பாக்கம் என்றும் பெயர் பெற்றன.[48]

---

47. History of Tamils P. T. Srinivasa Iyengar p. 389.
48. ஊரும் பேரும் ரா. பி. சேதுப்பிள்ளை பக். 34,

"சூழ் உடை நல் இல் கொடும்பூண் மகளிர்.
கொன்றை மென்சினைப் பனி தவழ்பவைபோல்,
பைங்காழ் அல்குல் நுண் துகில் நுடங்க
மால்வரைச் சிலம்பில் மகிழ்சிறந்து ஆலும்
பீலி மஞ்ஞையின் இயலி, கால
தமனியப் பொற் சிலம்பு ஒலிப்ப, உயர்நிலை
வான் தோய் மாடத்து, வரிப்பந்து அசைஇ
கைபுனை குறுந்தொடி தத்த, பைபய
முத்தவார் மணல் பொற்கழங்கு ஆடும்
பட்டின மருங்கின் அசையின்"— (பத்துப். பெரும் 327-336)

"வால் இதை எடுத்த வளிதரு வங்கம்
பல்வேறு பண்டம் இழிதரும் பட்டினத்து
(ஷை. மதுரைக் 536-537)

"புலம்பெயர் மாக்கள் கலந்து, இனிது, உறையும்,
முட்டாச் சிறப்பின் பட்டினம் பெறினும்" (ஷை.பட். 217-218)

"மருவூர் மருங்கின் மறங் கொள் வீரரும்
பட்டின மருங்கிற் படைகெழு மாக்களும்
முந்தச் சென்று முழுப்பலி பீடிகை
வெந்திறன் மன்னற்குற்றதை யொழிக் கென"
(சிலப். 5 : 76-79)

"ஆற்று வீயரங்கத்து வீற்று வீற்றாகிக்
குரங்கமை யுடுத்த மரம் பயி லடுக்கத்து
வானவ ருரையும் பூநா றொரு சிறைப்
பட்டினப் பாக்கம் விட்டனர்நீங்க"— (ஷை. 10 : 156-159)

**பரங்குன்று**

பார்க்க-குன்று-குன்றம்

**பவத்திரி**

பவத்திரி என்ற ஊர்ப்பெயர், சங்க இலக்கியத்தில் ஒரே ஒரு இடத்தில் மட்டுமே கூறப்பட்டுள்ளது. அகப்பொருட்பற்றிய பாடல்களில் ஊர்ப்பெயர் இடம்பெறும் மரபையொட்டி, தலைவியின் நலம் பாராட்டும் காலை பவத்திரி போன்ற நலமுடையாள் எனக் கூறப்படும் நிலையில் பவத்திரி என்ற ஊர்ப்பெயர் இடம் பெற்றுள்ளது.

பவ்வம்—கடல்; தரம்—நிலம். (தரம்சிட்டா—நிலங்களின் விலை அல்லது உத்தேசமதிப்பு; தரம்தீர்வை—நிலவகைக் கேற்ப விதிக்கப்பட்டதீர்வை) தரி—நன் செய் நிலம். திரம்—நிலம்

மேற்காணும் சொற்களின் பொருளை ஆராயும்பொழுது கடலையொட்டி அமைந்த பவத்திரி என்னும் ஊர், கடலையொட்டிய நிலப் பகுதியூர் அல்லது கடலையொட்டி நன்செய் நிலங்கள் அமைந்த ஊர் என்ற பொருளில் பவ்வத்தரம் அல்லது பவ்வத்தரி என்று பெயர் தோன்றி நாளடைவில் பவ்வத்திரி என்று ஆகி பவத்திரி எனவோ, அல்லது பவ்வத்திரம் என முதலில் பெயர் பெற்று நாளடைவில் பவ்வத்திரி என்று ஆகி பவத்திரி என நிலைத்ததோ என்ற எண்ணம் தோன்றுகிறது.

நெல்லூர் மாவட்டத்துக் கூடூர் வட்டத்து ரெட்டிப்பாளையமே சங்க காலப் பவத்திரியாகும். திரையர் எனப் பெற்ற தொண்டையர்கள் ஆண்ட நாட்டில் பவத்திரி என்பது சிறந்த நகரமாகத் திகழ்ந்தது என்பது இலக்கியம் தரும் செய்தி.

பவத்திரி என்ற ஊர்ப்பெயர் அவ்வூரை உள்ளடக்கியிருந்த ஒரு கோட்டத்தின் பெயராகவும் இருந்திருக்கிறது. சிறந்த நகரமாகத் திகழ்ந்த பவத்திரி இன்று தன் நலம் இழந்து, பெயர் இழந்து வேற்றுப் பெயரில் ஒரு சிற்றூராய் உள்ளது.

''பவத்திரிக் கோட்டத்துப் பேரூர் நாட்டுப் பண்டரங்கம் உடைய நாயனார்''

''கடல் கொண்ட பவ்வத்திரி கோட்டத்துக் காகந்தி நகரில் பண்டரங்கீசுவரம்''

''இராஜேந்திர சோழ மண்டலத்துப் பவ்வத்திரி''

ஆகியவை கல்வெட்டுத் தொடர்கள். முதல் கல்வெட்டில் கடலுக்கு இரையாகாதிருந்த பவ்வத்திரி கோட்டம், அடுத்த கல்வெட்டுக் காலத்தில் கடலுக்கு இரையானமை தெரிகிறது. எனவே அக்கோட்டம் கடலை அடுத்து இருந்தமை தெளிவு. நெல்லூர் மாவட்டத்துக் கூடூர் வட்டத்தில் கடலுக்கருகில் ''ரெட்டி பாளையம்'' என்னும் சிற்றூர் உள்ளது. அதனைச் சேர்ந்து 'பண்டரங்கம்' என்னும் மிகச் சிறிய ஊர் உள்ளது. அங்குள்ள சிவன் கோயில் கல்வெட்டுகளே மேற்கூறப்பட்டவை.

இக் கல்வெட்டுத் தொடர்களை ஆதாரம் காட்டி ''பவத்திரி'' என்ற சங்க கால ஊர்ப்பெயர் பிற்காலத்தில் ''பவ்வத்திரி'' என மாறியிருக்க வேண்டும் என்பர்.[49]

---

49. பத்துப்பாட்டு ஆராய்ச்சி, மா. இராசமாணிக்கனார். பக். 243

'பவ்வத்திரி' என்றே தோற்றத்தில் பெயர் பெற்ற நகரம் சங்ககாலத்தில் 'பவத்திரி' ஆகி, பிற்காலத்தில் கல்வெட்டில் 'பவ்வத்திரி' எனக் கூறப்பெற்றிருக்கலாம் என்றும் எண்ணலாம்.

''பவத்திரி' தொண்டையர் ஆட்சியில் இருந்ததாக சங்க இலக்கியம் கூறுவதால், தொண்டை மண்டலம் நெல்லூர் வரை அக்காலத்திலேயே பரவியிருந்தது எனத் தெரிகிறது.

25-2-1976 ஆம் தேதிய தினமணிச் சுடரில் வந்த 'ப்ரளய காவேரி' என்ற கட்டுரையில் பழவேற்காடே 'பவத்திரி' என்றும் காகந்தி என்றும் அழைக்கப்பட்டதாகக் கூறிய செவிவழிச் செய்திகள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. இவை வரலாறு, இலக்கிய அடிப்படையற்றவையாகும்.[50]

''சாதவாகனர்களுக்குப் பின்னர் வந்த மூன்றாம் நூற்றாண்டு இக்குவாகு வம்ச அரசர்களின் அமராவதிக்கல்வெட்டில் 'பவத்திரி என்பது ''சிரிபவத்தே'' என்று பிராகிருத மொழியின் மரபால் அழைக்கப்பட்டதைக் காணலாம்.

''அகநானூறு 'பவத்திரி' என்று அழைப்பது கி பி. மூன்றாம் நூற்றாண்டிற்கு மேற்பட்ட மரபாகும். 'சிரிபர்வத்' என்ற வடமொழிப்பெயர் 'சிரிபவ' என்று பிராகிருதமொழியில் மாறிற்று. இந்த மரபைப் பின்பற்றியே அகநானூற்றில் 'பர்வத்' என்ற வடமொழிப் பெயர் 'பவ' என்று மாறியது என்று கொள்ளலாம். அல்லது பிராகிருதப் பெயரை அப்படியே அகநானூறு எடுத்துக் கூறியது என்று கருதுவதும் பொருத்தமானதாகும்.

''பர்வதகிரி'யின் ஒட்டுச் சொல்லான 'சிரி' தமிழில் திரிந்து 'திரி'யாக மாறி 'பவத்திரி' என்ற பெயர் தோன்றியது.

''மூன்றாம் நூற்றாண்டில் இக்குவாகு வம்சத்தினரின் அமராவதிக் கல்வெட்டில் சிரிபவத்தே', 'விஜயபுரி புவதெசா' என்று சொல்லப்பட்டிருப்பதால் 'சிரிபவத்தே' என்ற பெயரே 'பவத்திரி' என்று அகநானூற்றில் தெளிவாகத் தெரிகிறது.

''ஆதலின் 'பவத்திரி' என்று வரும் அகநானூற்று ஊர்ப் பெயர் ஸ்ரீபர்வதம், பர்வதஸ்ரீ என்ற பெயரே என்பதில் ஐய மில்லை."[51] என்ற கருத்துப்பொருத்தமானதாக தோன்றவில்லை. அகநானூற்றின் காலத்தை வைத்து ஆய்ந்தால் இது பொருந்துமா என்பது ஐயமே. சங்ககாலப் பாடலில் இடம்

---

50. இலக்கிய ஆய்வு—பி.எல்.சாமி பக். 136

51. இலக்கிய ஆய்வு பி, எல். சாமி பக் 137&145.

பெற்ற ஓர் ஊர்ப்பெயர், அக்காலத்திற்கு முன்னரே தோற்றம் பெற்று சிறப்புற்றிருந்த ஊரின் பெயரல்லவா?

"செல்லா நல்லிசைப் பொலம்பூட் டிரையன்
பல்பூங்கானற் பவத்திரியன இவள்
நல்லெழில் இளநலந் தொலைய ஒல்லெனக்
கழியே ஓதம் மல்கின்று வழியே (அகம் 340:6-9)

பறம்பு.

பறம்பு என்பது ஒரு மலையின் பெயர். அம் மலையையுடைய நாட்டிற்கும் பெயராயிற்று. பறம்பு நாடு 300 ஊர்களை உடையது. இது பாரி என்ற மன்னனின் ஆட்சியில் இருந்த நாடு.

பறம்பு மலை திருப்பத்தூர் வட்டத்திலுள்ளது.

மதுரைக்கு வடகிழக்கில் சுமார் பத்து மைல் தொலைவில் உள்ள திருமோகூர் என்னும் ஊரிலுள்ள ஒரு கல்வெட்டு, அவ்வூரை 'தென்பறம்பு நாட்டில் திருமோகூர் என்றுகுறிக்கிறது. எனவே திருமோகூரைச் சுற்றியுள்ள பகுதி, பாரியின் ஆட்சிக்குட் பட்ட பறம்பு நாட்டின் தென்பகுதியாய் இருக்கவேண்டும்.

இராமநாதபுர மாவட்டத்தின் பரமக்குடி என்னும் ஊர்ப் பெயர் பறம்புக்குடி என்னும் பெயரின்மருவிய வழக்கே என்பதுஉண்மையானால் பறம்பு நாட்டின் தென் எல்லையாகப் பரமக்குடியைக் கொள்ளலாம்.

பறம்புமலை உள்ள திருப்பத்தூர் வட்டத்திற்குத் தெற்கே சிவகெங்கை வட்டமும், அதற்கும் தெற்கே பரமக்குடி வட்டமும் உள்ளன. எனவே சங்ககாலப் பறம்புநாடு என்பது ஏறத்தாழ மதுரை மாவட்டத்து மேலூர் வட்டத்தின் கிழக்குப் பகுதியும், இராமநாதபுர மாவட்டத்துத் திருப்பத்தூர், சிவகெங்கை, பரமக்குடி வட்டங்களும் அடங்கிய நிலப்பரப்பாய் இருந்திருக்க லாம் என்று கூறுதல் பொருத்தமாகும்.

"நன்னன் பறம்பு" என்ற ஒரு தொடர் சங்க இலக்கியத்தில் இடம் பெற்றுள்ளது. நன்னனின் முக்கிய நகரமாகிய பாரம் என்ற ஊரையடுத்துள்ள முறம்பு நிலமே பறம்பு எனக் கூறப்பெற் றுள்ளது.[52] என்ற கருத்தை நாம் ஏற்றுக் கொண்டால் பறம்பு மலையும் நாடும் பாரியின் தொடர்புடையனவேயன்றி கொண் கான நன்னனுக்கும் இந்நாட்டிற்கு ஒரு தொடர்பும் இல்லை

52 Nannan of North Malabar by P.L. Samy P. 101.

என்று துணியலாம். இன்று பிரான்மலை என்று அழைக்கப்படு கிறது.

நன்னன் ''தொன்னசை சாலாமை, நன்னன் பறம்பில்
சிறுகாரோடன் பயினொடு சேர்த்திய
கற்போல் நாவினேனாகி'' —(அகம். 356:8-10)

பாரி ''பிறங்கு வெள்ளருவி வீழுஞ்சாரற்
பறம்பிற் கோமான்பாரியும்'' (பத்து. சிறுபாண் 90-91)

''பாரிபறம்பிற் பனிச்சுனைத்தெண்ணீர்'' (குறுந். 196:1)

''புலம் கந்தாக இரவலர் செலினே,
வரை புரைகளிற்றொடு நன்கலன் ஈயும்
உரைசால் வண்புகழ்ப் பாரி பரம்பின்'' (அகம் 303:8-10)

''அளிதோதானே பாரியது பறம்பே
நளிகொள் முரசின் மூவிரும் முற்றினும்
உழவர் உழாதன நான்கு பயனுடைத்தே'' (புறம்-109:1-3)

''கடந்து அடுதானை மூவிரும் கூடி
உடன்றனிர் ஆயினும் பறம்பு கொளற்கு அரிதே''
(ஷை. 110:1-2

''கூர்வேல் குவைஇய மொய்ம்பின்
தேர்வண்பாரி தண்பறம்பு நாடே'' (ஷை. 118:4-5)

''ஊருடன் இரவலர்க்கு அருளி, தேருடன்
முல்லைக்கு ஈத்த செல்லா நல்இசை
படுமணி யானை பறம்பின் கோமான்
நெடுமாப்பாரி............'' (ஷை. 201:2-5)

**பாக்கம்.**

பாக்கம் என்னும் ஊர்ப்பெயர்ச்சொல் பட்டினப்பாக்கத்தையே குறிக்கிறது. பொதுவாகக் கடற்கரை ஊர் என்ற பொருளிலும் பாக்கம் என்ற சொல் வழங்கப் பெற்றிருக்கிறது.

கடற்கரை ஊர் என்ற பொருளில்,

''விலங்குபகையல்லது கலங்குபகையறியாக்
கொழும்பல் குடிச் செழும் பாக்கத்துக்
குறும் பல்லூர் நெடுஞ்சோணாட்டு''
(பத்துப். பட்டினப்—26-28)

பட்டினப்பாக்கம் என்ற பொருளில்

''தொகுபோர்ச் சோழன் பொருண்மலிபாக்கத்து
வழங்கலானாப் பெருந்துறை'' (அகம். 338 : 19-20)

**பாமுளூர்.**

சேரமான் பாமுளூர் எறிந்த நெய்தலங் கானலிளஞ்சேட் சென்னியை ஊன் பொதி பசுங்குடை யார் பாடியது (புறம். 203) என்ற தொடர் பாமுளூர் என்ற ஓர் ஊர்ப் பெயரை அளிக்கிறது. நெய்தலங்கானல் இளஞ்சேட்சென்னி இதை எறிந்தான் எனத் தெரிகிறது.

இவ்வூர் சேரமானுடன் தொடர்புடையதாகத் தெரிவதால் இவ்வூர் சேரநாட்டைச் சேர்ந்ததாகக் கருத இடமளிக்கிறது.

**பாரம்.**

பாரம் என்னும் ஊர் கொண் கானத்து நன்னனுக்கு உரிய தாய் இருந்திருக்கிறது; அவன் தலைநகர் என்றும் கருதப்படு கிறது. கொண்கானம், ஏழிற்குன்றம், பூழிநாடு ஆகியவற்றை உள்ளடக்கியதாய் இருந்திருக்கிறது நன்னனின் நாடு. இன்றைய க்ண்ணனூருக்கு வடக்கே சுமார் 15மைல் தொலைவில் இன்றும் அதே பாரம் என்ற பெயருடன் இருப்பதாகக் கூறப்படுகிறது.[53]

'மிஞிலி' என்ற மன்னனால் காக்கப்பட்ட ஊர் என்று சங்க இலக்கியம் கூறுகிறது'

''வீளை அம்பின் வில்லோர் பெருமகன்
பூந்தோள் யாப்பின் மிஞிலி காக்கும்
பாரத்து அன்ன ஆரமார்பின்
சிறு கோற் சென்னி..." (நற். 265 : 3-6)

''உறுபகை தருஉம் மொய்ம்மூசு பிண்டன்
முனைமுரண் உடையக் கடந்த வென்வேல்,
இசைநல் ஈகைக் களிறுவீசு வண்மகிழ்
பாரத்துத் தலைவன் ஆரநன்னன்'' (அகம். 152. 9-12)

**பாழி.**

நன்னனின் ஏழில்மலையைச் சார்ந்த கொற்றிக் கடவு என்ற அடர்ந்த காட்டின் இடையே அம்மரக்கல் 'Ammarakkal' என்ற ஒரு பெரும் பாறை உள்ளது. அங்குள்ள மக்களால் அப் பாறைப் பன்னிரண்டாண்டிற்கு ஒரு முறை வழிபடப் பெறுகிறது. இப் பாறையைச் சுற்றியுள்ள பகுதியே பாழியாக இருக்க வேண்டும்

53. Nannan of North Malabar, by P. L. Samy Tamil civili zation (Quarterly Research Journal of the Tamil University, Thanjavur) Vo. 1. No. 1. P. 95.

என்றும், அது நன்னனுக்குரியதாய் இருந்தது என்றும் கூறப்படுகிறது.[54]

பாழி நகரம் ஏழிற்குன்றத்தைச் சார்ந்ததாகவே இருந்திருக்க வேண்டும். பாழி நாட்டு மக்கள் சிறுகுளத்தைப் பாழி என்பர். இவ்வூரிலுள்ள குளம் மன்னனின் பொன் சேமித்து வைக்கப் பெற்றிருந்த சிறப்பினையுடையதாய் இருந்திருக்கிறது. அச்சிறப்பாலேயே நீர் நிலையின் பெயரால் இவ்வூர் 'பாழி' எனப் பெயர் பெற்று இருக்கவேண்டும்.

வேளிர்களால் அளிக்கப்பெற்ற பொற் காசுகளை இவ்வூர்ப் பாழியில் (குளத்தில்) இட்டு வைத்து, காவற்படையுடைய நிலையாக நிறுத்திக் காத்தான் நன்னன் எனத் தெரிகிறது. பாழி நகரமே நிலையான காவற்படையினை உடையதாக இருந்திருக்கிறது.[55] பாழிகாவல் மிக்கிருந்தது என்னும் கூற்று நன்னன் மிகுதியாகப் பொன் படைத்திருந்தான் என்பதை உணர்த்துவதாகக் கொள்ளலாம்.

இளம் பெருஞ்சென்னி என்ற சோழன் நன்னனின் பாழியை அழித்ததாகவும் தெரிகிறது.[56]

"சூழியானைச் சுடர்ப்பூண் நன்னன்
பாழியன்ன கடியுடை வியன்னகர்" (அகம்.15:10-11)

"முறையின் வழாஅ து ஆற்றிப் பெற்ற
கறையடி யானை நன்னன் பாழி' (ஷை. 142:8-9)

'பாரத்துத் தலைவன், ஆர நன்னன்,
ஏழில் நெடுவரைப் பாழிச் சிலம்பில்
களிமயிற் கலாவத்தன்ன" (ஷை. 152:12-14)

'வெளியன் வேண்மான் ஆஅய் எயினன்,
அளி இயல் வாழ்க்கைப் பாழிப் பறந்தலை
இழை அணி யானை இயல் தேர் மிஞிலியொடு
நண்பகல் உற்ற செருவில் புண் கூர்ந்து
ஒள் வாள் மயங்கு அமர் வீழ்ந்தென" (ஷை. 208:5-9)

54. Nannan of North Malabar P. L. Samy, Tamil civilization (Quarterly Research Journal of the Tamil University, Tanjavur) Vol. 1. No. 1. P.98
55. அகநானூறு. 258,
56. ஷை. 376

"நன்னன் உதியன் அருங்கடிப் பாழி
தொல் முதிர் வேளிர் ஓம்பினர் வைத்த
பொன்னினும் அருமை நற்கு அறிந்தும், அன்னோள்
துன்னலம் மாதோ எனினும் அஃது ஒல்லாய்
(ஷை.258: 1-4)

"அணங்குடை வரைப்பின், பாழி ஆங்கண்
வேள்முதுமாக்கள் வியன் நகர்க் கரந்த
அருங்கல வெறுக்கையின் அரியோன் பண்பு நினைந்து,
வருந்தினம் மாதோ எனினும், அஃது ஒல்லாய்"—
(அகம். 372: 3—6)

"எழூஉத் திணிதோள், சோழர் பெருமகன்
விளங்குபுகழ் நிறுத்த இளம்பெருஞ்சென்னி,
குடிக்கடன் ஆகலின், குறைவினை முடிமார்
செம்பு உறழ்புரிசைப் பாழி நூறி" (ஷை.375:10-13)

"தொடுத்தேன், மகிழ்ந : செல்லல்—கொடித்தேர்ப்
பொலம்பூண் நன்னன் புனனாடு கடிந்தென,
யாழ் இசை மறுகின் பாழி ஆங்கண்,
'அஞ்சல்' என்ற ஆ அய் எயினன்
இகல் அடுகற்பின் மிஞிலி யொடு தாக்கி,
தன் உயிர் கொடுத்தனன், சொல்லியது அமையது"
(ஷை. 396: 1—6)

**பிசிர்.**

கோப்பெருஞ் சோழனின் ஆருயிர் நண்பராகிய ஆந்தையார் என்ற சங்ககாலப் புலவர் இவ்வூரினர்.

"தென்னம் பொருப்பன் நன்னாட்டுள்ளும் பிசிரோன்"[57] என்ற கோப்பெருஞ் சோழனின் கூற்று 'பிசிர்' என்னும் ஊர் பாண்டி நாட்டது என்பதைக் காட்டுகிறது.

இப்பொழுது இவ்வூர் இராமநாதபுரம் மாவட்டத்தில் பிசிர்க் குடி என்று வழங்கப்பெறுவதாகத் தெரிகிறது.[58]

பிசிர் என்ற சொல்லுக்கு நீர்த்துளி அல்லது ஊற்றுநீர் என்று பொருள் இருப்பதால் நல்ல ஊற்றுநீர் கிடைக்கும் ஊராய் இருந்து, நீர்நிலையான் இவ்வூர் 'பிசிர்' எனப் பெயர் பெற்றதா என்ற கருத்து மேலும் ஆய்வினாலும் உறுதியாக வேண்டும்.

57. புறம். 215:
58. ஊரும் பேரும்—ரா.பி. சேதுப்பிள்ளை. பக். 139.

நற்றிணையில் 61-ஆம் பாடலும், அகநானூற்றில் 308-ஆம் பாடலும், புறநானூற்றில் 67, 184, 191, 212 ஆகிய பாடல்களும் இவ்வூரைச் சார்ந்த புலவர் பிசிராந்தையார் பாடியவை.

"பெருங்கோக் கிள்ளி கேட்க, 'இரும்பிசிர்
ஆந்தை அடியுறை' எனினே, மாண்டநின்
இன்புறு பேடை அணிய, தன்
அன்புறு நன்கலம் நல்குவன் நினக்கே" (புறம். 67: 11-14)

"ஆய்மகள் அட்ட அம்புளி மிதவை
அவரை கொய்யுநர் ஆர மாந்தும்
தென்னம் பொருப்பன் நன்னாட்டுள்ளும்
பிசிரோன் என்ப என் உயிர் ஓம்பு நனே" —(புறம். 215:4-7)

**பிடவூர்.**

'பிடவு என்பது ஒருவகை மரம். அம் மரத்தால் பிடவூர் என்ற பெயர் ஊர்ப்பெயராக அமைந்திருக்கலாம்.

'சோழநாட்டுப் பிடவூர் கிழான் மகன் பெருஞ்சாத்தனை மதுரை நக்கீரர் பாடியபாடல்' என்ற தொடர் இவ்வூர் கிழான் மகன் பெருஞ்சாத்தன் என்ற வள்ளல் என்று தெரிகிறது.

பிடவூர் சோழ நாட்டு ஊர்களுள் ஒன்று எனத் தெரிகிறது.

"செல்லா நல் இசை உறந்தைக் குணாது
நெடுங்கை வேண்மான் அருங்கடிப் பிடவூர்
அறப்பெயர்ச் சாத்தன் கிளையேம், பெரும"—
(புறம். 395:19-21)

**புகார்.**

பார்க்க—காவிரிப்பூம்பட்டினம்.

**புல்லாற்றூர்.**

எயிற்றியனார் என்ற சங்ககாலப்புலவர் இவ்வூரைச் சார்ந்தவர். ஆகவே புல்லாற்றூர் எயிற்றியனார் எனப் பெயர் பெற்றார். இவர் பாடிய புறப்பாடல்[59] மூலம் கோப்பெருஞ்சோழன் தன் மக்கள் மீது போருக்குச் சென்றதாகத் தெரிகிறது. புல்லாற்றூர் எயிற்றியனார் அவ்வாறு போர் மேல் சென்றானைச் சந்து செய்ததாகத் தெரிகிறது.

இவ்வூரின் வழிகளில் புலிகளின் நடமாட்டம் அதிகமாக இருந்தது, அதைக்குறிக்கும் புல்லாறு எனத் தொடரால் பெயர்

59. புறநானூறு 213.

பெற்ற ஊராக இருந்து புல்லாற்றூர் எனப்பெற்றதோ என எண்ணவும் இடமளிக்கிறது. (புல்-புலி)

ஆற்றங்கரையின் ஊராக இருந்து ஆற்றூர் எனப் பெயர் பெற்றிருக்கலாம்.

**பூஞ்சாற்றூர்.**

பூஞ்சாற்றூர் என்னும் பெயருடைய இவ்வூர் சோழநாட்டில் முடி கொண்டான் ஆற்றங்கரையில் உளதென்பர்.[60]

சாறு என்றால் விழா என்று பொருள் உள்ளது. ஒருவேளை விழாக்கள் நிறைந்த ஊர் என்னும் பொருளில் விழாக்கள் கொண்டாடப் பெறும் ஊர் என்னும் பொருளில் சாற்றூர் எனப் பெயர் பெற்று பூம் என்ற முன் ஒட்டுடன் இணைந்து பூஞ் சாற்றூர் எனப் பெயர் பெற்றிருக்கலாம்.

கௌணியன் விண்ணந்தாயன் என்னும் அந்தணன் பூஞ்சாற்றூரைச் சார்ந்தவன். இவனை ஆவூர் மூலங்கிழார் பாடியுள்ளார்.

**பெருங்குன்றூர்.**

நில அமைப்பால் பெயர் பெற்ற ஊராக இருக்கலாம். பெருங் குன்றில் அமைந்த ஊர் பெருங்குன்றூர் ஆயிற்று போலும்,

கிழார் என்னும் சங்ககாலப் புலவர் இவ்வூரினர். ஆகவே பெருங்குன்றூர் கிழார் எனப் பெயர் பெற்றிருந்தார்.

பதிற்றுப் பத்தில் ஒன்பதாம் பத்தையும், குறுந்தொகையில் 338-ஆம் பாடலையும், புறநானூற்றில் 147, 210, 211, 266, 318 ஆகிய பாடல்களும் பாடிய கிழார் என்னும் புலவர் இவ்வூரின ராகிய பெருங்குன்றூர் கிழாரே.

**பொதினி.**

பார்க்க ஆவினன்குடி

['பொதினி' என்னும் சொல்லின் பொருளை ஆராய்ந்த அறிஞர், இளநீர்—இளநி, பதநீர்—பதனி என்றாற்போல, பொதிநீர் என்பதே பொதினி என்றானது என்கிறார். பொதினி மலை மரங்கள் நிறைந்து விளங்கினமையால் பழங்களும் நிறைந் திருந்தன. பழத்தில் பொதிந்த நீரையொட்டி இவ்வூர் பொதினி எனப்பட்டது என்கிறார்[61] இக்கருத்து அவ்வளவு பொருத்த முடையதாகத் தோன்றவில்லை,

60. கலைக்களஞ்சியம் 5,258.
61. சங்ககாலச் சிறப்புப்பெயர்கள்—மொ. துரையரங்கனார் பக், 282.

**பொருந்தில்.**

பொருந்திய (நெருங்கிய) இல்நிறைந்த ஊர் பொருந்தில் எனப் பெயர் பெற்றதுபோலும். அல்லது அக்கம்பக்கது ஊரினரின் வழக்குகளைத் தீர்த்து வைப்போரின் பொருந்தவைப்போரின் இல் அமைந்திருந்த ஊர் என்னும் பொருளில் பொருந்தில் எனப் பெயர் பெற்றதோ என்றும் எண்ணலாம்.

இளங்கீரனார் என்ற சங்ககாலப் புலவர் இவ்வூரினர். ஆகவே பொருந்தில் இளங்கீரனார் எனப்பெயர் பெற்றிருந்தார்.

புறநானூற்றில் 53—ஆம் பாடலைப் பாடியவர் இவ்வூர்ப் புலவர் பொருந்தில் இளங்கீரனாரே.

**பொறையாறு.**

தஞ்சைமாவட்டத்தில் கீழைக்கடற்கரையில் தரங்கம்பாடிக் கருகில் பொறையாறு என்னும் ஊர் உள்ளது.

கல்லாடனார் என்ற சங்ககாலப் புலவரால் பாடப்பெற்ற பொறையாற்றுக் கிழான் என்பவன் பொறையாற்றின் தலைவன் போலும். அவன் 'பெரியன்' என்றே குறிக்கப் பெறுகிறான்.

வலிமை என்னும் பொருளுடைய பொறை என்னும் சொல்லடியாக இவ்வூர்ப்பெயர் பொறையாறு எனப்பட்டதோ என்றும் எண்ண இடமளிக்கிறது. ஊர்த்தலைவன் வலிமையுள்ள ஒரு பெருந்தலைவனாக இருந்து அவன் வலிமை காரணமாகவே அவனது ஊரும் பெயர் பெற்றதோ எனவும் கருதத் தோன்று கிறது.

"நறவு மகிழ் இருக்கை நல் தேர்ப் பெரியன்
கள் கமழ் பொறையாறு அன்ன என்
நல்தோள் நெகிழ மறத்தல், நுமக்கே?"— (நற். 131: 7—9)

**மதுரை.**

பார்க்க—கூடல்.

**மருங்கூர்ப்பட்டினம்—மருங்கை.**

பாண்டிய நாட்டில் திருவாடானை வட்டத்தில் மருங்கூர் என்னும் பெயருடன் ஓர் ஊர் உள்ளது.

"பசும்பூண் வழுதி மருங்கை"[62] என்னும் தொடர் பாண்டியனுக்குரியது இவ்வூர் என்பதை வலியுறுத்துகிறது. மருங்கூர்ப்பட்டினம் என்றும், மருங்கை என்றும் இவ்வூர் சங்க இலக்கியங்களில் குறிக்கப்பெற்றுள்ளது.[63]

62. நற்றிணை—358: 10.
63. நற்றிணை. 358—ஆம். பாடல் உ. வே. சா. உரை.

நற்றிணையில் 289 ஆம் பாடலைப்பாடிய சேந்தன் குமரன், அகநானூற்றில் 80 ஆம் பாடலைப்பாடிய கிழார் பெருங் கண்ணன், 327 ஆம் பாடலைப் பாடிய பாகைசாத்தன் பூதன் ஆகிய சங்ககாலப் புலவர்கள் மருங்கூரைச் சார்ந்தவர்கள்.

''பச்சிறாக் கவர்ந்த பசுங்கட் காக்கை
தூங்கல் வங்கத்துக் கூம்பில் சேர்க்கும்
மருங்கூர்ப்பட்டினத்து அன்ன, இவள்
நெருங்கேரெல்வளை ஓடுவகண்டே''— (நற். 258:8-11)

''பசும்பூண் வழுதி மருங்கை யன்ன, என்
அரும் பெறல் ஆய் கவின் தொலைய,
பிரிந்து ஆண்டு உறைதல் வல்லியோரே''—(ஷை. 358:10-12)

''கடி மதில் வரைப்பின் ஊணூர் உம்பர்,
விழுநிதி துஞ்சும் வீறுபெறு திருநகர்,
இருங்கழிப் படப்பை மருங்கூர்ப்பட்டினத்து,
எல் உமிழ் ஆவணத்து அன்ன,
கல் என் கம்பலை செய்து அகன்றோரே''- (அகம். 227:18-22)

மருவூர்.

பட்டினப்பாக்கம் என்ற தலைப்பில் குறிக்கப் பெற்றதற் கேற்ப, பூம்புகார் நகரத்தின் ஒருபகுதியே மருவூர்ப்பாக்கம் ஆகும்.

''மருவூர் மருங்கின் மறங்கொள் வீரரும்'' (சிலப். 5:76).

மல்லி.

''மல்லி கிழான் காரியாதியை ஆவூர் மூலங்கிழார் பாடியது''[64] என்ற தொடரால் நமக்குக் கிடைக்கும் ஊர்ப்பெயர் மல்லி என்பது.

காரியாதி குடநாட்டுத் தலைவன் என்பதை'' பெரும் பெயர் ஆதி, பிணங்கு அரில் குடநாட்டு''[65] என்ற சங்க இலக்கியத் தொடர் நமக்கு அறிவிக்கின்றது. காரியாதி மல்லிகிழான் என்று கூறப்பெற்றிருப்பதால் மல்லி என்ற ஊர் குடநாட்டைச் சார்ந்த தாக இருக்கலாம் என்று எண்ணத் தோன்றுகிறது.

மல்லி என்ற சொல் மல்லிகை எனவும் பொருள் படும் சொல் லாகையால் மல்லிகைமலர்ச் செடிகள் நிறைந்த பகுதியாய் மல்லி என்ற ஊர் அமைந்து, அம் மலர்ச் செடியால் ஊர்ப்பெயர் பெற்ற தாக இருக்கலாம்.

---

64. புறம். 177.
65. ஷை......177:12.

**மாங்காடு.**

மாங்காடு என்பது குடகுமலைப் பக்கத்து ஓர் ஊர். சூரர மகளிர் உறைகின்ற ஒரு காடு மாங்காடு என்னும் பெயருடன் இருந்ததாகவும் தெரிகிறது.

மாங்காடு என்னும் பெயருடன் சென்னைக் கருகில் ஓர் அம்மன் தலம் உள்ளது.

''நனி நோய் எய்க்கும் பனிகூ ரடுக்கத்து
மகளிர் மாங்காட் டற்றே'' (அகம். 288:14-15)
''வந்தேன் குடமலை மாங்காட் டுள்ளேன்'' (சிலப். 11:53)

**மாங்குடி.**

மாங்குடி கிழார், மாங்குடி மருதனார் என்ற இரண்டு சங்க காலப் புலவர்கள் இவ்வூரினர்.

மாங்குடி என்னும் பெயருடன் ஸ்ரீவில்லிபுத்தூருக்கருகில் ஓர் ஊர் உள்ளது.

**மாடலூர்.**

குறுந்தொகையில் 150-ஆம் பாடலைப் பாடிய கிழார் என்னும் புலவர் இவ்வூரினராதலின் மாடலூர் கிழார் எனப் பெயர் பெற்றார்.

**மாந்தை.**

மாந்தை என்னும் ஊர்ப்பெயர் மரந்தை யெனவும் வழங்கப் பெற்றுள்ளது. இரண்டும் ஒரே ஊரின் பெயரே. இலக்கியங் களில் பாட வேறுபாடாக இடம் பெற்றிருப்பதாகவும் தெரிகிறது.

இது கடற்கரை நகரம். மேலைக்கடற்கரையில் சேர மன்னர் களுக்கு உரியதாய் இருந்திருக்கிறது. சேரன் செங்குட்டுவனின் தாயத்தாரான சேரமன்னர் கூட்டுத் தலைநகராக இருந்திருக் கலாம்.

''இரைதேர் நாரையெய்திய விடுக்குந்
துறைகெழு மாந்தையன்ன இவணலம்''. (நற். 35:6-7)
''கடல் கெழு மாந்தையன்ன வெம்
வேட்டனை யல்லையாலலந்தந்து சென்மே''. (ஷை.395:9-10)
''குட்டுவன் மாந்தை அன்ன எம்
குழை விளங்கு ஆய்நுதற் கிழவனும் அவனே''.
(குறுந். 34:6-7)

"நாரை நிரை பெயர்ந்து அயிரை ஆரும்,
ஊரோ நன்று மன், மரந்தை". (௸. 166:2-3)

இரங்கு நீர்ப்பரப்பின் மரந்தையோர் பொருந!" (பதிற். 90·28)

"வலம்படு முரசிற் சேரலாதன்
முள்நீர் ஓட்டிக் கடம்பு அறுத்து, இமயத்து
முன்னோர் மருள வணங்குவில் பொறித்து,
நல்நகர் மாந்தை முற்றத்து ஒன்னார்
பணிதிறை தந்த பாகுசால் நன்கலம்
பொன் செய்பாவை வயிரமொடு ஆம்பல்
ஒன்று வாய் நிறையக்குவைஇ, அன்று அவண்
நிலம்தினத்துறந்த நிதியத்து அன்ன"—(அகம். 127:3-10)

"குரங்கு உளைப் புரவிக் குட்டுவன்
மாந்தை அன்ன, என் புலம்தந்து சென்மே".
(௸ 376:17—18)

**மாலிருங் குன்றம்.**

பார்க்க—திருமால் குன்றம்.

**மாவிலங்கை.**

'இலங்கை என்றும் சொல் ஆற்றிடைக் குறை என்றும் பொருள் உடையது.

"கடற்கரை ஓரமாக நீரும் நிலமும் ஆக அமைந்த இடம் இலங்கை என்று பெயர் பெறும். ஆறுகள் கடலில் கலக்கிற இடத்தில் கிளைகளாகப் பிரிந்து இடையிடையே நீரும் திடலுமாக அமைவதுண்டு. இவ்வாறு நீரும் திடலுமாக அமைந்த இடத்தை லங்கா (இலங்கை) என்று ஆந்திர நாட்டவர் இன்றும் வழங்குவர். நீரும் திடலுமாக அமைந்திருந்த பட்டினநாடு மாவிலங்கை என்றும் பெயர் பெற்றிருந்தது.(லங்கா அல்லது இலங்கைஎன்பது பழைய திராவிடமொழிச் சொல் எனத் தோன்றுகிறது) இப்போதும் ஓய்மா நாட்டு மாவிலங்கைப் பகுதியில் ஏரிகளும் ஓடைகளும் உப்பளங்களும் காணப்படுகின்றன" [66]

ஏரிகளும் ஓடைகளும் ஆகிய நீர் நிலைகளை உடைய இடத்தில் அமைந்த ஊர்ப்பகுதி என்ற கருத்தில் இலங்கை எனப்பெயர் பெற்று 'மா' என்ற முன் ஒட்டுடன் மாவிலங்கை என ஆகியிருக்க வேண்டும்.

66, சிறுபாணன்சென்ற வழி மயிலை. சீனி. வேங்கடசாமி. Tamil Culture — Vol. 12 No1. Jan—Mar, 1961. P. 59,

"இது பழம் பெருமையினையுடைய இலங்கையினது பெயரைப் பெற்றது. மிக்க பெருமையுடையது. நறிய பூக்களை உடைய சுரபுன்னையையும் அகிலையும் சந்தனத்தையும் குளிக்கும் துறையிலே பெற்ற பெரிய நீர் நிலையையுடையது. ஆவியர் பெருமக்கள் மன்னராயிருந்து ஆண்டு வந்தனர். அவருட் கொடையிற் சிறந்தவன நல்லியக் கோடன்[67] என்று இலக்கியம் கூறுகிறது.

திண்டிவனத்துக்கு வடக்கில் ஏறத்தாழ ஒரு கல் தொலைவில் தெள்ளாறு செல்லும் வழியில் மேல்மாவிலங்கை என்னும் சிற்றூர் உள்ளது. இதற்குக் கிழக்கில் மூன்று பர்லாங்கு தொலைவில் கீழ் மாவிலங்கை என்னும் சிற்றூர் உள்ளது. மேல் மாவிலங்கை என்பது ஒரே தெருவையுடைய சிற்றூர். கீழ் மாவிலங்கை என்பது ஐந்து அல்லது ஆறு தெருக்களையுடைய சிற்றூர்.[68] இந்த இரு சிற்றூர்களும் சேர்ந்ததே மாவிலங்கை என்னும் ஊர். இது ஓய்மானாட்டு உள்நாட்டு ஊர். கிடங்கிலைக் கோட்டையாகக் கொண்டு இந்த மாவிலங்கை நல்லியக் கோடனின் தலைநகராக அமைந்திருந்தது போலும்.

"நறுவீநாகமும் அகிலும் ஆரமும்
துறை ஆடு மகளிர்க்குத் தோட்புனை ஆகிய
பொருபுனல் தரூஉம் போக்கு அருமரபின்
தொன்மாவிலங்கை........." (பத்துப். சிறுபாண். 117-120)

"ஓரை ஆயத்து ஒண் தொடி மகளிர்
கேழல் உழுத இருஞ்சேறு கிளைப்பின்
யாமை ஈன்ற புலவுநாறு முட்டையைத்
தேன்நாறு ஆம்பல் கிழங்கொடு பெறூஉம்
இருமென ஒலிக்கும் புனல்அம்புதவின்
பெருமாவிலங்கைத் தலைவன், சீறியாழ்
இல்லோர் சொல்மலை நல்லியக்கோடன்..." (புறம். 176:1-7)

(இன்றும் கிடங்கில் அடுத்துள்ள கிடங்கல் ஏரியில் நீர் நிறைந்து மதகின் வழியே வெளியில் செல்லும் பொழுது இமும் என்ற ஓசை முழங்கும் ஒலியைக் கேட்கலாம்)

"நெல்அரி தொழுவர் கூர்வாள் மழுங்கின்
பின்னை மரத்தொடு அரிய, கல்செத்து

67. சிறுபாணாற்றுப்படை (116-122) பத்துப் பாட்டு ஆராய்ச்சி. மா. இராசமாணிக்கனார். பக் 163.
68. ஷை. பக். 165.

அள்ளல் யாமைக்கூன் புறத்து உறிஞ்சும்
நெல் அமல் புரவின் இலங்கைக் கிழவோன்
வில்லியாதன் கிணையேம்! பெரும! (ஷை. 379;3-7)

(ஓய்மான் நல்லியக்கோடனைப் போலவே, ஓய்மான் நல்லி யாதன் (புறம். 376) என்பவனும் ஓய்மான் வில்லியாதன் (புறம். 379) என்பவனும் மாவிலங்கை நகரைக் கொண்ட ஓய்மா நாட்டை அரசாண்டிருக்க வேண்டும்)

**மாற்றூர்.**

'மாற்றூர் கிழார் மகனார் கொற்றனார்'[69] என்ற தொடர் மாற்றூர் என்ற ஓர் ஊர்ப்பெயரை அளிக்கிறது.

கொற்றங் கொற்றனார் என்ற புலவரின் தந்தையாகிய கிழார் என்பவர் இவ்வூரினர் எனத்தெரிகிறது.

**மாறோக்கம்.**

மாறோகம் என்பது ஒரு சிறு நாடு. இது மாறோக்கம் என வழங்கும் திருநெல்வேலி மாவட்டத்தில் கொற்கையைச் சூழ்ந்த நாடு.[70]

அகநானூற்றில் 377-ஆம் பாடலை இயற்றிய காமக்கணி நப்பாலத்தனாரும், புறநானூற்றில் 37, 39, 126, 174, 226, 280, 383 ஆகிய பாடல்களை இயற்றிய நப்பசலையாரும் இவ்வூரினர்.

**மிழலை.**

மிழலை என்னும் ஊரைத் தன்னகத்தடக்கியது மிழலைக் கூற்றம் போலும்.

மிழலைக் கூற்றம் என்பது சோழநாட்டின் ஒரு பகுதி. இதன் தலைவன் எவ்வி. இவனை வென்று இக் கூற்றத்தைத் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் கைப்பற்றினான்.[71]

மிழலை நாடென்பது மாயவரத்திற்கு அண்மையில் அமைந்ததாகும் அப் பகுதியில் மாயவரத்திற்கு மேற்கே 12 மைல் தூரத்தில் பாழடைந்த ஊராக இம்மிழலை காணப்படுகிறது.[72]

---

69. அகம். 54.
70. கலைக்களஞ்சியம். 8:256.
71. ஷை. 8:299
72. ஊரும்பேரும்—ரா.பி. சேதுப்பிள்ளை. பக். 307.

"ஓம்பா வீகை மாவேள் எவ்வி
புனலம்புதவின் மிழலை யொடு"— (புறம். 24: 18—19)

**முக்காவனாடு.**

மலையரண், காட்டரண், நீரரண் ஆகிய மூன்றையும் காவலாகக் கொண்ட நாடு இப்பெயர் பெற்றது போலும்.

மூக்காவனாடு என்பது ஆமூர் மல்லனுக்குரியது போலும். அந்த மல்லனைச் சோழன் போர்வைக் கோப்பெருநற்கிள்ளி பொருது அட்டு நின்றதாக சாத்தந்தையார் என்ற சங்கப் புலவர் கூறியுள்ளார்.[73]

**முகையலூர்.**

புறநானூற்றில் 181, 265 ஆகிய பாடல்களைப் பாடிய சிறு கருந்தும்பியார் என்ற சங்ககாலப் புலவர் முகையலூரைச் சார்ந்தவர். இவ்வூர் சோணாட்டின் கண்ணது எனத் தெரிகிறது.

**முசிறி.**

முசிறி என்பது மேலைக்கடற்கரையில் அமைந்த கடற்கரை நகரம். சேரர்களுக்குரியது.

ஊர் என்றும் பட்டினம் என்றும் அமையும் கடற்கரை நகரங்களின் அமைப்பு மரபையொட்டி அமைந்த கொடுங் கோளூரும், மகோதைப் பட்டினமுமாகிய பகுதியாகிய கடற் கரை நகரமே முசிறியாகும் எனத் தெரிகிறது.

குட்டுவனுக்குரிய இந்த முசிறி என்னும் துறைமுகப் பட்டினத்திலிருந்துதான் பண்டைக்காலத்தில் மிளகு முதலியன வெளிநாட்டிற்கு ஏற்றுமதியாயின. வெளிநாட்டு யாத்திரிகர்கள் தாம் எழுதிய குறிப்புகளில் இதனைக் குறிப்பிட்டுள்ளனர். வால்மீகி இராமாயணத்திலும் இவ்வூர் உள்ளது. (இங்குத்தான் மகோதை என்னும் கொடுங்கோளூர் உள்ள தென்பர்)[74]

முசுறுப்புல் என்பது ஒருவகைப்புல். இக் கடற்கரைப் பட்டினத்தை அடுத்து இந்த வகைப்புல் மிக்கு விளையும் இயல் பிருந்து, அதனையொட்டி முசிறி எனப்பெயர் பெற்றதோ என எண்ண இடமளிக்கிறது. இந்த ஊர்ப்பெயர் 'முசுறி' (புறம்: 343) என்றும் வழங்கப்பட்டுள்ளமை ஒப்பு நோக்கத்தக்கது.

---

73. புறம். 80
74. கலைக்களஞ்சியம். 8:390.

"சுள்ளியம் பேரியாற்று வெண்ணுரை கலங்க
யவனர்தந்த வினைமாணன் கலம்
பொன்னொடு வந்து கறியொடு பெயரும்
வளங் கெழு முசிறி"...... (அகம். 149:8—11)

"மீனொடுத்து நெற்குவைஇ
மிசையம்பியின் மனைமறுக்குந்து
மனைக்குவைஇய கறி மூடையால்
கலிச்சும்மைய கரை கலக்குறுந்து;
கலம்தந்த பொற்பரிசம்
கழித்தோணியிற் கரைசேர்க்குந்து
மலைத்தாரமுங் கடற்றாரமும்
தலைப்பெய்து, வருநர்க்கீயும்
புனலம் கள்ளின் பொலந்தார்க்குட்டுவன்
முழங்குகடல் முழவின் முசுறியன்ன"— (புறம். 343: 1—10)

முத்தூறு.

முத்தூறு என்ற ஊர்ப்பெயர் அவ்வூரைத் தன்னகத்தே கொண்ட கூற்றத்திற்கும் பெயராய் அமைந்திருந்தது.

"பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக்
குமரிக் கோடுங் கொடுங் கடல் கொள்ள
வடதிசைக் கங்கையு மிமயமுங் கொண்டு
தென்திசையாண்ட தென்னவன் வாழிய"—(சிலப். 11:19-22)

என்ற சிலப்பதிகார அடிகளுக்கு, "என்றது: அங்ஙனமாகிய நிலக்குறைக்குச் சோழ நாட்டெல்லையிலே முத்தூர்க் கூற்றமும் சேரமானாட்டுக் கூற்றமுமென்று மிவற்றை இழந்த நாட்டிற்காக வாண்ட தென்னவன் வாழ்வாயாக என்றவாறு" என அடியார்க்கு நல்லார் உரை உள்ளது.

முத்தூர்க் கூற்றம் என்றும் பெயர் பெற்றிருந்ததெனவும், சோழ நாட்டெல்லையிலே இருந்தது எனவும் தெரிகிறது.

புறநானூறு இதை வேளிர்க்குரியதாயிருந்ததாகக் கூறுகிறது. செழியனால் கைப்பற்றப்பெற்றது எனவும் கூறுகிறது.

முத்தூற்றுக்கூற்றம் இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ளது என்றும், திருப்பூவணத்துத் தாமரப்பட்டயத்தில் அடிக்கடி கூறப் பட்டுள்ளது[75] என்றும் தெரிகிறது.

75. கலைக் களஞ்சியம் 8:411,

தூறு என்றால் புதர் என்றும் குறுங்காடு என்றும் பொருள் உள்ளமையால் புதர்கள் அடங்கிய அல்லது குறுங்காடு அடங்கிய நிலப்பகுதி மூன்று பகுதியாய் நெருங்கியிருந்து முத்தூறு எனப் பெயர் பெற்றிருக்கலாமோ என்பது ஆய்வுக்குரியது.

தூர் என்றால் வேர் அல்லது மரத்தினடிப் பகுதி என்றும் பொருள் உள்ளது. ஏதாவது குறிப்பிட்ட மரத்தினடிப்பகுதி அல்லது வேர்ப்பகுதியைச் சுற்றிலும் அமைந்த குடியிருப்புகளைக் கொண்ட ஊர்ப்பகுதியைக் குறிக்க எழுந்த பெயரோ என்றும் எண்ண இடமளிக்கிறது.

"பொன்னணியானைத் தொன் முதிர் வேளிர்
குப்பை நெல்லின் முத்தூறு தந்த
கொற்ற நீள்குடைக் கொடித் தேர்ச்செழிய."

முதிரம்.

முதிரம் என்பது மலையின் பெயர். அம் மலையும் அதைச் சேர்ந்த நாடும் குமணனுக்குரியனவாய் இருந்தன.

குமணன் வாழ்ந்த ஊர் குமணம் என்று பெயர்பெற்றுப் பிற் காலத்தில் கொழுமம் எனத் திரிந்தது என்று அறிந்தோர் கூறுவர்.

கோவை மாவட்டத்தைச் சேர்ந்த உடுமலைப்பேட்டை வட்டத்தில் கொழுமம் ஒரு சிற்றூராக இன்று காணப்பெறுகிறது.

கொழுமத்திற்குத்தெற்கே காதவழி தூரத்திற்காணப்படும் குதிரை மலையே பழைய முதிரமலை என்பர். முதுகிற் சேண மிட்டு நிற்கும் குதிரை போன்று இம் மலை காட்சி அளித்தலாற் பிற்காலத்தார் அதனைக் குதிரை மலை என அழைத்தார் போலும் என்பர்.[76]

"முட்புற முது கனி பெற்ற கடுவன்
துய்த்தலை மந்தியைக் கையிடூஉப் பயிரும்,
அதிராயாணர், முதிரத்துக் கிழவ!
இவண் விளங்கு சிறப்பின், இயல் தேர்க்குமண!"

(புறம். 158:23-26)

"குய் கொள் கொழுந்துவை நெய்யுடை அடிசில்,
மதி சேர் நாள் மீன் போல, நவின்ற
சிறுபொன் நன்கலம் சுற்ற இரீஇ,

---

76. ஊரும் பேரும்—ரா. பி. சேதுப்பிள்ளை புக். 130.

"கேடு இன்றாக, பாடுநர் கடும்பு" என,
அரிதுபெறு பொலங் கலம் எளிதினின் வீசி,
நட்டோர் நட்ட நல்இசைக்குமணன்
மட்டார் மறுகின் **முதிரத்தோனே"** — (ஷை. 160:7-13)

"இன்னோர்க்கு என்னாது என்னொடும் சூழாது,
வல்லாங்கு வாழ்தும் என்னாது; நீயும்
எல்லோர்க்கும் கொடுமதி - மனைகிழ வோயே,
பழம் தூங்கு முதிரத்துக் கிழவன்
திருந்து வேல் குமணன் நல்கிய வளனே". (ஷை. 163:5-9)

**முதுவெள்ளிலை.**

முதுவெள்ளிலை என்னும் ஊர் ஆரவாரம் மிக்கது என்றும், புதுவருவாயினையுடையது என்றும் சங்க இலக்கியம் கூறுகிறது.

வெள்ளிலை என்னும் சொல் வெற்றிலையைக் குறிப்ப தோடு, வெள்ளி மடந்தை என்ற நீண்ட செடிவகை ஒன்றினையும் குறிக்கும் சொல்லாக உள்ளது. அவ்வகைச் செடிகள் அடர்ந்த பகுதியில் அமைந்த குடியிருப்புகளைக் கொண்ட ஊர் அப்பெயர் பெற்றிருக்கலாம். முது என்பது முன் ஒட்டாக இணைந்து முது வெள்ளிலை என ஊர்ப்பெயர் அமைந்தது போலும்.

இது குறுநில மன்னரின் குடியிருப்பு..

"நிரைதிமிர் வேட்டுவர் கரை சேர் கம்பலை,
இருங்கழிச் செறுவின் வெள் உப்புப் பகர்நரொடு,
ஒலி ஓவாக் கலியாணர்
முது வெள்ளிலை மீக்கூறும்" - (பத்துப். மதுரைக்: 116-119)

**முரஞ்சியூர்.**

சேரமான் பெருஞ் சோற்று உதியன் சேரலாதனைப் பாடிய முடிநாகராயர் என்னும் சங்க காலப் புலவர் முரஞ்சியூரைச் சேர்ந்தவர். (புறம். 2).

பாறை என்னும் பொருளுடைய முரஞ்சு என்னும் சொல் அடியாகப் பிறந்த ஊர்ப்பெயர் முரஞ்சியூர் என்பது. பாறைப் பாங்கான நில அமைப்பைக் கொண்ட பகுதியில் அமைந்த ஊராக இருந்து முரஞ்சியூர் என்று பெயர் பெற்று இருக்கலாம்.

**முள்ளூர்.**

முள்நிறைந்த மலையையுடைய ஊராதலின் இது முள்ளூர் எனப் பெயர் பெற்றது போலும்.

முள்ளூர், மலையமான் திருமுடிக்காரிக்கு உடையதாய் இருந்திருக்கிறது. இவ்வூரில் ஆரியருக்கும் மலையனுக்கும் போர் நடந்து, அப்போரில் ஆரியர் படை தோற்று ஓடியது.

"ஆரியர் துவன்றிய பேர் இசை முள்ளூர்
பலருடன் கழித்த ஒள்வாள்மலை யனது
ஒரு வேற்கு ஓடியாங்கு நம்
பன்மையது எவனோ, இவள் வன்மை தலைப்படினே"

(நற். 170:6-9)

"மாயிரு முள்ளூர் மன்னன் மாஊர்ந்து
எல்லித் தரீஇய இனநிரைப்
பல்ஆன் கிழவரின் அழிந்த இவள் நலனே" (ஷை. 291:7-9)

"இரண்டு அறி கள்வி நம் காதலோளே
முரண் கொள் துப்பின் செவ்வேல் மலையன்
முள்ளூர்க் கானம் நாற வந்து
நள்ளென் கங்குல் நம்மோரன்னள்" (குறுந். 312:1-4)

"முள்ளூர் மன்னன் கழல் தொடிக் காரி
செல்லா நல்லிசை நிறுத்த வல்வில்
ஓரிக்கொன்று சேரலர்க்கு ஈத்த
செவ்வேர்ப் பலவின் பயம் கெழுகொல்லி"(அகம்.206. 12-15)

"தொலையா நல்லிசை விளங்கு மலையன்
மகிழாது ஈத்த இழையணி நெடுந்தேர்
பயன்கெழு முள்ளூர் மீமிசைப்
பட்டமாரி உறையினும் பலவே" —(புறம். 123:3-6)

"துயில் மடிந்தன்ன தூங்கிருள் இறும்பின்
பறையிசை அருவி முள்ளூர் பொருந" (ஷை. 12617-8)

":அரசு இழந்திருந்த அல்லற் காலை
முரசு எழுந்து இரங்கும் முற்றமொடு, கரைபொருது
இரங்குபுனல் நெறிதரு மிகுபெருங் காவிரி
மல்லல் நல்நாட்டு அல்லல்தீர
பொய்யாநாவின் கபிலன் பாடிய
மையணி நெடுவரை ஆங்கண், ஒய்யெனச்
செருப்புகல் மறவர் செல்புறம் கண்ட
எள்ளறு சிறப்பின் முள்ளூர் மீமிசை
அருவழி இருந்த பெருவிறல் வளவன்
மதிமருள் வெண்குடை காட்டி, அக்குடை
புதுமையின்நிறுத்த புகழ்மேம்படுந" (ஷை. 174:6-16)

**முனையூர்.**

முனையூர் என்பது இடவகனுக்கு உதயணன் கொடுத்த ஒரு நாட்டின் தலைநகர்.

அடவிநாடு ஐம்பதிலும் முன்னிடமாக அமைந்திருந்தமையால் முனையிடம் என்னும் பொருளில் முனையூர் எனப்பெயர் பெற்றிருக்கலாம். அல்லது முன்னதாகிய அதாவது தலையாயதாகிய தலைநகர் என்னும் பொருளில் முனையூர் என்றும் பெயர் பெற்றிருக்கலாம்.

"இடவகற்கிருந்த முனையூருள்ளிட்
டடவி நன்னா டைம்பது கொடுத்து"— (பெருங். 4-9:28-29)

**மையல்.**

வையை யாற்றுக்கருகில் பொய்யாத புது வருவாயினையுடையதாக அமைந்திருந்தது மையல் என்றும் ஊர் என்று சங்க இலக்கியம் கூறுகிறது.

செல்வம் முதலியவற்றால் வரும் செருக்கு என்று பொருள்படும் மையல் என்னும் சொல் வையையாறுபாய்ந்து வளம் கொழித்த ஓர் ஊருக்குப்பெயராய் அமைந்தது போலும்.

பாண்டியன் வஞ்சினம் கூறும்பொழுது இந்த ஊர்ப் பெயரும், இவ்வூர்த்தலைவன் மாவனின் பெயரும் இடம் பெற்றிருப்பதையறியலாம்.

பாண்டி நாட்டகத்து ஊராக இருந்திருக்கலாம்.

"வையை சூழ்ந்த வளங்கெழு வைப்பிற்
பொய்யா யாணர் மையல் கோமான்" (புறம். 71:10-12)

**மோகூர்.**

பழையன் என்பவனுக்குரியதாய் இருந்திருக்கிறது மோகூர் என்னும் ஊர்.

மோரியர் படை மோகூரைத் தாக்கியபோது, உற்றுழி உதவுவதாக வஞ்சினங்கூறி இருந்த கோசர், மோகூர் அவையத்து ஆலமரத்தடியில் தோன்றி மோரியரைப் புறங்கண்டனர் என்ற வரலாறு உள்ளது.

"மழை ஒழுக்கு அறாஅப் பிழையா விளையுள்,
பழையன் மோகூர் அவையகம் விளங்க,
நான் மொழிக் கோசர் தோன்றி யன்ன,
தாம் மேஎந்தோன்றிய நாற்பெருங்குழுவும்"
(பத்துப். மதுரைக். 507-510)

"நுண் கொடி உழிஞை வெல் போர் அறுகை
சேணன் ஆயினும், கேள்' என மொழிந்து,
புலம் பெயர்ந்து ஒளித்த களையாப் பூசற்கு,
அரண்கள் தாவுறீஇ, அணங்கு நிகழ்ந்தன்ன
**மோகூர்** மன்னன் முரசங் கொண்டு.
நெடுமொழி பணித்து, அவன் வேம்பு முதல் தடிந்து'
முரசு செய முரச்சி, களிறு பல பூட்டி
ஒழுகை உய்த்தோய்: (பதிற். 44: 10- 17)

"களிறு பரந்து இயல, கடுமா தாங்க,
ஒளிறு கொடி நுடங்கத் தேர் திரிந்து கொட்ப;
எஃகு துரந்து எழுதரும் கை கவர் கடுந்தார்,
வெல் போர் வேந்தரும் வேளிரும் ஒன்று மொழிந்து,
மொய்வளம் செருக்கி, மொழி நிலை அதிரமண்டி".
(ஷை. 49; 4-9)

"துனை கால் அன்ன புனைதேர்க் கோசர்
தொல் மூதாலத்து அரும்பணைப் பொதியில்,
இன்னிசை முரசங் கடிப்பு இகுத்து இரங்க,
தெம்முனை சிதைத்த ஞான்றை, **மோகூர்**
பணியாமையின், பகை தலைவந்த
மாகெழுதானை வம்ப மோரியர்
புனை தேர் நேமி உருளிய குறைத்த" (அகம். 251: 7-13)

**வஞ்சி.**

வஞ்சி என்ற ஊர்ப்பெயர் தாவரத்தால் பெற்ற பெயர்.

வஞ்சி மாநகர் சேர நாட்டிலுள்ள திருவஞ்சைக்களமே வஞ்சி மாநகர் எனப்படும். திருச்சிராப் பள்ளி மாவட்டத்திலுள்ளதும் கொங்கு நாட்டதுமான கருரே வஞ்சிமாநகர் என்பாரும், மலை நாட்டு மேற்குத் தொடர்ச்சி மலை அடிவாரத்தில் பேரியாற்றங் கரையிலுள்ள திருக்கருரே வஞ்சி மாநகர் என்பாரும் எனப்பல வகை ஆராய்ச்சியாளருளர். சேரன் வஞ்சி என்னும் நூல் திருவஞ்சைக்களத்தை வஞ்சி என்றும், சேரன் செங்குட்டுவன், வஞ்சி மாநகர் என்னும் நூல்கள் கருரை வஞ்சி என்றும் கூறியுள்ளன.[77]

வீரபத்தினி கண்ணகிக்குக் கோயில் அமைத்து வழிபட்ட சிறப்பினையுடையது சேரர்வஞ்சி.

77. கலைக்களஞ்சியம். 9:89.

சேரரது குட புலத்துள் கொங்கு மண்டலம் ஒரு பிரிவு என்பதும், அம்மண்டலத்துக் கருவூர் வஞ்சியே சேரரது ஆதித் தலைநகர் என்பதும், பாண்டிய சோழர்களின் ஆதிக்கம் பெருகிய பிறகே ஒரு மரபினராயிருந்த பண்டைச் சேரரின் ஒரு கிளையினர் தம் கடற்கரைப் பட்டினமான முசிறியைத் தலைநகராகக் கொண்டு குடமலை நாட்டை ஆண்டுவந்தனர் என்பதும், மற்றொரு கிளையினர் கொங்கு நாட்டிலிருந்தே ஆட்சி புரியலாயினர் என்பதும் பிறவும் சாஸனவழியால் மலையிலக்காதலும், கொடுங்கோளூராகிய முசிறியைக் கருவூர் வஞ்சி என்ற பெயர்களால் குறிப்பிட்டுள்ள சாஸனம் ஒன்றுமே யாண்டுங் காணக்கிடையாமையாலும் தெளிய அறியலாம் என்பர்.[78]

பெருமை வாய்ந்த வஞ்சி எது என்று அறிய முடியாமல் இருப்பது ஒரு குறையே.

"வடபுல இமயத்து, வாங்குவிற் பொறித்த
எழுவுறழ், திணிதோள், இயல் தேர்க்குட்டுவன்
வருபுனல் வாயில் வஞ்சியும் வறிதே"
(பத்துப். சிறுபாண் 48-50)

"வைத்த வஞ்சினம் வாய்ப்பவென்று
வஞ்சி மூதூர்த்தந்து பிறர்க்கு உதவி (பதிற். பதிகம் 9,8-9)

"பூவினுள் பிறந்தோன் நாவினுள் பிறந்த
நான்மறைக் கேள்வி நவில்குரல் எடுப்ப
ஏம இன்துயில் எழுதல் அல்லதை
வாழிய வஞ்சியும் கோழியும் போல
கோழியின் எழாது, எம்பேர் ஊர்துயிலே"
(பரி. திரட்டு. 8:2-11)

"தொன்று முதிர்வடவரை வணங்கு வில்பொறித்து
வெஞ்சின வேந்தரைப் பிணித்தோன்
வஞ்சி அன்ன, என்நலம் தந்து சென்மே" (அகம். 396:17-19)

"தண்பொரு நைப்புனல் பாயும்
விண்பொருபுகழ் விறல் வஞ்சி
பாடல் சான்ற விறல் வேந்தனும்" (புறம் 11: 5-7

78. சேரர் வஞ்சியும் சிலாசாஸன வழக்கும்- மு. இராகவையங்கார்-ஆராய்ச்சித் தொகுதிகள் பக். 263. பழனியப்பா பிரதர்ஸ் தெப்பக்குளம், திருச்சி.

**வயலூர்.**

விளைநிலங்களை யொட்டியெழுந்த ஊர்கள் அப்பெயர் களையே ஊர்ப்பெயர்களாகக் கொண்டு விளங்கியிருக்கின்றன. விளைநிலத்தைக் குறிக்கும் வயல் என்ற சொல் ஊர் என்ற பின் ஒட்டுடன் வயலூர் என வழங்கியிருக்கிறது.

வாயில் என்ற சொல்லடியாகத் தோன்றிய வாயிலூர் என்ற ஊர்ப்பெயரே நாளடைவில் குறுகிச் சிதைந்து வயலூர் எனவும் வழங்கி இருக்க வேண்டும் என்றும் கருதுகின்றனர்.[79] செங்கற் பட்டைச் சேர்ந்த திருவள்ளூர் வட்டத்தில் அவ்வூர் உள்ளது.

சிலப்பதிகாரத்தில் குறிக்கப் பெற்ற வயலூர் பாண்டி நாட்டுள்ள தோரூர் என்றும், வார்த்திகனுக்கு ஒரு பாண்டியனார் பிரமதாயமாகக் கொடுக்கப் பெற்றது என்றும் தெரிகிறது.[80] திருச்சி மாவட்டத்திலும் ஒரு வயலூர் உள்ளது.

மடங்கா விளையுள் ஒரு வயலூர் நல்கி (சிலப். 23:119.)

**வல்லம்.**

ஆற்றல் அல்லது வலிமை என்னும் பொருளுடைய வல்லம் என்னும் சொல் வலிமையுடைய கோட்டையைக் குறித்துப் பின் னர் கோட்டை அமைந்த ஊருக்கே பெயராயிற்று போலும்.

தஞ்சாவூருக்கருகில் வல்லம் என்ற பெயருடன் ஓர் ஊர் உள் ளது. அங்கே அழிந்த அகழிகள் உள்ளன. வல்லத்தில் கோட்டை இருந்தது. அது கள்ளரில் ஒரு வகுப்பாருடைய தலைநகராக விளங்கியிருக்கிறது. வல்லத்தில் அரசு புரிந்த குடியினர் வல்லத் தரசு என்ற பட்டம் பெற்றிருந்தனர்.[81]

வடஆர்க்காட்டிலுள்ள திருவல்லம் என்னும் ஊர் பாண மன்னர்களுக்குரிய ஒரு கோட்டையாக விளங்கியது.[82]

"கடும்பகட்டு யானைச் சோழர் மருகன்
நெடுங்கதிர் நெல்லின் வல்லம்" (அகம்.356:12-13)

---

79. ஊரும் பேரும் ரா.பி. சேதுப்பிள்ளை. பக். 59.
80. சிலப்பதிகாரம்—உ. வே. சாமிநாதையர் அரும்பத அகராதி.
81. ஊரும்பேரும்—ரா. பி. சேதுப்பிள்ளை பக். 78
82. ஷை ஷை ஷை

**வல்லார்.**

வல்லார் என்ற ஊரில் இருந்த வள்ளல் பண்ணன் என்பவன். வல்லார் கிழான் பண்ணன் எனப் பெற்றான்.

வலிமையுடையவர் எனப்பொருள்படும் வல்லார் என்னும் சொல்வலிய வீரர்கள் தங்கியிருந்த குடியிருப்புகளடங்கிய ஊருக்குப் பெயராய் அமைந்திருக்கலாம்.

''மன்ற விளவின் மனைவீழ் வெள்ளில்
கருங்கணையிற்றி காதல் மகனொடு
கான இரும்பிடிக் கன்று தலைக் கொள்ளும்
பெருங்குறும்புடுத்த வன்புல விருக்கைப்
புலா அலம்பிற் போரருங் கடிமிளை
வலா அரோனே வாய்வாட் பண்ணன்''— (புறம்.181:1—6)

**வாகை.**

மரப்பெயர்கள் போன்ற தாவரங்களின் பெயரால் ஊர்கள் பெயர்பெறும் முறையையொட்டி வாகை என்ற ஒருவகை மரத்தின் பெயர் ஓர் ஊருக்குப் பெயராய் அமைந்தது போலும்.

தனிமரங்களின் பெயர்களையே தம் பெயர்களாகக் கொண்ட ஊர்ப்பெயர்களில் வாகை என்ற ஊர்ப்பெயர் ஒன்று.

வாகையென்னும் ஊரில் போர்க்களத்தில் கரிகாலனுடன் போர் புரிந்த பகைவர்கள் தோற்று ஓடினர் என்று சங்க இலக்கியச் செய்தி ஒன்று கூறுகிறது.

வடஆர்க்காட்டில் வாகை என்ற பெயருடன் ஓர் ஊர் உள்ளது.

''கூகைக் கோழி வாகைப் பறந்தலைப்
பசும்பூட் பாண்டியன் வினைவல் அதிகன்
களிறொடு பட்ட ஞான்றை"— (குறுந். 393 : 3-6)

''வெருவருதானையொடு வேண்டுபுலத்திறுத்த
பெருவளக் கரிகான் முன்னிலைச் செல்லார்,
சூடா வாகைப் பறந்தலை, ஆடுபெற
ஒன்பது குடையும் நன் பகல் ஒழித்த
பீடுஇல் மன்னர் போல,"— (அகம். 125 : 17-21)

''படுமணி மருங்கின் பணைத்தாள் யானையும்,
கொடி நுடங்கு மிசைய தேரும், மாவும்,

படையமை மறவரொடு, துவன்றிக் கல்லென,
கடல் கண்டன்ன கண் அகல் தானை
வென்றெறி முரசின் வேந்தர் என்றும்
வண்கை எயினன் வாகை யன்ன" (புறம். 351 : 1-6)

**விச்சி.**

விச்சி என்பது ஒரு மலைப்பகுதி ஊர் என எண்ண இடம் அளிக்கிறது.

'விச்சிறல்' என்றால் ஒருவகைக் கோரைப்புல் எனப்பொருள் படுவதால் அவ்வகைக் கோரை அடர்ந்து வளர்ந்த பகுதியைச் சார்ந்த குடியிருப்புகள் அடங்கிய ஊர் என்னும் கருத்தில் 'விச்சி' என்ற ஊர்ப் பெயர் அமைந்ததாகவும் இருக்கலாம்.

விச்சியை ஆண்ட தலைவன் விச்சிக் கோன் எனப்பெற்றான். கபிலர் பாரிமகளிரை அவனிடம் கொண்டு சென்றுபாடியுள்ளார்.

"விளங்குமணிக் கொடும்பூண் விச்சிக்கோவே
இவரே, பூத்தலை யறுஅப் புனைகொடி முல்லை
நாத்தழும் பிருப்பப் பாடாதாயினும்
கறங்குமணி நெடுந்தேர் கொள்கெனக் கொடுத்த
பரந்தோங்கு சிறப்பிற் பாரிமகளிர்
யானே, பரிசிலன் மன்னு மந்தணன், நீயே
வரிசையில் வணக்கும் வாண் மேம்படுநன்
நினக்கியான் கொடுப்பக் கொண்மதி"— (புறம். 200 : 8—15)

**வியலூர்.**

வியலூர் என்பது செங்குட்டுவனால் வெல்லப்பட்ட தோரூர். வியலூர் எனவும் வழங்கப்பட்டதாகத் தெரிகிறது.[83] நன்னன் வேண்மான் என்பவனுக்கு இவ்வூர் உரியது என்று சங்கஇலக்கியம் கூறுகிறது.[84]

பெருமை பொருந்திய ஊர் என ஊரின் புகழ் கருதி வியலூரி எனப் பெயர் பெற்றதா அல்லது காட்டுப் பகுதியில் அமைந்த ஊர் என்பதால் வியலூர் எனப் பெயர் பெற்றதா என்பது தெரியவில்லை.

---

83. சிலப்பதிகாரம். உ. வே. சாமிநாதையர் அரும்பத அகராதி.
84. அகநானூறு 97

"இனம் தெரி பல்லான் கன்றொடு கொண்டு
மாறா வல்வில் இடும்பிற் புறத்திறுத்து
உறுபுலி அன்ன வயவர் வீழ,
இறுகுரல் நெய்தல் வியலூர் நூறி"
(பதிற். ஐந்தாம் பத்து—பதிகம் 8-11)

"நறவு மகிழிருக்கை நன்னன் வேண்மான்
வயலைவேலி வியலூர் அன்ன" (அகம் 97:12-13)

"கறிவளர் சிலம்பிற்றுஞ்சும் யானையிற்
சிறுகுர னெய்தல் வியலூர் எறிந்த பின்"
(சிலப் 28:114-115)

**விரிச்சியூர்.**

நன்ஞகனார் என்ற சங்ககாலப் புலவர் விரிச்சியூரைச் சேர்ந்தவர். இந்த விரிச்சியூர் நன்ஞகனார் பாடியபுறப்பாடல் (புறம் 292) ஒன்று உள்ளது.

ஒரு குறிப்பிட்ட வகுப்பினர் வசிக்கும் இடத்திற்குச் சென்று, அவர்கள் தற்செயலாகப் பேசிக் கொள்ளும் பேச்சை நன்னிமித்தமாகக் கொள்ளும் விரிச்சி கேட்டல் என்னும் மரபையொட்டி, விரிச்சி சொல்வதற்குரியோர் வசித்த குடியிருப்பு அமைந்த ஊர் விரிச்சியூர் எனப் பெயர் பெற்றிருக்கலாம்.

**விரியூர்.**

விரி என்றால் காட்டுப்புன்னை என்ற ஒருவகை மரத்தைக் குறிக்கும். அவ்வகை மரங்கள் வளர்ந்த பகுதியில் அமைந்த ஊர் விரியூர் எனப் பெயர் பெற்றது போலும்.

புறப்பாடல் (332) பாடிய நக்கனார் என்ற சங்ககாலப் புலவர் இவ்வூரினர், விரியூர் நக்கனார் எனப் பெயர் பெற்றார்.

**விளங்கில்.**

விளங்கு என்பது சிற்றரத்தை எனப் பொருள் படுகின்றது. தாவரத்தால் விளங்கில் எனப் பெயர் பெற்றிருக்கலாம். அல்லது மருத்துவ தொடர்புடைய சிற்றரத்தையைக் கொண்டு, மருத்துவ தொடர்பில் பெயர் பெற்றதாகவும் இருக்கலாம்.

விளங்கிலுக்கு நேர்ந்த விழுமத்தைச் சேரன் மாந்தரஞ் சேரலிரும் பொறை நீக்கினன்.

"மாவண் கடலன் விளங்கில் அன்ன, எம்
மை யெழில் உண்கண் கலுழ" (அகம். 81 : 13-14)

"முதிர் வார் இப்பி முத்தவார் மணல்,
கதிர் விடு மணியின் கண் பொரு மாடத்து,
இலங்கு வளை மகளிர் தெற்றி ஆடும்
விளங்குசீர் விளங்கில் விழுமங் கொன்ற
களம் கொள் யானை, கடுமான், பொறைய"

(புறம். 53 : 1-5)

**வீரை.**

கடல் எனப் பொருள்படும் வீரை என்னும், கடலையடுத்த பகுதியில் அமைந்த ஊருக்குப் பெயராயிற்று போலும். "வீரை முன்துறையில் உப்பின் நிரம்பாக் குப்பை பெரும் பெயற்கு உருகியதாகக் கூறப்பட்ட செய்தி இவ்வூர், கடலையடுத்ததே என்பதை வலியுறுத்துகின்றது.

புறநானூறில் 320ஆம் பாடலைப் பாடிய வீரை வெளியனார் என்ற சங்க காலப் புலவர் வீரைவெளி என்ற பெயருடைய ஊரைச் சேர்ந்தவராகக் கருதப்படுவதால் வீரைவெளி என்பது தான் ஊரின் பெயராக இருக்கலாமோ என எண்ணத் தோன்றுகிறது.

"அடு போர் வேளிர் வீரை முன்றுறை
நெடுவேள் உப்பின் நிரம்பாக் குப்பை
பெரும்பெயற்கு உருகியாஅங்கு" (அகம். 206 : 13-15)

**வெண்குன்று.**

'வெண்குன்று'—என்ற சிலப்பதிகாரத் தொடருக்கு, சுவாமி மலை என்று சிலப்பதிகார அரும்பதவுரையாசிரியர் குறித்துள்ளார்.

கொங்கு நாட்டில் பவானி நதியும் சிந்தாமணியாறும் கலக்குமிடத்தில் தவளகிரி என்னும் மலையொன்றுண்டு. அங்கு முருகன், கோயில் கொண்டு விளங்கினார் என்பது சாசனத்தால் (108 of 1910) அறியப்படும். வெண்குன்று என்ற தமிழ்ச் சொல்லுக்கு நேரான வடமொழிப் பதம் தவளகிரியாதலால் இளங்கோவடிகள் குறித்த வெண்குன்று அதுவாக இருக்கலாம் என்பர்.[85]

சீர் கெழு செந்திலும் செங்கோடும் வெண்குன்றும்
ஏரகமும் நீங்கா இறைவன் கை வேலன்றே"

(சிலப். 24 : 8 : 1)

---

85. ஊரும் பேரும். ரா. பி. சேதுப்பிள்ளை பக். 276.

**வெண்ணி.**

வெறுந்தரை அல்லது மணற்பாங்கான தரை என்று பொருள் படும். வெண்ணி என்னும் அவ்வகையான நில அமைப்புப்பகுதியில் அமைந்த ஊருக்குப் பெயராயிற்று போலும்.

சேரனும் பாண்டியனும் கரிகாலன் இளையன் என எண்ணி, அவன் மீது போர் தொடுக்க, அவர்களுடன் போர் புரிந்து கரிகாலன் வென்ற இடமே வெண்ணி என்பது. போரில் புறப்புண் அடைந்த சேரன் வடக்கிருந்து இறந்தான்.

இது கோயில் வெண்ணி என்றும் கூறப்படும். இவ்வூர் ஆரூரின் அருகேயுள்ளது.

கரிகாலனைப் பாடிய குயத்தியார் (புறம். 66) என்னும் புலவர் இவ்வூரினர். ஆகவே வெண்ணிக்குயத்தியார் எனப் பெயர் பெற்றார்.

"இரும்பனம் போந்தைத் தோடும், கருஞ்சினை
அரவாய் வேம்பின் அம்குழைத் தெரியலும்,
ஓங்கிருஞ் சென்னி மேம்பட மிலைந்த
இருபெரு வேந்தரும் ஒருகளத்து அவிய,
**வெண்ணித்** தாக்கிய வெருவரு நோன்தாள்,
கண்ணார் கண்ணி, கரிகால் வளவன்"
(பத்துப். பொருந. 143-148)

"வாளை வாளின் பிறழ நாளும்
பொய்கை நீர் நாய் வைகுதுயில் ஏற்கும்
கைவண் கிள்ளி **வெண்ணி** சூழ்ந்த
வயல் வெள் ஆம்பல் உருவ நெறித்தழை
ஐதகலல்குல் அணி பெறத் தைஇ.
விழவின் செலீஇயர் வேண்டும் மன்னோ" (நற். 390:1-6)

"கரிகால் வளவனொடு **வெண்ணிப்** பறந்தலைப்
பொருது புண் நாணிய சேரலாதன்
அழிகள மருங்கின் வாள் வடக்கிருந்தென,
இன்னா இன் உரை கேட்ட சான்றோர்
அரும் பெறல் உலகத்து அவனொடு செலீஇயர்,
பெரும் பிறிது ஆகியாங்கு," (அகம். 55:10-15)

"காய்சின மொய்ம்பின் பெரும் பெயர்க் கரிகால்
ஆர்கலி நறவின் **வெண்ணி** வாயில்

சீர் கெழு மன்னர் மறலிய ஞாட்பின்
இமிழ் இசை முரசம் பொருகளத்து ஒழிய,
பதினொரு வேளிரொடு வேந்தர் சாய,
மொய்வலி அறுத்த ஞான்றை,
தொய்யா அழுந்தூர் ஆர்ப்பினும் பெரிதே.''

(ஷி. 246:8-14)

''களிஇயல் யானைக் கரிகால் வளவ
சென்று, அமர்க்கடந்த நின்ஆற்றல் தோன்ற
வென்றோய்! நின்னினும் நல்லன் அன்றே
கலிகொள் யாணர் வெண்ணிப் பறந்தலை
மிகப் புகழ் உலகம் எய்தி
புறப்புண் நாணி, வடக்கிருந் தோனே'' (புறம். 66:3-8)

**வெண்மணி வாயில்.**

முத்து என்ற பொருளுடையது வெண்மணி என்னும் சொல். மத்தி என்பவன் எழினி என்பவனை வென்று அவனுடைய பல்லைப் பறித்துக் கொணர்ந்து கோட்டைக் கதவில் பதித்தான். மேலும் வெற்றிக்கு அடையாளமாக கடற்கரையில் ஒரு கல்லையும் நட்டான்.

இச்செய்தி வெண்மணி வாயில் என்னும் ஊர் முத்துக் கிடைக்கும் கடற்கரை நகரமாய் இருந்திருக்கலாம் என எண்ணத் தோன்றுகிறது.

பகைவரை அட்டு அவர் பல்லைக் கொணர்ந்து தமது கோட்டை வாயிற் கதவில் பதித்தல் பண்டைய மரபு என்பதையும் உணர முடிகிறது.

''குழி யிடைக்கொண்ட கன்றுடைப் பெருநிரை
பிடிபடுபூசலின் எய்தாது ஒழிய,
கடுஞ்சின வேந்தன் ஏவலின் எய்தி
நெடுஞ்சேண் நாட்டில் தலைத் தார்ப்பட்ட
கல்லா எழினி பல் எறிந்து அழுத்திய
வன்கண் கதவின் வெண்மணி வாயில்
மத்திநாட்டிய கல்கெழு பனித்துறை
நீர் ஒலித்தன்ன........'' (அகம். 211:9-16)

**வெள்ளூர்.**

வெண்பூதியார் என்ற சங்ககாலப் புலவர் இவ்வூரினரான வெள்ளூர் கிழார் மகனார் எனத் தெரிகிறது, (குறுந். 219)

பராந்தக நெடுஞ்செழியன் (கி.பி. 768-815) வெள்ளூரில் போர்புரிந்து பகைவர்களை அழித்ததாகச் சிவரமங்கலச் செப்பேடு கூறுகிறது.

திருநெல்வேலிக்கும் தூத்துக்குடிக்கும் இடையில் வல்ல நாட்டிற்கு அருகில் வெள்ளூர் இருப்பதாகக் கூறுகின்றனர்.

**வெள்ளியம்பலம்.**

பாண்டியன் பெருவழுதி இங்குத் துஞ்சிய காரணத்தால் வெள்ளியம்பலத்துத் துஞ்சிய பெருவழுதி எனப் பெயர் பெற்றான் (புறப். 58) ஆகவே வெள்ளியம்பலம் ஓர் ஊரின் பெயராகவும் இருக்குமோ என்று எண்ண இடமளிக்கிறது.

மதுரையில் கோயிலில் வெள்ளியம்பலம் என்று ஓர் அம்பலம் உண்டு இறைவனுக்குப் பொன்னம்பலத்தோடு இந்த வெள்ளியம்பலமும் உரியது.

''அதிராச் சிறப்பின் மதுரை மூதூர்க்
கொன்றையஞ் சடைமுடி மன்றப்பொதியிலில்
வெள்ளியம்பலத்து நள்ளிருட் கிடந்தேன்''
(சிலப். பதிகம். 39-41)

**வெள்ளைக்குடி.**

வேங்கை மரம் எனப் பொருளுடைய சொல் வெள்ளையென்பது. வேங்கைமரங்களடர்ந்த குடியிருப்புகள் அமைந்த ஊர் வெள்ளைக்குடி எனப் பெயர் பெற்றிருக்கலாம்.

நற்றிணையில் 158, 196-ஆகிய பாடல்களையும், புறநானூற்றில் 35ஆம் பாடலையும் பாடிய நாகனார் என்ற புலவர் வெள்ளைக்குடியைச் சேர்ந்தவர்- இவர் சோழனைப் பாடி பழஞ்செய்க் கடன் வீடு கொண்டார். (புறம் 35)

**வேங்கடம்**

இப்பொழுது திருப்பதி என வழங்கும் ஊர். மலைநாட்டு ஊர். வைணவத்தலம்.

வேங்கடம் தமிழ்நாட்டின் வடஎல்லையாக அமைந்திருந்தது.

தொண்டை நாட்டை ஆண்ட சங்ககாலப் புல்லி என்ற தலைவனின் மலையாக வேங்கடத்தைச் சங்க இலக்கியங்கள் கூறுகின்றன. திரையன் என்பவனின் ஆட்சியிலும் இருந்திருக்கிறது,

"வட வேங்கடந் தென்குமரி
ஆயிடைத்
தமிழ் கூறும் நல்லுலகம்"—(தொல். எழுத்து. சிறப்புப். 1-3)

"வேங்கடம் பயந்தவெண் கோட்டு யானை" (அகம். 27 : 7)

"நறவு நொடை நெல்லின் நாள் மகிழ் அயரும்
கழல்புனை திருந்தடிக் களவர் கோமான்
மழபுலம் வணக்கிய மாவண் புல்லி
விழவுடை விழுச்சீர் வேங்கடம் பெறினும்" (ஷெ. 61 : 10-13)

"நறவுநொடை நல்லில் புதவு முதற்பிணிக்கும்
கல்லா இளையர் பெருமகன் புல்லி
வியன்தலை நல் நாட்டு வேங்கடம் கழியினும்".
(ஷெ. 85 : 8-10)

"ஈன்று நாள் உலந்த மெல் நடை மடப்பிடி
கன்று பசிகளைஇய, பைங்கண் யானை
முற்றா மூங்கில் முளை தருபு ஊட்டும்
வென்வேல் திரையன் வேங்கட நெடுவரை" (ஷெ.85:6-9)

"மாஅல் யானை மறப்போர்ப்புல்லி
காம்புடை நெடுவரை வேங்கடத்து உம்பர்" (ஷெ.209:8-9)

"சுதை விரித்தன்ன பல் பூ மராஅம்
பறை கண்டன்ன பாஅடி நோன்தாள்
திண்நிலை மருப்பின் வயக்களிறு உரிஞு தொறும்
தண் மழை ஆலியின் தாஅய், உழவர்
வெண்ணெல் வித்தின் அறை மிசை உணங்கும்
பனிபடு சோலை வேங்கடத்து உம்பர்"— (ஷெ.211:2-7)

"வினை நவில் யானை விறற்போர்த் தொண்டையர்
இன மழை தவழும் ஏற்று அரு நெடுங் கோட்டு
ஓங்கு வெள்ளருவி வேங்கடத்து உம்பர்" (ஷெ.213:1-3)

"செந்நுதல் யானை வேங்கடம் தழீஇ" (ஷெ.265:21)

"குடவர் புழுக்கிய பொங்கவிழ்ப்புன்கம்
மதர்வை நல்லான் பாலொடு பகுக்கும்
நிரைபல குழீஇய நெடுமொழிப் புல்லி
தேன் தூங்கு உயர்வரை நல்நாட்டு உம்பர்
வேங்கடம் இறந்தனர் ஆயினும்" (ஷெ. 393:16-20)

"சிறுநனி, ஒருவழிப் படர்க என்றோனே, எந்தை,
ஒலி வெள்ளருவி வேங்கட நாடன்" (புறம்,381:21-22)

"வேங்கட விறல் வரைப்பட்ட
ஓங்கல் வானத்து உறையினும் பலவே" (ஷை. 385:11-12)

"புன் தலை மடப்பிடி இனைய, கன்றுதந்து
குன்றக நல்லூர் மன்றத்துப் பிணிக்கும்
கல்லிழி அருவி வேங்கடங் கிழவோன்
செல்வுழி எழாஅ நல்ஏர் முதியன்
ஆதனுங்கன் போல"— (ஷை.389:9–13)

"வேங்கட வரைப்பின் வடபுலம் பசித்தென
ஈங்கு வந்து இறுத்த என் இரும் பேர் ஒக்கல்" (ஷை.391:7-8)

**வேம்பற்றூர்.**

வேம்பு மரத்தின் பெயரால் பெற்ற ஊர்ப்பெயராக இருக்கலாம். வேம்பற்றூர் என்ற பழம்பெயர் இப்பொழுது வேம்பத்தூர் என வழங்குகிறது.

மதுரைக்கு வடகிழக்கில் இரண்டு காதத் தொலைவில் வையையாற்றுக்கு வடக்கே இருக்கிறது.[86]

குறுந்தொகையில் 362ஆம் பாடலைப் பாடிய கண்ணன் கூத்தன் என்ற சங்ககாலப் புலவரும், அகநானூற்றில் 157ஆம் பாடலையும், புறநானூற்றில் 317 ஆம் பாடலையும் பாடிய குமரனார் என்ற சங்ககாலப் புலவரும் இவ்வூரினர்.

**வேலூர்.**

சிறுபாணாற்றுப் படையில் குறிக்கப் பெறும் வேலூர் என்ற இவ்வூர் தென் ஆர்க்காடு மாவட்டத்தில் திண்டிவனம் வட்டத்தில் கிளியனூருக்கு அருகில் உள்ளது ஒய்மா நாட்டு வேலூர் என்று குறிக்கப் பெற்ற இவ்வூர் இப்பொழுது உப்பு வேலூர் என வழங்கப் பெறுகிறது. (வடஆர்க்காடு மாவட்டத்திலுள்ள வேலூர் வேறு)

வேல் என்ற ஒருவகை மரத்தின் பெயரால் வேலூர் என்ற பெயர் வைக்கப் பெற்றிருக்கலாம். அல்லது நல்லியக்கோடன் தன் பகையை வென்ற இடமாதலின் வேலூர் என்றும் பெயர் பெற்றிருக்கலாம். (வேல் என்றால் பகை என்றும் வெல்லுகை என்றும் பொருள் உண்டு)

---

86. கலைக்களஞ்சியம் 9;524

"நல்லியக்கோடன் தன் பகை மிகுதிக்கு அஞ்சி முருகனை வழிபட்ட வழி அவன் இக்கேணியிற் பூவை வாங்கிப் பகைவரை எறியென்று கனவிற் கூறி, அதிற் பூவைத் தன் வேலாக நிருமித்த தொரு கதைகூறிற்று. இதனானே வேலூர் என்று பெயராயிற்று" என்பர் நச்சினார்க்கினியர்.

"திறல் வேல்நுழியிற் பூத்தகேணி
விறல் வேல்வென்றி வேலூரெய்தின்"

(பத்துப். சிறுபாண் 172-173)

வேலின் நுனிபோல் மலர்ந்த மலரையுடைய கேணி என்றும், பகையை வென்ற வேலூர் என்றும் பொருள் கொள்ளலாம். இவ்வாறு கொள்ளும்பொழுது நச்சினார்க்கினியர் கருத்துப் பொருந்துவதாகத் தோன்றவில்லை.

**வேளூர்.**

மண் எனப் பொருள்படும் வேள் என்ற சொல், நில அமைப் பால் பெற்ற பெயரோ என எண்ண இடமளிக்கிறது.

நாகப்பட்டினத்துக்கு அருகே ஒரு வேளூர் உண்டு. அது கீழ் வேளூர் என அழைக்கப் பெற்று இப்பொழுது கீவளூர் என சிதைந்துள்ளது.

"நல்மரம் குழீஇய நனை முதிர்சாடி
பல்நாள் அரித்த கோஒய் உடைப்பின்
மயங்குமழைத்து வலையின் மறுகு உடன் பனிக்கும்
பழப்பல் நெல்லின் வேளூர் வாயில்" (அகம் 166:1-4)

**பிறநாட்டு ஊர்கள்**

**அங்கநாடு**

விசயவரன் என்னும் அரசனுடைய நாடு அங்க நாடு. சண்பை என்னும் வளமுள்ள நகரைத் தலைநகராகக் கொண்டது. கங்கை நதியால் வளம் பெறும் நாடு.

மணிமேகலையின் முற்பிறவியில் தவ்வையராகிய தாரை, வீரை என்பவர்களை, அங்க நாட்டின் கச்சயத்தை ஆண்ட துச்சயன் என்பவன் மணந்தான் என்பது மணிமேகலைச் செய்தி.

"இன்னும் கேளாய் இலக்குமி ! நீ ; நின்
தவ்வையர் ஆவோர், தாரையும் வீரையும்
ஆங்கு அவர்தம்மை அங்கநாட்டு அகவயின்
கச்சயம் ஆளும், கழல்கால் வேந்தன்,
துச்சயன் என்போன் ஒருவன் கொண்டனன்"

(மணிமே. 10 : 50-54)

"உருமண் ணுவாவின் பெருமுது குரவன்
அவிமில் சூழ்ச்சித் தவறில் தோழன்
பெரும்புனற் கங்கை பெருவளங் கொடுக்கும்
அங்கநன்னாட்டு அணிபெற விருந்தது
எங்குநிகரில்ல தெழிற்கிடங்கணிந்தது
பொங்குமலர் நறுந்தார் புனைமுடிப் பொங்கழல்
விச்சாதரருங் தேவகுமரரும்
அச்சங் கொள்ள வாடுகொடி நுடங்கிச்
சக்திக் குடத்தொடு தத்துற லோம்பி
விளங்குபு துளங்கும் வென்றித்தாகி
அளந்து வரம்பறியா வரும்படை யடங்கும்
வாயிலும் வனப்பும் மேவி வீற்றிருந்து
மதிலணி தெருவிற்றாகி மற்றோர்க்
கெதிரில் போக மியல்பமை மரபொடு
குதிரையுங் களிறும் கொடுஞ்சித் தேரும்
அடுதிறன் மன்னரும் வடுவின்று காப்ப
நெடுமுடி மன்னருண் மன்ன னேரார்
கடுமுரண ழித்த காய்சின நெடுவேற்
படுமணி யானைப் பைந்தார் வெண்குடை
உக்கிர குலத்துளரசருளரசன்
விற்றிறற்றானை விசயவர னென்னும்
நற்றிறன் மன்னனாளுங் காக்கும்
சண்பை பெருநகர்ச் சால்பொடும் விளங்கிய'

(பெருங். 2 : 20 : 103-125)

**அசோதரம்.**

அசோதரம் கடலால் சூழப் பெற்றிருந்தது. அந்நகரில் அக் கடலொலி எப்பொழுதும் கேட்கும்படி அமைந்திருந்தது. இரவிவன்மன் என்னும் மன்னன் அதை ஆண்டான். அவன் மனைவி அமுதவதி. அவர்கள் இருவருக்கும் இலக்குமி என்னும் பெயரோடு மகளாக மணிமேகலை மூற்பிறப்பில் பிறந்திருக் கிறாள்.

"அரவக் கடலொலி அசோதரம் ஆளும்
இரவிவன்மன் ஒருபெருந்தேவி அமுதபதி வயிற்று
இலக்குமி யென்னும் பெயர் பெற்றுப் பிறந்தேன்"

(மணிமே. 9:38-41)

**அடவி நாடுகள்.**

முனையூர் என்னும் ஊரை உள்ளடக்கிய ஐம்பதும் அடவி நாடுகள் எனப்படும். இவை இடவகனுக்குச் சீவிதமாக அளிக்கப் பெற்றவை.

''இடவகற் கிருந்த முனையூருள்ளிட்
டடவி நன்னாடைம்பது கொடுத்து
விறற்போர் மன்னரிறுக்குந் துறைதொறும்
புறப்பது வாரமொடு சிறப்புப் பல செய்து
புட்பகம்புக்கு நின்னட் புடனிருந்து
விளித்தபின் வாவவென வளித்தவற் போக்கி''

(பெருங். 4:9:28-33)

**அத்தினபுரம்.**

எலிச்செவி யரசனுக்கு உரியதாக இருந்த ஒரு நகரம். தருசக னோடு போர் செய்ய வந்த எலிச்செவியரசனின் முன்னோர் இரவோடு இரவாகத் தோற்று ஓடினர்.

''அத்தினபுரத்தினரசருளரிமான்
வேண்டியதுமுடிக்கும் வென்றித்தானை
ஈண்டிய வாற்றலெலிச் செவியரசனும்'' (பெருங்.8-10)

**அமராபதி.**

அமராபதி என்னும் ஊர்ப்பெயர் பெருங்கதையில் இடம் பெற்றிருக்கிறது. இந்திரன் உறையும் அமராபதி என்றும், வாச வதத்தை அமராவதியைக்காண வேண்டும் என்று ஆவல் கொண்டாள் எனவும் கூறப்பெற்றுள்ளது.

அமராவதி என்ற பெயருடைய ஒருநகர் குண்டூர் மாவட்டத் தில் கிருஷ்ணு ஆற்றங்கரையில் உள்ளது, இது சாதவாகன அரசர் களின் கீழைத்தலை நகரமாய் இருந்துள்ளது.[87]

'அமையாச் செய் தொழிலவுணர்க் கடந்த
இமையாச் செங்கணிந்திரனுறையும்
அமராபதியும் நிகர் தனக்கின்றித்
துன்ப நீக்குந் தொழிலிற்றுகி
இன்பங் கலந்த விராசகிரிய மென்
றெண்டிசை மருங்கினுந் தன் பெயர் பொறித்த
மன்பெருஞ் சிறப்பின் மல்லன் மாநகர்''

(பெருங். 3;3: 110- 116)

---

87. கலைக்களஞ்சியம். 1: 105

"கைவைத் தொழியக் கடந்து சென்றுப் பால்
அமராபதியு மந்தரத் தெல்லையும்
நுகர் பூங்காவு நோக்குபு வருதற்
குற்ற தென்மனனு முணர் வினளாகி". (ஷி.·5, 1: 190-193)

**அயோத்தி**

தருசகனுடைய பகை மன்னர்களில் ஒருவனாக அயோத்தி அரசன் குறிக்கப்பெறும் நிலையில் அயோத்தி என்ற ஊர்ப்பெயர் பெருங்கதையில் இடம் பெற்றுள்ளது. ஊரைப்பற்றிய வேறு தகவல்கள் ஒன்றும் விளக்கிக் கூறப்பெறவில்லை.

அயோத்தி என்ற ஊர் கோக்ரா நதியின் கரையில் பைஜா பாத்துக்கு அருகில் இருக்கிறது. இராமன் பிறந்த நகரம் இது என்று கருதுகின்றனர். ஒருகாலத்தில் அயோத்தி ஒரு மாகாண மாக இருந்தது. இன்று உத்தரப்பிரதேச இராச்சியத்தில் சேர்ந் துள்ளது. [88]

"அருந்திறற் சூழ்ச்சி யடல் வேந்தானை
அயிர்த் துணைப் பல்படை யயோத்தி யரசனும்
(பெருங். 3: 17:20-21)

**அரிபுரம்.**

மணிமேகலையில் கோவலனின் முற்பிறப்பும், அவன் சாபம் பெற்றதும் ஆகிய செய்தி கூறும் நிலையில், சங்கமன் அரிபுரம் சென்று அணிகலன்களை விற்றான் என்று கூறப்பெற்றுள்ளது. இந்நிலையில் அரிபுரம் என்ற ஊர்ப்பெயர் மணிமேகலையில் கூறப்பெற்றுள்ளது.

சிங்கபுரம் என்பது வசு என்பவனின் ஆட்சியில் இருந்ததாகக் கூறப்பெற்றுள்ளது. சிங்கபுரத்தைத்தான் மணிமேகலை அரிபுரம் என்றும் கூறியுள்ளதாகக் கருத இடமளிக்கிறது. (அரி என்பதும் சிங்கம் என்பதும் ஒரே பொருளுடையன) இது கலிங்க நாட்டில் இருந்ததாகவும் கூறப்பெற்றுள்ளது.

"காசில் பூம்பொழிற் கலிங்க நன்னாட்டுத்
தாயமன்னவர் வசுவுங் குமரனும்
சிங்கபுரமுஞ் செழுநீர்க் கபுலையும்
அங்காள் கின்றோர் அடற் செருவுறு நாள்
மூவிருகாவத முன்னு நரின்றி

---

88- ஷி. 1; 140

யாவரும் வழங்கா விடத்திற் பொருள் வேட்டுப்
பல்கலன் கொண்டு பலரறியாமல்
எல்வளை யாளோ டரிபுர மெய்திப்
பண்புக் கலம் பகர் சங்கமன்தன்னை"—

(மணிமே. 26:15-23)

**அருட்டநகர்.**

உச்சயினுக்கும் சயந்தி நகர்க்கும் இடையேயுள்ளது அருட்ட நகர்.

உதயணன் மருதநிலங் கடந்து அருட்டநகர் அடைந்தான் என்ற செய்தியுடன் தொடர்புபடுத்து அருட்ட நகர் என்ற ஊர்ப் பெயர் கூறப்பெற்றுள்ளது.

"வன்றொழில் வயவர் வலிகெட வகுத்த
படைப்புறக் கிடங்குந் தொடைப் பெருவாயிலும்
வாயிற் கமைந்த ஞாயிற் புரிசையும்
இட்டமைத்தியற்றிய கட்டளைக் காப்பின்
மட்டு மகிழ்நெஞ்சின் மள்ளர் குழீஇய
அருட்டநகரத்து................." (பெருங். 1:48:176-181)

**அவந்தி.**

சிலப்பதிகாரம், மணிமேகலை, பெருங்கதை ஆகியநூற்களில் அவந்தி என்றும், அவந்தி நாடு என்றும் குறிக்கப்பெற்றுள்ள ஊர்.

அவந்தி ஒரு நாடு என்றும், இதன் தலைநகர் உஞ்சேனை என்றும், மன்னன் பிரச் சோதனன் என்றும் தெரிகிறது.

அவந்தி என்பதற்கு உச்சைனி நகர் என்றே பொருள் எழுதினார் அடியார்க்கு நல்லார்.[89]

அவந்தி என்பது மாளவ தேசத்தில் ஒருபட்டணம் என்றும், இங்கே பலராமனும் கண்ணனும் சாந்தீப முனிவரிடம் கல்வி கற்றனர் என்றும் விஷ்ணு புராணம் கூறும்.

கி. மு. 6ஆம் நூற்றாண்டில் சண்டப் பிரத்தியோதனன் முதலிய வீரர்கள் இந்நாட்டை ஆண்டு வந்ததாகப் பௌத்த நூல்கள் கூறும்.

கதைகளில் வரும் விக்கிரமாதித்தன் இந்த நாட்டில் அரசு புரிந்தான் என்பார்கள். இது பிற்காலத்தில் மேற்கு மாளவம் என்னும் பகுதியின் பெயராகவும், உச்சயினி தலைநகரின் பெயராகவும் ஆயிற்று.[90]

---

89. சிலப்பதிகாரம் 5 : 103-104 உரை
90 கலைக்களஞ்சியம். 1 : 229.

அவந்திக் கொல்லர் புகழ் பெற்றிருந்தனர்.

''அவந்தி வேந்தன் உவந்தனன் கொடுத்த
நிவந்தோங்கு மரபில் தோரண வாயிலும்''
(சிலப். 5 : 103-104)

''செம்பியன் மூதூர்ச் சென்று புக்காங்கு
வச்சிரம் அவந்தி மகதமொடு குழீஇய
சித்திர மண்டபத்திருக்க''— (ஷை. 28 : 85-87)

''வடவயின் அவந்தி மாநகர்ச் செல்வோன்''. (மணிமே. 9 : 28)

''மகத வினைஞரும் மராட்டக் கம்மரும்
அவந்திக் கொல்லரும் யவனத் தச்சரும்
தண்தமிழ் வினைஞர் தம்மொடு கூடிக்
கொண்டினிதியற்றிய கண்கவர் செய்வினைப்
பவளத்திரள்கால் பல்மணிப் போதிகை'' (ஷை. 19: 107-111)

''யவனத்தச்சரும் அவந்திக்-கொல்லரும்'' (பெருங் 1 : 58 : 40)

**இடவயம்.**

நாகநல்நாடு நானூறு யோசனை பாதலத்து வீழ்ந்து கேடு எய்தும் இதன்பால் ஒழிக என அத்திபதியிடம் பிரமதரும முனிவர் கூறியதும், அவன் 'இடவயம்' என்ற பதிநீங்கி வடக்கே அவந்தி நகர்ச் சென்றான் என்று மணிமேகலை கூறுவதால்; இடவயம், என்னும் ஊர் நாக நாட்டகத்தது என உணரலாம்.

''அத்திபதி எனும் அரசாள் வேந்தன்
மைத்துனன் ஆகிய பிரமதருமன்
ஆங்கு அவன் தன்பால் அணைந்து அறன் உரைப்போய்
தீம்கனி நாவல் ஓங்குமித் தீவிடை
இன்று ஏழ்நாளில் இருநிலமாக்கள்
நின்று நடுக்கெய்த நீள்நில வேந்தே
பூமி நடுக்குறூஉம் போழ்தத்து, இந்நகர்
வியன் பாதலத்து வீழ்ந்து கேடு எய்தும்
இதன்பால் ஒழிக என இருநில வேந்தனும்
மாபெரும் பேரூர் மக்கட்கு எல்லாம்
ஆவும் மாவும் கொண்டு ஒழிக என்றே
பறையின் சாற்றி, நிறை அருந் தானையோடு
இடவயம் என்னும் இரும்பதி நீங்கி
வடவயின் அவந்தி மாநகர்ச் செல்வோன்''
(மணிமே. 9 : 14-28)

**இரத்தின தீவம்**

இரத்தின தீவம் என்பது இலங்கையையே குறிப்பதாகத் தெரிகிறது.[91]

மணிபல்லவத்திற்கருகில் இரத்தின தீவம் இருப்பதாகவும், இரத்தின தீவத்தில் சமந்தம் என்ற மலை இருப்பதாகவும், சாது சக்கரன் என்பவன் இரத்தின தீவம் சென்று தருமசக்கரம் உருட்டி வந்துள்ளதாகவும் மணிமேகலை கூறுகிறது.

சமந்தம் என்பது இலங்கையிலுள்ள 'ஆடம்ஸ்பீக்' என்று ஆங்கிலத்தில் வழங்கும் மலையையே குறிக்கும் என்ற கருத்துப் பொருத்தமாகத் தோன்றுகிறது.[92]

"சாது சக்கரன் மீவிசும்பு திரிவோன்
தெருமர லொழித்தாங் கிரத்தினத் தீவத்துத்
தருமசக்கரம் உருட்டினன் வருவோன்"

(மணிமே 10 : 24-26)

---

91. Tamil Lexicon Vol. I.
92. இலங்கைத் தீவின் மேன்மாகாணத்தில் தென்கீழ்ப் பிரிவில் இரத்தினபுரி என்ற ஓரிடமும், சிலராற் சமந்த கூடமென்றும் சிலராற் சமனொலையென்றும் சொல்லப் பட்டுள்ள மலையொன்றும் உள்ளன என்று யாழ்ப் பாணம் — வட்டுக்கோட்டை வே. சதாசிவம் பிள்ளை யென்பவரால் கி. பி. 1884இல் பதிக்கப்பட்டுள்ள இலங்கை பூமி சாஸ்திர சங்கிரகமென்னும் புத்தகத்தால் தெரிகின்றன. மணிபல்லவம் காவிரிபூம்பட்டினத்திற்குத் தெற்கே ஆறைந்து யோசனை தூரத்துள்ளதென்றும் அதன் அயலிலுள்ளது இரத்தினதீவம் என்றும் முன்பு கூறியதற்கு 'ஆடம்ஸ்பீக்' காவிரிப்பூம்பட்டினத்திற்குத் தெற்கே சற்றேறக்குறைய முப்பது காத தூரத்தில் இருத்தலும், அம்மலை பண்டைகாலத்துச் சமந்த மென்றும் சமனொளியென்றும் கூறப்பட்டு வந்தது என்பதற்கு இக்காலத்து அது 'சமந்தகூடம்' 'சமனொலை' என்று கூறப்படுதலும், அம்மலை இரத்தின தீவத்துள்ள தென்பதற்கு அதனைச் சார்ந்த ஓரிடம் 'இரத்தினபுரி' என்று பெயர் பெற்றிருத்தலும், சமனொளியென்பது இலங்கா தீவத்து உள்ளதென்பதற்கு அஃது இலங்கைத் தீவில் இருத்தலும் சான்றாதல் அறிக.
(மணிமேகலை உ. வே. சா. அடிக்குறிப்பு பக். 98 பதிப்பு 1898)

தீவதிலகை செவ்வன முரைக்கும்
ஈங்கித னயலகத்து இரத்தின தீவத்து
ஓங்குயர் சமந்தத்துச்சி மீமிசை" (மணி. 11 : 20-22)

**இரத்தினபுரம்.**

காந்தார நாட்டிலுள்ள ஒரு நகரம் என்று மணிமேகலை கூறுகிறது.

"தண்டார் புகழுங் கலக்கமில் சிறப்பிற்
காந்தாரமென்னு மாய்ந்த நாட்டகத்து
ஈண்டிய பல்புகழ் இரத்தினபுரத்துள்"
(பெருங். 3 : 6: 190-192)

**இராசகிரியம்.**

மகத நாட்டின் தலைநகர். இராசகிரி எனவும் இது வழங்கும். புகழ்பெற்ற மிகப்பழமையானதொரு நகரம். பலவகை நுகர்ச்சி களையுடையமையாலும் அச்சத்தை விளைவித்தலாலும் பவண லோகத்தையும், செல்வ மிகுதியால் அமராவதியையும் ஒப்பது.

இதன் புறத்தே யவனச் சேரிகள் நூறும், எறிபடைப்பாடிகள் நூற்று அறுபதும், தமிழ்வீரர்களின் சேரிகள் ஆயிரமும், கொல்லர் சேரிகள் பலவும், மிழலைச் சேரிகள் பலவும் இருந்தன.

உதயணன் சிலநாள் இங்கே தங்கி இருந்தான்.

"அமராபதியும் நிகர்தனக்கின்றித்
துன்ப நீக்குந் தொழிலிற்றாகி
இன்பங்கலந்த இராசகிரியம்" (பெருங்.3:3:112-114)

**இலங்காதீவம்.**

இலங்கையே இலங்காதீவம் எனக் குறிக்கப் பெற்றுள்ளது. இத்தீவு இந்தியாவிற்குத் தெற்கில் உள்ளது. தென்பகுதிலிருந்து பாக் ஜலசந்தியால் பிரிக்கப்படுகிறது.

இலங்கையைத் தமிழர் ஈழம் என்கின்றனர். கிரேக்கர்களும் ரோமானியர்களும் தாப்ரோபானெ (தாமிரபரணி) என்று குறித் தனர். போர்ச்சுகீஸியர்கள் சிங்களம் என்பதைச் சைலோன் என் றழைத்தனர். இதிலிருந்து சிலோன் என்ற தற்காலப் பெயர் வழங்கியது.

இந்தியாவுடன் நீங்காத தொடர்புடையது இலங்கை. இலங்கை மன்னன் முதலாம் கயவாகு சேரன் செங்குட்டுவனைச் சந்தித்துள்ளான்.[93]

ஈழநாட்டில்தான் சிறந்த மணிகள் கிடைத்தனவென்றும், மணிகள் கிடைத்த தீவையே மணிமேகலை மணிபல்லவம் என்று அழைத்ததாகவும் தெரிகிறது.[94]

''இலங்காதீவத்துச் சமனொளியென்னும்
சிலம்பினையெய்தி வலங் கொண்டு மீளும்
தரும சாரணர் தங்கிய குணத்தோர்''—

(மணிமே. 28: 107-109)

**இலாவாணகம்**

இலாவாணம் என்றும் இது வழங்கும்.

இலாவாணகம் உதயணனுக்குரிய பெரிய நகர்களுள் ஒன்று. பகைவர் வருதற்கு மிக அஞ்சும் பேரரண்கள் முதலியவற்றையும் இடையே ஓர் அரண்மனையையும் உடையது. இதன் அருகில் வள முள்ள ஒரு மலையுண்டு. உண்டாட்டுக்குரிய பலவகை மரங்கள் கொடிகளையுடைய பூஞ் சோலைகளும், சுனை முதலிய நீர்நிலை களும் படமாடம் முதலியன அமைத்தற்குரிய இடங்களும் இதன் சாரலில் இருந்தன. விரிசிகையின் வேண்டு கோட்படி பலவகை மலர்களைக் கண்ணி முதலியனவாகக் கட்டி உதயணன் சூடியது இச்சோலைகளுள் ஒன்றிலேதான்

உதயணனால் உருமண்ணுவாவிற்குக் கொடுக்கப்பெற்ற சீவிதங்களுள் இந்நகரமும் ஒன்று.

''இருங்கடல் வரைப்பினிசையொடு விளங்கிய
சயந்தியம் பதியும் பயம்படு சாரல்
இலாவாண கமும்நிலாவ நிறீஇ'' (பெருங் 9:20-22)

**உஞ்சேனை.**

உஞ்சேனை என்பது உச்சயினி நகரமே. இது அவந்தி என்றும் உஞ்சை எனவும் வழங்கும். அவந்தி நாட்டிலுள்ளது. பிரச் சோதனனின் தலைநகர்,

''அமரர் தலைவனை வணங்குவதும் யாமெனச்
சிமையத் திமையமும் செழுநீர்க் கங்கையும்
உஞ்சையம் பதியும் விஞ்சத் தடவியும்'' (சிலப் 6:27-29)

---

93. கலைக்களஞ்சியம்
94. சங்க நூல்களில் மணிகள்-பி.எல்.சாமி,ஐ.ஏ.எஸ். பக்.10

"கொடிக் கோசம்பிக் கோமகனாகிய
வடித்தேர்த்தானை வத்தவன்தன்னை
வஞ்சஞ் செய்துழி வான்தளை விடீஇய
உஞ்சையில் தோன்றிய யூகி அந்தணன்
உருவுக்கொவ்வாஉறு நோய் கண்டு" (மணிமே.15:61-65)

"நீங்கிய மன்னற்கு நிகழ்ந்தது கூறுவென்
சேராமன்னன் உஞ்சேனை யம்பெரும் பதிக்கு"
(பெருங். 1: 48; 38-4o)

**கபிலபுரம்.**

கோவலனின் முற்பிறப்பைப் பற்றிக் கூறும்பொழுது கபில புரம் என்ற ஊர் கூறப்பெற்றுள்ளது. குமரன் என்ற மன்னனால் ஆளப்பெற்றது.

மணிமேகலையில் இவ்வூர் கபிலை எனக் கூறப்பெற்றுள்ளது. கலிங்க நாட்டினது இவ்வூர்.

"கடிபொழி லுடுத்த கலிங்க நன்னாட்டு
வடிவேற்றடக்கை வசுவுங் குமரனும்
தீம்புனற் பழனச் சிங்க புரத்தினும்
காம்பெழுகானக் கபிலபுரத்தினும்
அரசாள் செல்வத்து நிரைதார் வேந்தர்"
(சிலப் 2:23:138-142)

"காசில் பூம்பொழில் கலிங்க நன்னாட்டுத்
தாயமன்னர் வசுவுங் குமரனும்
சிங்கபுரமும் செழுநீர்க் கபிலையும்
அங்காள்கின்றோ ரடற்செருவுறு நாள்" (மணிமே 26:15-18)

**கருநாடகம்.**

சிலப்பதிகாரத்தில் இளவேனில் வந்தபொழுது மன்னர் முன் தோன்றியவர்களைப் பற்றிக் கூறும்பொழுது கருநாடகக் கூத்தரும் தோன்றினர் எனக் கூறப்பெற்றுள்ளது.

கருநாடகம் என்பது ஆதியில் கிழக்குத் தொடர்ச்சி மலைக்கு மேற்கேயுள்ள பீடபூமியைக் குறித்தது. இப்பொழுது மைசூர் இராச்சியமே பண்டைக் கருநாடகமாகும்.

சென்னை இராச்சியம் முழுமையும் ஆங்கிலேயர் வசமான போது அவர்கள் கிழக்குத் தொடர்ச்சி மலைக்குக் கிழக்கே குமரி முதல் குண்டூர் வரை தாம் அடைந்த பகுதி முழுவதையும் கருநாடகம் என்றழைத்தனர்.

இப்போது பம்பாய் இராச்சியத்திலுள்ள பெளகாம், தார்வார், பீஜப்பூர் ஆகிய மாவட்டங்களும், ஜாத், கோலாப்பூர் ஆகிய முன்னாள் சுதேச சமஸ்தானங்களும் அடங்கிய பகுதி கருநாடகம் என வழங்கப் பெறுகிறது.

கருநாடகம் என்பது வடமொழிச் சொல் எனக் கருதப்பட்டாலும், அது தமிழ்ச்சொல்லே என்கிறார் கால்டுவெல். 'கருநிற நிலம்' அதாவது கருநிற மண்ணுடைய நாடு என்னும் பொருளுடைய தமிழ்ச்சொல் என்றும், இது தென் தக்காணத்திலுள்ள பீடபூமியைக் குறிக்கும் என்றும், பின்னர் இது கன்னட மொழி பேசுவோருடைய நாடு என்று ஆயிற்று என்றும் கருதுகிறார்.[95]

"வீங்கு நீர் ஞாலம் ஆள்வோன் வாழ்கெனக்
கொங் கணக்கூத்தரும் கொடுங் கருநாடரும்
(சிலப் 3:26:105-106)

**கலிங்கம்.**

கலிங்கம் தென்னிந்தியாவில் கிழக்குக் கடற்கரையை அடுத்திருந்த பண்டைய நாடுகளுள் ஒன்று. இது கிழக்குத் தொடர்ச்சி மலைக்கும் கடலுக்கும் இடையே தெற்கில் கோதாவரி ஆறுமுதல் வடக்கில் ஒரிஸ்ஸா வரையில் பரவியிருந்தது.

இது இக்கால ஒரிஸ்ஸாவும் கஞ்சமும் சேர்ந்த ஒரு நாடாகும். கஞ்சம் மாவட்டத்திலுள்ள முகலிங்கம் என்ற நகரம் இதன் தலை நகரம்.

நந்த அரசர் காலத்தில் கலிங்கம் மகத நாட்டோடு சேர்க்கப் பட்டிருந்தது.

முதல் இராசேந்திர சோழர் கலிங்கத்தின் வழியாகக் கங்கை வரையில் படையெடுத்துச் சென்று வெற்றி கொண்டு கங்கை கொண்ட சோழர் என்ற பெயர் பெற்றார்.

கலிங்கத்தில் நடந்த போரில் குலோத்துங்கனின் படைத் தலைவன் தொண்டைமான் அடைந்த வெற்றியைக் கூறுவது கலிங்கத்துப் பரணி.

கலிங்க நாட்டு மன்னன் யூகியுடன் போர் செய்த பொழுது யானைக் கொம்பால் அவன் மார்பைக் குத்தியதாகப் பெருங் கதை கூறுகிறது.

"வலிந்து மேற் சென்ற கலிங்கத்தரசன்
குஞ்சர மருப்பிற் குறியிடப்பட்டு"— (பெருங். 1:45:20-21)

---

95. கலைக்களஞ்சியம்

**காஞ்சனபுரம்.**

பொன் எனப் பொருள்படும் காஞ்சனம் என்ற சொல்லடி யாய்ப் பெயர் பெற்றுள்ள ஊர் காஞ்சனபுரம். பொன்னுலகை (விண்ணுலகை) ச் சேர்ந்தது போலும்.

வெள்ளிமலையிலுள்ள 'சேடி' என்ற வித்தியாதரருலகில் உள்ளது காஞ்சனபுரம் என்று இலக்கியம் கூறுகிறது.

"வடதிசை விஞ்சைமாநகர்த் தோன்றி"— (மணிமே. 15:81)
(வடதிசை விஞ்சைமாநகர்—வடதிசையிலுள்ள வித்தியாதர நகரமாகிய காஞ்சனபுரம்)

"மாசில் வாளொளி வடதிசைச் சேடிக்
காசில் **காஞ்சனபுரக்** கடிநகருள்ளேன்
விஞ்சையன் தன்னோடென் வெவ்வினை யுருப்பத்
தென்திசைப் பொதியில் காணிய வந்தேன்"—
(ஷெ. 17:21-24

**காந்தாரநாடு.**

காந்தார நாடு என்பது இரத்தினபுரம் என்னும் ஒரு நகரத்தை யுடையது. சிறந்த குதிரைகள் பிறக்கும் இடங்களுள் ஒன்று எனத் தெரிகிறது.

இந்தியாவில் வடமேற் கெல்லைப்புறத்தில் காபுல் நதி பாயும் தாழ்வானப் பள்ளத்தாக்கில் இருந்த ஒரு நாடு காந்தார நாடு. பண்டைய 56 நாடுகளில் ஒன்று. இது இன்றைய பாகிஸ் தானிலுள்ள பிஷாவார் (புருஷபுரம்), ராவல் பிண்டி ஆகிய மாவட்டங்கள் சேர்ந்த பகுதியாகும். காந்தார ஆடும் உரோமமும் பெயர் பெற்றவை என்று ரிக்வேதம் கூறுகிறது. காந்தாரம் இசைக்கும், நாட்டியத்திற்கும் புகழ் பெற்ற நாடாக இருந்தது. காந்தாரத்தைப் பற்றிய குறிப்புகள் வால்மீகி இராமாயணத் திலும் காணப்படுகிறது.

ஒரு சமயம் வரலாற்றுப் புகழ் மிக்க தட்சசீலம் காந்தாரத்தில் சேர்ந்திருந்தது.

தாலமி என்ற மேனாட்டு ஆசிரியர் காந்தாரியாய் (Gandar-ioi) என்று குறித்தார்.[96]

---

96. கலைக்களஞ்சியம்

"காந்தார மென்னுங் கழிபெரு நாட்டும்
பூருவ தேயம் பொறை கெட வாழும்
அத்திபதி யெனுமரசாள் வேந்தன்
மைத்துனனாகிய பிரமதருமன்
ஆங்கவன் தன்பாலணைந்தற னுரைப்போய்"
(மணிமே. 9: 12-16)

"கண்டார் புகழுங் கலக்கமில் சிறப்பிற்
காந்தார மென்னும் ஆய்ந்த நாட்டகத்
தீண்டிய பல்புக ழிரத்தின புரத்துள்
மாண்ட வேள்வி மந்திர முத்தீச்
சாண்டிய னென்னுந் சால்புடை யொழுக்கின்
ஆய்ந்த நெஞ்சத் தந்தணன் மகன்". (பெருங். 3; 7: 190-195)

"நலக் காந்தார மென்னாட்டு ப்பிறந்த
இலக்கணக் குதிரை யிராயிரத்திரட்டியும்".(ஷை. 4:11:26-27)

**காம்போசம்.**

காம்போசம் என்பது 56 தேசங்களுள் ஒன்று. சிறந்த குதிரைகள் பிறக்கும் தேயங்களுள் ஒன்று என்றும் தெரிகிறது.

கி. மு. 7-ஆம் நூற்றாண்டில் இந்தியாவின் வடமேற்கில் தற்போதைய பிஷாவருக்கு வடமேற்கில் இப்பொழுது இருக்கும் நிலப்பகுதியின் பண்டைய பெயரே காம்போஜம் என்பது.

தென் கிழக்கு ஆசியாவிலுள்ள கம்போடியா என்ற நாட்டுக்கும் முன்பு காம்போஜம் என்ற பெயர் வழங்கியது.[97]

"கலக்கமில் சிறப்பிற் காம்போசத்தொடு
நலக்காந்தார மென்னாட்டுப் பிறந்த
இலக்கணக் குதிரையிராயிரத் திரட்டியும்"
(பெருங் 4:11:25-27)

"கொங்கணக்கூத்தர்"[98] என்ற இலக்கியத் தொடர் கொங்கண தேசத்தைக் குறிக்கிறது.

கொங்கணம் என்பது ஐம்பத்தாறு தேசங்களுள் ஒன்று. இது மேற்குத் தொடர்ச்சி மலைக்கு மேற்கும், அரபிக்கடலுக்குக் கிழக்கும், கூர்ச்சரத்திற்குத் தெற்கும், கோவாவிற்கு வடக்குமாக உள்ள நிலப்பகுதி.

---

97. ஷை.
98. சிலப்பதிகாரம் 3;26:106

இந்தியாவின் மேற்குக் கடற்கரைப்பகுதியில் வடக்கே டாமன் முதல் தெற்கே கோவா வரையிலுள்ள நிலம் கொங் கணம் எனப்படும்.

**கோசம்பி.**

கோசம்பி வடஇந்தியாவில் உத்தரப்பிரதேசத்தில் அலகபாத் மாவட்டத்தில் யமுனையாற்றங்கரையில் உள்ள ஓர் ஊர். 'கௌசாம்பி என்ற பண்டைப் புகழ்பெற்ற நகரம் இங்கு புதை உண்டு கிடப்பதாகச் சொல்லப்படுகிறது. சிதைந்த பெரிய கோட்டை ஒன்று இங்கு உள்ளது. நான்கு மைல் சுற்றளவு உள் ளது. உயரம் 30—35 அடி. மத்தியில் நவீன ஜைனக் கோயில் ஒன்று உள்ளது. அதன் அருகில் 11-ஆம் நூற்றாண்டில் ஜைனச் சிற்பங்கள் பல தோண்டியெடுக்கப்பட்டன. ஒரு பக்கத்தில் சிதைந்த செங்கல் மேடையில் ஒரே கல்லாலான பெரிய உருவம் ஒன்று உள்ளது அதில் 5 அல்லது 6-ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டு கள் உள்ளன. அருகிலே சுட்டமண் உருவங்களும், சிற்பங்களும், நாணயங்களும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. நாணயங்களில் கி. மு. இரண்டு அல்லது முதல் நூற்றாண்டில் ஆண்ட அரசர் களின் பெயர்கள் காணப்படுகின்றன. கோட்டைக்கு வடமேற்கே மூன்று மைல் தொலைவில் பாபோசா (Pabhosa) என்ற குன்று உள்ளது. அதன் மேலுள்ள குகையில் முக்கியமான கல்வெட்டுகள் உள்ளன.[99]

கோசம்பி நகரம் ஆதியில் குசாம்பன் என்னும் அரசனால் உண்டாக்கப்பட்டதென்பர். உதயணனின் தலைநகர் இங்கே அரசு புரிந்த உதயணன் சிறைப்பட்டு உஞ்சை நகர்க்குச் சென்ற பொழுது பகைவனாகிய பாஞ்சால நாட்டு மன்னனால் இந்நகர் கைக்கொள்ளப்பட்டது. மீண்டும் உதயணனால் கைப்பற்றப் பட்டது.

"கொடிக் கோசம்பிக் கோமகனாகிய
வடித் தேர்த்தானைவத்தவன்". (மணிமே.15:61-62)

"கோணை நீண்மதிற் கொடிக் கோசம்பி
நகைத்துணை யாய மெதிற்கொள (பெருங். 1:48:69-70)

"குடிகெழு வளமனை குழீஇய செல்வத்துக்
கன்னி நன்மதிற் கடிக்கோசம்பி" (ஷெ. 2;8:149-150)

---

99. கலைக்களஞ்சியம் 4:277.

**கோசலநாடு.**

கோசலம் வட இந்தியாவில் சுமார் கி.மு. 550இல் விளங்கிய ஒரு நாடு. ஐம்பத்தாறு நாடுகளில் ஒன்று இது என்றும், இந் நாட்டின் தலைநகரம் அயோத்தியென்றும் நூல்கள் கூறும். இப் போது இப்பகுதி அயோத்தி என வழங்கப் பெறுகிறது.

இது புத்தர் காலத்தில் முக்கிய நாடாக இருந்தது. இந்த நாட்டை ஆண்டவர்கள் சூரிய வமிச அரசர்கள்.[100]

ஓவியத்தொழிலர் உறைந்தநாடு என்று இலக்கியம் கூறுகிறது.

"**கோசலத்தி** யன்ற வோவியத் தொழிலரும்
வத்தநாட்டு வண்ணக் கம்மரும்
தத்தங்கோண்மேற்றங் கைத்தொழில் தோன்ற"
(பெருங். 1:58 43-45)

**சண்பை.**

ஒருவகை கோரைப் புல்லைக்குறிக்கும் சொல் சண்பை என்பது. அப்புல் நிரைந்த பகுதியில் அமைந்த நகர் சண்பை எனப் பெயர் பெற்றது போலும்.

சண்பை நகர் அங்க நாட்டிலுள்ள பெரிய நகரம் மிக்க வள முள்ளது. விசயவரன் என்பவனால் பாதுகாக்கப்பட்டு வந்தது. இந்நகரில் மித்திரகாமன் என்னும் வணிகர் பெருமான் வீட்டில் யூகி, வாசவதத்தை, காஞ்சன மாலை சாங்கியத்தாய் ஆகிய நால்வரும் வேற்று வடிவங்கொண்டு தங்கியிருந்தனர்.[101]

"ஈங்கிந் நகரத்தியான் வருங்காரணம்
பாராவாரம் பல்வனம் பழுநிய
காராளர் **சண்பை**யிற் கௌசிகனென்போன்
இரு பிறப்பாளன் ஒரு மகளுள்ளே
ஒருதனி யஞ்சே னோரா நெஞ்சமோடு
ஆராமத்திடை யலர் கொய் வேன்றனை" (மணிமே. 3:27-33)

"உக்கிர குலத்துளரசருளரசன்
விற்றிறல் தானை விசயவரனென்னும்
நற்றிறல் மன்னன் நாளும் காக்கும்
**சண்பைப்** பெருநகர்ச் சால்பொடும் விளங்கிய"
(பெருங் 2 : 20 : 122-125)

---

100. கலைக்களஞ்சியம் 4:278
101. பெருங்கதை. உ. வே. சா. அரும்பதவுரை. பக் 961.

(சீகாழிக்கும் சண்பை என ஒருபெயர் உண்டு இங்கே குறிக்கப் பெற்றது அதுவல்ல)

**சம்புத்தீவு**

நாவல் எனப் பொருள்படுவது சம்பு என்னும் சொல். தாவரத்தால் பெற்ற பெயர் சம்புத்தீவு (சம்பங் கோரை என்ற புல்வகையும் சம்பு எனப்படும்)

நாவலந்தீவையே சம்புத்தீவு என்றனர். தமிழகம் அதில் ஒரு பிரிவு. சம்புத் தீவை நான்கு பெரிய தீவுகளில் ஒன்று என்பர்.

"சம்புத் தீவினுள் தமிழக மருங்கில்
கம்பமில்லாக் கழிபெருஞ் செல்வர்
ஆற்றா மாக்கட்கு ஆற்றுந்துணையாகி
நோற்றோருறைவதோர் நோனகருண்டால்
பலநாளாயினும் நிலனொடு போகி
அப்பதிப் புகுகென்றவனருள் செய்ய
இப்பதிப் புகுந்தீங்கியானு றைகின்றேன்"
(மணிமே. 17 : 62-68)

**சயந்தி.**

சிற்றகத்தி என்னும் செடிவகையைக் குறிக்கும் சயந்தி என்னும் சொல் அவ்வகைச் செடிகள் அமைந்த பகுதியில் அமைந்த ஊருக்குப் பெயராய் அமைந்தது போலும்.

சயந்தி உதயணனுடைய ஆட்சிக்குட்பட்டதொரு பெரிய நகரம். இதனை உருமண்ணுவா பாதுகாத்து வந்தனன். உதயணனுக்கும் வாசவதத்தைக்கும் இந்நகரத்திலேதான் விவாகம் நடந்தது. மருதநில வளத்தால் சிறந்தது. இதன் பக்கத்தே அழகிய மலை யொன்றுண்டு. இதுவும் வேறுசில இடங்களும் உருமண்ணுவாவுக்கு உதயணனால் சீவிதமாக அளிக்கப்பெற்றன.

"உருமண்ணுவாவுக்கு ரிமையினிருந்த
சயந்தியம் பெரும்பதி யமர்ந்து புக்கனரால்"
(பெருங். 1 : 58 : 107-108)

அறம்புரி யாட்டி யமைச்சனி னீங்கி
மறம்புரி தானை மன்ன வனிருந்த
சயந்தியம் பெரும்பதி யியைந் தகம்புக்கு (ஷை. 2 : 10 : 1-4)

**சாவகநாடு.**

சாவகம் என்பது ஜாவா என்பதாகும். யவனத் தீவு என்றும் கூறப் பெறுவது.

ஆபுத்திரனிடம் 'சாவக நாட்டிலே மழையில்லை. மக்கள் பசியால் வாடுகின்றனர் என்று மரக்கலத்தில் வந்தவர் கூற ஆபுத்திரன் அந்நாட்டிற்கு கப்பலில் சென்றான்—என்று மணி மேகலை கூறுவதால் கப்பலில் சென்று சேர வேண்டிய ஒருநாடு சாவகநாடு எனத் தெரிகிறது. வழியில் மணிபல்லவத்தில் கப்பல் தங்கிய செய்தியும் கூறப்படுவதால் மணிபல்லவத்தைக் கடந்தே சாவக நாட்டிற்குச் செல்ல வேண்டும் எனவும் தெரிகிறது.

''சாவக நன்னாட்டுத் தண்பெயல் மறுத்தலின்
ஊனுயிர் மடிந்த துரவோய் என்றலும்
அமரர்கோன் ஆணையின் அருந்துவோர்ப் பெறாது
குமரி மூத்த என்பாத்திரம் ஏந்தி
அங்கந் நாட்டுப் புகுவதென் கருத்தென
வங்க மாக்களொடு மகிழ்வுடனேறுக்
கால்விசை கடுகக் கடல் கலக்குறுதலின்
மாலிதை மணிபல்லவத்திடை வீழ்ந்துத்
தங்கிய தொருநாள் தானாங் கிழிந்தனன்
இழிந்ததான் ஏறினன் என்றிதை எடுத்து
வழங்கு நீர் வங்கம் வல்லிருள் போதலும்''

(மணிமே. 14 : 74-84)

**சிங்கபுரம்.**

பார்க்க அரிபுரம்

**சித்திபுரம்.**

சித்தி என்றால் ஒரு வகை மரம் அல்லது கொடி போன்ற தாவரத்தைக் குறிக்கும் பெயராகும். ஆகவே சித்திபுரம் என்பது தாவரத்தால் பெற்ற பெயர் எனக் கொள்ளலாம்.

மணிமேகலை பழம்பிறப்பில் இலக்குமி என்னும் பெயருடையவள். இராகுலன் என்பவன் அவள் கணவன். அவன் சித்தி புரத்தை ஆண்ட சீதரன் என்ற மன்னனுடைய மகளாகிய நீலபதியின் வயிற்றில் பிறந்தவள் என்பது மணிமேகலை கூறும் செய்தி.

''இலக்குமி யென்னும் பெயர் பெற்றுப்பிறந்தேன்
அத்திபதி யெனும் அரசன் பெருந்தேவி
சித்திபுரம் ஆளுஞ் சீதரன் திருமகள்
நீலபதி யெனும் நேரிழை வயிற்றில்
காலை ஞாயிற்றுக் கதிர் போற்றோன்றிய
இராகுலன் தனக்குப்புக்கேன்''— (மணிமே. 6:41-4)

**திருநகர்.**

அழகு பொருந்திய நகர் அல்லது செல்வம் பொருந்திய நகர் என்ற பொருளில் திருநகர் எனப் பெயர் பெற்றிருக்கலாம்.

திருநகர் என்பது வேசாலி என்னும் அரசனுடைய நகர்.

"திருவமர் மூதூர்த் தெருவுங் கோணமும்
ஒருவழி யொழியா துயிர்நடுக்குறீஇத்
திரிதர்வர் மாதோ திருநகரகத்தென்".(பெருங். 1:45; 95-97)

திருநகரகவயின் திறன் மீக்கூறி
ஒருதுணை வயவருள் வழித் திரிதர" (ஷை. 1:46; 1-2)

"வள்ளிதழ்க் கோதை வாசவதத்தையை
உள்ளுபு திருநகர் புக்கன னுலந்தென்" (ஷை. 3:3; 122-123)

"ஐங்கணைக் கிழவனமர்ந்து நிலைபெற்ற
எழுதுவினைத் திருநக ரெழிலுற வெய்தி" (ஷை. 3:4; 36-3 )

"விண்மிசை யுலகின் விழவமைந்தாங்கு
மண் மிசையுலகின் மன்னிய சீர்த்தி
முழவுமலி திருநகர் விழவுவினை தொடங்க"
(ஷை. 3:5; 45-47)

"பொலந் தொடி மகளிர் பொலிவொடு சூழ
வந்த பொழுதிற் கதுமென நோக்கிய
அந்த ணாளற் கணிநல னொழியப்
பெருநகர் புகழத் திருநகர் புக்கபின்" (ஷை. 3:6; 131—134)

**துளுநாடு.**

துளுவம் என்பது இந்தியாவிலிருந்த பழைய ஐம்பத்தாறு நாடுகளுள் ஒன்று. கன்னட நாட்டிற்குத் தெற்கிலிருந்த நாடு.

மைசூர் இராச்சியத்தில் தென்கன்னடம் என்னும் மாவட்டத்தில் துளுநாடு என்னும் பகுதியுள்ளது, துளுநாடு மிக நீண்ட காலமாக கன்னட அரசருடைய ஆட்சியில் இருந்து வந்தது.

மயில்கள் மிக்க பொழில்களையுடைய துளுநாடு என்று சங்க இலக்கியம் கூறுகிறது.

"மெய்ம்மலி பெரும்பூண், செம்மற்கோசர்
கொம்மை அம் பசுங்காய்க் குடுமி விளைந்த
பாகல் ஆர்கைப் பறைக் கட் பீலித்
தோகைக்காவின் துளுநாட்டன்ன" (அகம் 15:2-5)

**நாகபுரம்.**

சாவக நாட்டிலுள்ள ஒரு நகரம் புண்ணிய ராஜனின் தலைநகர்.

"மன்னவன் யாரென மாதவன் கூறு
**நாகபுரமிது** நன்னகராள்வோன்
பூமிசந்திரன் மகன் புண்ணியராசன்" (மணிமே 24:168-170)

**பாடலி**

பாடலி என்னும் சொல் ஒருவகை நெல்லையும், ஒருவகைக் கொடியையும் குறிக்கும். ஆகவே நெல்வளம் மிக்க நகரம் என்ற பொருளிலோ, பாடலி என்ற கொடிவகை நிறைந்த பகுதியில் அமைந்த ஊர் என்ற பொருளிலோ ஊர்ப்பெயர் உண்டாகி இருக்கலாம்.

மகத தேசத்தின் தலைநகர் பாடலிபுரம். கங்கை சோணை நதிகளின் சங்கமத்தில் அமைந்தது. சோணையின் வடகரையில் அமைந்தது. பாடலி எனவும் வழங்கப்பட்டது.

பாடலி, நந்தர் என்னும் சிறப்புமிக்க அரச மரபினருக்குரியது. இந்நகரில் நிதியம் ஓரிடத்தில் குழுமிக் கிடந்து பின்னர் கங்கை நீராலே முழுதும் மறைந்து போயிற்று.[102]

பாடலிப் பொன் வினைஞர் பெயர் பெற்று விளங்கினர்.

"வெண் கோட்டி யானை சோணை படியும்
பொன்மலி **பாடலி** பெறீஇயர்
யார்வாய்க் கேட்டனை காதலர் வரவே" (குறுந் 75:3-5)

"பல்புகழ் நிறைந்த வெல்போர் நந்தர்
சீர்மிகு பாடலிக் குழீஇக் கங்கை
நீர்முதற்கரந்த நிதியங் கொல்லோ" (அகம் 265:4–6)
"பாடலிப் பிறந்த பசும்பொன் வினைஞரும்" (பெருங் 1:58:42)

(தென் ஆர்க்காடு மாவட்டத்திலுள்ள திருப்பாதிரிப் புலியூருக்கும் இப்பெயர் உண்டு. ஆனால் இங்குக் குறித்துக் கூறப் பெற்றுள்ள ஊர் அதுவல்ல)

**புட்பகம்.**

மூக்கிரட்டை என்ற ஒருவகைக் கொடி புட்பகம் என்று பெயருடையது. இந்தத் தாவரத்தால் பெற்றது புட்பக நகரம் போலும்.

---

102. அகம் 265:4–6

புட்பகம் என்பது உதயணனுக்குரிய பெரிய நகரங்களுள் ஒன்று. சேனைகளுடனிருந்து இதனைப் பாதுகாத்து வந்த இடவகனுக்கு உதயணனால் விருத்தியாகக் கொடுக்கப்பெற்றது.

"கூற்றுறழ் மொய்ம்பி னேற்றுப்பெய ரண்ணல்
பரந்த படையொடிருந்தினி துறையும்
புகலரும் புரிசைப் பொருவில் **புட்பகம்**
இருளிடை யெய்திப் பொருபடை தொகுத்துக்
காலை வருவேன் காவலோம்பிப்
போகல் செல்லாது புரவல விருவென"- (பெருங்.1:54:66-71)

"அருநூலமைச் சனயற்புல நிறீஇ
நட்புடைத் தோழனன் கமைந்திருந்த
**புட்புகந்** தன்னைப் பொழுது மறைப்புக்கு" (ஷ்ை.2:9:24-26)

"**புட்புகம்** புக்குநின் னட்புடனிருந்து
விளித்த பின்வாவென வளித்தவற் போக்கி"(ஷை.4:9:32-33)

**புன்றாளக நாடு**

புன்றாளகம் என்பது இலாவாண நகரத்திற்கும் மகதத்திற்கும் இடையேயுள்ள நாடு.

"வளங்கெழு மாமலை வன்புன்றாளக
நலங்கெழு சிறப்பினாட்டக நீந்தி" (பெருங்.3:1:126-127)

**போதனபுரம்.**

போதனபுரம் என்னும் நகரம் மிலைச்சன் என்னும் அரசனுக்குரியது.

"மாற்றோர்த் தொலைத்த கூற்றுறழ் கொடுந்தொழில்
மிக்குயர் வென்றியொடு வேந்தரை யகப்படுத்
தக்கனம் வேட்ட வடலருஞ் சீற்றத்துப்
புனைமதி லோங்கிய **போதனபுரத்** திறை
மிலைச்சனென்னு நலத்தகையொருவனும்"
(பெருங். 3:17:22-26)

**மகதநாடு**

மகதநாடு தருக்கனுடைய நாடு. இதன் தலைநகர் இராசகிரியம். இந்நாட்டிற் பிறந்தவர்களான இரத்தின வேலைக்காரர்கள் திறமை வாய்ந்தவர்கள்.

வச்சிரம், அவந்தி, மகதம் என்ற இந்நாடு மூன்றும் உடையோர் திறையிட்ட பந்தர், தோரணவாயில், பட்டிமண்டபம் இவை கூடிய மண்டபம் ஒன்றைச் சிலப்பதிகாரம் குறிக்கின்றது.

மகத நாட்டின் முக்கிய நகரமாகக் கபிலையைக் குறிக்கின்றது மணிமேகலை.

"மாநீர் வேலி வச்சிர நன்னாட்டுக்
கோனிறை கொடுத்த கொற்றப் பந்தரும்
**மகத நன்னாட்டு** வாள்வாய் வேந்தன்
பகைபுறத்துக் கொடுத்த பட்டிமண்டபமும்
அவந்தி வேந்த னுவந்தனன் கொடுத்த
நிவந்தோங்கு மரபின் தோரணவாயிலும்"

(சிலப். 1 : 5: 99-104)

"தும்பை வெம்போர்ச் சூழ்கழல் வேந்தே
செம்பியன் மூதூர்ச் சென்று புக்காங்கு
வச்சிர மவந்தி **மகதமொடு** குழீஇய
சித்திர மண்டபத்திருக்க வேந்தன்
அமரகத் துடைந்த வாரிய மன்னரொடு
தமரிற் சென்று தகையடி வணங்க" (ஷை. 3 : 28 : 84-89)

"**மகத** வினைஞரு மராட்டக் கம்மரு
மவந்திக் கொல்லரும் யவனத்தச்சரும்
தண்டமிழ் வினை ஞர் தம்மொடு கூடிக்
கொண்டினி தியற்றிய கண்கவர் செய்வினைப்
பவளத் திரள்காற் பன்மணிப் போதிகைத்
தவள நித்திலத் தாமந் தாழ்ந்த
கோணச் சந்தி மாண்வினை விதானத்துத்
தமனியம் வேய்ந்த வகைபெறு வனப்பிற்
பைஞ்சேறு மெழுகாப் பசும் பொன் மண்டபத்
திந்திர திருவன் சென்றினி தேறலும்"

(மணிமே. 19 : 107-116)

"கச்சி முற்றத்து நின்னுயிர் கடைகொள
உத்தர **மகதத்** துறு பிறப்பெல்லா
மாண்பிறப்பாகி யருளற மொழியாய்"

(ஷை. 21 : 174-176)

"மறந்து மழைமாறா **மகத** நன்னாட்டுக்
கொரு பெருந் திலகமென் றுரவோருரைக்குங்
கரவரும் பெருமைக் கபிலையம்பதியின்

(ஷை. 26 : 42-44)

"மகதத்துப் பிறந்துமணிவினைக்காரரும் (பெருங் 1: 58 : 41)

மன்பெருஞ்சிறப்பின் மகத நன்னாடு
சென்று சார்ந்தனராற் செம்மலொடொருங்கென்"
(ஷை. 3 : 2 : 54-55)

"அளவி லாற்றலச்சுவப் பெருமகன்
**மகதம்** புகுந்து மன்னிய செங்கோற்
றகைவெந்துப் பிற் றருசகற் கிசைப்ப" (ஷை. 3:16; 10-12)

**மணிபல்லவம்.**

மணிகள் கிடைத்த தீவையே மணிமேகலை மணிபல்லவம் என்று அழைத்துள்ளது. ஈழநாட்டில் தான் சிறந்த மணிகள் நிறையக் கிடைத்தன.[103] ஈழநாடு அல்லது ஈழநாட்டின் பகுதியே மணிபல்லவம் எனக்கருத இடமளிக்கிறது.

மணிபல்லவம் என்பது ஒரு சிறு தீவு. சோழநாட்டின் தலை நகராக முன்னிருந்த காவிரிம்பூம்பட்டினத்திற்குத் தெற்கே முப்பது யோசனை தொலைவில் உள்ளது. தன்னை வணங்கிய வர்கட்குப் பழம் பிறப்பின் செய்தியைத் தெரிவிக்கும் புத்த பீடிகை யொன்றும், கோமுகி என்னும் பொய்கையும் இத்தீவி லிருந்தன.

"அந்தரமாரு ஆறைந்தி யோசனைத்
தென்றிசை மருங்கிற் சென்று திரையுடுத்த
**மணிபல்லவத்திடை** மணிமேகலா தெய்வம்
அணியிழைதன்னை வைத்தகன்றது"—(மணிமே. 6:211-214)

"மணிமேகலை தனை **மணிபல்லவத்திடை**
மணிமேகலா தெய்வம் வைத்து நீங்கி"— (ஷை. 7:1-2)

**மத்திமநாடு.**

மத்திமநாட்டில் வாரணம் (ஸ்ரீ வாரணாசி) என்னும் ஊர் இருப்பதாக இளங்கோ கூறுகிறார்.

மிக்கோனால் கொடுக்கப்பட்ட குரங்கு இறந்து, பின் மத்தி மதேசத்து வாரணவாசி என்னும் நகரில் உத்தர கௌத்தன் என்னும் அரசனுக்கு மகனாய்ப் பிறந்தது.

---

103. சங்கநூல்களில் மணிகள். பி. எல். சாமி ஐ. ஏ. எஸ் சேகர் பதிப்பகம். சென்னை-78. பக். 10

'காதற் குரங்கு கடை நாளெய்தவும்
தானஞ் செய்வுழி யதற்கொரு கூறு
தீதறு கென்றே செய்தன ளாதலின்
**மத்திமநன்னாட்டு** வாரணந்தன்னுள்
உத்தர கௌத்தற் கொருமகனாகி"— (சிலப். 15:175-178)

**மராட்டம்.**

மகாராட்டிரம் என்பதன் மரூஉதான்மராட்டம் என்பதாகும் பொற்கம்மியருக்குச் சிறந்த இடம் அது.

இதுவே மராட்டம் என்றும் இலக்கிய ஆட்சி பெற்றுள்ளது.

"மகதவினைஞரும் **மராட்டக்** கம்மரும்" (மணிமே. 19:107)

"தன்மை யடக்கிய நுண்ணிறைத் தெண்ணீர்
வரிவளைப் பணைத்தோள் வண்ண மகளிர்
சொரிவன ராட்டித் தூசுவிரித் துடீஇக்
கோங்கின் றட்டமுங் குரவின் பாவையும்
வாங்கிக் கொண்டு வாருபு முடித்து
மணி **மராட்டத்** தணிபெற வழுத்திக்
காவலன் மகளைக் கைதொழுதேத்தி"

(பெருங் 1:57: 95-101)

**மாளுவ தேசம்.**

மாளுவம் என்பது மத்திய இந்தியாவில் விந்திய மலைக்கு வடக்கே இருந்த பண்டைய நாடு. பீடபூமி, நருமதை ஆற்று வெளியும் இதில் அடங்கும்.

கி.மு. 6ஆம் நூற்றாண்டில் மாளவம், அவந்தி என்றபெயரால் அழைக்கப்பட்டு வந்தது. உஜ்ஜயினி என்ற நகரைத் தலைநகராகக் கொண்டிருந்தது. மௌரிய வம்சத்தை நிறுவிய சந்திர குப்தன் காலத்தில் மௌரிய சாம்ராஜ்ஜியத்தின் ஒருபகுதியாக விளங்கியது.[104]

"உலக மன்ன வனின்றோன் முன்ன
ரருஞ்சிறை நீங்கிய ஆரிய மன்னரும்
பெருஞ்சிறைக் கோட்டம் பிரிந்த மன்னரும்
குடகக் கொங்கரும் **மாளுவ** வேந்தரும்
கடல் சூழிலங்கைக் கயவாகு வேந்தரும்
எந்நாட்டங் கணிமைய வரம்பனி

104. கலைக்களஞ்சியம். 8:152.

னன்னாட்செய்த நாளணி வேள்வியுள்
வந்தீகென்றே வணங்கினர் வேண்ட'' (சிலப், 30:156-163)

**யவனம்**

ஐம்பத்தாறு தேசங்களுளொன்றும் கிரீசு அரேபியா முதலிய மேலைநாடுகளுள் ஒன்றாகக் கருதப்படுவது மாகிய நாடு[105]

யவனம் தச்சுவினையில் மேம்பட்ட ஒரு தேயமாகத் தெரிகிறது. இந்நாட்டிற்கென்றே தனியாக ஒரு மொழி இருந்த தென்றும் அதில் உதயணன் வாசவதத்தை இருவரும்மிக்க பயிற்சி யுள்ளவர்களென்றும் தங்கள் கருத்தைப் பிறர் அறியாதபடி ஒருவருக்கொருவர் அம்மொழியில் தெரிவித்துக் கொண்டன ரென்றும் தெரிகிறது.

''அவந்திக் கொல்லரும் யவனத் தச்சரும்''
(மணிமே. 19 : 108)

''ஆரியச் செப்பும் யவன மஞ்சிகையும்
பொன் செய் பேழையொடு பொறித்தாழ் நீக்கி''
(பெருங். 32 : 76-77)

**வச்சிரநாடு.**

சோணைக் கரையிலுள்ள ஒரு நாடு. (சிலப். 5 :99 உரை.) பாண்டி மண்டபத்திலுள்ள ஒரு கடற்கரை நாடு என்று களவியற் காரிகை (47) கூறும்.[106]

வச்சிரம் என்பது சதுரக்கள்ளி என்ற ஒருவகைத் தாவரத்தை குறிப்பதால் தாவரத்தால் வச்சிர நாடு எனப் பெயர் பெற்றதோ என எண்ணவும் இடம்அளிக்கிறது. அல்லது ஒருவகை இரத்தினம் என்றும் பொருள் உள்ளதால் அவ்வகை இரத்தினம் கிடைத்த பகுதி வச்சிர நாடு எனப் பெயர் பெற்றதோ எனவும் எண்ண இடமளிக்கிறது.

''மாநீர் வேலி வச்சிர நன்னாட்டுக்
கோனிறை கொடுத்த கொற்றப் பந்தரும்
(சிலப். 5 : 99-100)

''வச்சிரம் அவந்தி மகதமொடு குழீஇய
சித்திர மண்டபத்திருக்க''......... (ஷை. 28 : 86-89)

105. Tamil Lexicon Vol VI P. 3395.
106. Tamil Lexicon Vol. VI P. 3455.

**வத்தவநாடு.**

வத்தவ நாட்டின் (வத்ஸதேசம்) தலைநகர் கௌசாம்பி. இதற்குத் தலைவன் உதயணன். வச்சம் எனவும், வத்தம் எனவும் வழங்கும்.

''வத்தவ நாடன் வாய்மையிற் றருக்கும்
கொற்ற வீணையுங் கொடுங்குழை கொண்டனள்''
(பெருங். 1 : 37 : 132-138)

**வாரணம்.**

மாவிலிங்கம் என்னும் ஒருவகை மரத்தை வாரணம் என்னும் சொல் குறிப்பதால் தாவரத்தால் வாரணம் என்ற ஊர் பெயர் பெற்றதோ என எண்ண இடமளிக்கிறது.

(வாரணம் கோழி என்ற உறையூரைக் குறிக்கும் என்பதை ''தென்றிசை மருங்கிற் செலவு விருப்புற்று, வைகறையாமத்து வாரணங்கழிந்து' (சிலப். 11 : 10-11) முன்னரே கண்டோம்)

வாரணாசி என்றும் வாரணவாசி என்றும் இலக்கியத்தில் கூறப் பெறும் வாரணம் என்னும் இவ்வூர் மத்திம நன்னாட்டைச் சார்ந்தது.

''மத்திம நன்னாட்டு வாரணந் தன்னுள்'' (சிலப். 15 ; 178)

''வாரணாசி யோர் மறை யோம் பாள
னாரண வுவாத்தி யபஞ்சிகனென் போன்''
(மணிமே. 13 : 3-4)

''தீண்டற் காகாத் திருந்துமதிலணிந்த
வாரணவாசி வளந்தந்தோம்பும்'' (பெருங். 3 : 17 : 12—13)

**விஞ்சை**

விஞ்சை என இலக்கியத்தில் கூறப் பெறும் இது விஞ்சை மாநகரமாகும். அதாவது வித்தியாதரநகரமாகிய காஞ்சனபுரம்,

''வடதிசை விஞ்சை மாநகர்த் தோன்றித்
தென்றிசைப் பொதியிலோர் சிற்றியாற்றடைகரை
மாதவன்றன்னால் வல்வினை யுருப்பச்
சாபம் பட்டுத் தனித்துயருறூஉம்
வீவில் வெம்பசி வேட்கையொடு திரிதருங்
காயசண்டிகை யெனுங்காரிகை'' (மணிமே. 15 ; 81-86)

**விதையம்.**

விமானத்திற் சென்ற வாசவதத்தையால் பார்க்கப்பட்ட நாடுகளுள் ஒன்று. விதேக தேசம் என்று கூறப்பெறுவது.

''அந்தமில் விதையமுமணிதிகழந்தியும்'' (பெருங்க. 5:4 : 126)

## பின்னிணைப்பு

### ஊர்ப்பெயர்களின் வகைகள்

1. மலை போன்ற இயற்கையமைப்பால் பெயர் பெற்ற ஊர்கள்.

| | |
|---|---|
| ஏழில் | நாஞ்சில் |
| குன்றம் | பறம்பு |
| குன்று | பெருங்குன்றூர் |
| குன்றூர் | மாலிருங்குன்றம் |
| கொல்லி | முதிரமலை |
| கோட்டம்பலம் | முரஞ்சியூர் |
| செங்கோடு | முள்ளூர் |
| பரங்குன்றம் | வெண்குன்றூர் |
| திருமால்குன்றம் | வேங்கடம். |

2. நீர்நிலையமைப்பால் பெயர் பெற்ற ஊர்கள்.

| | |
|---|---|
| அலைவாய் | நீர்ப்பெயற்று |
| கயத்தூர் | பவத்திரி |
| காண்டவாயில் | பாழி |
| காவிரிப்பூம் பட்டினம் | பிசிர் |
| கிடங்கில் | மாவிலங்கை |
| குளமுற்றம் | வீரை |
| துறையூர் | (ஆறு) |
| தொண்டி | அரிசில் |
| | காரியாறு |
| | பொறையாறு |

3. தாவரத்தின் தொடர்பால் பெயர் பெற்ற ஊர்கள்,

| | |
|---|---|
| அதங்கோடு | மருவூர் |
| அரையம் | மல்லி |

ஆர்க்காடு
ஆலங்கானம்
ஆலங்குடி
ஆலம்பேரி
இருப்பை
உகாய்க்குடி
கச்சி
காஞ்சி
கடம்பின்பெரு வாயில்
கண்டீரம்
குராப்பள்ளி
மதுரை
பீடவூர்
மாங்காடு
மாங்குடி
முசிறி
முத்தூறு
முதுவெள்ளிலை
வஞ்சி
வாகை
விச்சி
விரியூர்
விளங்கில்
வெள்ளைக்குடி
வேம்பற்றூர்

4. விலங்கின் தொடர்பால் பெயர் பெற்ற ஊர்கள்.

ஆவூர்
உடம்பற்காடு
எருமைவெளி
கோழி
செங்கண்மா
புல்லாற்றூர்

5. தெய்வத் தொடர்பால் பெயர் பெற்ற ஊர்

இருந்தையூர்

6. வள்ளல் தொடர்பால் பெயர் பெற்ற ஊர்கள்

ஆய்குடி
ஆவினன்குடி

7. மன்னர் தொடர்பால் பெயர் பெற்ற ஊர்கள்

காகந்தி
கிள்ளி மங்கலம்
கோவூர்
கோநாடு

8. தனிமனிதன் தொடர்பால் பெயர் பெற்ற ஊர்

கடம்பனூர்

9. நிலப்பிரிவின் தொடர்பால் பெயர் பெற்ற ஊர்கள்

குறும்பூர்
நெய்தலங்கானம்
பட்டினப்பாக்கம்
பாக்கம்
வயலூர்
வெண்ணி

10. தொழிற் பெயரின் தொடர்பால் பெயர் பெற்ற ஊர்கள்

செயலூர்
கொற்கை

11. பொருட் பெயர்த் தொடர்பால் பெயர் பெற்ற ஊர்கள்

அரிமண வாயில் உறத்தூர்
அள்ளூர்
ஊணூர்
கள்ளில்
கள்ளூர்
தேனூர்

12. திசைப்பெயர் முதலியவற்றை அடைமொழியாகப் பெற்ற ஊர்கள்.

குடந்தை
குடவாயில்
குடநாடு
குணவாயிற்கோட்டம்
தலையாலங்கானம்
இடைக்கழி நாடு
இடைக்காடு
இடைக்குன்று
இடையாறு

13. போர் முனைத் தொடர்பால் பெயர் பெற்ற ஊர்கள்

அட்டவாயில்
முனையூர்

14. இருக்கும் இடத்தின் தொடர்பால் பெயர் பெற்ற ஊர்கள்

அம்பர்
இலவந்திகைப்பள்ளி
எயில்
எயிற்பட்டினம்
எருக்காட்டூர்
கச்சிப்பேடு

15. இருக்கும் இடத்தின் தன்மையால் பெயர்பெற்ற ஊர்கள்.

ஈரந்தை
உறந்தை
ஏரகம்
ஐயூர்
ஒல்லையூர்
கருவூர்
கானப்பேரெயில்
குழூமூர்
நீடூர்
புகார்
பூஞ்சாற்றூர்
பொதினி
பொருந்தில்
மருங்கூர்ப் பட்டினம்
மாற்றூர்
முக்காவல்நாடு

குறுங்குடி
கூடல்
கூடலூர்
கொடுகூர்
கொற்கை
கோடி
சித்திர மாடம்
சிறுகுடி
நல்லூர்
மையல்
வல்லம்
வல்லார்
வியனூர்
விரிச்சி
வெண்மணிவாயில்
வெஃகா
வேளூர்

16. திரிபு நிலையால் பெயர்பெற்ற ஊர்கள்

ஏணிச்சேரி
ஓய்மாநாடு
கொண்கானம்

17. இலக்கண அமைப்பு அமைந்த ஊர்ப் பெயர்
ஆடுதுறை

18. விளங்கா நிலையில் அமைந்த ஊர்ப்பெயர்கள்

அழுந்தை
ஆமூர்
உரோடகம்
எக்கூர்
எறிச்சலூர்
ஏறை
ஒக்கூர்
கடியலூர்
கரும்பனூர்
கழார்
கழுமலம்
குறுக்கை
கொடும்பை
கோவலூர்
சிக்கற்பள்ளி
சிறைக்குடி
செல்லூர்
தகடூர்
தங்கால்
நியமம்
பாமுளூர்
பாரம்
மாடலூர்
மாந்தை
மாறோக்கம்
மிழலை
முகையலூர்
மோகூர்
வெள்ளூர்

19. பிறநாட்டுப் பெயர்கள்
அடவிநாடுகள்
அங்க நாடு
துளுநாடு
புன்றாளக நாடு

கருநாடகம்
காந்தார நாடு
கோசல நாடு
சாவக நாடு
மகதநாடு
மத்திமநாடு
வச்சிரநாடு
வத்தவநாடு

20. பிறநாட்டின் ஊர்ப்பெயர்கள்

அசோதரம்
அத்தினபுரம்
அமராவதி
அயோத்தி
அரிபுரம்
அருட்டநகர்
அவந்தி
இடவயம்
இரத்தின தீவம்
இரத்தினபுரம்
இராசகிரியம்
இலங்காதீவம்
இலாவாணகம்
உஞ்சேனை
கபிலபுரம்
கலிங்கம்
காஞ்சனபுரம்
காம்போசம்
கொங்கணம்
கோசம்பி
சண்பை நகர்
சம்புத்தீவு
சயந்தி
சிங்கபுரம்
சித்திபுரம்
திருநகர்
நாகபுரம்
பாடலி
புட்பகம்
போதனபுரம்
மணிபல்லவம்
மராட்டம்
மாளுவம்
யவனம்
வாரணம்
விஞ்சை
விதயம்

# முடிப்புரை

என் ஆர்வ மிகுதியால் நான் சில புதிய முறைகளை அமைத்துக் கொண்டு சோதனை ஓட்டமாகச் சங்க கால இலக்கியம் காட்டும் ஊர்ப் பெயராய்வினைச் செய்திருக்கிறேன். இத்தகு ஆய்வினை மேலும் பல புதிய முறைகளில் ஆராயவும் இடமுண்டு. புவியியல், தாவரவியல், விலங்கியல், அரசியல், வரலாற்றியல், பொருளாதாரவியல், மானிடவியல் எனக் கூறப் பட்டு வரும் பல்வகை அறிவியல் துறைகள் கூறும் ஆக்கப் பூர்வ மான ஆய்வுகளை மேலை நாட்டாரைப் போல செய்யத்தொடங் கினால் மேலும் பல உண்மைகளைக் கண்டறிய முடியும் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளது. அம் முயற்சியை இனிவரும் இளைய சமூகத்தினர் செய்ய வேண்டும். அத்தகைய பணிக்கு இந்நூல் முன்னோடியாகத் திகழும். அத்தகைய நனிமிகு ஆய்வுக்கு வேண்டிய நன்முறைகளை அறிஞர் பெருமக்கள் கண்டறிந்து தமிழ் கூறும் நல்லுலகத்திற்கு வழங்க வேண்டும் என்பதே என் விருப்பமாகும். அந்த நன்னாள் விரைவில் வரும் என நம்பலாம்.

## துணைநூற் பட்டியல்

1. இலக்கிய ஆய்வு—பி. எல். சாமி, சேகர் பதிப்பகம், சென்னை-78-1982.

2. ஊரும் பேரும்—ரா. பி. சேதுப்பிள்ளை — பழனியப்பா பிரதர்ஸ், சென்னை–1956.

3. கல்வெட்டில் ஊர்ப்பெயர்கள் — ஆர். ஆளவந்தார் — உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை-1983.

4. கலைக்களஞ்சியம் — தமிழ் வளர்ச்சிக் கழகம், சென்னை.

5. குடியிருப்புப் புவியியல் (Geography of Settlements) —அ. சிவமூர்த்தி, தமிழ்நாட்டுப்பாடநூல் நிறுவனம், சென்னை-1975

6. சங்க இலக்கிய ஆராய்ச்சி அட்டவணைகள்—ந. சஞ்சீவி, சென்னைப் பல்கலைக்கழகம், முதற்பதிப்பு 1973.

7. சங்க இலக்கியச் சொற்பொழிவு நூல்வரிசை—கழக வெளியீடு எண். 611.

8. சங்க நூல்களில் மணிகள் — பி. எல். சாமி, சேகர் பதிப்பகம், சென்னை-78 முதற்பதிப்பு. 1980.

9. சிலம்பும் மேகலையும்—எம். நாராயண வேலுப்பிள்ளை, அன்பு வெளியீடு முதற்பதிப்பு, 1982.

10. செட்டி நாடும் தமிழும் — 'சோமலெ', பாரிநிலையம், சென்னை-1. இரண்டாம் பதிப்பு-1960.

11. தமிழ் இடப் பெயராய்வு—கி. நாச்சிமுத்து, சோபிதம் பதிப்பகம், நாகர்கோயில். 1983.

12. பத்துப்பாட்டு ஆராய்ச்சி—மா. இராசமாணிக்கனார், சென்னைப்பல்கலைக் கழகத் தமிழ்த்துறை வெளியீட்டு எண் 26, முதற்பதிப்பு-1970.

13. பத்துப்பாட்டுச் சொற்பொழிவுகள்—ஔவை. சு. துரை சாமிப்பிள்ளை, கழகவெளியீடு.

14. பரிபாடல் சொற்பொழிவுகள் —கழக வெளியீடு, 1961.

15. பரிபாடலில் பழக்க வழக்கங்கள்—புலவர் செந்துறை முத்து. நல்வாழ்வுப் பதிப்பகம், சென்னை. முதற்பதிப்பு-1976.

16. பேரும் பெருமையும்-மா. நயினார், சோபிதம் பதிப்பகம், சோபிதம் பதிப்பகம் நாகர்கோயில், 1982.

ஆங்கில நூல்கள்.

1. English Place Names—Kenneth Cameron, Methuen & Co. Ltd., New Fetter lane—London—1969.

2. Foreign Notices of South India Megasthenas to Ma Huan, university of Madras 1972.

3. Social History of Kerala-Vol. 1. The pre-Dravidians, L. A. Krishna Iyer, Book centre Publications, Madras 2. 1968.

4. Studies in Indian place Names (Bharatiya Sthalanama Patrika) Volume Three, The place Names Society of India, Geetha Book House, Mylapore.

5. Tamil Lexicon university of Madras, Madras.

6. The Pallavas of Kanchi-R. Gopalan

7. The problems of Dravidian origins A Linguistic, Anthropological and Archaeological Approach T. Bala Krishnan Nayar, university of Madras. 1977.

8. The Sangam Age Bharathi Tamil Sangam, Culcutta, First Edition, 1961.

கட்டுரைகள்

1. இடப்பெயராய்வு—இ. நாச்சிமுத்து, ஆய்வுமலர், கேரளப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைப் பழைய மாணவர் மன்ற வெளியீடு, தொகுதி-1. 1972.

2. உறையூர் அழிந்த வரலாறு மயிலை. சீனி. வெங்கடசாமி செந்தமிழ்ச் செல்வி, சிலம்பு. 22 பரல் 11. சூலை 1948.

3. ஊர்ப்பெயர் மாற்றங்கள்-மா. நயினார், இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றம், பத்தாவது கருத்தரங்கு, ஆய்வுக்கோவை, 1978.

4. ஊர்ப்பெயர்கள்—சா. கணேசன், கையேடு, கலைக் காட்சிக்குழு, இரண்டாவது உலகத்தமிழ்க் கருத்தரங்கு, மாநாடு. 1968.

5: ஊர்ப்பெயரும் மக்களும் சிவ. மணிகண்ட ராமன், இ,ப. க. த. ம. எட்டாவது கருத்தரங்கு ஆய்வுக்கோவை 1976.

6. கொற்கை—புலவர் இரா. இளங்குமரன் செந்தமிழ்ச் செல்வி, சிலம்பு 56. பரல் 1. Sep. 81.

7. பழனி - ஊர்ப்பெயராய்வு—பா. அ. மணிமாறன் இ. ப. க. த. ம. பதினான்காவது கருத்தரங்கு ஆய்வுக்கோவை தொகுதி 3. 1982.

8. மதுரை பெயர் ஆராய்ச்சி—மெ. சுந்தரம் இ.ப.க. த. ம. ஒன்பதாவது கருத்தரங்கு, ஆய்வுக்கோவை 1977.

9. விலங்குகளும் ஊர்ப்பெயர்களும் பா. அ. மணிமாறன், இ. ப. க. த. ம. பதினோராவது கருத்தரங்கு ஆய்வுக் கோவை, தொகுதி 3-1979.

10. வஞ்சிமாநகர் ஸி. எஸ். செலுவையர், செந்தமிழ் தொகுதி 21. பகுதி 4. Feb-March- 1923,

**ஆங்கிலம்.**

1. Nannan of North Malabar P. L. Samy, Tamil civilization, Thanjavur. Vol. 1. No. 1

2. Place Names of Agricultural Region-R. P. Sethu Pillai Tamil culture, Vol No. 4. Oct. 1958.

3. Plant place Names–Dr. S. V. Subramanian and Tmt. Bhagavathi Third Annual Congress of the place Name Society of India, Bhopal-1982.

4. Seminor Papers First All India conference of the place Names Society of India, udipi.

# சிறப்புப் பெயர் அகராதி


அக்கசாலை 129
அகர்வாலா, எஸ். 16
அகரமாங்குடி 27
அகராதிக்கலை 18
அச்சுதமேனன் 16
அசோகர் கல்வெட்டு 20, 38
அடால்ப்பாக் 14
அடியார்க்கு நல்லார் 29, 112
அதங்கோட்டாசான் 60
அதிகமான் 126
அம்பர் கான் 108
அம்பர் கிழான் அருவந்தை 62
அம்மரக்கல் 157
அமெரிக்கப் பெயராய்வுக் கழகம் 15
அரசுகணக்கேடு 12
அரிசில் கிழார் 63
அரும்பத உரையாசிரியர் 76,112
அலெக்சாந்திரியா வணிகர் 80
அழிசி 69
அள்ளூர் நன்முல்லையார் 66 67,
அன்னி 114
அனைத்திந்தியத் திராவிட மொழியியல் கழகம் 16
அனைத்துலகப் பெயர் ஆய்வுக் குழு 15
ஆங்கில இடப் பெயராய்வுக் கழகம் 15
ஆட்பெயர் அடை 56, 58
ஆடுதுறை மாசாத்தனார் 67
ஆந்தை 84
ஆந்தையார் 159
ஆமூர்க்கவுதமன் சாதேவனார் 68
ஆமூர் மல்லன் 68
ஆமூர் முதலி 68
ஆய் அண்டிரன் 69
ஆர்க்காடு கிழார் மகனார் வெள்ளைக் கண்ணத்தனார் 70
ஆலங்குடிவங்கனார் 72
ஆலத்தூர் கிழார் 73
ஆலம்பேரி சாத்தனார் 73
ஆவிக்கோமான் 73
ஆவூர்கிழார் 74
ஆற்றுப்படை இலக்கியங்கள் 18
இடைக்கழி நாட்டு நல்லூர்
இக்குவாகு 154
இடைக்காடனார் 75
இடைக்குன்றூர் கிழார் 75
இதிகாசம் 12
இந்திய இடப்பெயராய்வுக் கழகம் 16
இமயவரம்பன் 79
இயற்கை இயல் 18
இயோபாலிஸ் 46
இரண்டாம் இராசாதிராசன் 96
இராசசிம்மன் 125
இராமச்சந்திரன் செட்டியார் சி. எம். 16
இராமலிங்க அடிகள் 16
இராமாய்ணம் 27
இருங்கோவேள் 63
இருந்தையூர்க் கொற்றன் 77

இலங்கை புத்த நூல் 20
இளங்கோ 4, 80, 112
இளம்பொன் வாணிகனார் 82
ஈழத்தலரி 78
உகாய்க்குடிகிழார் 78
உண்ணியாடி சரிதம் 112
உத்தமச் சோழன் 95
உதியன் 113
உபபுராணங்கள் 17
உம்பற்காட்டு இளங்கண்ண
னார் 79
உருத்திரங் கண்ணனார் 46
உரையாசிரியர் 18
உரோடகத்துக் கந்தரத்தனார்
79.
எருக்காட்டூர் தாயங்கண்ண
னார் 86, 87
எருமை வெளியனார் 87
எருமை வெளியனார் மகனார்
கடவனார் 87
எறிச்சலூர் மாடலன்மதுரைக்
குமரனார் 87
ஏணிச்சேரி முடமோசியார் 69
82, 88
ஏழ்குண கரைநாடு 29
ஏழ் குறும் பனை நாடு 29
ஏழ்குன்ற நாடு 29
ஏழ்தெங்க நாடு 29
ஏழ்பின் பாலை நாடு 29
ஏழ் மதுரை நாடு 29
ஏழ் முன்பாலை நாடு 29
ஏறைக் கோன் 92
ஐயன் பேட்டை 95
ஐயூர் மூலங்கிழார் 107
ஒக்கூர்மா சாத்தனார் 84, 92
ஒய்மா நாட்டு நல்லியக்
கோடன் 75, 85, 93, 94,
107, 108
ஒல்லையூர் கிழார் மகன்
பெருஞ்சாத்தன் 93
ஒல்லையூர் தந்த பூதப்
பாண்டியன் 93
ஒலி முகமது பேட்டை 95
ஒனோமா 15
ஓரி 105, 126
ஓவியன் குடி 94
ககந்தன் 103
கச்சிப்பேட்டு இளந்தச்சனார்
95
கச்சிப்பேட்டு இளந்தத்தனார்
97
கச்சிப்பேட்டுக் காஞ்சிக்
கொற்றன் 97
கச்சிப்பேட்டு நன்னாகையார்
95, 97
கச்சிப்பேட்டுப் பெருஞ் சாத்த
னார் 97
கச்சிப் பேட்டுப் பெருந் தச்ச
னார் 95
கடம்பனூர்ச்சாண்டில்யன் 97
கடற்பிறக் கோட்டிய செங்
குட்டுவன் 79, 124
கடற்பழந்தீவு 37
கடியலூர் உருத்திரங் கண்ண
னார் 98
கண்டீரக்கோப் பெருநள்ளி
98
கண்ணனார் 74
கணையன் 102
கதுவாய்ச் சாத்தனார் 81
கபாடபுரம் 20
கபிலர் 63
கம்பன் 65
கயத்தூர் கிழான் 99
கருநாடக நவாபுகள் 70
கரும்பனூர் கிழான் 99

கருவூர் ஓதஞானி 100
கருவூர்க் கண்ணம்பாலினார் 100
கருவூர்க் கண்ணம் புல்லனார் 100
கருவூர்க் கதப்பிள்ளைச் சாத்தனார் 100
கருவூர்க்கீரன் எயிற்றியனார் 100
கருவூர்க் கலிங்கத்தார் 100
கருவூர்ச் சேரமான் சாத்தன் 100
கருவூர் நன்மார்பன் 100
கருவூர்ப் பவுத்திரன் 100
கருவூர்ப் பூதஞ் சாத்தனார் 100
கருவூர்ப் பெருஞ்சதுக்கப் பூதனார் 100
கல்லாடனார் 62
கல்வெட்டு 11, 20, 22, 23, 32, 66, 104, 108, 128
கள்ளில் ஆத்திரையன் 102
கழக உரையாசிரியர் 5
கழா அத்தலையார் 64
கழார்க்கீரன் எயிற்றியன் 101
காசிநாத் லட்சுமணன் 15
காஞ்சிப் புலவனார் 97
காரி 105
காரியாற்றுத் துஞ்சிய நெடுங்கிள்ளி 105
கால்டுவெல் 128
காவிரிப்பூம்பட்டினத்துக் கந்தரதத்தனார் 106
காவிரிப்பூம்பட்டினத்துக்காரிக் கண்ணன் 106
காவிரிப் பூம்பட்டினத்துச் சேந்தன் கண்ணன் 106
காளமேகப் புலவர் 68
கிடங்கில் காவிதிகீரங் கண்ணனார் 109
கிடங்கில் காவிதிப் பெருங் ருங்கொற்றனார் 109
கிடங்கில் குலபதி நக்கண்ணனார் 109
கிடுகு இராமமூர்த்தி நினைவு இடப்பெயராய்வுச் சொற்பொழிவு 16
கிள்ளி மங்கலங்கிழார் 109
கிள்ளி மங்கலங் கிழார் மகனார் சேர கோவனார் 109
கீரன் எயிற்றியன் 101
குட்டுவன் சேரல் 79
குடவாயிற் கீரத்தனார் 93
குணாட்டியார் 4
குராப்பள்ளித் துஞ்சிய சோழன்
பெருந்திருமாவளவன் 113
குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் 113
குறமகள் இளவெயினி 92
குறிஞ்சிப் பாறை 22
குறுங்குடி மருதன்
குறுங்கோழியூர் கிழார் 114
குன்றம் பூதனார் 115
குன்றூர் கிழார் 118
குன்றூர் மகனார் கண்ணத்தனார்
கொடுந்தமிழ் நாடு பன்னிரண்டு 111
கொடுமுடி 67
கோச்செங்கட் சோழன் 110
கோட்பிரைடுவில் ஹெல்ம் லெய்ப்னிஷ் 14
கோவூர்க்கிழார் 105
கோனாட்டு எறிச்சலூர் மாடலன் மதுரைக் குமரனார் 78
சஞ்சீவி. ந. 128
சங்காரியா 15
சம்புவராயர் 108
சாசனங்கள் 2
சாத்தந்தையார் 68
சாதவாகனர் 154
சாதேவனார் 74
சாமி பி. எல். 91
சாமிநாதையர், உ.வே. 35 90 110
சிங்கபுரம்189
சிற்றூர் 42
சிறப்புக்கூறு 51, 55, 56
சிறுகந்தன் 81
சிறுபாலையூர் 22
சீத்தலைச் சாத்தனார் 4, 46
சுந்தரம், எம். 36

சுந்தரம்பிள்ளை 3
சுப்பராயலு 16
சுமதி 15
சுரேஷ் 16
செங்குட்டுவன் 128
செஞ்சி நவாபு 108
செப்பேடு 23
சென்னி 65
சேதுப்பிள்ளை ரா.பி. 16, 66
சேந்தன் 69
சேரமன்னன் குட்டுவன் 101
சேரமன்னன் நார்முடிச் சேரல் 98
சேரன் செங்குட்டுவன் 112
சேனாவரையர் 37
சேஷாத்திரி 15
சோமசுந்தரனார் 110
சோமலே 1
சோழன்கிள்ளி 62, 63
சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் 67
சோழன் நலங்கிள்ளி 105
சோழன் போர்வைக் கோப் பெருநற்கிள்ளி 68
சோனகர் 37
ஞானமுத்து, எஸ். 36
டிரனாபாலிஸ் 47
தக்கயாகப் பரணி 81
தகடூரெறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை 126
தலபுராணம் 16
தலையாலங்கானத்துச் செரு வென்ற நெடுஞ்செழியன் 76
தவளகிரி 180
தழும்பன் 83, 84
தளவாய்புரச் செப்பேடு 71, 76
தாமரப்பட்டயம் 169
தாலமி 86
தித்தியன் 65. 114
தியாகராஜு 16
திராவிட இடப் பெயராய்வுக் கழகம் 16
திராவிட மொழிப் பெயர்கள் 13
திருவல்லர் 178
தீப வம்சம் 38
துணைநகர் 44
துரைசாமிப் பிள்ளை, அவ்வை 31, 91
தெய்வச் சிலையார் 37
தேவாரம் 62, 71, 107, 110
தொல் பொருளாய்வு 17, 18
தோயன் மாறன் 78
நகர்ப்புறக் கிராமம் 44
நகரம் 42
நச்சினார்க்கினியர் 21, 22, 27, 30, 85, 88, 119
நன்னன் 32, 90, 98, 125
நன்னாகனார் 94, 99
நாச்சிமுத்து, கி. 17, 23, 35
நாட்டுப்புறவியல் 18
நாராயணசாமி, பின்னத்தூர் 110
நாலாயிர திவ்விய பிரபந்தம் 110
நானில பகுப்பு 13
நிலந்தரு திருவிற் பாண்டியன் 61
நிலநூல் 18
நினைவுச் சின்னங்கள் 2
நீலகேசி 103
நெக்ரோபாலிஸ் 48
நெல்லூர் 153
நேம்ஸ் 15
பக்தவத்சலம் 147
பதினெண்மகா புராணங்கள் 17
பயணக்குறிப்பு 11
பரணர் 79
பரமக்குடி 155
பராந்தக நெடுஞ்செழியன் 125
பராந்தக வீர நாராயணன் 71, 76
பல்காயனார் 81
பல்யானை செல்கெழு குட்டுவன 79
பவானி 1 0
பழங்காசுகள் 2
பழமொழி 8
பனம்பாரனார் 6
பாண்டியன் இலவந்திகைப் பள்ளி துஞ்சிய நெடுமாறன் 78

பாண்டியன் உக்கிரப்பெரு வழுதி 107
பாண்டியன் நெடுஞ்செழியன் 71
பாரதம் 24
பாரிமகளிர் 63
பாலாம்பாள் 63
பாலிஸ் 46
பிங்கலம் 80
பிரம தேயம் 140
பிரான்பில் ஃபிளிட்
பிருகத் கதா
பிளைனி 105
பிறமொழியாளர் 11
பிறவகைப் பெயர் அடை 56, 58
புத்தசாதகக் கதை 105
புதைபொருள் ஆராய்ச்சி 20
புராணம் 5, 12, 24, 70
புல்லி 115
புளொக்மன் 16
புறநகர் 44
பூதப்பாண்டியன் 84
பெரிபுளூஸ் 86, 128
பெரும்பூட்சென்னி 101, 102
பேரூர் 1, 42
பேரளம் 135
பைசாசம் 4
பொதினி 161
பொதுக்கூறு 51, 52, 56
மகாவம்சம் 20, 38
மண்டல சதகங்கள் 17
மத்தி 101
மதுரைக் கூடலூர் கிழார் 124
மருத்துவன் தாமோதரனார் 82
மருதத்தூர் 22
மரூஉ 11
மல்லிகை 163
மாடலன் மதுரைக் குமரனார் 87
மாதூர் மதுர் மோகினி 15
மாவட்ட வரலாற்று நூல் 17
மாறவர்மன் சுந்தரபாண்டியன் 80
மானவிறல் வேள் 65
மானிட இயல் 18
மிதிலா சரண்பாண்டேய 15
மீட்டுருவாக்கம் 18, 23
மீனாட்சி சுந்தரம்பிள்ளை 16
முசுறுப்புல் 168
முடவனார் 92
முதலாம் ஆதித்த சோழன் 95
முதலாம் இராசராசன் 86, 95, 96
முதலாம் மாறவர்மன் சுந்தர பாண்டியன் 81
முதற்பராந்தகன் 95
முதுகண்ணன் சாத்தன் 81
முதுகூத்தன் 81
முதுகொற்றன் 82
மூதூர் 41, 42
மூலங்கிழார் 74, 92
மூலங்கிழார் மகனார் பெருந் தலைச்சாத்தனார் 74
மெகலோ பாலிஸ் 47
மெட்ரோ பாலிஸ் 47
யவனச்சேரி 37
ரோமர் 37
லூயிஸ்மம் போர்டு 46, 48
லூவெய்ன் 15
லெமூரியாக் கண்டம் 29
வரைபடம் 12
வன்பரணர் 98
வாசுதேவ் 16
வான்மீகி இராமாயணம் 20
விச்சியர் கோமான் 115
விராஅன் 77
விளக்கப் பெயர் அடை 56, 57
விஸ்வநாதரெட்டி 16
விஜயநகரக் கல்வெட்டு 139
வீரபத்தினி 174
வீரை வெளியனார் 87
வெற்றிவேற் செழியன் 128
வேகவது 142
வேங்கை மார்பன் 107
வேள் எவ்வி 63
வேள்விக்குடிச் செப்பேடு 125
வேளிர் 118
ஸ்ரீபிரகாஷ் 16
ஹயவதனராவ் 16

## உலகத் தமிழாராய்ச்சி நிறுவன வெளியீடுகள்

| | | |
|---|---|---|
| 1. | தமிழர் தோற்கருவிகள் | ... ரூ. 10-00 |
| 2. | தமிழும் தமிழரும் | ... ரூ. 5-00 |
| 3. | தமிழர் எண்ணங்கள் | ... ரூ. 16-00 |
| 4. | தமிழர் அளவைகள் | ... ரூ. 8-00 |
| 5. | உலகத் தமிழ் எழுத்தாளர் யார்? எவர்? | ... ரூ. 6-00 |
| 6. | தமிழ் இலக்கியக் கொள்கை-7 | ... ரூ. 15-00 |
| 7. | தமிழ் இலக்கியக் கொள்கை-8 | ... ரூ. 20-00 |
| 8. | எண்பதில் தமிழ் | ... ரூ. 45-00 |
| 9. | எண்பத்தொன்றில் தமிழ் | ... ரூ. 65-00 |
| 10. | திவ்வியப்பிரபந்தத்தில் மனம் | ... ரூ. 12-00 |
| 11. | பாரதியார் வாழ்க்கை கொள்கைகள் | ... ரூ. 8-00 |
| 12. | ம. பொ. சி. யின் இலக்கிய நூல்கள் ஓர் மதிப்பீடு | ... ரூ. 20-00 |
| 13. | தொல்காப்பியம் புணரியல் | ... ரூ. 10-00 |
| 14. | தொல்காப்பியம் - தொகை மரபு | ... ரூ. 8-00 |
| 15. | தொல்காப்பியம் - உருபியல் | ... ரூ. 8-00 |
| 16. | தொல்காப்பியம் - உயிர்மயங்கியல் | ... ரூ. 12-00 |
| 17. | தொல்காப்பியம் - புள்ளிமயங்கியல் | ... ரூ. 15-00 |
| 18. | தொல்காப்பியம் - குற்றியலுகரப்புணரியல் | ... ரூ. 11-00 |
| 19. | தொல்காப்பியம் - கிளவியாக்கம் | ... ரூ. 20-00 |
| 20. | தொல்காப்பியம் - வேற்றுமையியல் | ... ரூ. 14-00 |
| 21. | தந்திவனப்புராணம் | ... ரூ. 15-00 |
| 22. | கும்மிப்பாடல்கள் | ... ரூ. 16-00 |
| 23. | திருமயிலை உலா | ... ரூ. 7-00 |
| 24. | ஊஞ்சல் இலக்கியம் | ... ரூ. 10-00 |
| 25. | மீனாட்சியம்மன் திருப்புகழ் | ... ரூ. 10-00 |
| 26. | வெள்ளைக்காரன் கதை | ... ரூ. 7-00 |
| 27. | சிந்து இலக்கியம் | ... ரூ. 8-00 |
| 28. | மெய்க்கீர்த்திகள் | ... ரூ. 20-00 |
| 29. | கண் மருத்துவம் | ... ரூ. 50-00 |
| 30. | பிரபந்த தீபிகை | ... ரூ. 12-00 |
| 31. | திராவிடமொழி இலக்கியங்கள் | ... ரூ. 35-00 |
| 32. | தமிழில் விடுகதைகள் | ... ரூ. 12-00 |
| 33. | இஸ்லாம் வளர்த்த தமிழ் | ... ரூ. 15-00 |
| 34. | Language and Grammar-Heritage of the Tamils | ... Rs. 22-00 |
| 35. | Cultural Heritage of the Tamils | ... Rs. 20-00 |
| 36. | Literary Heritage of the Tamils | ... Rs. 50-00 |
| 37. | Philosophical Heritage of the Tamils | ... Rs. 22-00 |
| 38. | Heritage of the Tamils - Art & Architecture | ... Rs. 25-00 |
| 39. | Epigraphical Evidences for Tamil studies | ... Rs. 10-00 |
| 40. | Papers on Tamil Studies | ... Rs. 15.00 |
| 41. | Tamil Drama | ... Rs. 20-00 |
| 42. | Folk Arts of the Tamils | ... Rs. 10-00 |
| 43. | A Study of Perunkatai | ... Rs 12-00 |
| 44. | Thiru Murugan | ... Rs. 5-00 |
| 45. | Dr. Mu. Va. | ... Rs 20-00 |
| 46. | Tamil Research through Journals | ... Rs. 7 50 |
| 47. | Dissertations on Tamilology | ... Rs. 10-00 |
| 48. | Tamil writers Directory | ... Rs. 10-00 |
| 49. | Bibliography on Translations Tamil | ... Rs. 35-00 |
| 50. | Historical Heritage of the Tamils | ... Rs. 35-00 |
| 51. | Tamil-Text | ... Rs. 25-00 |
| 52. | Heritage of the Tamils-Siddha Medicine | ... Rs. 45-00 |
| 53. | Siddha Medical Manuscripts in Tamil | ... Rs. 8-00 |

Japonica - Dial 441913